# TNPSC தேர்வுப் பெட்டகம்

# நடப்பு நிகழ்வுகள் - நவம்பர் 2019

www.tnpscthervupettagam.com














SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 11
தமிழ்நாடு செய்திகள் ........ 26
தமிழ்நாடு புத்தமத சுற்றுலா சுற்றுப் பாதை ........ 26
நீதிக் கடிகாரம் (பலகை) - மதராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை ........ 26
கொந்தகை அருங்காட்சியகம், சிவகங்கை மாவட்டம் – கீழடி ........ 27
கோயில் பிரசாதம் - BHOG சான்றிதழ் ........ 28
சிவப்பு நிலப்பட ஏடு மற்றும் CFLOWS – சென்னை: வெள்ள முன்னெச்சரிக்கை ........ 28
விலங்குகளுக்கான நடமாடும் மருத்துவ ஊர்தி - 1962 ........ 29
ராஜராஜ சோழன் – சதயத் திருவிழா ........ 30
சென்னை - கன்னியாகுமரி தொழிற் துறை பெருவழிப் பாதை ........ 30
சென்னையில் காற்று மாசுபாடு ........ 31
‘தோழி’ திட்டம் ........ 31
தென்பெண்ணை நதியின் குறுக்கே அணை ........ 31
நெல் ஜெயராமன் - நெல் ஆராய்ச்சி மையம், குடவாசல் ........ 32
உள்ளாட்சி அமைப்புத் தேர்தலுக்காக அவசரச் சட்டம் ........ 32
தென்காசி மாவட்டம் ........ 33
கள்ளக்குறிச்சி மாவட்டம் – தமிழ்நாடு ........ 34
கடல் அமலாக்கப் பிரிவு ........ 34
ஃபால் ஆர்மி என்னும் புழுவால் ஏற்படும் பயிர்ச் சேதம் ........ 35
தேசியச் செய்திகள் ........ 35
தேசியப் பழங்குடியின நடனத் திருவிழா @ ராய்ப்பூர் ........ 35
உலகின் சிறந்த தலைமை நிர்வாக அதிகாரிகள் - 3 இந்தியர்கள் இடம் பிடித்துள்ளனர் ........ 36
இந்தியா, சவுதி - இருதரப்பு உத்திசார் பங்காளர் மன்றம் ........ 36
ஆக்கப்பூர்வ நகரங்களுக்கான யுனெஸ்கோ அங்கீகாரம் ........ 36
முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அஞ்சல் வாக்கு ........ 37
சர்வதேச உயிரி இந்தியா 2019 ........ 37
இந்தியா - ஜெர்மனி உறவுகள் ........ 37
ராஜேஷ் பூஷண் இந்திய ஆட்சிப் பணி, செயலாளர் (பாதுகாப்பு) ........ 38
நிதி உள்ளடக்கல் - இந்தியா 5வது இடம் ........ 38
பெகாசூஸ் ஒற்றியறி மென்பொருள் (ஸ்பைவேர்) ........ 39
பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பற்ற மாநிலம் உத்தரப் பிரதேசம்: NCRB 2017 ஆம் ஆண்டுத் தரவு ........ 40
உணவுப் பாதுகாப்பு மித்ரா & உணவு உரிமை உறை ........ 41
நிகழ்நேர ரயில் தகவல் அமைப்பு ........ 41
டஸ்ட்லிக் – 2019 : இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான முதலாவது கூட்டுப் பயிற்சி ........ 41
தேசிய நீர்வழிப் பாதை – 2ல் முதலாவது சரக்குப் போக்குவரத்து ........ 42

இந்தியாவின் புதிய அரசியல் வரைபடம் ........ 43
KVS ஒரே பாரதம் வளமான பாரதம் நிகழ்வு ........ 44
நிணநீர் யானைக்கால் நோய் (யானைக்கால் நோய்) பற்றிய தேசியக் கருத்தரங்கு ........ 44
தேசிய யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ........ 44
தாக்த் தரிசன யாத்திரை ........ 44
eCAPA 2019 – உள்ளார்ந்த கலை ........ 45
அனைத்து மாவட்டங்களிலும் மனிதக் கடத்தல் தடுப்புப் பிரிவுகள் ........ 45
SCOJtEx - 2019 ........ 45
திறன் கட்டமைப்புத் தளம் ........ 46
சர்வதேசப் பயணிகளுக்கு உதவும் புதிய செயலி ........ 46
உயர்புகழ் நிறுவனங்கள் என்ற தகுதியை ஏற்றுக்கொள்வதற்கான முடிவை தில்லிப் பல்கலைக்கழகம் தள்ளிவைப்பு ........ 46
பஞ்சாப் – இரட்டை ஆதாயம் பெறும் பதவி ........ 47
நீதி வழங்கல் குறித்த அறிக்கை ........ 47
புத்தாக்கத் திட்டம் (Mission Innovation - MI) ........ 48
தேசியப் பஞ்சாயத்து விருதுகள் 2019 ........ 49
அயோத்தி ராம ஜென்மபூமி - பாபர் மசூதி நிலத் தகராறு வழக்கு ........ 50
அரசு மின்னணுச் சந்தையின் தனியார்மயமாக்கம் ........ 53
ஷில்ப உத்சவ் 2019 ........ 53
மகப்பேறு இறப்பு விகிதம் ........ 54
விவசாயிகள் தற்கொலை குறித்த தரவு ........ 54
நிர்மல் டாட் அபியான் - கடற்கரைத் தூய்மை இயக்கம் ........ 55
சர்வதேச விதை ஒப்பந்தம் - தாவர மரபணு வளங்களின் பாதுகாப்பு ........ 56
இந்தியாவில் முதலாவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் சந்திப்பு – 2020 ........ 56
புதிய தேசிய நீர்க் கொள்கைக் குழு ........ 57
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அலுவலகம் ........ 57
கிராமப்புற மற்றும் விவசாய நிதி தொடர்பான 6வது உலக மாநாடு ........ 57
கர்தார்பூர் பெருவழிப் பாதை ........ 58
COCSSO மாநாடு ........ 59
இந்தியா-ஆசியான் வர்த்தக உச்சி மாநாடு ........ 59
சுவாசத்திற்கான போராட்டம் - 2019 ஆம் ஆண்டின் அறிக்கை ........ 60
சபரிமலை சீராய்வு மனு மீதான தீர்ப்பு ........ 61
ரஃபேல் ஒப்பந்தம் குறித்த சீராய்வு மனு மீதான தீர்ப்பு ........ 62
2020 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினர் - ஜெய்ர் போல்சனாரோ ........ 62
ஃபெனி நதி ஒப்பந்தம் ........ 63
புரு பழங்குடியின மக்கள் தொடர்பான பிரச்சினைகள் ........ 64
இந்தியாவின் புவி வேதியியல் அடிப்படை வரைபடம் ........ 64
39வது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ........ 64

டைகர் TRIUMP பயிற்சி ........ 65
ACEM 2019 ........ 66
இந்தியா இணையம் 2019 ........ 66
QUAD கூட்டம் 2019 ........ 67
காலாபாணி பிரதேசம் ........ 67
சமுத்திர சக்தி - பயிற்சி ........ 68
எஃகு கழிவுத் துகள் மறுசுழற்சிக் கொள்கை 2019 ........ 68
சேவைகள் குறித்த 5வது உலகளாவிய கண்காட்சி 2019 ........ 69
டெஃப் கனெக்ட் 2019 ........ 69
11வது பிரிக்ஸ் உச்சி மாநாடு, 2019 - நவம்பர் ........ 70
சிசேரி நதிப் பாலம் – பிரம்மன்க் திட்டம் ........ 71
பயண மற்றும் சுற்றுலாப் போட்டித்திறன் குறியீடு ........ 71
உலகளாவிய திறன்களுக்கான தரவரிசை அறிக்கை ........ 71
கடலோர மாநிலங்களில் காலநிலையைத் தாங்கக் கூடிய தன்மை – UNFCCC ........ 72
இந்தியாவில் சுகாதார அமைப்புகள் குறித்த நிதி ஆயோக்கின் அறிக்கை ........ 72
சிறார் கொடுமைகள் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு ........ 73
உடல்நலம் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த லான்செட் கவுண்டவுன் அறிக்கை 2019 ........ 73
ADMM-Plus கூட்டம், தாய்லாந்து ........ 74
மைத்ரீ திவாஸ் ........ 74
சோவா-ரிக்பாவுக்கான தேசிய நிறுவனம் ........ 74
நீர் தர அறிக்கை ........ 75
மருத்துவத் தயாரிப்புகளுக்கான அணுகல் குறித்த உலக மாநாடு ........ 75
இரண்டாவது தெற்காசியப் பாதுகாப்பு உச்சி மாநாடு ........ 76
தொழில் துறை உறவுகள் தொடர்பான தொழிலாளர் குறியீடு 2019 ........ 76
காப்புரிமை நடவடிக்கை நெடுஞ்சாலைத் திட்டம் ........ 76
எம்.கே 45 கடற் படைத் துப்பாக்கிகள் ........ 77
கடற்படை நிறுவனத்திற்கு குடியரசுத் தலைவரின் வண்ணம் – கௌரவம் ........ 77
உடல் ரீதியாக செயல்பாடற்ற நிலையில் உள்ள இளம் பருவத்தினர்: லான்செட் ஆய்வு ........ 78
பறவை போட்டுலிய நோய், சாம்பார் உப்பு ஏரி @ ராஜஸ்தான் ........ 78
மத்திய தகவல் ஆணையத்தின் ஆண்டு அறிக்கை ........ 79
தீர்ப்பாயங்களுக்கான நியமனம் - நிதியியல் சட்டம், 2017 ........ 79
கப்பல் உடைப்பு மீதான ஹாங்காங் ஒப்பந்தம் ........ 80
தேசிய வேளாண் வேதியியல் மாநாடு ........ 81
பாரதிய போஷன் கிருஷி கோஷ் ........ 81
புல்புல் சூறாவளி (புயல்) ........ 81
இளம் விஞ்ஞானிகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் SCO மன்றம் 2020 ........ 82
ரயில்வே நிதி மேலாண்மை நிறுவனம், ஹைதராபாத் ........ 82
இந்தியாவின் நிலத்தடி நீர் மட்டம் 22% குறைவு ........ 82
உடான் திட்டம் 4.0 ........ 83

மின்சாரத்தின் தனிநபர் நுகர்வு ..... 83
இந்திய அரசின் விதி 12 (பணி நடைமுறைப் படுத்துதல்) விதிகள், 1961 ..... 84
ஆளுநர்களின் 50வது மாநாடு ..... 84
தேசியப் பழங்குடியின கைவினைக் கண்காட்சி – 2019 ..... 84
PMGSY திட்டத்தின் கீழ் மிக அதிகத் தொலைவு கொண்ட சாலை வசதி – ஜம்மு காஷ்மீர் ..... 84
ஆவாஸ் தளம் ..... 85
சுமன் பில்லா இந்திய ஆட்சிப் பணி @ UNWTO ..... 85
இந்திய விலக்கு (தவிர்ப்பு) அறிக்கை 2018-19 ..... 85
MoSPIன் முக்கியமான 5 அறிக்கைகள் ..... 86
தேசிய வடிவமைப்பு நிறுவனம் (திருத்த) மசோதா, 2019 ..... 86
திருநங்கைகள் உரிமைகள் பாதுகாப்பு மசோதா, 2019 ..... 87
மிலன் 2020 ..... 88
மித்ரா சக்தி VII: இந்தியா – இலங்கை ..... 88
லோக்பால் - புதிய குறிக்கோள் மற்றும் இலச்சினை ..... 89
மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கர்தவ்யா தளம் ..... 89
முத்ரா கடன் – வாராக் கடன் அதிகரிப்பு ..... 90
FSSAI அமைப்பின் உணவுப் பாதுகாப்பு அறிக்கை ..... 90
IFC-IOR இன் முதலாவது சர்வதேச தொடர்பு அதிகாரி ..... 91
நுஜென் மொபிலிட்டி உச்சி மாநாடு - 2019 ..... 92
உணவுத் தானியங்கள் & சர்க்கரைப் பொருட்கள் - சணலில் பொதி கட்டுதல் ..... 92
ஆசியா 2020க்கான QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை ..... 92
சேவைகள் குறித்த 5வது உலகளாவியக் கண்காட்சி ..... 93
2019 ஆம் ஆண்டு ஜாலியன்வாலா பாக் தேசிய நினைவுச் சின்னம் (திருத்தம்) மசோதா ..... 93
ஸ்பைக் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் ..... 94
சர்வதேசச் செய்திகள் ..... 94
இந்தியா Vs அமெரிக்கா @ உலக வர்த்தக அமைப்பு ..... 94
சவுதி அரம்கோ - மிகப்பெரிய ஆரம்பப் பொது வழங்கல் ..... 94
சர்வதேச அணுசக்தி அமைப்பின் புதிய பொது இயக்குநர் ..... 95
ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மன்றக் கூட்டம் ..... 95
UNFCCCன் 25வது மாநாடு ..... 96
16வது இந்தியா ஆசியான் உச்சி மாநாடு ..... 96
35வது ஆசியான் உச்சி மாநாடு ..... 98
ஒருங்கிணைந்த பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு - RCEP ..... 98
பரஸ்பர தளவாடங்கள் ஆதரவு மீதான ஒப்பந்தம் ..... 99
நாடாளுமன்ற சபாநாயகர்களின் 6வது உச்சி மாநாடு ..... 99
பிம்ஸ்டெக் மாநாடு ..... 100
இணையச் சுதந்திரம் 2019 – அறிக்கை ..... 100
டானகில் பள்ளம் ..... 100
சர்வதேச மாணவர்கள் மதிப்பீட்டுத் திட்டம் - பிசா 2021 ..... 101

ஈரானில் புதிய எண்ணெய் வயல்....102
CARAT - 2019: அமெரிக்க - வங்க தேசம் ஆகிய நாடுகளுக்கிடையேயான கடற்படைப் பயிற்சி....102
IORA அமைச்சர்கள் கூட்டம்....102
இஸ்ரேல் தேர்தல் 2019....103
ADIPEC 2019....103
சர்வதேச லாவி கண்காட்சி @ இமாச்சல்....104
அப்சரா நடனம் - கம்போடியா....104
2019 ஆம் ஆண்டின் ஓட்டுநர் நகரங்களின் குறியீடு....104
டாக்கா உலகளாவிய உரையாடல்....105
பசீரா நகரம் - வடமேற்கு பாகிஸ்தான்....105
டைபாய்டு தடுப்பூசியை அறிமுகப்படுத்திய முதல் நாடு - பாகிஸ்தான்....105
விவசாயப் புள்ளிவிவரங்கள் மீதான 8வது சர்வதேச மாநாடு – தில்லி....106
கய்லா முல்லர் நடவடிக்கை....106
பெருங்கடல் நடன விழா – வங்க தேசம்....106
சுமத்ரான் காண்டாமிருகம்....106
உலகளாவிய உயிரி இந்தியா (பயோ இந்தியா) உச்சி மாநாடு, 2019....107
உணவு பாதிப்புக் குறியீடு....107
இந்தியாவில் வெளிநாட்டுச் சுற்றுலா வருகைகள், 2018....107
உலகளாவிய விரிவான வளமைக் குறியீடு....108
10வது காமன்வெல்த் இளைஞர் பாராளுமன்றம் @ தில்லி சட்டமன்றம்....108
வங்க தேசத்தில் மிதக்கும் பள்ளித் திட்டம்....109
உலகின் மிகப்பெரிய இராஜதந்திரப் பணியமைப்பு - சீனா....109
WATEC மாநாடு 2019 – இஸ்ரேல்....109
ஒரு சிறந்த வலையமைப்பை உருவாக்குதல் (www) - டிம் பெர்னர்ஸ் லீ....110
உலக இடம்பெயர்வு அறிக்கை 2020....110
பொருளாதாரச் செய்திகள்....111
கடுமையான வேலைவாய்ப்பு வீழ்ச்சி....111
சவூதி அரேபியாவில் ரூபே அட்டை....111
புதிய தேசிய ஓய்வூதியத் திட்ட விதிகள்....111
நிர்விக் திட்டம்....112
தென்கிழக்கு ஆசியாவிற்கான பொருளாதாரக் கண்ணோட்டம்....112
இந்தியாவில் வேலையின்மை விகிதம்....112
தபன் ரே குழு....113
காதி – HS குறியீடு....113
NBFC ககான நிதி உள்ளடக்க விகித விதிமுறைகள்....114
அடல் ஓய்வூதியத் திட்டம்....114
மூடிஸ் நிறுவன மதிப்பீடு - ‘நிலைத் தன்மையிலிருந்து எதிர்மறை....114
மகாரத்னா அந்தஸ்து....115
நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையம்....116

NCAER ஆய்வறிக்கை ....... 116
எஸ்ஸார் ஸ்டீல் தீர்ப்பு - மைல்கல் தீர்ப்பு ....... 116
ஜூலை - செப்டம்பர் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ....... 117
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ....... 117
L2ப்ரோ இந்தியா – கைபேசிச் செயலி ....... 117
இன்டிஜென் (IndiGen) - அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் திட்டம் ....... 117
டெக்சாகர் ....... 118
ஒலிகோமன்னேட் - உலகின் முதல் புதிய அல்சைமர் மருந்து ....... 118
விண்வெளித் தொழில்நுட்பப் பிரிவு ....... 118
நின்றபடியே செல்லக் கூடிய சக்கர நாற்காலி ....... 118
முதலாவது மின்சார விமானம் ....... 119
நாசாவின் நைசர் தொலைநோக்கி ....... 119
விண்மீன்களுக்கிடைப்பட்ட பகுதியில் வாயேஜர் 2 நுழைவு ....... 120
DRDOன் பற்ற வைப்பு வளாகம் @ புனே ....... 121
ஸ்டார்லிங்க் அமைப்பு ....... 121
சனிக் கிரகத்தின் துணைக்கோளான டைட்டனின் வரைபடம் ....... 122
SeeTB ....... 123
நிமோனியா (நுரையீரல் நோய்) மற்றும் SAANS ....... 124
செக்ரடகோஜின் - உடல் பருமனால் தூண்டப்பட்ட நீரிழிவு நோய் ....... 125
வயிற்றுப்போக்கிற்கு எதிரான ETVAX தடுப்பூசி ....... 125
பிஎஸ்எல்வி - சி47 / கார்டோசாட் - 3 திட்டம் ....... 125
LB -1 கருந்துளை ....... 127
நீருக்கடியில் ரோவர் BRUIE ....... 127
மர மார்பக நோய் – இறைச்சிக் கோழி ....... 128
சுற்றுச்சூழல் செய்திகள் ....... 128
டிரிஸ்டன் அல்பாட்ராஸ் எதிர்கொள்ளும் எலிகள் பிரச்சினை ....... 128
கலிபோர்னியாவின் காட்டுத் தீ ....... 129
அரேபியக் கடலில் உருவான புயல்கள் ....... 129
காலநிலை மாற்றம் தொடர்பான 29வது BASIC அமைச்சரவைக் கூட்டம் ....... 130
தில்லியின் ஒற்றைப்படை இரட்டைப்படை வாகன எண் திட்டம் – 2019 ....... 130
கான்பூர் - உலகின் மிகவும் மாசுபட்டுள்ள நகரம் ....... 131
டெல்லி மற்றும் உத்தரப் பிரதேசத்தில் காற்று மாசுபாடு ....... 132
நெகிழிக்காக அரிசி ....... 135
தரிசு நில வரைபடத்தின் 5வது பதிப்பு - 2019 ....... 135
காலநிலை அவசரநிலை ....... 135
புதிய மரத் தவளை கண்டுபிடிப்பு ....... 136
தெற்காசியச் சுற்றுச்சூழல் ஒத்துழைப்புத் திட்டம் - SACEP ....... 136
அமெரிக்கா - பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து விலகல் ....... 136
தாளடி எரிப்பு பற்றிய அறிக்கை ....... 137

நெல்லோபட்டோட்ஸ் கிரெட்டா ..... 138
உயிரி செங்கற்கள் ..... 139
"பழுப்பு நிறத்திலிருந்து பச்சை நிறம்" என்ற ஒரு அறிக்கை – இந்தியா ..... 139
IndAIR ..... 140
சிக்னல் மீன் கேரளாவில் கண்டுபிடிப்பு ..... 140
எத்தனால் உற்பத்தி ..... 141
நெகிழிப் பூங்காக்கள் ..... 141
எந்தவொரு உயிரினமும் வசிக்காத பகுதி - டல்லோல், எத்தியோப்பியா ..... 141
உமிழ்வு இடைவெளி அறிக்கை – 2019 ..... 142
காலநிலை அவசரநிலை - ஐரோப்பிய நாடாளுமன்றம் ..... 143
ஆறாவது ஆசிய டென்ட்ரோக்ரோனாலஜி (மரத்தின் வளையங்கள் ஆராய்ச்சி) மாநாடு ..... 144
மாநிலச் செய்திகள் ..... 144
பொதுச் சுகாதார அவசர நிலை - டெல்லியில் காற்றின் தரம் ..... 144
ஒடிசா - சமூகப் பதிவு ..... 145
புத்த மதக் கட்டிடம் இடிபாடு - தொட்டலகொண்டா, ஆந்திரப் பிரதேசம் ..... 145
ஹரியானாவின் புதிய முதல்வர் ..... 146
பார்வையாளர்களுக்கான நுழைவுச் சட்டம் ..... 146
அசாமின் பாவோனா நடனம் ..... 147
திப்பு சுல்தான் – பாடத் திட்டத்திலிருந்து நீக்கம் ..... 147
மூங்கில் தொழில்நுட்பப் பூங்காக்கள் ..... 147
6 லட்சம் தீபங்கள் ..... 147
ஆந்திராவில் கோட்டிப்ரோலு ..... 148
தில்லியில் குறைந்தபட்ச ஊதிய உயர்வு ..... 148
பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம் – தில்லி ..... 148
குஜராத் தீவிரவாத எதிர்ப்புச் சட்டம் ..... 148
ஒடிசா பேரிடர் தயார்நிலை நாள் கண்காட்சி ..... 149
'ஒடிசா மோ பரிவார்' முன்னெடுப்பு ..... 149
சுரங்க பவாடி - பண்டைய நீர் வழங்கல் அமைப்பு ..... 149
மிகப்பெரிய சிவலிங்கம் - கேரளா ..... 150
இணைய அணுகல் – கேரளா ..... 151
குடியரசுத் தலைவர் ஆட்சி – மகாராஷ்டிரா ..... 151
கர்நாடக மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கம் ..... 152
மின்னல் தாக்குதல் நிகழ்வுகள் – இந்தியா ..... 152
பயிர் இழப்பீட்டுத் திட்டம் "BBY" – ஹரியானா ..... 153
சிசு சுரக்சா செயலி – அசாம் ..... 153
நிஷ்தா செயலி தொடக்கம் – காஷ்மீர் ..... 153
RT-PCR நோய் கண்டறிதல் இயந்திரங்கள் @ கொல்கத்தா ..... 154
மிசோரத்தில் வன உரிமைச் சட்டம் - ரத்து ..... 154
மத்திய பிரதேசத்தில் கஞ்சா – சட்டப்பூர்வம் ..... 154

இந்திய அரசியல் வரைபடத்தில் அமராவதி நகரம் ..... 155
அருந்ததி ஸ்வர்ண யோஜனா - அசாம் ..... 156
உலகின் மிகப்பெரிய இஸ்லாமியக் கூட்டம் - போபால் ..... 156
நாடு - நேடு திட்டம் ..... 156
வேர்ப் பாலம் ..... 157
கர்நாடகாவின் கலாபர்கி விமான நிலையம் ..... 157
காந்தி கிராமங்கள், ராஜஸ்தான் ..... 158
குரு காசிதாஸ் தேசியப் பூங்கா புலிகள் காப்பகம் – சத்தீஸ்கர் ..... 158
மாற்றுத் திறனாளிகளுக்கு இடங்கள் ஒதுக்கீடு - சத்தீஸ்கர் பஞ்சாயத்துத் தேர்தல்கள் ..... 158
போடோஸ் இயக்கம் மீதான தடை நீட்டிப்பு ..... 158
எட்டாவா சிங்கங்களைப் பார்வையிடும் வன உலா – உத்தரப் பிரதேசம் ..... 159
குறுகிய கால முதல்வர்- மகாராஷ்டிரா ..... 159
மாற்றத்திற்கான நீர் – கோழிக்கோடு ..... 160
லோக்டக் உள்நாட்டு நீர்வழித் திட்டம் - மணிப்பூர் ..... 160
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ..... 161
சாகரோவ் பரிசு - பேராசிரியர் இல்ஹாம் டோடி ..... 161
இந்திரா காந்தி விருது ..... 161
2019 SEED விருதுகள் ..... 161
2019 ஆம் ஆண்டுக்கான சிறப்பு நடவடிக்கைப் பதக்கம் ..... 162
வியாஸ் சம்மன் ..... 163
இலக்கியத்திற்கான JCB பரிசு 2019 ..... 163
சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவு விருதுகள் ..... 163
விஞ்ஞானிகா - சர்வதேச அறிவியல் இலக்கிய விழா ..... 164
பி.எஸ்.கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ் – மறைவு ..... 165
டி.என்.சேஷன் – மறைவு ..... 165
ஆசியச் சமூகத்தின் “மாற்றியமைப்பதில் பெரும்பங்களிப்பை ஆற்றியோருக்கான” விருதுகள் - இமயமலையின் குங்பூ பெண் துறவிகள் ..... 166
கங்கை உத்சவ் ..... 167
பிரிக்ஸ் - இளம் கண்டுபிடிப்பாளர் பரிசு ..... 168
வசிஷ்த நாராயண் சிங் ..... 168
RBS இந்தியா – புவித் தலைவர்களுக்கான விருதுகள் ..... 168
குரு நானக்கின் போதனைகளைப் பற்றிய 3 புத்தகங்கள் ..... 169
இன்போசிஸ் விருதுகள் 2019 ..... 169
ஆடி மஹோத்ஸவ் ..... 170
ராஜாராம் மோகன் ராய் தேசிய விருது ..... 170
வனவிலங்குப் பாதுகாப்பு அறிவியலில் ஜார்ஜ் ஷாலர் வாழ்நாள் விருது ..... 170
நீதிபதி ஆர்.பானுமதி - கொலீஜியம் உறுப்பினர் ..... 170
ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் 2019 விருது ..... 171
பார்ச்சூன் அமைப்பின் ஆண்டிற்கான வணிக நபர் ..... 171

ஆண்டின் உலகத் தடகள விருது ....................171
மணிப்பூர் சங்காய் விழா ....................172
DRDO தலைவர் – RAeSன் தோழமை விருது ....................172
ஐக்கிய நாடுகளின் உலகளாவிய காலநிலை நடவடிக்கை விருதுகள் 2019 ....................173
50வது இந்திய சர்வதேச திரைப்பட விழா, கோவா ....................173
அக்கிதம் அச்சுதன் நம்பூதிரி – ஞானபீட விருது ....................173
விளையாட்டுச் செய்திகள் ....................174
23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் ....................174
17 வயதிற்கு உட்பட்டோருக்கான FIFA கோப்பையின் – சின்னம் ....................175
சூதாட்ட எதிர்ப்பு மசோதா – இலங்கை ....................175
2023 ஆம் ஆண்டுக்கான ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை ....................176
தீபக் சஹர் ....................176
மனு பாகர் – துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை ....................176
ISSF உலகக் கோப்பை இறுதிப் போட்டிகள் ....................176
முதலாவது பகல் - இரவு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி – இளஞ்சிவப்பு நிறப் பந்து ....................177
சையத் முஸ்தாக் அலி போட்டி - அபிமன்யு மிதுன் ....................178
ஸ்டீவ் ஸ்மித் - 7,000 டெஸ்ட் ரன்கள் ....................178
முக்கிய தினங்கள் ....................179
தமிழ்நாடு தினம் - நவம்பர் 1 ....................179
உலக சைவ உணவுப்பழக்க தினம் - நவம்பர் 1 ....................179
மாநில உருவாக்க தினம் ....................180
இந்திய நிலக்கரி அமைப்பின் நிறுவன தினம் - நவம்பர் 1 ....................181
உலக சுனாமி விழிப்புணர்வு நாள் - நவம்பர் 5 ....................181
போர் மற்றும் ஆயுதப் போரட்டத்தின் போது சுற்றுச்சூழலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 6 ....................182
பச்சிளங் குழந்தைகள் பாதுகாப்பு தினம் - நவம்பர் 7 ....................182
தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - நவம்பர் 7 ....................183
சர்வதேசக் கதிரியக்கவியல் தினம் - நவம்பர் 8 ....................184
உலக கதிரியக்க வரைவியல் தினம் - நவம்பர் 8 ....................184
தமிழ் அகராதியியல் தினம் - நவம்பர் 8 ....................185
தேசிய சட்ட சேவைகள் தினம் - நவம்பர் 9 ....................185
சர்வதேச அறிவியல் மற்றும் அமைதி வாரம் - நவம்பர் 9 முதல் 14 வரை ....................186
தேசியக் கல்வி தினம் - நவம்பர் 11 ....................186
உலக நிமோனியா தினம் - நவம்பர் 12 ....................187
பொதுச் சேவை ஒளிபரப்பு தினம் - நவம்பர் 12 ....................188
குரு நானக் ஜெயந்தி - நவம்பர் 12 ....................188
உலக நீரிழிவு தினம் - நவம்பர் 14 ....................189
உலகத் தரத்திற்கான தினம் - நவம்பர் 14 ....................189
தேசியக் கூட்டுறவு வாரம் - நவம்பர் 14 – 20 ....................190

சகிப்புத் தன்மைக்கான சர்வதேச தினம் - நவம்பர் 16 ..... 190
தேசியப் பத்திரிக்கை தினம் - நவம்பர் 16 ..... 190
சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச நினைவு தினம் - நவம்பர் 17 ..... 191
சர்வதேச மாணவர்கள் தினம் - நவம்பர் 17 ..... 191
முதலாவது இயற்கை மருத்துவ தினம் - நவம்பர் 18 ..... 191
உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினம் - நவம்பர் 20 ..... 192
சர்வதேசக் குழந்தைகள் தினம் - நவம்பர் 20 ..... 192
உலக தத்துவ தினம் - நவம்பர் 21 ..... 193
சர்வதேச ஆண்கள் தினம் - நவம்பர் 19 ..... 193
உலகக் கழிவறை தினம் - நவம்பர் 19 ..... 194
தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் - நவம்பர் 19 ..... 195
உலகப் பாரம்பரிய வாரம் 2019 ..... 195
தேசிய மாணவர் படை தினம் - நவம்பர் 24 ..... 195
பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 25 ..... 196
தேசிய அரசியலமைப்பு தினம் அல்லது சட்ட தினம் - நவம்பர் 26 ..... 197
தேசிய பால் தினம் - நவம்பர் 26 ..... 197
பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை நாள் - நவம்பர் 29 ..... 198
இரசாயனப் (வேதியியல்) பொருட்களால் ஏற்பட்ட போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நினைவு தினம் - நவம்பர் 30 ..... 199
இதரச் செய்திகள் ..... 200
குரு நானக்கின் 550வது பிறந்த தினத்தை முன்னிட்டு பாகிஸ்தான் வெளியிட்டுள்ள நாணயம் ..... 200
கர்தார்பூர் சாஹிப் பெருவழிப் பாதை ஒப்பந்தம் ..... 200
மிகப்பெரிய வான் இயற்பியல் தொகுப்பிற்கான உலக சாதனை ..... 201
ICGS அன்னிபெசன்ட் ..... 201

# TNPSC துளிகள்

- பெரு நகரங்களைச் சுற்றியுள்ள சிறிய நகரங்களை இணைப்பதற்காக இந்திய ரயில்வேயானது '09 சேவா' என்ற சேவை ரயில்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இந்த ரயில் சேவையானது மத்திய ரயில்வே மற்றும் வர்த்தக & தொழில் துறை அமைச்சரான பியூஷ் கோயல் என்பவரால் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவும் சவுதி அரேபியாவும் கடல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகவும் சர்வதேச வர்த்தகத்திற்காகப் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்வதற்காகவும் மற்ற இந்தியப் பெருங்கடல் கரையோர நாடுகளுடன் இணைந்து பணியாற்றத் திட்டமிட்டுள்ளன.
  - இந்தியா சவூதி அரேபியாவுடனான தனது முதலாவது கூட்டு கடற்படைப் பயிற்சியை 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை நடத்த இருக்கின்றது.
- இந்தியாவைச் சேர்ந்த முன்னணியில் உள்ள ஆண்கள் இரட்டையர் ஜோடியான சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் 2019 ஆம் ஆண்டுக்கான பிரெஞ்சு ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்தனர்.
  - இந்த ஜோடியானது உலக முதல் தர ஜோடியான மார்கஸ் பெர்னால்டி மற்றும் கெவின் சுகமுல்ஜோவிடம் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது.
- சர்வதேச கிரிக்கெட் ஆணையமானது சாகிப் அல் ஹாசன் மீது நீண்ட காலத் தடை விதித்ததை அடுத்து வங்க தேச கிரிக்கெட் வாரியமானது மஹமுதுல்லாவை மூத்தோர் தேசிய 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் அணித் தலைவராக நியமித்துள்ளது.
  - ஊழல் நடத்தை பற்றிய அணுகுமுறைகள் குறித்துப் புகாரளிக்கத் தவறியதால் சாகிப் கிரிக்கெட் விளையாட 2 ஆண்டுகள் தடை செய்யப்பட்டும் 1 வருடம் இடைநீக்கம் செய்யப்பட்டும் உள்ளார்.
- புது தில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச சூரியஒளிக் கூட்டமைப்பின் (International Solar Alliance - ISA) இரண்டாவது அமர்வில், எரித்திரியா மற்றும் செயிண்ட் கிட்டிஸ் & நெவிஸ் ஆகிய இரு நாடுகள் ISA கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
  - இது ISAவில் கையெழுத்திட்ட மொத்த நாடுகளின் எண்ணிக்கையை 83 ஆக உயர்த்துகின்றது.
- தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமான TRAI (இந்தியத் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் - Telecom Regulatory Authority of India) ஒரு அழைப்பானது சந்தாதாரரால் பதிலளிக்கப் படாமலோ அல்லது அந்த அழைப்பு நிராகரிக்கப் படாமலோ இருக்கும் சமயத்தில் அத்தொலைபேசி அழைப்பிற்கான நேரத்தை கைபேசிகளுக்கு 30 வினாடிகளாகவும் தரைவழி (லேண்ட்லைன்) தகவல்வட தொலைபேசிகளுக்கு 60 வினாடிகளாகவும் நிர்ணயித்துள்ளது.
- சந்திரயான் -2 விண்கலத்தில் உள்ள CHACE-2 கருவியானது, சந்திரனின் நிலப்பரப்பில் இருந்து சுமார் 100 கிலோமீட்டர் உயரத்தில் ஆர்கான் - 40 என்ற வாயுவினைக் கண்டுபிடித்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.
- இண்டிகோ நிறுவனமானது சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தில் (International Air Transport Association - IATA) உறுப்பினராக சேர்ந்துள்ளது. இது சர்வதேச சந்தைகளில் வலுவான கூட்டிணைவுகளை வளர்க்க அந்த விமான நிறுவனத்திற்கு உதவ இருக்கின்றது.

- IATA என்பது 290க்கும் மேற்பட்ட விமானங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விமானத் தொழில் துறைக்கான ஒரு உலகளாவிய வர்த்தகச் சங்கமாகும்.

❖ தமிழ்நாடு நகராட்சி நிர்வாக அமைச்சகமானது "பந்திகூட்" என்ற சிலந்தி வகை ரோபோவை அதிகாரப் பூர்வமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. இது துப்புரவுத் தொழிலாளர்களால் சாக்கடை வாயிற் புழைகளைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தப்பட இருக்கின்றது.

- இந்த ரோபோ ஆனது ஒரு சாக்கடை வாயிற் புழையின் வழியாக 30 அடி வரை சென்று, அங்கு திரட்டப்பட்டுள்ள கழிவுகளைச் சேகரிக்க இருக்கின்றது.

❖ அமெரிக்காவின் ஓரிகானில் தயாரிக்கப்பட்ட "ரோக் ரிவர் ப்ளூ" என்று பெயரிடப்பட்ட கரிம நீல பாலாடைக் கட்டியானது வருடாந்திர உலக பாலாடைக் கட்டி விருதுகளில் உலகின் சிறந்த பாலாடைக் கட்டி என பெயரிடப் பட்டுள்ளது.

❖ இந்தியாவின் முதலாவது நான்கு மேல்தாங்கு (மேலடுக்கு) போக்குவரத்துக் கட்டமைப்பை மகாராஷ்டிராவின் நாக்பூரில் கட்டமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (National Highways Authority of India - NHAI) பரிந்துரைத்துள்ளது.

❖ மகாராஷ்டிராவின் முன்னாள் காவல்துறை இயக்குநரான டி.டி. பட்சல்கிகர் துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ சர்வதேச புகழ்பெற்ற மணல் ஓவியக் கலைஞரான ஒடிசாவைச் சேர்ந்த பத்மஸ்ரீ விருது பெற்ற சுதர்சன் பட்நாயக் என்பவர் மதிப்புமிக்க 2019 ஆம் ஆண்டின் இத்தாலிய கோல்டன் மணற் கலை விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

- இத்தாலியில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஸ்கோரானா மணல் நேட்டிவிட்டி (பிறப்பிட) திருவிழாவின் போது இவர் கௌரவிக்கப்பட இருக்கின்றார்.

❖ இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளால் இணைந்து உருவாக்கப்பட்ட பிரம்மோஸ் மீயொலி ஏவுகணையை வாங்குவதில் ஆர்வமாக இருப்பதாக பிலிப்பைன்ஸ் ராணுவம் அறிவித்துள்ளது.

- இந்தியக் கடற்படை போர்க் கப்பலான ஐ.என்.எஸ் சஹ்யாத்ரி மணிலாவிற்கு பயணம் மேற்கொண்ட போது, பிரம்மோஸ் ஏவுகணையை பிலிப்பைன்ஸ் ராணுவத்திற்கு விற்பனை செய்வது குறித்து இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் விவாதித்தனர்.

❖ நோவாக் ஜோகோவிச் பாரிஸ் மாஸ்டர்ஸ் போட்டித் தொடரின் ஐந்தாவது முதுநிலைப் பட்டத்தை வென்றுள்ளார். இவர் இறுதிப் போட்டியில் கனடா நாட்டைச் சேர்ந்த இளம் வீரரான டெனிஸ் ஷபோவலோவிற்கு எதிராக விளையாடினார்.

- இந்த வெற்றி இந்தப் பருவத்தில் ஜோகோவிச்சின் ஐந்தாவது வெற்றியாகும். இதற்கு முன்பு இவர் இந்தப் பருவத்தில் விம்பிள்டன், அமெரிக்க ஓபன், மாட்ரிட் ஓபன் மற்றும் டோக்கியோ ஓபன் ஆகிய கோப்பைகளை வென்றுள்ளார்.

❖ அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு ரூ.76.24 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது.

- கபடி, கைப்பந்து மற்றும் கிரிக்கெட் விளையாட்டுகளில் கவனம் செலுத்துவதற்காக மொத்தம் 12,524 கிராமப் பஞ்சாயத்துகள், 528 நகரப் பஞ்சாயத்துகளில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

❖ சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 5 திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தியதற்காக 5 "ஸ்காட்ச் ஆர்டர் ஆஃப் விருதுகள்" தமிழக விவசாயத்

துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

- இந்தியப் பிரதமர் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று பாங்காக்கில் தாய்லாந்து மொழியில் 'திருக்குறள்' புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- கோவாவில் நடைபெற இருக்கும் இந்தியாவின் 50வது சர்வதேச திரைப்பட விழா என்ற விழாவில் தமிழ் நடிகர் ரஜினிகாந்த் சிறப்பு “ஐகான் ஆஃப் கோல்டன் ஜூபிலி விருது” என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்.
- ஜெர்மனி நாட்டின் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் தமிழ்நாட்டின் போக்குவரத்துத் துறையின் அரசுப் பேருந்துத் துறையை சீர்திருத்த 200 மில்லியன் டாலர்களை ஜெர்மனி வழங்குவதாக அறிவித்துள்ளார்.
- அக்டோபர் 25 ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பானது 1.832 பில்லியன் டாலர் அதிகரித்து இதுவரையல்லாத அளவில் 442.583 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.
- 99 வயதான யோகா ஆசிரியர் வி நானம்மாள் கோவையில் காலமானார்.
    - பத்மஸ்ரீ விருதைப் பெற்றுள்ள அவர் "யோகா பாட்டி" என்று அன்பாக அறியப்படுகிறார்.
- எட்டு முறை ஒலிம்பிக் போட்டியில் வென்றுள்ள இந்திய ஹாக்கி அணியானது 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு ரஷ்யாவை வீழ்த்தித் தகுதி பெற்றுள்ளது. அதற்கு முன்னர் இந்திய மகளிர் அணியும் அமெரிக்காவிற்கு எதிராக வென்றதன் மூலம் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.
- எண்ணெய் மற்றும் தொலைத் தொடர்பு நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் இந்தியாவில் முதன்முதலாக ரூ.9 லட்சம் கோடி மதிப்புள்ள சந்தை மூலதனத்தை எட்டியுள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ரூ.8 லட்சம் கோடியை எட்டிய முதல் நிறுவனமும் இதுவே ஆகும்.
- கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உள்ள அதன் கணினி அமைப்புகளில் மால்வேர் (தரவுகளைத் திருடுவது) இருப்பதை இந்திய அணுசக்திக் கழகம் (Nuclear Power Corporation of India - NPCIL) உறுதிப் படுத்தியுள்ளது. NPCIL ஆனது அணுசக்தித் துறையின் கீழ் இயங்கும் ஒரு அமைப்பாகும். அணுசக்தித் துறையானது பிரதம மந்திரி அலுவலகத்தின் கீழ் வருகின்றது.
- நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பரமஹம்ச யோகானந்தாவின் 125வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் அவர் குறித்த ஒரு சிறப்பு நினைவு நாணயத்தை வெளியிட்டுள்ளார். யோகானந்தா மேற்கு நாடுகளில் யோகாவின் தந்தை என்று அறியப் படுகின்றார்.
- சமீபத்தில் புஷ்கர் கண்காட்சியானது ராஜஸ்தானில் நடத்தப் பட்டது. இது புஷ்கர் (ராஜஸ்தான், இந்தியா) நகரில் ஒவ்வொரு ஆண்டும் பல நாட்கள் நடைபெறும் கால்நடைக் கண்காட்சி மற்றும் கலாச்சார விழாவாகும். இது ஒட்டகம், குதிரை மற்றும் கால்நடை குறித்த இந்தியாவின் மிகப்பெரிய கண்காட்சிகளில் ஒன்றாகும்.
- கிருஷ்ணகிரிக்கு அருகிலுள்ள வேப்பன ஹல்லியில் 2000 ஆண்டுகள் பழமையான பாறைக் கீறல்கள் சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்டன. இது தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பழமையானது மற்றும் மிகப் பெரியது என்று கருதப் படுகின்றது.
- 1 கிலோ அரிசிக்கு 1 கிலோ நெகிழிக் கழிவுகளைச் சேகரிக்கும் பணியை தெலுங்கானாவின் முலுகு மாவட்ட நிர்வாகம் தொடங்கியுள்ளது.

- 2019 ஆம் ஆண்டின் ஷார்ஜா சர்வதேசப் புத்தகக் கண்காட்சியானது ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஷார்ஜாவில் நடத்தப் பட்டது. இது உலகின் சிறந்த புத்தக வெளியீட்டு நிகழ்வுகளில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இது அரபு நாடுகளில் மிகப்பெரிய ஒரு நிகழ்வாக கருதப் படுகின்றது.
- "செனாப் பள்ளத்தாக்கு பகுதியில் அமைதி மற்றும் செழிப்பை ஊக்குவிக்கும்" நோக்கத்துடன் ஜம்மு-காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் நடைபெற்ற திருவிழா 'சங்கம் 2019-20' ஆகும்.
    - இந்த ஆண்டுக்கான கருப்பொருள் “நம் தேசத்தை உருவாக்குவோம்” என்பதாகும்.
- லடாக் யூனியன் பிரதேசமானது “ஜி.பி பந்த் இமயமலை சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின்” ஒரு புதிய பிராந்திய மையத்தைப் பெறுகிறது.
    - இந்நிறுவனத்தின் தலைமையகம் கோசி-கட்டர்மாலில் (உத்தரகாண்ட்) உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முதல் தனுஷ் படைப் பிரிவைப் பெறவும், 2022 ஆம் ஆண்டுற்குள் அனைத்து 114 துப்பாக்கிகளையும் பெறவும் இந்திய ராணுவம் திட்டமிட்டுள்ளது.
    - தனுஷ் 1980 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட ஸ்வீடிஷ் போபர்ஸ் வகை துப்பாக்கியின் மாதிரியைக் கொண்டு உள்நாட்டில் மேம்படுத்தப்பட்ட வகையாகும்.
- இந்தியாவில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை நகர்ப்புறப் போக்குவரத்துத் துறையில் 1 பில்லியன் யூரோ முதலீடு செய்யப்படும் என்று ஜெர்மனியப் பிரதமரான ஏஞ்சலா மெர்க்கல் உறுதியளித்துள்ளார்.
- “நீதிக்காக சமமான அணுகல் மற்றும் சட்டத்தின் ஆட்சி” என்ற தலைப்பின் கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் காமன்வெல்த் சட்ட அமைச்சர்கள் மாநாடானது இலங்கையில் உள்ள கொழும்புவில் நடைபெற்றது.
- ஒடிசா மாநிலமானது “ஒரே பாரதம் வளமான பாரதம்” என்ற திட்டத்தின் கீழ் மகாராஷ்டிராவுடன் இணைத்துக் குறிக்கப் பட்டுள்ளது. ஒடிசா மாநிலம் “உத்கல்” என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் பொருள் சிறந்த கலை மற்றும் கலாச்சாரத்தின் நிலம் என்பதாகும்.
- உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் கீழ் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் மாசு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணையமானது (Environment Pollution (Prevention and Control) Authority – EPCA) தில்லி மற்றும் தேசியத் தலைநகர்ப் பகுதியில் பொதுச் சுகாதார அவசர நிலையை அறிவித்துள்ளது. இது அங்கு கட்டுமான நடவடிக்கைகள் மற்றும் பட்டாசுகள் வெடிப்பதைத் தடை செய்துள்ளது.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவரான எம்.வெங்கையா நாயுடு சென்னையில் ஒரு பழமையான தென்னிந்திய இசைக் கருவிகளின் கலை மற்றும் அறிவியலின் அரிய படைப்பான ‘மிருதங்கத்தின் சிறப்புமிகு இசை’ என்ற ஒரு தனிக் கட்டுரையை வெளியிட்டுள்ளார்.
    - இந்தத் தனிக் கட்டுரையானது புகழ்பெற்ற மிருதங்கக் கலைஞரான டாக்டர் உமையாள்புரம் சிவராமன், விஞ்ஞானி டாக்டர் டி.ராமசாமி மற்றும் டாக்டர் நரேஷ் ஆகியோரால் தயாரிக்கப் பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், இந்தியாவின் கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வுகளின் அதிகரிப்பு வெகுவாகக் குறைந்துள்ளது. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளில்

இந்தியா அதன் மிகக் குறைந்த வருடாந்திர அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

- இது தற்பொழுது 2% ஆக இருக்கின்றது. இது கடந்த காலகட்டத்தில் ஒரு ஆண்டுக்குச் சராசரியாக 5% ஆக இருந்தது.

❖ ஏபிஜே அப்துல் கலாமின் பிறந்த நாளை (அக்டோபர் 15) உலக மாணவர்கள் தினமாக அனுசரிக்க ஐக்கிய நாடுகள் சபையால் எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்று ஐ.நா தெளிவுபடுத்தியுள்ளது.

❖ பூபென் ஹசாரிகாவின் எட்டாவது ஆண்டு நினைவு விழாவையொட்டி வங்க தேசத்தின் தேசிய கீதமானது சமஸ்கிருத மொழியில் தயாரித்து வெளியிடப் பட்டுள்ளது.

❖ பெண்களுக்கான 10 மீட்டர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் மனு பாக்கர் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். ஆசியத் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இளையோர் ட்ராப் கலப்புப் போட்டியில் விவான் கபூர் மற்றும் மனிஷா கீர் ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளனர்.

❖ மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை இணையமைச்சரான சஞ்சய் தோத்ரே என்பவர் நவோதயா வித்யாலயா சமிதியின் "ஷாலா தர்பன்" என்ற ஒரு தளத்தைத் தொடங்கி வைத்தார்.

- நவோதயா வித்யாலயாக்கள் ஆனது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பான நவோதயா வித்யாலயா சமிதியால் நிறுவப்பட்ட ஒரு இருபாலின உண்டு உறைவிடப் பள்ளிகளாகும்.

❖ செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம் அமைய இருக்கின்றது.

- இந்தியாவில் இந்த வகையில் அமையவிருக்கும் முதலாவது மருத்துவக் கல்லூரி இதுவேகும்.

❖ நாடு முழுவதும் கிடப்பில் உள்ள வீட்டு வசதித் திட்டங்களைப் புதுப்பிப்பதற்காக 25,000 கோடி ரூபாய் நிதியை மாற்று முதலீட்டு நிதியாக (Alternative Investment Fund – AIF) வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- மாற்று முதலீட்டு நிதி என்பது அதன் முதலீட்டாளர்களின் நலனுக்காக வரையறுக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கையின்படி முதலீடு செய்வதற்காக சில முதலீட்டாளர்களிடமிருந்து நிதிகளைச் சேகரிப்பதாகும்.

❖ இந்திய நிலத் துறைமுக ஆணையத்தின் (Land Ports Authority of India - LPAI) தலைவராக மிஸ்ராவை நியமிக்க நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது தனது ஒப்புதலை அளித்துள்ளது.

- LPAI ஆனது இந்தியாவின் சர்வதேச எல்லைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பயணிகள் மற்றும் பொருட்களின் எல்லை தாண்டிய போக்குவரத்திற்காக, அதற்குரிய வசதிகளை உருவாக்கி, தூய்மைப் பணிகளை மேற்கொண்டு, அதை நிர்வகிக்கின்றது.

❖ சாலைத் தொழில்நுட்பம் (நிலையான சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள்) குறித்த 5வது சர்வதேச மாநாடானது சமீபத்தில் புது தில்லியில் நடத்தப்பட்டது.

- இந்த மாநாட்டின் கருப்பொருள், 'பசுமை மற்றும் நிலையான சாலைகளுக்காக இருக்கக் கூடிய வளங்களின் திறனுள்ள பயன்பாடு' என்பதாகும்.

❖ குஜராத் மாநிலத்தின் முதலாவது மண்ணெண்ணெய் அற்ற மாவட்டமாக காந்தி நகர் மாவட்டம் உருவெடுத்துள்ளது.

- முதன்முறையாக லடாக் இலக்கியத் திருவிழாவானது லடாக்கின் லே மாளிகையில் சமீபத்தில் நடைபெற்றது.
- தாய்லாந்தின் தேசியப் பூங்காவில் உள்ள ஹேவ் நரோக் நீர் வீழ்ச்சியில் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு விபத்தில் ஆறு யானைகள் இறந்தன.
  - இந்த நீர்வீழ்ச்சியானது காவோ யாய் தேசியப் பூங்காவில் உள்ளது. இந்த தேசியப் பூங்காவில் சுமார் 300 காட்டு யானைகள் உள்ளன.
- அமெரிக்காவிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழகத் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சிகாகோவில் ஒரு விருதைப் பெற்றுள்ளார்.
  - அமெரிக்க பன்மை இனக் கூட்டணி என்ற அமைப்பானது அவருக்கு "ஆண்டின் எழுச்சி நாயகன் - ஆசியா" என்ற விருதை வழங்கியிருக்கிறது.
- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி ஏ.பி. சாஹி பதவியேற்றார். தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் ராஜ் பவனில் தலைமை நீதிபதிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- உலகத் தரம் வாய்ந்த சிகிச்சையை மலிவு விலையில் வழங்குவதற்காக ஆந்திரா, தெலுங்கானா, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் நான்கு மருத்துவ சாதனப் பூங்காக்களை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- உலகின் முதலாவது அமுக்கப்பட்ட இயற்கை எரிவாயு (Compressed natural gas - CNG) துறைமுக முனையத்தை பாவ்நகரில் கட்டமைக்க குஜராத் அரசு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- குஜராத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான துருவ் பிரஜாபதி என்பவர் 2 புதிய சிலந்திகளைக் கண்டுபிடித்துள்ளார். அவற்றில் ஒன்றிற்கு சச்சினின் நினைவாக மரேங்கோ சச்சின் டெண்டுல்கர் என்றும் மற்றொன்றிற்கு கேரளாவில் கல்வி குறித்த விழிப்புணர்வைப் பரப்பிய ஒரு அறப்போராளியான செயிண்ட் குரியகோஸ் எலியாஸ் சவரா என்பவரின் நினைவாக 'இந்தோமரெங்கோ சவரபட்டர்' என்றும் பெயரிட்டுள்ளார்.
- ஸ்ரீநகரில் உள்ள தால் ஏரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் சுருங்கி வருவதன் காரணமாக, ஜம்மு காஷ்மீர் அரசானது இந்தப் பகுதியை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலமாக (ESZ - eco-sensitive zone) அறிவிப்பதற்காக பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
  - சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலங்கள் என்பது பாதுகாக்கப்பட்ட பகுதிகள், தேசியப் பூங்காக்கள் மற்றும் வன விலங்குச் சரணாலயங்கள் ஆகியவற்றைச் சுற்றி 10 கி.மீ. தொலைவு வரை பரவியுள்ள பகுதிகளாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ் இந்திய அரசின் மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகத்தால் ESZகள் அறிவிக்கப் படுகின்றன.
- இதே வகையில் முதலாவதான சமஸ்கிருத மொழி மீதான ஒரு உலகளாவிய மாநாடான "சமஸ்கிருத பாரதி விஸ்வ சம்மேளனம்" என்ற மாநாடானது புது தில்லியில் நடத்தப் பட்டது.
  - இந்நிகழ்ச்சியானது சமஸ்கிருத பாரதி என்ற ஒரு அரசு சாரா நிறுவனம் மற்றும் இந்திய கலாச்சார உறவுகள் மன்றம் (Indian Council for Cultural Relations - ICCR) ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டது.
- கூகுள் ஆனது 'பெர்லின் சுவர்' (நவம்பர் 9, 1989) இடிப்பின் 30வது நினைவு தின விழாவை டூடுலுடன் அனுசரித்தது.

- பெர்லின் சுவரானது ஒரு பாதுகாக்கப்பட்ட கான்கிரீட் தடுப்புச் சுவராக இருந்தது. இது 1961 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை பெர்லினை எல்லை ரீதியாகவும் கருத்தியல் ரீதியாகவும் பிரித்து வைத்திருந்தது.

❖ நியூசிலாந்து பாராளுமன்றமானது "சுழியக் கார்பன்" என்ற ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இது 2050 ஆம் ஆண்டிற்குள் கிட்டத்தட்ட அனைத்துப் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளுக்கும் "நிகர சுழிய இலக்கை" நிர்ணயிப்பதன் மூலம் காலநிலை மாற்றத்தை எதிர் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ அனைத்து வகுப்புகளிலும் பயிலும் பள்ளி மாணவர்கள், தங்களது பாடப் பகுதியில் "காலநிலை மாற்றம் மற்றும் நீடித்தத் தன்மையைப்" பற்றிப் படிப்பதை கட்டாயமாக்கிய உலகின் முதலாவது நாடாக இத்தாலி உருவெடுத்துள்ளது.

❖ போலந்தைச் சேர்ந்த தொல்லுயிரியல் வல்லுனர்கள் அண்மையில் டைரனோசொரஸ் ரெக்ஸை விட சக்தி வாய்ந்த, கடிக்கும் தன்மை கொண்ட ஒரு பண்டைய கடல் ஊர்வன இனமான "ப்ளியோசர்" என்ற இனத்தின் தாடைகளையும் பற்களையும் கண்டுபிடித்துள்ளனர்.

- இடையூழிக் காலத்தின் போது கடலில் வாழ்ந்த இரை பிடித்துண்ணிகளில் ஒரு மிகப் பெரிய இனமான ப்ளியோசார்கள் சுமார் 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு புவியில் வாழ்ந்துள்ளன.

❖ துபாயின் சாலைகள் மற்றும் போக்குவரத்துத் துறை ஆணையமானது பொது போக்குவரத்துத் தின முன்னெடுப்பின் 10வது நினைவு தின விழாவை 2019 ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று கொண்டாடியது.

- இந்த ஆண்டின் கருப்பொருள், 'சிறந்த வாழ்க்கைக்காக சிறந்தப் போக்குவரத்து' என்பதாகும்.

❖ அடுத்த கல்வியாண்டிலிருந்து அனைத்து அரசுப் பள்ளிகளிலும் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வியை அறிமுகப்படுத்த ஆந்திர அரசு திட்டமிட்டுள்ளது.

- இந்தத் திட்டமானது அதற்கு அடுத்த கல்வி ஆண்டில் ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்புகளுக்கும் நீட்டிக்கப்பட இருக்கின்றது.

❖ ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ள நாட்டின் மிகப்பெரிய உள்நாட்டு உப்பு நீர் ஏரியான சாம்பார் ஏரியைச் சுற்றி சுமார் பத்து வகையிலான இனங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இடம்பெயர்வுப் பறவைகள் இறந்துள்ளன.

❖ சுரங்கத் துறை, உற்பத்தி மற்றும் மின்சாரத் துறைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக முந்தைய ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் இருந்ததை விட இந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தியானது (தொழில்துறை உற்பத்திக் குறியீடு) 4.3% சரிந்துள்ளது.

- 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குப் பிறகு முதல் முறையாக தற்பொழுது மூன்று பெரிய துறைகளின் உற்பத்தியும் குறைந்து, மிகக் குறைந்த மாதாந்திர வளர்ச்சியை உற்பத்திக் குறியீடு பதிவு செய்துள்ளது.

❖ 2020 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் "தீவிரவாதத்திற்கான நிதியைத் தடுத்தல்" என்ற மாநாட்டின் அடுத்தப் பதிப்பை இந்தியா நடத்த இருக்கின்றது.

- இது 100க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த நிதியியல் புலனாய்வுப் பிரிவுகளால் (Financial Intelligence Units - FIUs) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நாடுகள் கூட்டாக சேர்ந்து "தி எக்மாண்ட் குழுமம்" என்று அழைக்கப்படுகின்றது.

- இந்தியத் தகவல் தொழில்நுட்பத் துறையின் சமூகப் பிரிவான நாஸ்காம் அமைப்பு மற்றும் பெங்களூரைச் சேர்ந்த மென்பொருள் நிறுவனமான எம்ஃபாஸிஸ் ஆகியவை 11வது நாஸ்காம் சமூகப் புத்தாக்க மன்ற (NASSCOM Social Innovation Forum - NSIF) விருதின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளன.
- உள்நாட்டு கிரிக்கெட் போட்டியில், ராஞ்சியில் உள்ள சர்வதேச அரங்க வளாகத்தில் நடந்த தியோதர் டிராபியின் இறுதிப் போட்டியில் இந்தியா 'பி' அணியானது இந்தியா 'சி' அணியை 51 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.
- உலகளாவியப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கமாகக் கொண்ட இரண்டு நாள் நடைபெறும் விவாத அமர்வான பாரிஸ் அமைதி மன்றத்தின் இரண்டாவது பதிப்பானது பாரிஸில் நடைபெற்றது.
- உலகக் கருணை (இரக்க) தினமானது நவம்பர் 13 அன்று அனுசரிக்கப்படும் ஒரு சர்வதேச அனுசரிப்புத் தினமாகும்.
  - இது பல்வேறு நாடுகளின் கருணை சார்ந்த அரசு சாரா நிறுவனங்களின் கூட்டணியான "உலகக் கருணை இயக்கத்தால்" 1998 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 77 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 20 - 79 வயதிற்குட்பட்ட பிரிவில் அதிக எண்ணிக்கையிலான நீரிழிவு நோயாளிகளை (இரண்டாவது இடத்தில்) இந்தியா கொண்டுள்ளது.
  - முதல் 10 நாடுகளின் பட்டியலில் 116 மில்லியன் நீரிழிவு நோயாளிகளுடன் சீனா முதலிடத்தில் உள்ளது.
- பாலர் சங்க விழாவின் 11வது பதிப்பானது தேசிய நாடகப் பள்ளியினால் (National School of Drama - NSD) புது தில்லியில் உள்ள அதன் வளாகத்தில் ஏற்பாடு செய்யப் பட்டது. இது குழந்தைகளால் நிகழ்த்தப்படும் நாட்டுப்புற மற்றும் பாரம்பரிய கலை வடிவங்களின் சங்கமமாகும்.
- 1889 ஆம் ஆண்டில் பிறந்த இந்தியாவின் முன்னாள் பிரதமரான ஜவஹர்லால் நேருவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 ஆம் தேதியன்று குழந்தைகள் தினம் கொண்டாடப் படுகின்றது.
  - கூகுள் ஆனது "நடமாடும் மரங்கள்" என்ற டூடுலுடன் இந்தத் தினத்தை அனுசரித்தது. இந்த டூடுல் ஆனது ஏழு வயது நிரம்பிய மாணவரான திவ்யாசன்ஹி சிங்கால் என்பவரின் ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டது. இது காடுகள் அழிப்பிலிருந்து அடுத்த தலைமுறையினரைப் பாதுகாப்பதற்கான செய்தியைப் பரப்புகின்றது.
- குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, தமிழ்க் குழந்தைகளின் எழுத்தாளரான தேவி நாச்சியப்பன் மற்றும் கவிஞர் சபரிநாதன் ஆகியோருக்கு 2019 ஆம் ஆண்டின் பால் சாகித்ய புராஸ்கார் விருது வழங்கப்பட்டது.
  - குழந்தைகளின் இலக்கியத்திற்காக அவரது வாழ்நாள் பங்களிப்பிற்காக தேவி நாச்சியப்பன் (அக்கா தெய்வானை) என்பவருக்கும் தனது 'வால்' என்ற அவரது கவிதைத் தொகுப்பிற்காக சபரிநாதன் என்பவருக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.
- கோவாவின் கடற்கரை சோதனை நிலையத்தில், தேஜாஸ் என்ற கடற்படையைச் சேர்ந்த இலகு ரக போர் விமானத்தின் (light combat aircraft - LCA) இரவு நேர "ஒடுக்கப்பட்ட தரையிறக்கத்தை" நிகழ்த்தியுள்ளதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (Defence Research and Development Organisation – DRDO) அறிவித்துள்ளது.

- ஒரு விண்கலத்தால் முதல்முறையாகப் பார்வையிடப்பட்ட தொலைதூர அண்ட அமைப்பான "அல்டிமா துலே" ஆனது பூர்வீக அமெரிக்க பவத்தான் மொழியில் அரோகோத் அல்லது 'வானம்' என்று நாசாவால் மறுபெயரிடப்பட்டுள்ளது.
    - இதன் முந்தையப் பெயரான 'அல்டிமா துலே' ஆனது இனவெறி என்ற பொருளைக் கொண்டிருந்தது. இது நாசி வட்டாரங்களிலும் ஆரிய - மேலாதிக்க சதி கோட்பாட்டாளர்களிடையேயும் பிரபலமானதாக விளங்கியது.
- 2019 ஆம் ஆண்டு நவம்பர் 14 அன்று 'ரசகுல்லா தினத்தை' மேற்கு வங்க மாநிலம் அனுசரித்தது. இது ரசகுல்லாக்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்ட இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- இந்தியாவின் மொத்த பணவீக்கமானது (WPI - wholesale inflation) அக்டோபரில் 0.16% ஆக குறைந்தது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இதுவரை இல்லாத அளவிற்கு ஏற்பட்ட மிகக் குறைவான WPI இதுவாகும்.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (International Union for Conservation of Nature - IUCN) 7வது 'ஆசியப் பிராந்திய பாதுகாப்பு மன்றக்' கூட்டமானது பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது.
    - 'இயற்கை மற்றும் மக்களுக்கான பசுமையான ஆசியா' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 170 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களைத் தடுப்பதற்கான பல்வேறு ஏற்றுக் கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் குறித்து இவர்கள் விவாதித்தனர்.
- அமேசான் நிறுவனத்தில் பொருள்களை வாங்கும் போது வாடிக்கையாளர்கள் உண்மையான பொருட்களைப் பெறுவதை உறுதி செய்யும் முயற்சியின் ஒரு பகுதியாக, இந்தியாவில் "சுழியத் திட்டம்" என்ற ஒரு நடவடிக்கையை அந்நிறுவனம் அறிவித்துள்ளது.
    - இது விற்பனையின் போது போலிப் பொருள்களை அடையாளம் காண, அதனைத் தடுக்க, அதனை அகற்றுவதற்கான ஒரு முயற்சியாகும்.
- அக்டோபர் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் சர்ச்சைக்குரிய தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து குடிமக்கள் ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு பொலிவியாவின் அதிபர் எவோ மோரலஸ் தனது பதவியிலிருந்து விலகினார். எதிர்க்கட்சி செனட்டரான ஜீனைன் அணீஸ் என்பவர் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 11 தேதியன்று அந்நாட்டின் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார்.
- ஐந்து நாட்கள் நடைபெறக் கூடிய "கால நிலைக்கு உகந்த வேளாண்மை மற்றும் உலகளாவிய உணவு & வாழ்வாதாரப் பாதுகாப்பிற்கான மண் & நீர் வள மேலாண்மை தொடர்பான சர்வதேச மாநாடானது" புது தில்லியில் உள்ள தேசிய வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் நடைபெற்றது.
    - இந்த மாநாடானது இந்திய மண் பாதுகாப்புச் சங்கத்தினால் கூட்டாக இணைந்து ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- இந்தியக் கடலோர காவற் படையானது (Indian Coast Guard - ICG) கோவா கடற்கரையில் நடத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டின் பிராந்திய அளவிலான தேடல் மற்றும் மீட்புப் பட்டறை மற்றும் பயிற்சியின் (Regional Level Search and Rescue Workshop and Exercise 2019 - ReSAREX- 19) போது அதன் செயல்திறனையும் தயார் நிலையையும் சோதித்துப் பார்த்தது.
    - ICGயின் பங்கேற்பு: ICGயின் 5 கப்பல்கள், 2 சேடக் வானூர்திகள் ஆகியவை இந்தப் பட்டறைக்குப் பயன்படுத்தப்பட்டன.

- உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் முதல் முறையாக, மாற்றுத்திறன் உள்ளவர்கள், குறிப்பாக காது கேளாதவர்கள், பேச முடியாதவர்கள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் போட்டியிட தமிழ்நாடு மாநில அரசு அனுமதிக்க இருக்கின்றது.
  - 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சென்னை நகர மாநகராட்சி சட்டம் மற்றும் தமிழ் நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- ராமேஸ்வரத்தில் குரு நானக்கிற்கு நினைவிடம் கட்ட தமிழக அரசு இடம் ஒதுக்க உள்ளது.
  - குருத்வாரா குரு நானக் தாம் ராமேஸ்வரம் நகரில் அமைந்துள்ள ஒரு குருத்வாரா ஆகும்.
  - சுமார் 1511 ஆம் ஆண்டில் முதல் சீக்கிய குருவான குரு நானக் ராமேஸ்வரத்திற்கு வருகை தந்ததை நினைவுகூறும் வகையில் இது கட்டப்பட இருக்கின்றது.
- பெருநகர ஆசியக் குடும்ப சேவைகள் அமைப்பு வழங்கிய 'MAFS காந்தி நூற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவைச் சார்ந்த சிறப்புத்துவ' விருதை தமிழ்நாட்டின் துணை முதல்வர் ஓ.பன்னர் செல்வம் பெற்றார்.
  - உலக தமிழ் மாநாட்டிற்கான வாழ்த்து கூட்டத்தில் அவருக்கு தங்க தமிழ் மகன் விருதும் வழங்கப்பட்டது.
- 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த ஷூட்டர் சிங்கி யாதவ் என்பவர் இந்தியாவின் 11வது நபராகத் தேர்ந்தெடுக்கபட்டுள்ளார்.
  - ஆனால் கத்தாரின் தோஹாவில் நடைபெற்ற 14வது ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் அவரால் பதக்கம் வெல்ல முடியவில்லை.
- தமிழக முதல்வர் பழனிசாமி தலைமையிலான ஒரு தேர்வுக் குழுவானது 1984 ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான திரு. ராஜகோபாலனின் பெயரை மாநில தலைமைத் தகவல் ஆணையர் பதவிக்கு தேர்ந்தெடுத்துள்ளது.
- ரஞ்சன் கோகோயின் பதவிக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, இந்திய உச்ச நீதிமன்றத்தின் 47வது தலைமை நீதிபதியாக சரத் அரவிந்த் போப்டே பொறுப்பேற்றார்.
  - 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், தனியுரிமை என்பது "வாழ்க்கை மற்றும் தனிச் சுதந்திரத்திற்கு உள்ளார்ந்ததாகும்" என்று தீர்ப்பளிக்கப்பட்ட அமர்வில் இருந்த நீதிபதிகளில் இவரும் ஒருவராவார்.
- குளிர்காலக் கூட்டத் தொடரின் முதல் நாளில், மாநிலங்களவையின் 250வது அமர்வு நடத்தப் பட்டது. 'மாநிலங்களவையின் பங்கு மற்றும் சீர்திருத்தங்களின் அவசியம்' என்பது குறித்த சிறப்பு விவாதங்கள் மாநிலங்களவையில் நடைபெற்றன.
- 19வது ஜார்க்கண்ட் மாநில நிறுவன தினமானது நவம்பர் 15 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது. இது பீகார் மறுசீரமைப்புச் சட்டம், 2000 என்ற சட்டத்தின் மூலம் நிறுவப் பட்டது.
  - மேலும் நவம்பர் 15 ஆம் தேதியானது புகழ்பெற்ற பழங்குடியினத் தலைவரான பிர்சா முண்டாவின் பிறந்த தினமாகும் (நவம்பர் 15, 1875 - 9 ஜூன் 1900).
- தேசிய வலிப்பு நோய் தினமானது நவம்பர் 17 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது. இந்தியாவின் வலிப்பு நோய் அமைப்பானது இந்தத் தினத்தைக் கடைபிடிக்கின்றது.
- இலங்கையின் சர்ச்சைக்குரிய போர்க்கால பாதுகாப்புத் துறைச் செயலாளரும் மஹிந்த ராஜபக்சேவின் சகோதரருமான கோத்தபய ராஜபக்சே என்பவர் அந்நாட்டின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் போட்டியாளரான சஜித்

பிரேமதாசாவை தோற்கடித்துள்ளார்.

- “நெகிழியிலிருந்து விடுபடுதல்” என்ற ஒரு சுற்றுச்சூழல் குழுவினால் நடத்தப்பட்ட தணிக்கையின் படி, கோகோ கோலா நிறுவனமானது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகின் மிகப்பெரிய நெகிழி மாசுபடுத்தியாக அறிவிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கையில் இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நெஸ்லே மற்றும் பெப்சி ஆகிய நிறுவனங்கள் நெகிழி மாசுபடுத்திகளாக உள்ளன.
- இந்தியக் கடற்படை மற்றும் கத்தார் அமீரக கடற்படை ஆகியவற்றிற்கு இடையே நடத்தப்படும் சயீர்-அல்-பஹ்ர் (கடலின் கர்ஜனை) என்ற இருதரப்பு கடல்சார் பயிற்சியின் தொடக்கப் பதிப்பானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதி முதல் நவம்பர் 21 ஆம் தேதி வரை நடத்தப் படுகின்றது.
    - தோஹாவில் ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த இருதரப்பு கடல் பயிற்சியில் கடல்சார் நடவடிக்கை, வான் பாதுகாப்பு, கடல் கண்காணிப்பு மற்றும் சமூக & விளையாட்டு நிகழ்வுகள் ஆகியவை உள்ளடங்கும்.
- உலகளாவிய தாய்மார்களின் சர்வதேச மாநாட்டை இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் புது தில்லியில் தொடங்கி வைத்தார். “வாசுதேவ குடும்பகம் - குடும்ப அமைப்பு மற்றும் தாயின் பங்கு” என்ற தலைப்பில் இந்த மாநாடு நடத்தப்பட்டது.
- மணிப்பூரைச் சேர்ந்த முன்னாள் உலக மற்றும் ஆசிய குத்துச் சண்டை வீராங்கனையான எல் சரிதா தேவி புதிதாக அமைக்கப்பட்ட சர்வதேச குத்துச் சண்டை சங்கத்தின் (International Boxing Association’s - AIBA) தடகள ஆணையத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
    - ஆறு உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில், ஆசிய கண்டத்தைச் சேர்ந்த ஒரே பிரதிநிதி சரிதா தேவி ஆவார்.
- கிம்பர்லி செயல்முறை அமைப்பின் தலைமை நாடாக உள்ள இந்தியா, கிம்பர்லி செயல்முறை சான்றளிப்புத் திட்டத்தின் (Kimberley Process Certification Scheme - KPCS) ஒரு முழுமையான அமர்வை புது தில்லியில் நடத்தியது.
    - “பிளவர்” என்பவரது அறிக்கையின் அடிப்படையில், ஐ.நா பொதுச் சபையானது "பிரச்சினைக்குரிய வைரங்களை" பிரதான வைரச் சந்தையில் நுழைவதைத் தடுப்பதற்காக 2003 ஆம் ஆண்டில் KPCS செயல்முறையை நிறுவியது.
- 650 கிலோமீட்டர் வரையுள்ள வரம்புள்ள, அணுசக்தி திறன் கொண்ட, நிலப் பரப்பிலிருந்து நிலப் பரப்பில் உள்ள இலக்குகளைத் தாக்கக் கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான ஷஹீன் -1 என்ற ஏவுகணையைப் பாகிஸ்தான் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. இது பல இந்திய நகரங்களை தனது வரம்பிற்குள் கொண்டு வருகின்றது.
- 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் குறுகிய சேவை ஆணையத்தின் (Short Service Commission - SSC) கீழ் இணைந்தப் பெண் அதிகாரிகளுக்கு நிரந்தர ஆணையம் வழங்குவது குறித்து ஆயுதப் படைகள் கருத்தில் கொள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
    - தற்போது, 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு SSCயின் கீழ் ஆயுதப் படைகளில் இணைந்தப் பெண் அதிகாரிகளுக்கு மட்டுமே நிரந்தர ஆணையத்தை அமைப்பதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.
- கரும்பு விவசாயிகளின் வசதிக்காக உத்தரப் பிரதேச அரசு “இ-கன்னா” என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இச்செயலியானது இடைத்தரகர்களை ஒழிக்கின்றது மற்றும் கொள்முதல் செய்வதில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கின்றது.

- "அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான இந்திரா காந்தி பரிசு- 2019" ஆனது புகழ்பெற்ற இயற்கை ஆர்வலரும் ஒளிபரப்பாளருமான சர் டேவிட் அட்டன்பரோவுக்கு பல்லுயிரியலைப் பாதுகாப்பதற்காக அவர் மேற்கொண்ட அயராத உழைப்பிற்காக வழங்கப்பட உள்ளது.
    - முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தலைமையிலான இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளையின் சர்வதேச நடுவர் மன்றத்தால் அட்டன்பரோவின் பெயர் இந்தப் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- விலங்குகள் நலனின் மீது ஆர்வமாக இருக்கும் இந்திய கேப்டன் விராட் கோலிக்கு "2019 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் விருது" பீட்டா அமைப்பின் சார்பில் வழங்கப்பட உள்ளது.
- சர்வதேச ஆற்றல் நிறுவனத்தினால் (International Energy Agency - IEA) வெளியிடப்பட்டுள்ள "2019 ஆம் ஆண்டின் உலக ஆற்றல் கண்ணோட்டம்" என்ற அறிக்கையானது 2018 மற்றும் 2040 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இந்தியாவின் நிகர எண்ணெய் இறக்குமதி தேவைகள் இரு மடங்கிற்கும் அதிகமாக இருக்கும் என்று கணித்துள்ளது.
    - இந்த அறிக்கையின் "நிலையான வளர்ச்சி நிலையானது" (Sustainable Development Scenario - SDS) புவி வெப்பமயமாதலை 1.65 டிகிரி செல்சியஸ் என்ற அளவிற்குள் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பட்டியலிடுகின்றது.
- இலங்கையின் அதிபரான கோத்தபய ராஜபக்சே முன்னாள் அதிபரான மஹிந்தா ராஜபக்சேவை அந்நாட்டின் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்கள் வரை இலங்கையின் பிரதமராக அவர் பதவி வகிப்பார்.
    - பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்த போதிலும் தனது கட்சியின் அதிபர் வேட்பாளரான சஜித் பிரேமதாசாவின் தோல்வியைத் தொடர்ந்து தனது பிரதமர் பதவியிலிருந்து விலகிய ரணில் விக்ரமசிங்கேவிற்குப் பதிலாக மஹிந்தா ராஜபக்சே பிரதமராகப் பொறுப்பேற்க இருக்கின்றார்.
- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது ஐந்து பெரிய பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள அரசின் பங்குகளை விற்று, ரூ. 78,400 கோடி மதிப்பிலான நிதியைத் திரட்டுவதற்குத் தனது ஒப்புதலை அளித்துள்ளது.
    - இந்த நிறுவனங்களின் பட்டியல் பின்வருமாறு: பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கழகம், இந்திய சரக்குக் கொள்கலன் கழகம், டிஎச்டிசி இந்திய நிறுவனம் மற்றும் வடகிழக்கு மின்சார எரிசக்திக் கழகம் ஆகியவை ஆகும்.
- நவம்பர் 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் தில்லியில் உள்ள தேசியப் புலனாய்வு முகமையின் தலைமையகத்தில் "QUAD" நாடுகளுக்கான (இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா) முதலாவது தீவிரவாத எதிர்ப்புப் பயிற்சியை தேசியப் புலனாய்வு அமைப்பு நடத்துகின்றது.
    - "CT-TTX" (தீவிரவாத எதிர்ப்பு முன்னிலைப் பயிற்சி) என்பது பொது நலன்கள் குறித்த பிராந்திய & உலகளாவியப் பிரச்சினைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்பு & ஒத்துழைப்பு ஆகியவை குறித்து QUAD நாடுகளிடையே நடத்தப்படும் ஒரு முதலாவது பயிற்சியாகும்.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் உலகளாவிய தீவிரவாதக் குறியீடானது 2018 ஆம் ஆண்டில் 163 நாடுகளுக்கான தீவிரவாதத்தின் தாக்கத்தை ஆய்வு

செய்துள்ளது. உலகிலேயே மிகவும் பயங்கரமான தீவிரவாத அமைப்பாக தாலிபான்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

- 7,000க்கும் அதிகமான இறப்புகளுடன் அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புகள் ஆப்கானிஸ்தானில் பதிவாகியுள்ளன.

❖ 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது நவம்பர் 21 ஆம் தேதியை உலக தொலைக்காட்சித் தினமாக அறிவித்தது. 1996 ஆம் ஆண்டில் இத்தினத்தில் முதலாவது உலகத் தொலைக்காட்சி மன்றம் நடத்தப்பட்டதை இத்தினம் நினைவு கூறுகின்றது.

❖ வளமான கடல்சார்ந்த சூழல் அமைப்புகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்காகவும் உலகில் உள்ள மீன் வளத்தின் நிலையான பங்கினை உறுதி செய்வதற்காகவும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21 ஆம் தேதியன்று உலக மீன்வள தினம் கொண்டாடப்படுகின்றது.

❖ ராஜஸ்தானைச் சேர்ந்த 21 வயதான மயங்க் பிரதாப் சிங் என்பவர் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற நீதித் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றதை அடுத்து இந்தியாவின் மிக இளைய வயது கொண்ட நீதிபதியாக அவர் உருவெடுத்துள்ளார்.

- முன்னதாக ராஜஸ்தான் உயர் நீதிமன்றமானது நீதித் துறை பணித் தேர்வில் பங்கேற்பதற்கான குறைந்தபட்ச வயது வரம்பை 23லிருந்து 21 ஆகக் குறைத்து இருந்தது.

❖ இந்திய வழக்குரைஞர் கழகமானது எந்தவொரு வழக்கறிஞரும் எந்தவொரு உயர் நீதிமன்றத்திலும் பணியாற்றுவதற்கு முன்பாக மாவட்ட/தாலுக்கா நீதிமன்றத்தில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் கண்டிப்பாகப் பணியாற்றி இருக்க வேண்டும் என்ற ஒரு புதிய விதியை பரிந்துரைத்துள்ளது.

❖ துணை விமானியான ஷிவாங்கி என்பவர் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 2 அன்று கொச்சியில் ஒரு டோர்னியர் விமானத்தை இயக்க இருப்பதன் மூலம் இந்தியக் கடற் படையின் முதலாவது பெண் விமானியாக உருவெடுக்க இருக்கின்றார்.

❖ ஆக்ஸ்போர்டு அகராதியானது 2019 ஆம் ஆண்டிற்கான சொல்லாக "காலநிலைக்கான அவசரநிலை" என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த வார்த்தையின் மிக அதிகமான பயன்பாடு நூறு மடங்கு அதிகரித்ததைத் தொடர்ந்து அந்த அகராதி இந்த சொல்லைத் தேர்ந்தெடுத்துள்ளது.

❖ 33 வயதான முன்னாள் ஹாக்கி வீரரான சித்தரேஷ் நடேசன் என்பவர் ஒரு உடல் கட்டமைப்பாளராக மாறினார். அதன் பின்பு உடற் கட்டமைப்பாளர்கள் மத்தியில் இவர் 'இந்தியன் மான்ஸ்டர்' என்று அழைக்கப் பட்டார். தற்போது இவர் 90 கிலோ எடைப் பிரிவில் 2019 ஆம் ஆண்டின் "மிஸ்டர் யுனிவர்ஸ்" (புரோ) என்ற பட்டத்தை வென்ற முதலாவது இந்தியராக உருவெடுத்துள்ளார்.

- தென் கொரியாவில் நடைபெற்ற 11வது உலக உடற் கட்டமைப்பு மற்றும் உடல்சார் விளையாட்டு சாம்பியன்ஷிப்பில் (WBPF - World Bodybuilding and Physique Sports Championship) இவர் இந்தப் பட்டத்தை வென்றுள்ளார்.

❖ 2011-12 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ராஜஸ்தானின் முதன்மையான ஒரு இலவச மருத்துவத் திட்டமானது தேசிய சுகாதாரத் திட்டத்திடமிருந்து மீண்டும் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

  - தேசிய சுகாதாரத் திட்டமானது, அதன் இலவச மருத்துவ சேவை முயற்சியின் கீழ், மாநிலங்களுக்குத் தரவரிசைகளை வழங்கத் தொடங்கியுள்ளது.
- இதய ஆரோக்கியத்திற்கான யோகா மீதான சர்வதேச மாநாடானது மைசூருவில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டில் இந்திய சர்வதேச செர்ரி மலர்த் திருவிழாவின் 4வது பதிப்பானது மேகாலயாவின் ஷில்லாங்கில் கொண்டாடப்பட்டது.
  - இந்த ஆண்டுத் திருவிழாவில் கொரியக் குடியரசானது திருவிழாவில் பங்குதாரர் நாடாக இடம் பெற்றது.
- கடந்த 30 ஆண்டுகளில் முதல்முறையாக, அசாம் மாநில அரசானது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் தயாரிக்கப்பட்ட "நிலக் கொள்கை 2019" ஐ வெளியிட்டுள்ளது. இதுபோன்ற கடைசி அறிக்கை 1989 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- இந்திய அரசாங்கத்தின் மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகமானது வடகிழக்கு மாநிலங்களுடன் இணைந்து, 2019 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் தேதி முதல் நவம்பர் 25 ஆம் தேதி வரை மணிப்பூரில் உள்ள இம்பாலில் 8வது "சர்வதேசச் சுற்றுலா சந்தையை" ஏற்பாடு செய்துள்ளது.
- மாட்ரிட்டில் நடந்த டென்னிஸ் போட்டியில் ரபேல் நடால் கனடாவின் டெனிஸ் ஷபோவலோவை வீழ்த்தி ஸ்பெயினுக்காக 6வது டேவிஸ் கோப்பைப் பட்டத்தை வென்றுள்ளார். அவர் ஷபோவலோவை 6-3, 7-6 (9-7) என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.
- கல்வி நிபுணர், ஆசிரியர் மற்றும் கேரளப் பல்கலைக் கழகத்தின் பதிப்பகத் துறையின் தலைவரான எம்.எம். குழிவேலி என்பவரை கௌரவிப்பதற்காக அவரது உருவம் பொறித்த ஒரு அஞ்சல் தலையை இந்திய அஞ்சல் துறை வெளியிட்டுள்ளது.
  - இவர் "விஜ்னனம்" என்ற முதலாவது கலைக் களஞ்சியத்தை மலையாளத்தில் வெளியிட்டுள்ளார். இவர் குழந்தைகளின் இலக்கியத்திற்காக சிறப்பாகப் பங்காற்றியுள்ளார்.
- இந்தியக் கடற்படைக்கும் ஜப்பானியக் கடல்சார் தற்காப்புப் படைக்கும் இடையே வெடி பொருள்களை செயலிழக்கச் செய்தல் மற்றும் சுரங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவை குறித்த ஒரு முதலாவது இருதரப்புப் பயிற்சியானது கொச்சியில் நடத்தப்பட்டது.
- வடகிழக்குப் பிராந்திய வளர்ச்சித் துறைக்கான மத்திய அமைச்சரான ஜிதேந்திர சிங் என்பவர் 4 நாட்கள் நடைபெறும் 'வடகிழக்கு இலக்கு' என்ற ஒரு நிகழ்ச்சியை உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் தொடங்கி வைத்தார்.
  - இந்தத் திருவிழாவானது வடகிழக்கில் உள்ள 8 மாநிலங்களின் கலாச்சாரம் மற்றும் கைவினைப் பொருள்களின் வேலைப்பாடு ஆகியவற்றை எடுத்துக் காட்டுகின்றது.
- ரூபாயின் சர்வதேச மயமாக்கலை அதிகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, இந்திய ரிசர்வ் வங்கியானது ஒரு சிறப்பு வம்சாவளி ரூபாய் கணக்குகளைத் (special non-resident rupee - SNRR) தொடங்குவதற்கான விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளது. இந்த கணக்குகளுக்கு இந்தியாவில் இருந்து நேரடியாக பணம் அனுப்ப இந்த வங்கி அனுமதி வழங்கியுள்ளது.
- முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது ரூ 10 லட்சம் கோடி சந்தை மூலதனத்தைக் கடந்த "முதலாவது இந்திய நிறுவனமாக" உருவெடுத்துள்ளது.


  - இந்தியாவில் உள்ள இரண்டாவது மதிப்புமிக்க நிறுவனம் டாடா ஆலோசக சேவை நிறுவனமாகும். இதன் சந்தை மூலதனத்தின் மதிப்பு ரூ. 7.81 லட்சம் கோடி ஆகும்.

- 28.11.2019 அன்று வேலூர் மாவட்டத்திலிருந்துப் பிரிக்கப் பட்டுள்ள திருப்பத்தூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய இரண்டு புதிய மாவட்டங்களை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
  - இதனால் தமிழ்நாட்டின் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 37 ஆக உள்ளது.
- யானைக்கால் நோயை (ஃபிலேரியாசிஸ்) ஒழிப்பதற்காக உத்தரப் பிரதேச அரசு 47 மாவட்டங்களில் ஒரு மூன்று வார தீவிரப் பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது. இந்த பிரச்சாரம் ஆனது 2021 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவிலிருந்து யானைக்கால் நோயை ஒழிப்பதற்கான மத்திய அரசின் திட்டத்துடன் ஒத்திசைந்துள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் டேலி வேலி வனவிலங்கு சரணாலயத்தில் "டிராச்சிசியம் ஆப்டீய்" என்ற பெயர் கொண்ட விஷம் இல்லாத பாம்பை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.
  - நன்கு அறியப்பட்ட ஒரு கடல் உயிரியலாளரும், மும்பை இயற்கை வரலாற்றுச் சங்கத்தின் இயக்குனருமான தீபக் ஆப்தேவின் பங்களிப்பைக் கௌரவிக்கச் செய்வதற்காகவே அதற்கு இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.
- லித்தியம் அயனி கொண்ட மின்கல உற்பத்தி தொழில்நுட்பத்தை வாங்குவதற்காக பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட் (BHEL) நிறுவனமானது இஸ்ரோவுடன் ஒரு தொழில்நுட்பப் பரிமாற்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - விண்வெளி-தர மின்கலமானது தேவைக்குத் தகுந்தவாறு மாற்றி அமைக்கப்படும். இவை அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட இருக்கின்றது.
- மத்திய அமைச்சரவையானது மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையில் வரி மற்றும் பிற வளங்களைப் பிரிப்பது குறித்து முடிவு செய்ய இருக்கும் 15வது நிதி ஆணையத்தின் காலத்தை நீட்டித்துள்ளது. இது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதி வரை ஒரு வருடம் நீட்டித்துள்ளது.
  - இந்த ஆணையத்தின் தலைமைப் பொறுப்பை வகிப்பவர் என்.கே. சிங் ஆவார். அக்குழு 2021-22 முதல் 2025-26 வரையிலான நிதி ஆண்டுகளுக்குத் தேவைப் படும் நிதியைப் பகிர்ந்து அளிக்கச் செய்திடும் ஒரு இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.
- ஜாகுவார் (சிறுத்தைப் புலிகள்) எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, இரண்டாவது சர்வதேச ஜாகுவார் தினம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
  - இந்நிகழ்ச்சியை ஐ.நா மேம்பாட்டுத் திட்டம், உலக வனவிலங்கு நிதியம், வன விலங்குப் பாதுகாப்பு சங்கம் மற்றும் அரசாங்கங்கள் ஒருங்கிணைக்கின்றன.
- ஐரோப்பிய மன்றத்தின் தலைவராக இருந்த டொனால்ட் டஸ் என்பவரை அடுத்து பெல்ஜியம் நாட்டின் முன்னாள் பிரதம மந்திரி சார்லஸ் மைக்கேல் என்பவர் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.
  - மேலும், ஐரோப்பிய ஆணையத்தின் தலைவராக ஜீன் கிளாட் ஜங்கர் என்பவரை அடுத்து உர்சுலா வான் டெர் லேயன் என்பவர் அதன் தலைவராக நியமிக்கப்பட உள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு புத்தமத சுற்றுலா சுற்றுப் பாதை

- காஞ்சிபுரத்தில் போதிதர்மரின் பிரம்மாண்ட சிலை ஒன்றைக் கட்டத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- சீனாவிலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக மாநிலத்தில் புத்த யாத்திரை சுற்றுப் பாதை ஒன்றை ஊக்குவிக்கத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- கட்டத் திட்டமிடப்பட்டுள்ள இந்தச் சிலையின் உருவ அளவானது குஜராத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேலின் ஒற்றுமைக்கான சிலைக்கு அடுத்த நிலையில் இருக்கும்.
- புத்தமத சுற்றுப் பாதைக்காக காஞ்சிபுரம், மாமல்லபுரம், நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட மாநிலம் முழுவதும் ஆறு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- சீன சுற்றுலாப் பயணிகளுடன் உரையாடுவதற்காக அடிப்படை மாண்டரின் மொழி குறித்து 10 சுற்றுலா வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளிக்க தமிழ்நாடு சுற்றுலாத் துறை திட்டமிட்டுள்ளது.




## நீதிக் கடிகாரம் (பலகை) - மதராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை

- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையின் நிர்வாகம்சார் நீதிபதியான டி.எஸ்.சிவஞானம் என்பவர் நீதிமன்ற வளாகத்தில் 'நீதிக் கடிகாரத்தை (பலகை)' திறந்து வைத்தார்.
- நீதிக் கடிகாரம் என்பது பின்வரும் தகவல்களைக் காட்டும் ஒரு ஒளி-உமிழ் இருமுனைய (light-emitting diode - LED) காட்சிப் பலகையாகும்.

- நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப் படுதல், நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்பட்ட வழக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் நாடு முழுவதும் உள்ள அனைத்து நீதிமன்றங்களின் தரவரிசை.
- பணியாற்றிக் கொண்டிருக்கும் நீதிபதிகளின் பெயர்கள்.
- நீதிபதிகளின் செயல்பாடுகள் அடிப்படையில் அவர்களது தரவரிசை.

❖ இந்தக் கடிகாரத்தின் முக்கிய நோக்கம் நீதித் துறை சார்ந்த தகவல்களைப் பரப்புவதும் சாதாரண மக்களுக்கு சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஆகும்.

❖ இந்தியா முழுவதும் உள்ள 3,350 நீதிமன்றங்களுக்குமான இந்த யோசனையானது 2017 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமரால் முன்மொழியப் பட்டது.

❖ முதல் கட்டமாக, இந்த நீதிக் கடிகாரங்கள் 24 உயர் நீதிமன்றங்களில் நிறுவப்பட இருக்கின்றன. பின்னர் அது மற்ற அனைத்து நீதிமன்றங்களுக்கும் நீட்டிக்கப்பட இருக்கின்றது.






## கொந்தகை அருங்காட்சியகம், சிவகங்கை மாவட்டம் – கீழடி

❖ சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கொந்தகை கிராமத்தில் 12.21 கோடி செலவில் உலகத் தரம் வாய்ந்த அருங்காட்சியகத்தை நிறுவத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

❖ கீழடி அகழ்வாராய்ச்சி இடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட கலைப் பொருட்களை இந்த அருங்காட்சியகமானது காட்சிப்படுத்த இருக்கின்றது.

❖ இது தமிழ்நாட்டின் வளமான கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காகவும் பிரபலப்படுத்துவதற்காகவும் நிறுவப்பட இருக்கின்றது.




## கோயில் பிரசாதம் - BHOG சான்றிதழ்

- விரைவில் தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் பக்தர்களுக்கு வழங்கப் படும் லட்டு, முறுக்கு, வடை மற்றும் பிற உணவு வகை போன்ற பிரசாதங்கள் சிறந்த தரத்துடன் இருக்க வேண்டும்.
- மாநில உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகமானது இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள கோவில்கள் BHOG தர சான்றிதழைப் பெற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.
- கடவுளுக்குச் சுகாதாரமான உணவு படைத்தல் (BHOG - Blissful Hygiene Offering to God) என்ற சான்றிதழானது இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் (FSSAI - Food Safety and Standards Authority of India) வழங்கப் படுகின்றது.
- கோவில்களில் வழங்கப்படும் பிரசாதங்கள் மற்றும் சாப்பிடக் கூடிய பொருட்கள் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம், 2006 என்ற சட்டத்தின் கீழ் வருகின்றன.

## சிவப்பு நிலப்பட ஏடு மற்றும் CFLOWS – சென்னை: வெள்ள முன்னெச்சரிக்கை

- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் சமீபத்தில் சென்னையில் ‘சிவப்பு நிலப்பட ஏடு செயல் திட்ட வரைபடம்’ மற்றும் கடலோர வெள்ள எச்சரிக்கை அமைப்புச் செயலி (Coastal Flood Warning System App - CFLOWS) ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.
- சிவப்பு நிலப்பட ஏடு என்பது சென்னையில் திறம்பட வெள்ளத்தைத் தடுப்பதற்கு தமிழக அரசிற்கு உதவுவதற்காக மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட இதே வகையைச் சேர்ந்த முதலாவது மதிப்பீடு ஆகும்.

- இந்த நிலப்பட ஏடானது வெவ்வேறு மழைக் காலங்களுக்கான சாத்தியமான நிகழ்நேர நிலவரங்களைக் கொண்டிருக்கும். இது வெள்ளத்தைத் தடுத்தல், மீட்பிற்கான தயார் நிலை, அதற்கான செயல்பாடுகள் மற்றும் மேலாண்மை அம்சங்கள் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- CFLOWS-CHENNAI என்பது ஒரு முழுமையான, இணைய புவியியல் தகவல் முறைமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வு சார்ந்த ஆதரவு அமைப்பாகும். வெள்ளத்திற்கு முன் அவற்றைத் தடுத்தல் குறித்த திட்டமிடல் நடவடிக்கைகளுக்காகவும் நிவாரணப் பணிகள் போன்ற அம்சங்களுக்காகவும் நிகழ்நேரத்தில் இதைப் பயன்படுத்தலாம்.

## விலங்குகளுக்கான நடமாடும் மருத்துவ ஊர்தி - 1962

- ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட விலங்குகளுக்கான நடமாடும் மருத்துவ ஊர்தி (AMMA - Animal Medical Mobile Ambulance) சேவையானது கடந்த சில மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.
- தற்போது இது மீண்டும் தமிழக முதல்வரால் துவக்கி வைக்கப் பட்டிருக்கின்றது.
- இதற்கான கட்டணமில்லா எண் 1962 ஆகும்.
- இது முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் 2016 ஆம் ஆண்டில் துவங்கி வைக்கப் பட்டது
- விலங்குகளுக்கு, அதிலும் குறிப்பாகக் கால்நடைகளின் இருப்பிடங்களுக்கேச் சென்று சிகிச்சை அளிப்பதற்காக அம்மா சேவையானது அறிமுகப் படுத்தப்பட்டது.
- தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகமானது இந்தத் திட்டத்திற்கான தலைமை நிறுவனம் ஆகும்.
- இந்தத் திட்டத்திற்கு தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தால் நிதியுதவி அளிக்கப் படுகின்றது.
- இந்தத் திட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை பங்கு கொள்ளவில்லை.




## ராஜராஜ சோழன் – சதயத் திருவிழா

- ராஜாராஜா சோழனின் பிறந்த நாளைக் குறிக்கும் 1034வது சதயத் திருவிழாவானது தஞ்சாவூரில் கொண்டாடப்படுகின்றது.
- அருள்மொழி வர்மனாகப் பிறந்த ராஜராஜ சோழன் 1010 ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் கோயில் அல்லது பெருவுடையார் கோவிலைக் கட்டினார்.
- இவரது ஆட்சிக் காலத்தில், தமிழ் கவிஞர்களான அப்பர், சம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆகியோரின் நூல்கள் சேகரிக்கப்பட்டு, திருமுறை என்ற ஒரு தொகுப்பாக மாற்றியமைக்கப்பட்டன.

## சென்னை - கன்னியாகுமரி தொழிற் துறை பெருவழிப் பாதை

- தமிழ்நாட்டில் உள்ள சென்னை - கன்னியாகுமரி தொழிற் துறை பெருவழிப் பாதையின் (Chennai - Kanyakumari Industrial Corridor - CKIC) தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளுக்கு இடையேயான மின் இணைப்பை வலுப்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கியானது (Asian Development Bank - ADB) 451 மில்லியன் டாலர் மதிப்பிலான கடனுதவி அளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
- கிழக்குக் கடற்கரைப் பொருளாதார பெருவழிப் பாதையானது (East Coast Economic Corridor - ECEC) இந்தியாவின் முதலாவது கடலோரப் பொருளாதாரப் பெருவழிப் பாதையாகும். இது இந்தியக் கடற்கரையின் 2500 கிலோ மீட்டர் தொலைவை உள்ளடக்கியுள்ளது. ECEC ஆனது ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் உருவாக்கப்பட இருக்கின்றது.
- CKIC ஆனது ECECன் இரண்டாவது நிலையாகும்.
- CKIC மற்றும் அதன் உள்கட்டமைப்புத் திட்டமானது தமிழக அரசின் தொலைநோக்குப் பார்வை 2023 மற்றும் சாகர்மலா முன்முயற்சி ஆகியவற்றின் வரிசையில் அமைய இருக்கின்றது.



## சென்னையில் காற்று மாசுபாடு

- சமீபத்தில் சென்னையில் உள்ள காற்றில் 2.5 நுண்மத் துகள்களானவை 100 μm / m3 என்ற அளவுக்கு மேல் அதிகரித்தன.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிகழ்நேர கண்காணிப்பு நிலையம் ஆனது சென்னையில் காற்று தரக் குறியீட்டின் (Air Quality Index - AQI) அளவு தொடர்ச்சியாக 300க்கும் அதிகமாக உள்ளது எனப் பதிவு செய்துள்ளது.
- தேசிய சுற்றுப்புற காற்றுத் தரநிலையின் படி (National Ambient Air Quality Standard - NAAQS), 51-100க்கு இடையிலான AQI அளவு திருப்திகரமாகக் கருதப் படுகின்றது.

## 'தோழி' திட்டம்

- தோழி என்ற திட்டத்தின் கீழ் பாலியல் வன்கொடுமை வழக்குகளில் (போக்ஸோ வழக்குகள்) பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்க 70 பெண் காவலர்களை சென்னை நகர காவல்துறை நியமித்துள்ளது.
- சென்னையில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 35 உள்ளன. அவற்றின் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் தோழி திட்டத்திற்கு இரண்டு பெண் காவலர்கள் நியமிக்கப் படுவார்கள்.
- பெண் காவலர்கள் போக்ஸோ வழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்குவது மட்டுமல்லாமல், அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அவர்கள் கண்காணிப்பார்கள்.
- பாதுகாப்பின் அடையாளமாக நிர்பயா சின்னத்துடன் பதிக்கப்பட்ட இளஞ்சிவப்புப் புடவைகள் பெண் காவலர்களுக்கு வழங்கப்படும்.



## தென்பெண்ணை நதியின் குறுக்கே அணை

- கர்நாடகாவால் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அணை கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்தக் கோரிய தமிழ்நாட்டின் மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

- கர்நாடக மாநிலமானது தென்பெண்ணை ஆற்றின் ஒரு கிளை நதியான மார்க்கண்டேய நதி என்ற நதியின் குறுக்கே 50 மீட்டர் உயரம் கொண்ட ஒரு அணையைக் கட்டத் தொடங்கியுள்ளது.
- இந்த நதியானது கர்நாடகாவின் சென்னகேசவ மலைகளில் உற்பத்தியாகின்றது.
- இது ஒசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்கள் வழியாக 432 கிலோ மீட்டர் பயணித்து, கடலை அடைகின்றது.

## நெல் ஜெயராமன் - நெல் ஆராய்ச்சி மையம், குடவாசல்

- கரிம வேளாண்மையின் முன்னோடியான நெல் ஜெயராமன் என்பவருக்கு மரியாதை செலுத்தும் வகையில், அவரின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கரிம வேளாண் பண்ணை மற்றும் பாரம்பரிய நெல் ஆராய்ச்சி மையமானது திறக்கப்பட்டுள்ளது.
- "CREATE" என்ற அரசு சாரா நிறுவனமானது அவரை கௌரவிப்பதற்காக திருவாரூர் மாவட்டத்தின் குடவாசல் அருகே இந்த மையத்தை நிறுவியுள்ளது.
- 160க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் விதைகளைப் புதுப்பித்த நெல் ஜெயராமன் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 6 அன்று புற்று நோயின் காரணமாக காலமானார்.
- அவர் தொடக்கத்தில் 15 நெல் வகைகளைச் சேகரித்து, 2006 ஆம் ஆண்டில் முதலாவது நெல் திருவிழாவை (நெற்பயிர் விழா) நடத்தினார்.




## உள்ளாட்சி அமைப்புத் தேர்தலுக்காக அவசரச் சட்டம்

- மாநில அமைச்சரவையின் முடிவைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள மேயர்கள் மற்றும் நகராட்சிகளின் தலைவர்கள் ஆகிய பதவிகளுக்கு மறைமுகத் தேர்தல்களை நடத்துவதற்கான ஒரு அவசரச் சட்டமானது தமிழ்நாட்டின் ஆளுநரான பன்வாரிலால் புரோஹித்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- பொறுப்புடைமை, கூட்டுப் பொறுப்பு ஆகியவை உயரிய குடிமைப் பதவிகளுக்கு நேரடித் தேர்தல் முறையிலிருந்து மறைமுகத் தேர்தல் முறைக்கு மாற்றுவதற்கானக் காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

- இந்த அவசரச் சட்டம் பின்வரும் சட்டங்களைத் திருத்தியுள்ளது:
    - சென்னை நகர மாநகராட்சிச் சட்டம், 1919,
    - தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920,
    - மதுரை நகர மாநகராட்சிச் சட்டம், 1971,
    - கோயம்புத்தூர் நகர மாநகராட்சிச் சட்டம், 1981.
- இது 15 மாநகராட்சி அமைப்புகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 நகரப் பஞ்சாயத்துகள் அல்லது பேரூராட்சிகள் ஆகியவற்றிற்குப் பொருந்தும்.

## தென்காசி மாவட்டம்

- திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தென்காசி மாவட்டமானது தமிழ்நாட்டின் 33வது மாவட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இந்த மாவட்டமானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் தேதியன்று அதிகாரப் பூர்வமாக நடைமுறைக்கு வந்தது.
- திருநெல்வேலி மாவட்டம் முதன்முதலில் 1790 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது.
- 1986 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் ஆட்சிக் காலத்தின் போது நெல்லை மாவட்டத்திலிருந்துத் தூத்துக்குடி மாவட்டம் பிரிக்கப்பட்டது.
- புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தென்காசி மாவட்டத்தில் தென்காசி மற்றும் சங்கரன்கோயில் வருவாய் மண்டலங்கள், எட்டு தாலுகாக்கள், ஐந்து நகராட்சிகள், 224 கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் 251 வருவாய் கிராமங்கள் ஆகியவை உள்ளன.



## கள்ளக்குறிச்சி மாவட்டம் – தமிழ்நாடு

- 26.11.2019 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டமானது தமிழ்நாட்டின் 34வது மாவட்டமாக அதிகாரப் பூர்வமாக நடைமுறைக்கு வந்துள்ளது.
- இது கள்ளக்குறிச்சி மற்றும் திருக்கோவிலூர் ஆகிய இரண்டு வருவாய்க் கோட்டங்களுடன் திருக்கோவிலூர், சங்கராபுரம், உளுந்தூர் பேட்டை, சின்ன சேலம் மற்றும் கல்ராயன் மலை ஆகிய தாலுகாக்களைக் கொண்டிருக்கின்றது.




## கடல் அமலாக்கப் பிரிவு

- 112 பணியாளர்களுடன், விரைவில் ஒரு பிரத்தியேக கடல் அமலாக்கப் பிரிவை தமிழ்நாடு உருவாக்க இருக்கின்றது.
- இது கடலில் ரோந்து, மீன்பிடி விதிமுறைகளை அமல்படுத்துதல், சட்டவிரோத & அழிவு ஏற்படுத்தும் விதமான மீன்பிடித்தல் மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைத் தடுக்கும்.
- இதற்கு தமிழ்நாடு காவல் துறையிலிருந்து நியமிக்கப் பட்ட ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் தலைமைத் தாங்குவார்.
- 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தை மாநிலத்தின் கடற்கரையோரங்களில் அமல்படுத்துவதில் இந்தப் பிரிவு மாநில மீன்வளத் துறைக்கு ஆதரவளிக்கும்.

### ஃபால் ஆர்மி என்னும் புழுவால் ஏற்படும் பயிர்ச் சேதம்

- மக்காச் சோளத்தை சேதப்படுத்தும் ஒரு ஆக்கிரமிப்பு உயிரினமான ஃபால் ஆர்மி என்னும் புழு தமிழ்நாட்டில் சுமார் 1.2 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சேதத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டில், பெரம்பலூர், விருதுநகர், சேலம், திருநெல்வேலி, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களில் இந்தப் புழுவால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



## தேசியச் செய்திகள்

### தேசியப் பழங்குடியின நடனத் திருவிழா @ ராய்ப்பூர்

- டிசம்பர் 27 ஆம் தேதி முதல் டிசம்பர் 29 ஆம் தேதி வரை ராய்ப்பூரில் மூன்று நாள் நடைபெறும் தேசியப் பழங்குடியின நடனத் திருவிழாவை சத்தீஸ்கர் அரசு நடத்தவுள்ளது.
- இந்நிகழ்ச்சிக்கான அழைப்பானது அனைத்து மாநிலங்களுக்கும் அண்டை நாடுகளுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கின்றது.
- நாடு முழுவதும் இருந்து சுமார் 2,500 பழங்குடியினக் கலைஞர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்க இருக்கின்றார்கள்.
- இந்த விழாவானது பழங்குடியினச் சமூகத்தின் திருமணம், பயிர் அறுவடை, பாரம்பரிய திருவிழா மற்றும் பிற நிகழ்ச்சிகள் தொடர்பான நடன நிகழ்வுகளையும் பிரதிபலிக்க இருக்கின்றது.

## உலகின் சிறந்த தலைமை நிர்வாக அதிகாரிகள் - 3 இந்தியர்கள் இடம் பிடித்துள்ளனர்

- ஹார்வர்ட் வணிக ஆய்வு (Harvard Business Review - HBR) அமைப்பினால் தொகுக்கப்பட்ட சிறந்த தலைமை நிர்வாக அதிகாரிகளின் பட்டியலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மூன்று தலைமை நிர்வாக அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.
- HBRயினால் வெளியிடப்பட்ட 'உலகின் சிறந்த செயல்திறன் கொண்ட தலைமை நிர்வாக அதிகாரிகள், 2019' என்ற பட்டியலில் 100 தலைமை நிர்வாக அதிகாரிகள் உள்ளனர்.
- இந்தப் பட்டியலில் அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனமான என்விஜடிஜஏ என்ற அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியான ஜென்சன் ஹுவாங் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- இந்தப் பட்டியலில் அடோப் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான சாந்தனு நாராயென் 6வது இடத்திலும் மாஸ்டர்கார்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான அஜய் பங்கா 7வது இடத்திலும் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைவரான நாதெல்லா 9வது இடத்திலும் உள்ளனர்.
- இந்தத் தரவரிசையானது நிதியியல் செயல்பாடு மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுமை ஆகியவற்றின் மதிப்பீடுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

## இந்தியா, சவுதி - இருதரப்பு உத்திசார் பங்காளர் மன்றம்

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அரசுமுறைப் பயணமாக ரியாத்துக்குச் சென்றுள்ளார்.
- இந்தியாவும் சவுதி அரேபியாவும் இருதரப்பு உத்திசார் பங்காளர் மன்றத்தை உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளன.
- இந்த மன்றமானது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் & நிதி ஆயோக் மற்றும் சவுதி அரேபிய வெளியுறவுத் துறை அமைச்சகம் & அந்நாட்டின் கொள்கை அமைப்பு ஆகிய பல்வேறு அமைப்புகளைக் கொண்டிருக்கும்.
- இந்த மன்றமானது மோடி மற்றும் மன்னர் சல்மான் பின் அப்துல் அஜிஸ் அல் சௌத் ஆகியோரால் தலைமைத் தாங்கப்பட இருக்கின்றது.

## ஆக்கப்பூர்வ நகரங்களுக்கான யுனெஸ்கோ அங்கீகாரம்

- உலக நகரங்கள் தினத்தை முன்னிட்டு யுனெஸ்கோ அமைப்பானது ஹைதராபாத் நகரத்தை "அறுசுவை உணவியல்" என்ற வகையின் கீழ் "ஆக்கப்பூர்வ நகரம்" என்று அறிவித்துள்ளது.
- மேலும் மும்பை நகரமும் "திரைப்பட வகையின்" கீழ் "ஆக்கப்பூர்வ நகரம்" என்ற குறியீட்டைப் பெற்றுள்ளது.
- இந்த ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பு தேர்ந்தெடுத்த 66 பொலிவுறு நகரங்களில் ஹைதராபாத் மற்றும் மும்பை மட்டுமே இந்தியாவிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நகரங்கள் ஆகும்.

- ❖ இதற்கு முந்தைய ஆண்டுகளில் சென்னை, வாரணாசி மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய நகரங்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- ❖ யுனெஸ்கோ அமைப்பானது ஏழு பிரிவுகளின் அடிப்படையில் "ஆக்கப்பூர்வ நகரங்கள்" என்ற அந்தஸ்தை வழங்குகின்றது.

## முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அஞ்சல் வாக்கு

- ❖ தேர்தல் நடத்தை விதிகள் 1961ஐ மத்திய சட்டத் துறை அமைச்சகம் திருத்தியுள்ளது.
- ❖ இந்த திருத்தமானது மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கும் 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வாக்களிப்பு மற்றும் வாக்குச்சீட்டு வாக்களிப்பை வழங்குவதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இது அவர்களை 'வாக்களிக்கத் தவறிய வாக்காளர்கள்' என்ற பிரிவில் சேர்த்துள்ளது.
- ❖ தேர்தலில் வாக்கு சதவீதத்தை அதிகரிக்கும் பொருட்டு, முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு இந்த வசதியை அரசு வழங்குகிறது.
- ❖ தேர்தல் ஆணையத்தின் பரிந்துரைப்படி மத்திய சட்டத் துறை அமைச்சகம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- ❖ 'வாக்களிக்க வர முடியாத வாக்காளர்கள்' என்று கோருவதற்கான பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்ப படிவத்தின் மாதிரி தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தப் படிவத்தை சமர்ப்பிப்பதன் மூலம் மூத்த குடிமக்கள் மற்றும் 80 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் தபால் வாக்குச்சீட்டைக் கோரலாம்.
- ❖ தற்போதைய அமைப்பில், இராணுவ & துணை ராணுவ வீரர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், தேர்தல் பணியில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்கள் மட்டுமே அஞ்சல் வாக்குச்சீட்டைப் பெற உரிமை உடையவர்கள் ஆவர்.

## சர்வதேச உயிரி இந்தியா 2019

- ❖ சர்வதேச உயிரி இந்தியா 2019 ஆனது மிகப்பெரிய உயிரி தொழில்நுட்ப பங்குதாரர்களின் கூட்டமைப்புகளில் ஒன்றாகும். இது இந்தியாவில் முதல் முறையாக புது தில்லியில் நடத்தப்பட இருக்கின்றது.
- ❖ இது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரி தொழில்நுட்பத் துறை மற்றும் உயிரித் தொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவி மன்றம் (BIRAC) ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- ❖ இது உள்நாட்டு ஆராய்ச்சித் திறன்கள், உயிரித் தொழில்முனைவோர், முதலீடுகள் மற்றும் தொலைதூரத்தில் இருக்கும் கிராமப்புற இந்தியா மற்றும் இரண்டாம் & மூன்றாம் நிலை நகரங்களில் தொழில்நுட்பத்தின் விநியோகத்தை வலுப்படுத்த பங்குதாரர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியா - ஜெர்மனி உறவுகள்

- ❖ ஜெர்மனியின் பிரதமரான ஏஞ்சலா மெர்க்கல் அரசாங்கங்களுக்கிடையேயான 5வது உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்திற்காக (Inter-Governmental Consultations - IGC) 2019 ஆம்

ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி முதல் நவம்பர் 1 ஆம் தேதி வரை இந்தியாவுக்கு வருகை புரிந்துள்ளார்.

- 'மேக் இன் இந்தியா மிட்டல்ஸ்டாண்ட்' (Make in India Mittelstand - MIIM) என்ற திட்டத்தின் வெற்றியை பிரதமர் மோடியும் ஜெர்மனியின் பிரதமரான மெர்க்கலும் வரவேற்றனர்.
- MIIM ஆனது 135க்கும் மேற்பட்ட ஜெர்மனியின் மிட்டல்ஸ்டாண்ட் மற்றும் குடும்ப நிறுவனங்களுக்கு உதவியுள்ளது.
- ஜெர்மன்-இந்தியன் ஸ்டார்ட்அப் பரிமாற்றுத் திட்டத்தின் (German Indian Start up Exchange Program - GINSEP) கீழ் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான பணியை அவர்கள் அங்கீகரித்ததோடு, "நெக்ஸ்ட் ஸ்டெப் இந்தியா" (Next Step India) என்று அழைக்கப்படும் இந்தியாவில் ஜெர்மனிய ஸ்டார்ட் அப்களுக்கான ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தியதையும் வரவேற்றனர்.

## ராஜேஷ் பூஷண் இந்திய ஆட்சிப் பணி, செயலாளர் (பாதுகாப்பு)

- தற்போது அமைச்சரவைச் செயலகத்தில் செயலாளராக (ஒருங்கிணைப்பு) இருக்கும் 1987 ஆம் ஆண்டு பீகார் பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான ராஜேஷ் பூஷணுக்கு கூடுதல் பொறுப்பாக அமைச்சரவை செயலகத்தில் செயலாளர் (பாதுகாப்பு) பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- சிறப்புப் பாதுகாப்புப் படையின் (SPG – Special Protection Group) நிர்வாகத் தலைவர் செயலாளர் (பாதுகாப்பு) ஆவார்.
- இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பிரதமர் மோடி, முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை உன்னிப்பாகக் கண்காணிக்கும் பணியை இவர் மேற்கொள்கின்றார்.
- மேலும் மாநில அரசுகள் மற்றும் மத்தியக் காவல் படையினர் ஆகியோரால் குறுக்கீட்டழிப்பிகளை (ஜாமர்கள்) வாங்குவது தொடர்பான கொள்கையைப் பொறுத்த வரையில் அவர் ஒரு தலைமை அதிகாரியாகவும் பணியாற்றுகின்றார்.

## நிதி உள்ளடக்கல் - இந்தியா 5வது இடம்

- பொருளாதார நுண்ணறிவுப் பிரிவு (Economist Intelligence Unit - EIU) மதிப்பீட்டின்படி, வளர்ந்து வரும் நாடுகளிடையே நிதி உள்ளடக்கத்தில் ஐந்தாவது உகந்த சூழலைக் கொண்டுள்ள நாடு இந்தியா ஆகும்.
- நிதி உள்ளடக்கல் குறித்த அதன் உலகளாவிய நுண்ம அறிக்கையானது உலகளவில் பொருளாதார பார்வையாளர்களால் மிகவும் மதிக்கப் படுகின்றது.
- இந்தத் தரவரிசையின் முதலாவது பதிப்பானது 2007 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- EIU இன் ஆய்வானது நான்கு அடிப்படை அளவுருக்களை கணக்கில் எடுத்துக் கொள்கின்றது:
    - வங்கிப் பணி அல்லாதவர்கள் மின்னணு பணத்தை வழங்க முடியுமா என்பது குறித்த அளவுரு.
    - நிதிச் சேவை முகவர்களின் இருப்பு

- தளரா ஊக்கத்தின் காரணமாக சரியான அளவுள்ள வாடிக்கையாளர்
- திறனுள்ள நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு.

## பெகாசூஸ் ஒற்றியறி மென்பொருள் (ஸ்பைவேர்)

- இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் "பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள்" குறித்து உளவு பார்ப்பதற்காக பிரபலமான தகவல் பரிமாற்றத் தளமான வாட்ஸ் அப் செயலி பயன்படுத்தப் பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பெகாசூஸ் என்ற ஒற்றியறி மென்பொருளைப் (ஸ்பைவேர்) பயன்படுத்தி இந்தக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பெகாசூஸ் என்பது கைபேசி சாதனங்களில் ஊடுருவக் கூடிய ஒரு ஸ்பைவேர் ஆகும்.
- இது "மிகவும் அதிநவீன" திறன்பேசி ஸ்பைவேர்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இது இஸ்ரேலிய இணைய மென்பொருள் நிறுவனமான என்எஸ்ஓ குழுமத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.
- என்எஸ்ஓ குழுமமானது டெல் அவிவ் நகரில் உள்ள இது "கண்காணிப்புத் தொழில்நுட்பத்தில்" நிபுணத்துவம் பெற்ற ஒரு இணைய வழிக் குற்றப் பாதுகாப்பு நிறுவனமாகும்.




### *இது எவ்வாறு செயல்படுகின்றது?*

- செய்திச் சுரண்டல் இணைப்பை அனுப்புவதன் மூலம் பெகாசூஸ் செயல்படுகின்றது.
- அந்தக் குறிபிட்ட பயனர் இந்த இணைப்பை அழுத்தினால், கண்காணிப்பை அனுமதிக்கும் மால்வேர் அல்லது குறியீடானது அந்தப் பயனரின் தொலைபேசியில் நிறுவப்படும்.
- பெகாசூஸ் நிறுவப்பட்டதும், இந்தத் தகவல் திருட்டை மேற்கொள்பவர் அந்தப் பயனரின் தொலைபேசியில் உள்ள முழுமையான தகவலைப் பெறுவார்.

## பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பற்ற மாநிலம் உத்தரப் பிரதேசம்: NCRB 2017 ஆம் ஆண்டுத் தரவு

- இந்த அறிக்கையின்படி, நாட்டில் பெண்களுக்கு எதிராக 3.59 லட்சம் குற்ற வழக்குகள் பதிவாகியுள்ளன. அவற்றில் 56,011 வழக்குகளுடன் உத்தரப் பிரதேசம் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிராவில் 31,979 குற்ற வழக்குகளும் மேற்கு வங்கத்தில் 30,002 வழக்குகளும் பதிவாகியுள்ளன.
- இந்த அறிக்கையின் படி, 'பெண்களுக்கு எதிரான குற்றம்' என்பதன் வரையறையில் கொலை, கற்பழிப்பு, வரதட்சணை மரணம், தற்கொலை செய்தல், அமிலத் தாக்குதல், பெண்களுக்கு எதிரான கொடுமை மற்றும் கடத்தல் ஆகியவை அடங்கும்.
- தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (National Crime Records Bureau - NCRB) படி, 2017 ஆம் ஆண்டில் புனேவில் உள்ள தங்கும் விடுதிகள் பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பற்றதாக இருந்தன. இதில் 26 பாலியல் துன்புறுத்தல்கள் பதிவாகியுள்ளன. அதைத் தொடர்ந்து மும்பை (24 பாலியல் துன்புறுத்தல்கள்) நகரமானது பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பற்றதாக இருக்கின்றது.
- பணியிடத்தில் துன்புறுத்தல், பொதுப் போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் விடுதிகள் உள்ளிட்ட பிற இடங்கள் உள்ளிட்ட இருப்பிடத்தை அடிப்படையாகக் கொண்ட பாலியல் துன்புறுத்தல் குறித்த தகவல்களை NCRB வழங்குவது இதுவே முதல் முறையாகும்.



## உணவுப் பாதுகாப்பு மித்ரா & உணவு உரிமை உறை

- உலக உணவு தினத்தை முன்னிட்டு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் ஒரு “உணவு உரிமை” ஜோலா (பை) மற்றும் “உணவு உரிமை” உறை ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.
- இந்த ஆண்டின் உலக உணவு தினத்தின் (அக்டோபர் 16) கருப்பொருள், ‘சுழியப் பட்டினி உலகத்திற்கான ஆரோக்கியமான உணவுகள்’ என்பதாகும்.
- இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், டாக்டர் ஹர்ஷ் வர்தன், உணவுப் பாதுகாப்பு நிர்வாகத்தை வலுப்படுத்த “உணவு உரிமை உறை” மற்றும் “உணவு உரிமை ஜோலா (பை)” ஆகியவற்றுடன் ‘உணவுப் பாதுகாப்பு மித்ரா’ என்ற திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

## நிகழ்நேர ரயில் தகவல் அமைப்பு


- தெற்கு - மத்திய ரயில்வேயின் சுமார் 500 பயணியர் ரயில் என்ஜின்கள் புதிதாக உருவாக்கப்பட்ட நிகழ்நேர ரயில் தகவல் அமைப்புடன் (Real-time Train Information System - RTIS) பொருத்தப் பட்டுள்ளன.
- இந்த ரயில்களின் பயணம் முழுவதிற்கும் அவற்றின் துல்லியமான வேகத்தையும் இயக்கத்தையும் கண்காணிக்க RTIS பயன்படுத்தப்படும்.
- இது இஸ்ரோ – இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் புவியிடங் காட்டி உதவியுடன் செயல்படும் பெரிதாக்கப்பட்ட புவியியல்சார் வழிசெலுத்தல் அமைப்பான இந்தியாவின் “ககன்” அமைப்பின் உதவியுடன் ரயில்வே தகவல் அமைப்பு மையத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

## டஸ்ட்லிக் – 2019 : இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான முதலாவது கூட்டுப் பயிற்சி

- இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான முதலாவது கூட்டுப் பயிற்சியான டஸ்ட்லிக் - 2019 என்ற பயிற்சியின் தொடக்க நிகழ்விற்கு மத்திய பாதுகாப்புத் துறை ராஜ்நாத் சிங் மற்றும் உஸ்பெகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகியோர் தலைமை தாங்கினர்.
- தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் மீது கவனம் செலுத்தும் இந்த கூட்டு இராணுவப் பயிற்சியானது நவம்பர் 4 ஆம் தேதி தொடங்கி நவம்பர் 13 ஆம் தேதி வரை தாஷ்கண்டிற்கு அருகிலுள்ள சிர்ச்சிக் பயிற்சி பகுதியில் நடத்தப்பட இருக்கின்றது.
- இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக உஸ்பெகிஸ்தான் சென்றுள்ளார்.
- கடந்த 15 ஆண்டுகளில் உஸ்பெகிஸ்தானுக்கு இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒருவர் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

## தேசிய நீர்வழிப் பாதை – 2ல் முதலாவது சரக்குப் போக்குவரத்து

- ஹால்டியா கப்பல் துறை வளாகத்திலிருந்து உள்நாட்டு நீர்வழிப் பாதை – 2ன் (National Waterway - 2) வழியே ஒரு முக்கிய கொள்கல சரக்குக் கப்பலானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் தேதியன்று குவஹாத்தியின் பாண்டுவில் உள்ள இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையத்தின் (IWAI - Inland Waterways Authority of India) முனையத்திற்குச் செல்ல இருக்கின்றது.
- இந்த 12-15 நாட்கள் பயணமானது பின்வருவனவற்றின் வழியே செல்லும் ஒரு ஒருங்கிணைந்த உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆகும்.
    - தேசிய நீர்வழிப் பாதை - 1 (கங்கை நதி)
    - தேசிய நீர்வழிப் பாதை - 97 (சுந்தரவனக் காடுகள்)
    - இந்தியா – வங்க தேச நெறிமுறைப் பாதை (Indo Bangladesh Protocol - IBP) மற்றும்
    - தேசிய நீர்வழிப் பாதை - 2 (பிரம்மபுத்ரா நதி)
- இந்த உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துப் பாதையில், அதாவது NW-2 இல் முதன்முதலில் மேற்கொள்ளப்படும் கொள்கல சரக்குப் போக்குவரத்து இதுவேயாகும்.





***IBP பற்றி***

- இந்தியாவிற்கும் வங்க தேசத்திற்கும் இடையிலான உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மற்றும் வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தமானது (PIWTT - Protocol on Inland Water Transit and Trade) 2018 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

- இரு நாடுகளைச் சேர்ந்த கப்பல்களின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் சரக்குப் போக்குவரத்திற்கு வேண்டி அவற்றின் நீர்வழிகளைப் பயன்படுத்துவதற்காக பரஸ்பர நன்மை பயக்கும் முறைகளை இது அனுமதிக்கின்றது.
- IBP பாதையானது NW - 1ன் கொல்கத்தாவிலிருந்து (இந்தியா) NW - 2ன் (பிரம்மபுத்ரா நதி) சில்காட் (அசாம்) மற்றும் NW - 16ன் (பராக் நதி) கரிம்கஞ்ச் (அசாம்) ஆகியவை வரை நீண்டுள்ளது.

## இந்தியாவின் புதிய அரசியல் வரைபடம்

- ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை மறுசீரமைத்தப் பின்னர் இந்தியாவின் புதிய அரசியல் வரைபடத்தை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் புதிய வரைபடம் 28 மாநிலங்களையும் 9 யூனியன் பிரதேசங்களையும் கொண்டுள்ளது.
- இந்தியாவின் இந்த இரண்டு புதிய யூனியன் பிரதேசங்களும் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று முறையாக நடைமுறைக்கு வந்தன.
- 2019 ஆம் ஆண்டு நவம்பர் 02 அன்று, புதிய யூனியன் பிரதேசங்களின் வரைபடம் வெளியிடப் பட்டது.
- புதிய வரைபடத்தின்படி, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் மீர்பூர் மற்றும் முசாபராபாத் ஆகிய மாவட்டங்கள் ஜம்மு-காஷ்மீரின் ஒரு பகுதியாக விவரிக்கப் பட்டுள்ளன.
- இந்த இரண்டு மாவட்டங்களுடன் சேர்த்து ஜம்மு-காஷ்மீரில் மொத்தம் 22 மாவட்டங்கள் இருக்கும்.
- இந்த வரைபடமானது இந்தியக் கள ஆய்வு இயக்குனரால் தயாரிக்கப் பட்டது.



## KVS ஒரே பாரதம் வளமான பாரதம் நிகழ்வு

- கேந்திரியா வித்யாலயா சங்கதனின் (Kendriya Vidyalaya Sangathan - KVS) பெரும் கலாச்சார மற்றும் இலக்கிய நிகழ்வான ஒரே பாரதம் வளமான பாரதம் நிகழ்வு புதுடில்லியில் நிறைவடைந்தது.
- இதை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் கேந்திரிய வித்யாலயா சங்கதன் ஏற்பாடு செய்துள்ளது.
- ஒரே பாரதம் வளமான பாரதம் பிரிவின் கீழ் ஒட்டுமொத்த வெற்றியாளராக கொல்கத்தா பிராந்தியம் முதல் இடத்தைப் பிடித்தது.
- சர்தார் வல்லபாய் படேலின் 140வது பிறந்த நாளை முன்னிட்டு "ஒரே பாரதம் வளமான பாரதம்" திட்டமானது 2015 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று பிரதமரால் அறிவிக்கப் பட்டது.
- இது மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு திட்டமாகும்.

## நிணநீர் யானைக்கால் நோய் (யானைக்கால் நோய்) பற்றிய தேசியக் கருத்தரங்கு

- "யானைக்கால் நோயை ஒழிப்பதற்காக ஒன்றிணைதல்" என்ற கருப்பொருள் கொண்ட ஒரு தேசியக் கருத்தரங்கானது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தனால் தொடங்கி வைக்கப் பட்டது.
- மேலும் '2021 ஆம் ஆண்டிற்குள் யானைக்கால் நோயை ஒழிப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மீதான அழைப்பிலும்' மத்திய அமைச்சர் கையெழுத்திட்டார்.
- நிணநீர் யானைக்கால் நோயானது பொதுவாக யானைக்கால் நோய் என்று அழைக்கப் படுகின்றது. இது ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகக் கருதப் படுகின்றது.
- இது ஒரு நோய்ப் பரப்பியின் மூலம் பரவும் நோயாகும். இது ஃபிலாரியோடிடியா குடும்பத்தைச் சேர்ந்த உருளைப் புழுக்கள் என வகைப்படுத்தப்பட்ட ஒட்டுண்ணிகளின் தொற்று காரணமாக ஏற்படுகிறது.

## தேசிய யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

- மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் இணையமைச்சரான ஸ்ரீபத் நாயக் என்பவர் (தனிப் பொறுப்பு) தோல் நோய்களுக்கான தேசிய யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தைத் திறந்து வைத்தார்.
- இந்த நிறுவனமானது ஹைதராபாத்தில் உள்ள மத்திய யுனானி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து மேம்படுத்தப் பட்டதாகும்.
- ஆயுஷ் ஆனது ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகியவற்றை உள்ளடக்கிய 6 இந்திய மருத்துவ முறைகளை உள்ளடக்கியுள்ளது.

## தாக்த் தரிசன யாத்திரை

- சீக்கிய மதத்தை நிறுவியவரான குரு நானக் தேவின் 550வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில், இந்திய கலாச்சார உறவுகள் மன்றமானது (Indian Council for Cultural Relations - ICCR)

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சீக்கிய இளைஞர்களுக்காக 'தாக்த் தரிசன யாத்திரையை' ஏற்பாடு செய்யவுள்ளது.

- தாக்த் தரிசன யாத்திரையானது பீகாரின் பாட்னாவில் உள்ள பாட்னா சாஹிப், பஞ்சாப்பின் அமிர்தசரஸ் நகரில் உள்ள பொற்கோயில் (அல்லது ஸ்ரீ ஹர்மந்திர் சாஹிப் அல்லது தர்பார் சாஹிப்) மற்றும் மகாராஷ்டிராவின் நந்தேதில் உள்ள ஹசூர் சாஹேப் ஆகிய மூன்று தாக்த்துகளை உள்ளடக்க இருக்கின்றது.
- பாபா குரு நானக் தேவின் போதனைகள் மற்றும் அனைவருக்குமான நல்வாழ்வில் சீக்கிய மதத்தின் பங்களிப்பு மீதான சர்வதேச இளைஞர் கருத்தரங்கு உள்ளிட்ட இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது வகையான நிகழ்ச்சியையும் ICCR ஏற்பாடு செய்து வருகின்றது.
- ICCR ஆனது இந்திய அரசின் ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பாகும். இது கலாச்சாரப் பரிமாற்றத்தின் மூலம் இந்தியாவின் வெளிநாட்டுக் கலாச்சார உறவுகளில் ஈடுபட்டுள்ளது.
- இது சுதந்திர இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத்தால் 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.

## eCAPA 2019 – உள்ளார்ந்த கலை

- புது தில்லியில் மன நலிவு நோய், மன இறுக்கம், மனநலக் குறைபாடு, வலிப்புத் தாக்கக் கோளாறு மற்றும் டிஸ்லெக்ஸியா ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கான இந்தியாவின் முதல் கலைக் கண்காட்சி நடைபெற்றது.
- அத்தகையக் கலைஞர்கள் தங்கள் காட்சி மற்றும் நிகழ்த்துக் கலைகளை வெளிப்படுத்த இது ஒரு தனித்துவமான தேசிய அளவிலான தளம் மற்றும் சமூக அமைப்பாகும்.

## அனைத்து மாவட்டங்களிலும் மனிதக் கடத்தல் தடுப்புப் பிரிவுகள்

- நிர்பயா நிதியின் உதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் மனிதக் கடத்தல் தடுப்புப் பிரிவுகளை (Anti-Human Trafficking Units - AHTU) அமைப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தற்போது, நாட்டில் 146 மாவட்டங்களில் மட்டுமே AHTUகள் செயல்படுகின்றன.
- இது பெண்கள் பாதுகாப்பை வலுப்படுத்தும். மேலும் அவர்களிடையே இவை அதிகப் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் என்று பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி கூறியுள்ளார்.
- இந்திய அரசு தனது 2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிர்பயா நிதிக்கு 1000 கோடி ரூபாய் நிதியை அறிவித்துள்ளது. இந்நிதி அரசாங்கத்தின் சில முன்முயற்சிகளையும் பெண்களின் பாதுகாப்பிற்காகச் செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஆதரிக்கின்றது.

## SCOJtEx - 2019

- புது தில்லியில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (Shanghai Cooperation Organization - SCO) நகர்ப்புற நிலநடுக்கம் தொடர்பான தேடல் மற்றும் மீட்பு மீதான கூட்டுப் பயிற்சியை (SCOJtEx – 2019) மத்திய உள்துறை அமைச்சர் துவங்கி வைத்தார்.

- இது தேசியப் பேரிடர் மீட்புப் படை ஏற்பாடு செய்த பயிற்சியாகும்.
- பேரிடர் சூழ்நிலையில் ஆயத்தத்தை மேம்படுத்துவதையும், 8 SCO உறுப்பு நாடுகளின் பங்கேற்புடன் பூகம்பத்திற்குப் பிந்தைய நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நடைமுறைகளை அங்கீகரிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேசத் தேடல் மற்றும் மீட்பு ஆலோசனைக் குழு (International Search & Rescue Advisory Group - INSARAG) முறை மற்றும் வழிகாட்டுதல்களின்படி இந்தப் பயிற்சி நடத்தப்படும்.

## திறன் கட்டமைப்புத் தளம்

- மத்தியத் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சகமானது ஐபிஎம் நிறுவனத்துடன் இணைந்து திறன் கட்டமைப்புத் தளத்தைத் தொடங்கியுள்ளது.
- டிஜிட்டல் தளமான "MyInnerGenius" மூலம் அறிவார்ந்தத் திறன்கள் மற்றும் ஆளுமை பற்றிய தனிப்பட்ட மதிப்பீட்டை மாணவர்களுக்கு வழங்க இருக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஐபிஎம் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம், நெட்வொர்க்கிங் (வலையமாக்கம்) மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங் (மேகக் கணினி) ஆகிய துறைகளில் இரண்டு ஆண்டு மேம்பட்ட டிப்ளமா (பட்டயப் படிப்பு) படிப்பானது தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்கள் (Industrial Training Institutes - ITIs) மற்றும் தேசியத் திறன் பயிற்சி நிறுவனங்கள் (National Skill Training Institutes - NSTIs) ஆகியவற்றில் வழங்கப்பட இருக்கின்றது.
- இந்தத் தளமானது செயற்கை நுண்ணறிவில் திறன்களை வளர்ப்பது குறித்து ITIs மற்றும் NSTIs ஆகிய நிறுவனங்களில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக விரிவுபடுத்தப்பட இருக்கின்றது.

## சர்வதேசப் பயணிகளுக்கு உதவும் புதிய செயலி

- இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் சுங்கத் துறை அனுமதியளிப்பை மேம்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ICEDASH மற்றும் ATITHI ஆகிய இரண்டு புதிய தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகளை இந்திய அரசு வெளியிட்டுள்ளது.
- மேலும் இந்த முன்னெடுப்புகளானது இந்தியாவிற்கு வரும் சர்வதேசப் பயணிகளின் பயண உடைமைகள் மற்றும் நாணய அறிக்கைகளை மின்னணு முறையில் தாக்கல் செய்வதற்கும் உதவ இருக்கின்றது.
- மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியத்தின் மூலம் ICEDASH வலைதளத்தை அணுக முடியும்.
- ATITHI என்பது சர்வதேசப் பயணிகளின் சுங்க அறிவிப்பை முன்கூட்டியே தாக்கல் செய்வதற்கான ஒரு கைப்பேசிச் செயலியாகும்.

## உயர்புகழ் நிறுவனங்கள் என்ற தகுதியை ஏற்றுக்கொள்வதற்கான முடிவை தில்லிப் பல்கலைக்கழகம் தள்ளிவைப்பு

- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது தில்லிப் பல்கலைக் கழகம், பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகம், ஹைதராபாத் பல்கலைக் கழகம், மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கரக்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப

நிறுவனம் ஆகியவற்றிற்கு "உயர்புகழ் (மாண்புமிகு) நிறுவனங்கள்" (Institute of Eminence' - IoE) என்ற தகுதியை வழங்கியுள்ளது.

- IoE என்ற தகுதிபெற்ற நிறுவனங்கள் UGC ஆல் மேற்கொள்ளப் படும் ஆய்விற்கு உட்படுத்தப்பட மாட்டாது.
- உயர்புகழ் நிறுவனங்கள் என்ற தகுதியை வைத்துள்ள அரசுப் பொது நிறுவனங்களுக்கு ரூ 1,000 கோடி வரை நிதியுதவி அளிக்கப்படும். அதே வேளையில், "உயர்புகழ் நிறுவனங்கள்" என்ற தகுதி நிலைக்குப் பரிந்துரைக்கப்படும் தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட மாட்டாது.
- ஆனால் அந்த நிறுவனங்கள் ஒரு சிறப்பு வகையாகக் கருதப்படும் நிகர்நிலைப் பல்கலைக் கழகமாக, அதிக தன்னாட்சி உரிமையைப் பெற இருக்கின்றன.
- தில்லிப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக ஆணையக் கூட்டத்தில் அப்பல்கலைக் கழகத்திற்கான "உயர்புகழ் நிறுவனங்கள்" என்ற தகுதி நிலையை ஏற்றுக் கொள்வதற்கான முடிவானது ஒத்தி வைக்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் மூலம் பல்கலைக் கழகத்தின் தனியார்மயமாக்கல் அதிகரிக்கும் என்று தில்லி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது.

## பஞ்சாப் – இரட்டை ஆதாயம் பெறும் பதவி


- பஞ்சாப் மாநில சட்டப் பேரவை (தகுதி நீக்கத் தடுப்பு) திருத்த மசோதா, 2019 ஆனது பஞ்சாப் விதான் சபையால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இது அம்மாநில முதலமைச்சரின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆறு சட்டமன்ற உறுப்பினர்களை "இரட்டை ஆதாயம் பெறும் பதவி" என்ற பிரிவின் வரம்பிற்கு வெளியே வைத்திருக்கப் பரிந்துரைக்கின்றது. இதன் மூலம் அவர்கள் தகுதிநீக்க நடவடிக்கையிலிருந்து பாதுகாக்கப் படுகின்றனர்.
- பஞ்சாப் அரசாங்கம் அவர்களில் ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவை அமைச்சருக்கான தகுதியையும் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இணையமைச்சருக்கான தகுதியையும் வழங்கியுள்ளது.

## நீதி வழங்கல் குறித்த அறிக்கை

- நீதி வழங்கலில் ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களின் முதலாவது தர வரிசையில் 18 பெரிய - நடுத்தர மாநிலங்களின் பட்டியலில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் மகாராஷ்டிராவைத் தொடர்ந்து கேரளா, தமிழ்நாடு, பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இப்பட்டியலின் இந்தப் பிரிவில் ஜார்க்கண்ட், பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கடைசி இடங்களில் உள்ளன.
- ஏழு சிறிய மாநிலங்களைக் கொண்ட இந்தப் பட்டியலில் கோவா முதலிடத்தில் உள்ளது.
- இந்தத் தகவல்கள் அனைத்தும் இந்திய நீதி அறிக்கை 2019 இன் படி கூறப்பட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது சமூக நீதி மையம், காமன் காஸ் மற்றும் காமன்வெல்த் மனித

உரிமைகள் முன்னெடுப்பு ஆகியவற்றுடன் இணைந்து டாடா அமைப்பால் வெளியிடப்பட்டது.

❖ காவல் துறை, நீதித் துறை, சிறைச் சாலைகள் மற்றும் சட்ட உதவி ஆகிய நான்கு துறைகளில் உள்ள முக்கியப் பிரச்சினைகள் குறித்து இந்த அறிக்கை கவனம் செலுத்துகின்றது.




## புத்தாக்கத் திட்டம் (Mission Innovation - MI)

❖ புத்தாக்கத் திட்டத்திற்கான புத்தாக்கச் சவால்களை நேருக்கு நேர் சந்திக்கும் திட்டத்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, மத்தியப் புவி அறிவியல் துறை, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சரான ஹர்ஷ் வர்தன் டெல்லியில் தொடங்கி வைத்தார்.

❖ 2020 ஆம் ஆண்டு வரை MI மற்றும் அதன் திட்டங்களால் வழங்கக் கூடியவற்றை ஒருங்கிணைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

❖ தூய்மையான எரிசக்திக் கண்டுபிடிப்புகளில் உள்ள முக்கியமான இடைவெளிகளைக் கண்டறிவதும் 2020ஆம் ஆண்டிற்கு அப்பால் இந்த இடைவெளிகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பதும் இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய நோக்கமாகும்.

❖ புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான உற்பத்தித் திறனை 2022 ஆம் ஆண்டில் 175 ஜிகாவாட்டிற்கு மேல் அதிகரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.


***இதுபற்றி***

❖ இந்தியப் பிரதமர் புத்தாக்கத் திட்டம் என்ற பெயரை உருவாக்கினார்.

❖ இது 2015 ஆம் ஆண்டு நவம்பர் 30 அன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பருவநிலை

மாற்றத்திற்கான உறுப்பு நாடுகளின் 21வது மாநாட்டில் கலந்து கொண்ட 20 நாடுகளால் தொடங்கப் பட்டது.

- MI ஆனது தற்போது 24 உறுப்பு நாடுகளையும் ஐரோப்பிய ஆணையத்தையும் உறுப்பினராகக் கொண்டுள்ளது.




- இதில் உள்ள உறுப்பு நாடுகள் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தூய்மையான எரிசக்தி ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மீதான அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பை இரட்டிப்பாக்க உறுதி பூண்டுள்ளன.
- இந்தத் திட்டமானது காலநிலை மாற்றத்திற்கு எதிராகச் செயல்படும் தொழில்நுட்பத் துறைகளின் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் செயல்விளக்கம் (research, development, and demonstration - RD&D) ஆகியவற்றைத் துரிதப் படுத்தும்.

## தேசியப் பஞ்சாயத்து விருதுகள் 2019

- நாட்டின் 2.5 லட்சம் பஞ்சாயத்துகளில் 240 பஞ்சாயத்துகளுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான தேசியப் பஞ்சாயத்து விருதுகளை புதுதில்லியில் மத்தியப் பஞ்சாயத்துத் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் வழங்கினார்.
- மேலும் அமைச்சர் பஞ்சாயத்துகளுக்கான புவி அடிப்படையிலான தீர்வு ஆதரவு அமைப்பான 'கிராம் மஞ்சித்ரா' என்ற ஒரு இடஞ்சார்ந்த திட்டமிடல் செயலியையும் தொடங்கி வைத்தார்.
- மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப கருவிகளைப் பயன்படுத்துவதற்கு வசதியாக சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக தமிழகத்திற்கு 'இ-பஞ்சாயத்து புராஸ்கர் விருது' வழங்கப்பட்டது.

## அயோத்தி ராம ஜென்மபூமி - பாபர் மசூதி நிலத் தகராறு வழக்கு

- இந்திய உச்ச நீதிமன்றமானது அயோத்தி சர்ச்சையின் இறுதித் தீர்ப்பை 2019 ஆம் ஆண்டு நவம்பர் 9 அன்று அறிவித்தது.
- இந்தியத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான உச்ச நீதிமன்ற அரசியலமைப்பு அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.
- இந்த அமர்வில் எஸ்.ஏ.போப்டே, அசோக் பூஷண், டி.ஒய் சந்திரசூட் மற்றும் எஸ் அப்துல் நசீர் ஆகியோர் அடங்குவர்.
- இது ஒரு ஏக மனதான தீர்ப்பாகும்.
- 2010 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அலகாபாத் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தொடுக்கப்பட்ட பதினான்கு மேல்முறையீடுகளை உச்ச நீதிமன்றம் விசாரித்தது.
- அயோத்தியில் உள்ள 2.77 ஏக்கர் நிலத்தை சன்னி வக்பு வாரியம், நிர்மோஹி அகாரா மற்றும் ராம் லல்லா ஆகியவற்றுக்குச் சமமாகப் பிரித்து வழங்க அலகாபாத் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
- மார்ச் 8 ஆம் தேதி உச்ச நீதிமன்றமானது ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி எஃப்.எம்.ஐ கலிஃபுல்லா தலைமையில் 'வாழும் கலை அமைப்பின்' நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் மற்றும் மூத்த மதராஸ் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஸ்ரீராம் பஞ்சு ஆகியோர் அடங்கிய மூன்று பேர் கொண்ட குழுவை அயோத்தி நிலத் தகராறுக்கு தீர்வு காண மத்தியஸ்தம் செய்ய அமைத்தது.

*தீர்ப்பு*

- உச்ச நீதிமன்றமானது ஒட்டு மொத்த சர்ச்சைக்குரிய நிலத்தையும் ராம் லல்லாவுக்கு ராம் ஜென்மபூமி நிலையம் அமைப்பதற்கு என்று வழங்கியுள்ளது.
- உச்ச நீதிமன்றமானது தெய்வம் ராம் லல்லாவை ஒரு முறையான உரிமையுடைய சட்ட ஆளுமை என்று அங்கீகரித்துள்ளது.
- ஆனால் ராம் ஜென்ம பூமி என்பது ஒரு சட்ட உரிமை கொண்ட ஆளுமை அல்ல.
- அந்த இடத்தில் மூன்று மாதங்களுக்குள் ஒரு கோயில் கட்டுவதற்கும் அதற்காக ஒரு அறக்கட்டளையை உருவாக்குவதற்கும் இந்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- தற்காலிகமாக இந்திய அரசுக்குச் சொந்தமாக உள்ள அந்த சர்ச்சைக்குரிய நிலமானது அறங்காவலர் குழு அமைக்கப்பட்ட பின்னர் அதன் உரிமை அறக்கட்டளைக்கு மாற்றப்படும்.
- மேலும் உச்ச நீதிமன்றமானது சன்னி வக்பு வாரியத்திற்கு மசூதி கட்டுவதற்கு என்று மாற்று 5 ஏக்கர் நிலத்தை வழங்கவும் அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டு சர்ச்சைக்குரிய நிலத்தைப் பிரிப்பது தொடர்பாக அலகாபாத் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு தவறானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதியை இடித்ததும், 1949 ஆம் ஆண்டு பாபர் மசூதியை இழிவுபடுத்தியதும் சட்டத்தை மீறிய செயல்கள் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- பாபர் மசூதியானது ஒரு இஸ்லாமிய முறை அல்லாத கட்டமைப்பில் கட்டப்பட்டது என்பதை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் தொல்பொருள் சான்றுகள் காட்டுகின்றன என்று நீதிமன்றம் கூறியது.
- உத்தரப் பிரதேச சன்னி வக்பு வாரியம் உள்ளிட்ட முஸ்லீம் தரப்பினர் சர்ச்சைக்குரிய நிலத்தினைப் பிரத்தியேகமாக தங்கள் சொத்து என்று நிரூபிப்பதில் தவறியுள்ளதாக நீதிமன்றம் கூறியது.
- இந்துக்களின் தெய்வமான ராமரின் பிறப்பிடம் என நம்பிக்கையுடன் மசூதிக்குள் இந்துக்கள் தொடர்ந்து வழிபட்டு வந்தனர் என்பதை நிரூபிக்க இந்துக் கட்சிகள் சிறந்த சான்றுகளை அளித்தன என்றும் அது கூறியது.
- 1856-57 ஆம் ஆண்டில் இரும்பு ரெயில்கள் அமைத்ததினால் மசூதியின் உள் முற்றமானது வெளிப்புற முற்றத்தில் இருந்து பிரிக்கப் பட்டது என்றும், இந்துக்கள் வெளிப்புற முற்றத்தைப் பிரத்தியேகமாக வைத்திருக்கிறார்கள் என்றும் நீதிமன்றம் மேற்கோளிட்டுள்ளது.
- இதற்கு முன்பே, மசூதியின் உள் முற்றத்தில் இந்துக்கள் வழிபட்டு வந்திருப்பதாக உச்ச நீதிமன்றம் கூறியது.
- இந்திய அரசாங்கத்தால் உருவாக்கப்படும் அறங்காவலர் குழுவில் நிர்மோஹி அகாராவுக்குப் பொருத்தமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- பாபர் மசூதியின் உரிமைக்காக சன்னி வக்பு வாரியத்திற்கு எதிராக ஷியா வக்பு வாரியம் கூறிய கூற்றை நீதிமன்றம் நிராகரித்தது.
- ராம் லல்லா விராஜ்மானுக்கு ஆதரவாக தீர்ப்பைப் பெறுவதில் கே.பராசரன் முக்கியப் பங்கு வகித்தார்.
- 1976 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சியின் போது தமிழகத்தின் தலைமை வழக்கறிஞராகவும் பின்னர் 1983 முதல் 1989 வரை இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தியின் ஆட்சியில் இந்தியத் தலைமை வழக்கறிஞராகவும் அவர் இருந்தார்.

# AYODHYA CASE 1528-2019

## A TIMELINE

**1528**
Babri Masjid built by Mir Baqi, commander of Mughal emperor Babur.

**1885**
Mahant Raghubir Das seeks nod to build canopy outside Babri Masjid. Faizabad court junks plea.

**1949**
Ram Lalla idols put under central dome outside disputed structure.

**1950**
Gopal Simla Visharad moves Faizabad district court for rights to worship Ram Lalla idols.

**1959**
Nirmohi Akhara files suit for possession of site.

**1961**
UP Sunni Central Waqf Board files suit for possession of the site.

**Feb 1, 1986**
Local court orders govt to open site for Hindu worshippers.

**1989**
Bhagwan Sri Ramlalla Virjman at Sri Ram Janam Boomi Ayodhya, files a title suit represented by "next friend" Deoki Nandan Agarwala, a former judge of Allahabad HC.

**Sept 25, 1990**
LK Advani starts nationwide Rath Yatra from Somnath in Gujarat.

**Dec 6, 1992**
Babri Masjid demolished by karsevaks.

**Oct 24, 1994**
SC says in historic Ismail Faruqui case that mosque not integral to Islam.

**April, 2002**
Allahabad HC begins hearing on ownership of disputed site.

**Sep 30, 2010**
HC, in a 2:1 majority, rule three-way division of disputed area between Sunni Waqf Board, Nirmohi Akhara and Ram Lalla.

**May 9, 2011**
SC stays HC verdict on Ayodhya land dispute.

**March 21, 2017**
CJI JS Khehar suggests out-of-court settlement among rival parties.

**Dec 1, 2017**
Thirty-two civil rights activists file plea challenging 2010 verdict of Allahabad HC.

**Jan 8, 2019**
SC sets up five-judge Constitution Bench to hear case headed by Chief Justice Ranjan Gogoi and comprising Justices S A Bobde, N V Ramana, U U Lalit and D Y Chandrachud.

**Jan 25, 2019**
SC reconstitutes 5-member Constitution Bench to hear the case as Justice U U Lalit recuses. The new bench has CJI Gogoi, Justices Bobde, Chandrachud, Ashok Bhushan and S A Nazeer.

**Feb 26, 2019**
SC favours mediation.

**May 9**
The three-member mediation committee submits interim report to SC.

**Aug 1**
Report of mediation submitted in sealed cover to SC.

**Aug 6**
SC commences day-to-day hearing on the land dispute.

**Oct 16**
SC concludes hearing; reserves order




**Nov 9, 2019**
In a unanimous judgment, the Supreme Court allots the disputed Ayodhya land to a new temple trust. The court said an alternate piece of land should be given to Muslims to 'make good their loss of a mosque'.

## அரசு மின்னணுச் சந்தையின் தனியார்மயமாக்கம்

- தேசிய நிகழ்நேர கொள்முதல் வலைதளமான அரசு மின்னணுச் சந்தையை (Government e-Marketplace - GeM) அரசாங்க ஒப்பந்தத் தாரர்களும் தனியார் நிறுவனங்களும் பயன்படுத்த (ஒட்டு மொத்தமாக வாங்குவதற்கு மட்டுமே) மத்திய அரசு அனுமதியளித்துள்ளது,.
- தற்போது, GeM ஆனது அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறைப் பிரிவுகளை மட்டுமே இந்த வலைதளத்தில் இருந்து வாங்க அனுமதிக்கின்றது.

*இது பற்றி*

- GeM, தேசிய பொது கொள்முதல் வலைதளம் என்பது 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரிவு 8 ஐச் சேர்ந்த ஒரு நிறுவனமாகும்.
- GeM ஆனது வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தினால் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று அறிமுகப் படுத்தப்பட்டது.
- மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதையும் ஒழுங்குபடுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## ஷில்ப உத்சவ் 2019

- 2019 ஆம் ஆண்டின் ஷில்ப உத்சவ் நிகழ்ச்சியானது புது தில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
- இது சமூகத்தில் உள்ள நலிவடைந்த பிரிவுகளைச் சேர்ந்த, நாடு முழுவதும் உள்ள கைவினைக் கலைஞர்களின் ஒரு வருடாந்திரக் கண்காட்சியாகும்.

- இந்தக் கைவினைஞர்கள் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் தலைமை நிறுவனங்களால் உதவி பெறுகின்றார்கள்.
- இந்தக் கண்காட்சியில் பட்டுப் புடவைகள், பருத்தி வகையைச் சேர்ந்த கம்பளிப் பொருள்கள், ஆயத்த ஆடைகள், மட்பாண்டப் பொருள்கள், சணல் பொருட்கள், பளிங்குக் கலைப் பொருட்கள் மற்றும் கைத்தறிப் பொருட்கள் போன்றவை இடம் பெறுகின்றன.

## மகப்பேறு இறப்பு விகிதம்

- சமீபத்தில் இந்தியத் தலைமைப் பதிவாளரால் வெளியிடப்பட்ட மகப்பேறு இறப்பு விகிதம் (Maternity Mortality Ratio - MMR) குறித்த ஒரு சிறப்பு அறிக்கையின் படி, இந்தியாவின் MMR ஆனது ஒரு ஆண்டில் 8 புள்ளிகள் என்ற அளவில் குறைந்துள்ளது.
- 2014-16 ஆம் ஆண்டுகளில் பிறந்த ஒரு லட்சம் குழந்தைகளுக்கு 130 ஆக இருந்த MMR ஆனது 2015-17 ஆம் ஆண்டுகளில் பிறந்த ஒரு லட்சம் குழந்தைகளுக்கு 122 ஆக (6.2% சரிவு) குறைந்துள்ளது.
- தற்போது கேரளா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஜார்க்கண்ட், தெலுங்கானா, குஜராத், உத்தரகாண்ட், மேற்கு வங்கம், கர்நாடகா மற்றும் ஹரியானா ஆகிய இந்தியாவில் உள்ள 11 மாநிலங்கள் இந்த MMR இலக்கை அடைந்துள்ளன.
- அசாம், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்கள் MMR இலக்கை அடைவதில் பின்தங்கியுள்ளன.


### *இலக்குகள்*

- தேசிய சுகாதாரக் கொள்கை 2017ன் கீழ், 2020 ஆம் ஆண்டிற்குள் பிறக்கும் ஒரு லட்சம் குழந்தைகளுக்கு 100 என்ற MMR இலக்கை அடைய இந்தியா நிர்ணயித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே, அதாவது 5 ஆண்டுகள் முன்கூட்டியே 2025 ஆம் ஆண்டிற்குள் MMR அளவினைக் குறைப்பதற்கான நீடித்த வளர்ச்சிக்கான இலக்கை அடைவதற்கான பாதையில் இந்தியா உள்ளது.
- MMR அளவைக் குறைப்பதற்காக மத்திய அரசால் லக்சயா, போஷான் அபியான் மற்றும் சுமன் (சுரக்சித் மத்ரித்வா ஆஷ்வாசன் முன்னெடுப்பு) போன்ற முன்னெடுப்புகள் தொடங்கப் பட்டுள்ளன.

## விவசாயிகள் தற்கொலை குறித்த தரவு

- 3 ஆண்டு கால தாமதத்திற்குப் பிறகு, தேசிய குற்ற ஆவணக் காப்பகமானது (National Crime Records Bureau - NCRB) 2016 ஆம் ஆண்டிற்கான “விவசாயிகளின் தற்கொலைகள்” குறித்த புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.
- ஆனால் இது முந்தைய பதிப்புகளிலிருந்த “தற்கொலைகளுக்கான காரணங்கள்” என்ற ஒரு முக்கியப் பிரிவை விலக்கியுள்ளது.
- சமீபத்திய அறிக்கையானது 2016 ஆம் ஆண்டில் நாட்டில் குறைந்தது 11,379 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறுகின்றது.
- இது ஒவ்வொரு மாதமும் 948 தற்கொலைகள் அல்லது ஒவ்வொரு நாளும் 31 தற்கொலைகள் நிகழ்வதாக கூறுகின்றது.

- நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் தற்கொலை நிகழும் மாநிலமாக மகாராஷ்டிரா மாநிலம் (2016 ஆம் ஆண்டில் 3,661 விவசாயிகள்) தொடர்ந்து விளங்குகின்றது.
- அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் தற்கொலைகள் நிகழ்ந்துள்ள இரண்டாவது மாநிலம் கர்நாடகா (2016 ஆம் ஆண்டில் 2,079) ஆகும்.
- NCRB ஆனது கடன் அல்லது கடன் வாங்குவது மூலமாக ஏற்படும் திவால் ஆகியவற்றின் காரணமாக விவசாயிகளின் தற்கொலைகளை முதன்முறையாக வகைப் படுத்தியுள்ளது.
- இந்த அமைப்பு 1995 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளின் தற்கொலைகள் குறித்த தரவுகளை வெளியிடத் தொடங்கியதிலிருந்து, 2016 ஆம் ஆண்டுத் தரவுகளுடன் சேர்த்து இந்தியாவில் மொத்தம் 3,33,407 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.
- முதல் 5 மாநிலங்கள்




## நிர்மல் டாட் அபியான் - கடற்கரைத் தூய்மை இயக்கம்

- மத்திய சுற்றுச் சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது (Ministry of Environment, Forest and Climate Change - MoEFCC) நிர்மல் டாட் அபியான் என்ற ஒரு தூய்மை இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது கடற்கரைகளில் தூய்மையை (துப்புரவு) மேம்படுத்துவதையும் கடலோர சுற்றுச் சூழல் அமைப்புகளின் முக்கியத்துவம் குறித்து குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- தேசிய பசுமைப் படையுடன் (National Green Corps - NGC) இணைந்து நாடு முழுவதும் உள்ள 10 கடலோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 50 கடற்கரைகளில் ஒரு மிகப் பெரிய அளவில் தூய்மை இயக்கமானது செயல்படுத்தப் பட்டது.
- தேசிய பசுமைப் படை என்பது NGC சுற்றுச்சூழல் பள்ளி மன்றங்களுடன் இந்தியாவில்

உள்ள சுமார் 1,20,000 பள்ளிகளை உள்ளடக்கிய MoEFCCன் ஒரு திட்டமாகும்.

- இந்தியாவில் உள்ள பள்ளிகளில் சுற்றுச்சூழல் செயல்பாடானது NGC மூலம் ஊக்குவிக்கப் படுகின்றது.

## சர்வதேச விதை ஒப்பந்தம் - தாவர மரபணு வளங்களின் பாதுகாப்பு

- இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற உணவு மற்றும் வேளாண்மைக்கான தாவர மரபணு வளங்களின் சர்வதேச ஒப்பந்தத்தின் (International Treaty of Plant Genetic Resources for Food and Agriculture - ITPGRFA) 8வது அமர்வில் மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் உரையாற்றினார்.
- ITPGRFA ஆனது விதை ஒப்பந்தம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது உலகின் தாவர மரபணு வளங்களின் பாதுகாப்பு, பரிமாற்றம் மற்றும் நிலையான பயன்பாடு ஆகியவற்றின் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு விரிவான சர்வதேச ஒப்பந்தமாகும்.
- மேலும் இது தேசியச் சட்டங்களுக்கு உட்பட்டு விவசாயிகளின் உரிமைகளையும் அங்கீகரிக்கின்றது.

### *தாவர வகைகளின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைகள் சட்டம்*

- இந்தியாவில் 2001 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'தாவர வகைகளின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் உரிமைகள் (Protection of Plant Varieties and Farmers' Rights - PPV&FR) சட்டமானது' விவசாயிகளின் உரிமைகளையும் பயிர்களை வளர்ப்பவர்களின் உரிமைகளையும் பாதுகாக்கின்றது.
- இச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பல்வேறு விதை வகைகள் உட்பட தனது பண்ணை விளைபொருட்களை சேமிக்க, பயன்படுத்த, விதைக்க, மீண்டும் பயிரிட, பரிமாற்றம் செய்ய, பகிர்ந்து கொள்ள அல்லது விற்றிட ஒரு விவசாயிக்கு உரிமை உண்டு.
- இந்தியச் சட்டமானது இந்த உடன்படிக்கையின் 9வது பிரிவுடன் முழுமையாக இணங்குகின்றது.

## இந்தியாவில் முதலாவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் சந்திப்பு – 2020

- 2020 ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (Shanghai Cooperation Organisation – SCO) 19வது அரசாங்கத் தலைவர்கள் மன்றக் கூட்டத்தை இந்தியா நடத்த இருக்கின்றது.
- 2017 ஆம் ஆண்டில் இந்த அமைப்பில் இந்தியா முழு உறுப்பினராக அனுமதிக்கப்பட்ட பின்னர், புது தில்லியால் ஏற்பாடு செய்யப்பட இருக்கும் எட்டு உறுப்பு நாடுகள் கொண்ட இந்தக் குழுவின் இதுபோன்ற ஒரு முதலாவது உயர் மட்டக் கூட்டம் இதுவாகும்.
- SCO என்பது சீனாவால் தலைமை தாங்கி ஆரம்பிக்கப்பட்ட எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பொருளாதார மற்றும் பாதுகாப்பு அமைப்பு ஆகும். இதில் இந்தியாவும் பாகிஸ்தானும் முழு உறுப்பினர்களாக 2017 ஆம் ஆண்டில் அனுமதிக்கப் பட்டன.
- சமீபத்தில் தாஷ்கண்டில் நடத்தப்பட்ட அதன் உச்சி மாநாட்டில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்.

## புதிய தேசிய நீர்க் கொள்கைக் குழு

- புதிய தேசிய நீர்க் கொள்கையை (National Water Policy - NWP) உருவாக்குவதற்காக 10 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை மத்திய நீர்வளத் துறை அமைச்சகம் இறுதி செய்துள்ளது.
- இந்தக் குழுவானது முன்னாள் திட்ட ஆணையத்தின் உறுப்பினரும் நீர்வள நிபுணருமான மிஹிர் ஷா என்பவரால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.
- தற்போது நடைமுறையில் உள்ள NWP ஆனது 2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. 1987க்குப் பிறகு இதுபோன்று உருவாக்கப்பட்ட மூன்றாவது கொள்கை இதுவாகும்.
- மேலும் தேசிய நீர்ப் பயன்பாட்டுத் திறன் அமைப்பை நிறுவுவதற்கான திட்டங்களும் உள்ளன.

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அலுவலகம்

- இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அலுவலகமானது தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் உள்ள ஒரு பொது ஆணையம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இந்த முக்கியமானத் தீர்ப்பானது இந்தியத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வினால் அறிவிக்கப்பட்டது.
- நியமனம் செய்வதற்காக கொலீஜியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நீதிபதிகளின் பெயர்களை மட்டுமே வெளியிட முடியும் என்றும் அதற்குரிய காரணங்களை வெளியிட முடியாது என்றும் உச்ச நீதிமன்ற அமர்வு கூறியுள்ளது.
- முன்னதாக, 2010 ஆம் ஆண்டு ஜனவரி 10 அன்று, இந்தியத் தலைமை நீதிபதியின் அலுவலகமானது தகவல் அறியும் உரிமை (Right to Information - RTI) சட்டத்தின் வரம்பிற்குள் வரும் என்று தில்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.
- அதன் பின்னர் உயர் நீதிமன்றம் மற்றும் மத்திய தகவல் ஆணையத்தின் (central information commission's - CIC's) உத்தரவுகளுக்கு எதிராக உச்ச நீதிமன்ற தலைமைச் செயலாளர் மற்றும் அதன் மத்தியப் பொது தகவல் அதிகாரி ஆகியோரால் 2010 ஆம் ஆண்டில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அலுவலகத்தினை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கையானது தகவல் அறியும் ஆர்வலரான எஸ்.சி.அகர்வால் என்பவரால் தொடங்கப்பட்டது.

## கிராமப்புற மற்றும் விவசாய நிதி தொடர்பான 6வது உலக மாநாடு


- கிராமப்புற மற்றும் விவசாய நிதி தொடர்பான 6வது உலக மாநாடானது சமீபத்தில் புது தில்லியில் நடத்தப்பட்டது.
- இது ஆசிய - பசிபிக் கிராம மற்றும் வேளாண் கடன் சங்கம் (APRACA - Asia-Pacific Rural and Agricultural Credit Association), தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (National Bank for Agriculture and Rural Development - NABARD) மற்றும் இந்திய அரசின் மத்திய வேளாண் துறை

அமைச்சகம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப் படுகின்றது.

- இந்த மாநாட்டின் 6வது பதிப்பில், கிராமப்புற மற்றும் விவசாய நிதிகளின் சாத்தியமானப் பங்களிப்புகளைக் களைவதற்காக நடத்தப்படும் ஊடாடும் விவாதங்களில் ஈடுபடும் உலகெங்கிலுமிருந்து 300 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கர்தார்பூர் பெருவழிப் பாதை

- பஞ்சாபின் குருதாஸ்பூரில் உள்ள கர்தார்பூர் சாஹிப் பெருவழிப் பாதையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியை பிரதமர் திறந்து வைத்தார்.
- கர்தார்பூர் பெருவழிப் பாதையானது பாகிஸ்தானில் உள்ள குருத்வாரா தர்பார் சாஹிப்பை இந்தியாவின் பஞ்சாபில் உள்ள தேரா பாபா நானக் ஆலயத்துடன் இணைக்கின்றது.




- கர்தார்பூர் பெருவழிப் பாதையானது பாகிஸ்தான் பிரதமரான இம்ரான் கான் அவர்களால் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 9 அன்று திறக்கப்பட்டது. இத்தினமானது பெர்லின் சுவர் இடிப்பின் நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- பாகிஸ்தான் - இந்தியா எல்லையிலிருந்து 4.7 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கர்தார்பூரில் அமைந்திருக்கும் குருத்வாராவை இந்தியாவில் இருக்கும் சீக்கிய மதம் சார்ந்த பக்தர்கள் நுழைவு இசைவு இல்லாமல் சென்று வர அனுமதிக்கும் நோக்கில் இந்த நடைபாதையானது அமைக்கப்பட்டுள்ளது.
- குரு நானக் தேவ் என்பவர் 1539 ஆம் ஆண்டில் தான் இறக்கும் வரை, மொத்தம் 18 ஆண்டுகள் கர்தார்பூரில் உள்ள குருத்வாரா தர்பார் சாஹிப்பில் வாழ்ந்தார்.
- மேலும் இது உலகின் மிகப்பெரிய குருத்வாராவாகவும் விளங்குகின்றது.

## COCSSO மாநாடு

- மத்திய மற்றும் மாநில புள்ளிவிவர அமைப்புகளின் (Conference of Central and State Statistical Organizations - COCSSO) 27வது மாநாடானது கொல்கத்தாவில் நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்" (Sustainable Development Goals - SDGs) என்பதாகும்.
- இந்த மாநாடானது நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான வலுவான கண்காணிப்பு நெறிமுறைக்காக, மத்தியப் புள்ளிவிவர மற்றும் திட்டச் செயல்படுத்துதல் துறை அமைச்சகத்தினால் (Ministry of Statistics and Programme Implementation - MoSPI) எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுகின்றது.

***COCSSO***

- இந்த வருடாந்திர நிகழ்வானது முதன்முதலில் 1971 ஆம் ஆண்டில் MoSPI ஆல் ஏற்பாடு செய்யப்பட்டது.
- COCSSO என்பது மத்திய மற்றும் மாநில புள்ளிவிவர நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை உருவாக்கும் ஒரு முக்கியமான தேசிய மன்றமாகும்.





## இந்தியா-ஆசியான் வர்த்தக உச்சி மாநாடு

- 2 நாள் நடைபெறும் 2019 ஆம் ஆண்டின் இந்தியா-ஆசியான் (தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம்) வணிக உச்சி மாநாடானது புது தில்லியில் நடத்தப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டின் கருப்பொருள், "இன்று, நாளை, ஒன்றிணைந்து" என்பதாகும்.
- இந்தியா மற்றும் ஆசியான் நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு வர்த்தக உறவுகளை புதிய அளவில் மேம்படுத்துவதே இந்த உச்சி மாநாட்டின் முதன்மை நோக்கமாகும்.




## சுவாசத்திற்கான போராட்டம் - 2019 ஆம் ஆண்டின் அறிக்கை

- யுனிசெஃப் அமைப்பினால் "சுவாசத்திற்கான போராட்டம் - குழந்தைப் பருவ நிமோனியா மீதான நடவடிக்கைக்கான அழைப்பு" என்ற ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, நிமோனியா இந்தியாவில் உள்ள குழந்தைகளைப் பாதித்து, அவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்துவதில் முன்னணி வகிக்கின்றது. 2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 5 வயதிற்குட்பட்ட 14ற்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளனர் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- ஊட்டச்சத்துக் குறைபாடு (53%) மற்றும் மாசுபாடு (வெளிப்புறக் காற்று மாசுபாடு - 27% & உட்புற காற்று மாசுபாடு - 22%) ஆகியவற்றுடன் 2018 ஆம் ஆண்டில் ஐந்து வயதுக்குட்பட்ட 1,27,000க்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கொன்றுள்ளது.
- குழந்தை நிமோனியா இறப்புகளில் பாதிக்கும் மேற்பட்ட இறப்புகள் நைஜீரியா (162,000), இந்தியா (127,000), பாகிஸ்தான் (58,000), காங்கோ ஜனநாயகக் குடியரசு (40,000) மற்றும் எத்தியோப்பியா (32,000) ஆகிய நாடுகளில் நிகழ்ந்துள்ளன.
- நிமோனியா மற்றும் வயிற்றுப்போக்கிற்கான உலகளாவிய செயல் திட்டத்தின் படி, 2025 ஆம் ஆண்டிற்குள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நிமோனியா இறப்பு விகிதத்திற்கான உலகளாவிய இலக்கானது பிறக்கும் 1000 குழந்தைகளுக்கு மூன்று ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




unicef

## சபரிமலை சீராய்வு மனு மீதான தீர்ப்பு

- அனைத்து வயதைச் சேர்ந்த பெண்களும் கேரளாவில் உள்ள சபரிமலை கோவிலுக்குள் நுழைவது குறித்து ஒரு பெரிய அமர்வு மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட அரசியலமைப்பு அமர்வு தீர்ப்பளித்துள்ளது.
- தற்போது பெண்கள் கோவிலுக்குள் நுழைவதற்குத் தடை ஏதும் விதிக்கப்பட வில்லை.
- பின்வரும் நீதிபதிகளைக் கொண்ட அரசியலமைப்பு அமர்வானது சபரிமலை சீராய்வு மனு மீதான தீர்ப்பினை வழங்கியது.
    - ரோஹிந்தன் ஃபாலி நாரிமன்
    - டி.ஒய் சந்திரசூட்
    - இந்தியத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்
    - இந்து மல்ஹோத்ரா
    - ஏ.எம்.கான்வில்கர்
- இந்தத் தீர்ப்பானது 3 : 2 என்பதின் அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளது.
- நீதிபதிகள் சந்திரசூட் மற்றும் ரோஹிந்தன் நாரிமன் ஆகியோர் மாறுபட்ட தீர்ப்பை வழங்கினர். இவர்கள் இந்த அமர்வில் உள்ள மற்ற நீதிபதிகளின் கருத்துகளை (பெரும்பான்மை நீதிபதிகளின் கருத்துகளை) ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் இது தொடர்பான அனைத்து (56 மறுஆய்வு மனுக்கள்) சீராய்வு மனுக்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தீர்ப்பு வழங்கினர்.
- 2018 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற உத்தரவைப் பின்பற்றாதது ஒரு விருப்பத் தேர்வு அல்ல என்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து பெண்கள் சபரிமலை கோவிலுக்குள் நுழைய அனுமதிக்கப் படுவதாகவும் அவர்கள் கூறினர்.
- ஏழு நீதிபதிகளைக் கொண்ட அமர்வானது பின்வரும் விவகாரங்களையும் ஆராய இருக்கின்றது.

- முஸ்லீம் மற்றும் பார்சி இனப் பெண்கள் அவர்களது வழிபாட்டுத் தலங்களுக்குள் அனுமதித்தல்.
- தாவூதி போஹ்ரா முஸ்லிம் சமூகத்தில் பெண்களின் பிறப்புறுப்பை வெட்டுதல்.
- அரசியலமைப்பின் 25 (1)வது பிரிவின் கீழ் உள்ள 'பொது ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் சுகாதாரம்' ஆகியவற்றின் பொருளை வரையறுத்தல்.
- 'அறநெறி' அல்லது 'அரசியலமைப்பு அறநெறி' ஆகியவற்றின் பொருளை வரையறுத்தல்.
- ஒரு மதப் பிரிவின் "அத்தியாவசிய மத நடைமுறைகளுக்கு" பிரிவு 26 இன் கீழ் அரசியலமைப்புப் பாதுகாப்பு வழங்கப் படுகிறதா என்பது குறித்து இந்த அமர்வு ஆராய இருக்கின்றது.
- மதத்தின் ஒரு குறிப்பிட்ட நடைமுறையில் நீதிமன்றம் எந்த அளவிற்குத் தலையிட முடியும் என்பது குறித்தும் இந்த அமர்வு விசாரிக்க இருக்கின்றது.

*முன்னதாக*

- 2018 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றமானது 10 முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள் சபரிமலை கோவிலில் வழிபட அனுமதியளித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது.
- இந்த வழக்கின் பெயர்:
  - காந்தாரு ராஜீவாரு (எதிர்) இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கம்.

## ரஃபேல் ஒப்பந்தம் குறித்த சீராய்வு மனு மீதான தீர்ப்பு

- 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 14 அன்று 36 ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதை ஆதரித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோரும் மனுக்களை இந்திய உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட அமர்வு தள்ளுபடி செய்தது.
- இந்த அமர்வானது இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியான (Chief Justice of India - CJI) ரஞ்சன் கோகாயால் தலைமை தாங்கப்பட்டது.
- “யஷ்வந்த் சின்ஹா மற்றும் பிறர் (எதிர்) மத்தியப் புலனாய்வு அமைப்பு" என்ற வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- CJI உடன் இணைந்து நீதிபதி சஞ்சய் கிஷண் கவுல் இத்தீர்ப்பை எழுதி, வழங்கினார்.
- இந்த அமர்வின் மூன்றாவது நீதிபதியான கே.எம். ஜோசப் முதன்மைத் தீர்ப்புடன் ஒத்துப் போவதாக தீர்ப்பு கூறினார். மேலும் இவர் அப்புகாரில் ஏதேனும் முகாந்திரம் இருந்தால் முன் அனுமதியுடன் சிபிஐ விசாரணைக்குப் பரிந்துரைத்தார்.

## 2020 ஆம் ஆண்டு குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினர் - ஜெய்ர் போல்சனாரோ

- 11வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக, பிரதமர் மோடி பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தையை நடத்தினார்.
- இந்திய குடிமக்களுக்கு நுழைவு இசைவு அற்ற (VISA FREE) பயணத்திற்கு அனுமதியளிக்கும் பிரேசில் அதிபரின் முடிவை அவர் வரவேற்றார்.

- இந்தியாவின் 2020 ஆம் ஆண்டு குடியரசு தின விழாக் கொண்டாட்டங்களில் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வதற்காக விடுக்கப்பட்ட பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை போல்சனாரோ ஏற்றுக் கொண்டார்.

## ஃபெனி நதி ஒப்பந்தம்

- இந்தியாவிற்கும் வங்க தேசத்திற்கும் இடையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது திரிபுராவில் உள்ள சப்ரூம் நகரத்திற்கான குடிநீர் விநியோக திட்டத்திற்காக இந்தியாவினால் ஃபெனி ஆற்றில் இருந்து 1.82 cusecs (பாய்வு வீத கொள்ளளவு அலகு) தண்ணீரை எடுப்பது தொடர்பான ஒரு ஒப்பந்தமாகும்.

### *ஃபெனி நதி*

- ஃபெனி நதியானது தென்கிழக்கு வங்க தேசத்தில் உள்ள ஒரு நதியாகும்.
- நீர் உரிமை தொடர்பாக தொடர்ச்சியான சர்ச்சைகளைக் கொண்டுள்ள இந்த நதி இரு நாட்டின் எல்லைகளைக் கடந்து செல்லும் ஒரு நதியாகும்.
- ஃபெனி நதியானது தெற்கு திரிபுரா மாவட்டத்தில் உருவாகி, சப்ரூம் நகரம் வழியாகப் பாய்ந்து, பின்னர் வங்க தேசத்தில் நுழைகின்றது.
- லிட்டில் ஃபெனி என்றும் அழைக்கப்படும் முஹூரி நதியானது நவகாளி மாவட்டத்தில் உற்பத்தியாகி அதன் பின் ஃபெனி நதியின் முகத்துவாரத்திற்கு அருகில் அதனுடன் இணைகின்றது.



## புரு பழங்குடியின மக்கள் தொடர்பான பிரச்சினைகள்

- வடக்கு திரிபுராவில் புரு அகதிகளால் தொடங்கப்பட்ட முற்றுகையானது அகற்றப் பட்டது.
- தங்களுக்கான உணவுப் பொருள் வழங்கலை மீண்டும் தொடங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
- சமீபத்தில், மத்திய உள்துறை அமைச்சகமானது சுமார் 30,000 புரு இன மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க முடிவு செய்தது.
- இந்த புரு இன மக்கள் 1997 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சில சமூகங்களுக்கு இடையிலான ஒரு வன்முறையை அடுத்து மிசோரமில் இருந்து திரிபுராவுக்குத் தப்பி ஓடி விட்டனர்.
- இது தொடர்பாக, மத்திய அரசு, திரிபுரா மற்றும் மிசோரம் ஆகியவற்றிற்கிடையே முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.
- இந்த ஆண்டின் வாக்காளர் பட்டியலைத் திருத்தி, அம்மாநிலத்திற்குள் இடம்பெயர்ந்த சமூகத்தின் உறுப்பினர்களை அப்பட்டியலில் சேர்க்குமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் இப்போது மிசோரம் மாநிலத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது.

### *புரு பழங்குடியினர்*

- இந்தியாவில் திரிபுரா மாநிலம் முழுவதும் புரு பழங்குடியின மக்களைக் காணலாம். இருப்பினும், மிசோரம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்களிலும் அவர்களைக் காணலாம்.
- இவர்கள் திபெத்திய-பர்மிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த புரு மொழியின் ரீங் பேச்சு வழக்கில் பேசுகின்றார்கள். மேலும் இது உள்நாட்டில் கௌ புரு என்று குறிப்பிடப் படுகின்றது.

## இந்தியாவின் புவி வேதியியல் அடிப்படை வரைபடம்

- சுற்றுச்சூழல் பாதிப்புகளை மதிப்பிடுவதற்காக, அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் – தேசியப் புவி ஆராய்ச்சி நிறுவனமானது (National Geophysical Research Institute - NGRI) ‘இந்தியாவின் புவி வேதியியல் அடிப்படை வரைபடத்தை’ வெளியிட்டுள்ளது.
- இந்த வரைபடமானது இந்தியா முழுவதும் உள்ள மேலடுக்கு மண் மற்றும் கீழடுக்கு மண் ஆகியவற்றில் இருக்கும் உலோகங்கள், ஆக்சைடுகள் மற்றும் தனிமங்கள் ஆகியவற்றின் விவரங்களைக் கொண்ட 45 வரைபடங்களைக் கொண்டுள்ளது.
- இந்த வரைபடங்கள் மாசுபாட்டை ஏற்படுத்தக் கூடிய தொழில் நிறுவனங்கள் அல்லது பிற அமைப்புகளால் எதிர் காலத்தில் ஏற்படும் மாசுக்கள் பற்றிக் கண்டறிய உதவுகின்றன.
- எடுத்துக்காட்டு: தோல் பதனிடுதல் நிறுவனம் குரோமியத்தை வெளியிடுகின்றது.
    - குரோமியத்தின் வரைபடத்தைப் பயன்படுத்துவதன் மூலம், கொள்கை வகுப்பாளர்கள் அதிக செறிவுள்ள குரோமியப் பகுதிகளை கண்டறிந்து, அந்தப் பகுதிகளில் தோல் பதனிடும் பொருட்கள் சார்ந்த நிறுவனங்களை அனுமதிக்க மாட்டார்கள்.

## 39வது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

- 39வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது புது தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

- இந்த ஆண்டு நிகழ்வின் கருப்பொருள், "எளிதில் தொழில் தொடங்குவதற்கு உகந்த நாடுகள்" என்பதாகும்.
- இந்த நிகழ்வில் ஆப்கானிஸ்தானுக்கு 'பங்காளர் நாடு' என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்த நிகழ்வில் "முன்னிறுத்து நாடாக தென் கொரியா விளங்க இருக்கின்றது.

## டைகர் TRIUMP பயிற்சி

- டைகர் TRIUMP என்பது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே நீரிலும் நிலத்திலும் நடத்தப்படும் முதலாவது முப்படைப் பயிற்சியாகும்.
- இது நவம்பர் 13 ஆம் தேதி முதல் நவம்பர் 21 ஆம் தேதி வரை ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டினம் மற்றும் காக்கிநாடா ஆகிய நகரங்களுக்கு அருகே நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- டைகர் TRIUMP என்றப் பயிற்சியானது ஒருங்கிணைந்த பாதுகாப்பு கட்டுப்பாட்டகத் தலைமையகத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- இந்தத் தனித்துவமானப் பயிற்சியானது மனிதாபிமான உதவிகளுக்கான களப் பயிற்சி மற்றும் கப்பலில் இருந்து கரைக்கு செல்லும் பேரிடர் மீட்புப் படையினருக்கான பயிற்சி ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.




**SHOW OF COMBINED STRENGTH:** The harbour phase of Tiger Triumph— India-US joint tri-services HADR exercise began on board INS Jalashwa on Thursday. The exercise, which will go on for a week, is intended to represent the growing strategic partnership between the two countries




## ACEM 2019

- அவசரகால மருத்துவம் குறித்த 10வது ஆசிய மாநாடு (ACEM 2019 - Asian Society for Emergency Medicine (ASEM)) புது தில்லியில் நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டு மாநாடானது அவசர கால மருத்துவத்திற்கான ஆசிய சமூகம் மற்றும் இந்திய அவசர கால மருத்துவத்திற்கான சமூகம் ஆகியவற்றினால் இணைந்து நடத்தப்படுகின்றது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள் "தேவையான பராமரிப்பு, இடைவெளிகளைக் கட்டுப்படுத்துதல், அவசரகால மருத்துவத்தின் தாக்கத்தை உருவாக்குதல்" என்பதாகும்.

## இந்தியா இணையம் 2019

- இந்திய இணையம் மற்றும் கைபேசி மன்றமானது (IAMAI - Internet And Mobile Association of India) "இந்தியா இணையம் 2019" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இணைய ஊடுருவல் என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் 100 நபர்களில் 12 வயதுக்கு மேற்பட்ட இணையத்தைப் பயன்படுத்தும் நபர்களின் எண்ணிக்கையாக வரையறுக்கப்படுகின்றது.
- இந்த அறிக்கையின் படி, தேசியத் தலைநகர்ப் பகுதியான தில்லியில் (69%) இணைய ஊடுருவல் விகிதம் மிக அதிகமாக உள்ளது. இதைத் தொடர்ந்து கேரளாவில் (54%) இணைய ஊடுருவல் அதிகமாக உள்ளது.
- இணைய ஊடுருவல் வீதமானது ஒடிசா (25), ஜார்க்கண்ட் (26), பீகார் (28) ஆகிய மாநிலங்களில் மிகக் குறைவாக இருக்கின்றது.
- மேலும் கேரளா, தமிழ்நாடு மற்றும் தில்லி ஆகியவற்றில் பெண் இணையப் பயனர்கள் அதிகம் உள்ளனர் என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கிராமப்புற மற்றும் நகர்ப்புற இணைய இணைப்புகளின் எண்ணிக்கையில் பெரும் இடைவெளியைக் கொண்ட மாநிலங்களில் கேரளாவும் இடம் பெற்றுள்ளது.



## QUAD கூட்டம் 2019

- குவாடு (இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான்) நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பாங்காக்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தின் ஒரு பகுதியாக சந்தித்துப் பேசினர்.
- பயங்கரவாத எதிர்ப்பு, வழிகாட்டுதல், பேரிடர் நிவாரண உதவி, வான் வெளிப் பாதுகாப்பு, ஒத்துழைப்பு, மேம்பாடு, நிதி மற்றும் இணையப் பாதுகாப்பு முயற்சிகள் போன்றவற்றுக்கான ஒத்துழைப்பு குறித்து விவாதிப்பதற்காக இந்த அமைப்பின் அமைச்சர்கள் சந்தித்துப் பேசினர்.

### *QUAD*

- நான்கு நாடுகளின் பாதுகாப்பு உரையாடல் அமைப்பு அல்லது குவாடு அமைப்பானது முதன்முதலில் 2007 ஆம் ஆண்டில் ஜப்பானியப் பிரதமரால் பரிந்துரைக்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள "குவாடு" கூட்டிணைவிற்கு ஒரு புதிய வடிவம் கொடுத்தன.
- இந்தோ - பசிபிக் பகுதியில் உள்ள முக்கியமான கடல் பாதைகளை எந்தவொரு நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் அல்லாமல் (குறிப்பாக சீனா) வைத்திருக்க ஒரு புதிய உத்தியை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆஸ்திரேலியாவைத் தவிர்த்து குவாடு உறுப்பு நாடுகள் தற்போது வருடாந்திர மலபார் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே தொடங்கிய இந்தப் பயிற்சியானது 2015 ஆம் ஆண்டில் முத்தரப்பு (ஜப்பானுடன்) இராணுவப் பயிற்சியாக உருவெடுத்தது.


## காலாபாணி பிரதேசம்

- சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்திய அரசியல் வரைபடத்தில், ஜம்மு காஷ்மீர் (Jammu and Kashmir - J&K) மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின்னர், காலாபாணி பிரதேசமானது இந்தியாவிற்கும் நேபாளத்துக்கும் இடையிலான மோதல் போக்கின் மையப் பகுதியாக உருவெடுத்துள்ளது.
- இந்தியாவின் சமீபத்திய அரசியல் வரைபடத்தில், டர்ச்சுலா மாவட்டத்தில், நேபாளம் தனது சொந்தப் பிரதேசமாகக் கருதும் பிராந்தியத்தின் மீதான தனது உரிமைகளை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- இந்தியாவைப் பொறுத்த வரை, வரலாற்றுச் சிறப்புமிக்க காலாபாணி பகுதியானது உத்தராகண்ட் மாநிலத்தின் ஒரு பகுதியாகும்.

### *காலாபாணி பற்றி*

- காலாபாணி என்பது உத்தராகண்ட் மாநிலத்தின் பித்தோரகார்ஹ் மாவட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தியாவினால் நிர்வகிக்கப்படும் ஒரு பள்ளத்தாக்குப் பகுதியாகும்.
- இது கைலாஷ் மன்சரோவர் பாதையில் அமைந்துள்ளது.
- காலாபாணி பிராந்தியத்தில் உள்ள காளி நதியானது இந்தியாவிற்கும் நேபாளத்துக்கும் இடையிலான எல்லைப் பகுதியைப் பிரிக்கின்றது.
- 1816 ஆம் ஆண்டில் நேபாள அரசாங்கம் மற்றும் பிரிட்டிஷ் இந்தியா ஆகியவற்றினால்

(ஆங்கிலேய - நேபாள போருக்குப் பிறகு) கையெழுத்திடப்பட்ட சுகௌலி ஒப்பந்தமானது காளி நதியை இந்தியாவுடனான நேபாளத்தின் மேற்கு எல்லையாக வரையறுத்துள்ளது.




## சமுத்திர சக்தி - பயிற்சி

- இந்தியாவும் இந்தோனேசியாவும் வங்காள விரிகுடாவில் "சமுத்திர சக்தி" என்ற ஒரு இருதரப்புக் கடல் பயிற்சியை மேற்கொண்டுள்ளன.
- இந்தக் கூட்டுப் பயிற்சியானது கடல் போர்ப் பயிற்சிகள், வான் பாதுகாப்புப் பயிற்சிகள், துப்பாக்கி சுடும் பயிற்சிகள், ஹெலிகாப்டர் நடவடிக்கைகள் மற்றும் எதிரிக் கப்பலுக்குள் சென்று தாக்கி அழிக்கும் ராணுவ செயல்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- கருடா சக்தி என்பது இந்தியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.

## எஃகு கழிவுத் துகள் மறுசுழற்சிக் கொள்கை 2019

- மத்திய எஃகுத் துறை அமைச்சகமானது 2019 ஆம் ஆண்டின் எஃகு கழிவுத் துகள் மறுசுழற்சிக் கொள்கையை வெளியிட்டுள்ளது.
- கழிவுத் துகள் வடிவத்தில் உள்ள பயன்படுத்தப்பட்ட அல்லது மீண்டும் பயன்படுத்தப்பட்ட எஃகு ஆனது இந்திய எஃகு தொழில் துறைக்கு இரண்டாம் நிலை மூலப் பொருளாக விளங்குகின்றது.
- எஃகு கழிவுத் துகளின் தற்போதைய விநியோகமானது உள்நாட்டு அமைப்புசாரா எஃகு கழிவுத் துகள் தொழிற் சாலையிலிருந்து 25 மில்லியன் டன்களாகவும் எஃகு கழிவுத் துகளின் இறக்குமதியிலிருந்து 7 மில்லியன் டன்களாகவும் விளங்குகின்றது.

- 2017 ஆம் ஆண்டின் தேசிய எஃகுக் கொள்கையானது 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு ஆண்டிற்கு 300 மில்லியன் டன் எஃகு உற்பத்தித் திறனை உருவாக்குவதன் மூலம் உலகளவில் போட்டிமிக்கதாக எஃகுத் தொழிற் துறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

*சிறப்பம்சங்கள்*

- இது எஃகுக் கழிவுத் துகள் இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்க இருக்கின்றது. இது ஆயுட்காலம் முடிந்த வாகனங்களிடமிருந்து இந்திய நகரங்களின் நெரிசலைக் குறைக்கின்றது.
- இந்தக் கொள்கையானது இந்தியாவில் உலோக எஃகுக் கழிவுத் துகள் மையங்களை நிறுவுவதை ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளது.
- இது சுற்றுச்சூழலின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.
    - இந்தக் கொள்கையானது 6Rகளின் அடிப்படையில் செயல்பட இருக்கின்றது: குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி, மீட்பு, மறுவடிவமைப்பு மற்றும் மறு உற்பத்தி.
    - இது பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - மேலும் இது மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டு அபாயகரமான மற்றும் பிற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்த இயக்கம்) விதிகளுக்கு இணங்க, எஃகின் மேலுறையை நீக்குதல் மற்றும் துண்டாக்குதல் ஆகியவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கழிவு நீர் மற்றும் அதன் கழிவுகளை அகற்றுவதற்காக ஒரு நெறிமுறையை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சேவைகள் குறித்த 5வது உலகளாவிய கண்காட்சி 2019

- மத்திய வணிகம் மற்றும் வர்த்தகத் துறை & ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் புது தில்லியில் 5வது சேவைகள் குறித்த உலகளாவிய கண்காட்சிக்கான ஒத்திகையைத் தொடங்கி வைத்தார்.
- இந்தக் கண்காட்சி பெங்களூரில் நடைபெற இருக்கின்றது.
- சேவைகள் ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் மற்றும் இந்திய கைத்தொழில் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து மத்திய வணிகம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சகத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## டெஃப் கனெக்ட் 2019

- 'டெஃப் கனெக்ட் 2019' (பாதுகாப்பு இணைப்பு) நிகழ்ச்சியின் தொடக்க அமர்வை மத்தியப் பாதுகாப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்தது.
- இது புது தில்லியில் புதுமைக்கான பாதுகாப்பு சிறப்புத்துவ (iDEX) முயற்சியின் சாதனைகளை வெளிப்படுத்துவதாகும்.
- iDEX ஆனது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்திய இராணுவத்தை நவீனமயமாக்குவதற்கான தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட தீர்வுகளை வழங்குவதற்காக கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களை ஈடுபடுத்துவதன் மூலம்,

பாதுகாப்பு மற்றும் விண்வெளியில் புதுமை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை வளர்ப்பதற்கான ஒரு சூழல் அமைப்பாக இது விளங்குகின்றது.

- iDEX ஆனது "பாதுகாப்பு கண்டுபிடிப்பு அமைப்பினால்" (Defence Innovation Organisation" - DIO) நிதியுதவி அளிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது.
- DIO என்பது நிறுவனங்கள் சட்டம் 2013 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பு ஆகும்.
- இதற்கு இந்துஸ்தான் வானூர்தி நிறுவனம் மற்றும் பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ஆகியவை நிதியுதவி அளிக்கின்றன.

## 11வது பிரிக்ஸ் உச்சி மாநாடு, 2019 - நவம்பர்

- 2019 ஆம் ஆண்டின் பிரிக்ஸ் உச்சி மாநாடானது 11வது வருடாந்திர பிரிக்ஸ் உச்சி மாநாடு ஆகும். இந்த உச்சி மாநாடானது பிரேசில் வெளியுறவுத் துறை அமைச்சகம் அமைந்துள்ள இடமராட்டி அரண்மனையில் நடத்தப் பட்டது.
- பிரேசில் தலைநகரான பிரேசிலியா நகரமானது பிரிக்ஸ் உச்சி மாநாட்டை இரண்டாவது முறையாக நடத்துகின்றது.
- இந்த உச்சி மாநாட்டின் கருப்பொருள், "பிரிக்ஸ்: ஒரு புத்தாக்க எதிர் காலத்திற்கான பொருளாதார வளர்ச்சி" என்பதாகும்.
- இந்தியாவும் பிற பிரிக்ஸ் பொருளாதார நாடுகளும் டிஜிட்டல் பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இந்த ஆண்டு பிரிக்ஸ் உச்சி மாநாடானது பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான ஒத்துழைப்பின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.
- இந்த மாநாட்டின் போது பரஸ்பர நிதி வழங்கீடுகளுக்கான ஒரு பொதுவான மெய்நிகர் நாணயத்திற்கான யோசனையும் முன்வைக்கப் பட்டது.
- இந்தியாவில் புதிய வளர்ச்சி வங்கியின் (New Development Bank - NDB) பிராந்தியக் கிளையை கூடிய விரைவில் முன்கூட்டியே திறக்க வேண்டும் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.
- பேரிடரைத் தாங்கிக் கொள்ளும் உள்கட்டமைப்பிற்கான உலகளாவிய கூட்டணியில் சேர பிரிக்ஸ் நாடுகள் மற்றும் NDB ஆகிய அமைப்புகளுக்கு இந்தியப் பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### *புதிய வளர்ச்சி வங்கி*

- ஷாங்காய் நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இந்தப் புதிய வளர்ச்சி வங்கியானது பிரிக்ஸ் நாடுகளால் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) நிறுவப்பட்ட பன்முகத் தன்மை வாய்ந்த ஒரு வளர்ச்சி வங்கியாகும். இந்த வங்கியானது இதற்கு முன்னர் பிரிக்ஸ் வளர்ச்சி வங்கி என்று அழைக்கப் பட்டது.
- NDBயை ஏற்படுத்துவதற்கான ஒரு யோசனையானது 2012 ஆம் ஆண்டில் புது தில்லியில் நடைபெற்ற 4வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் போது இந்தியாவினால் முன்மொழியப் பட்டது.

## சிசேரி நதிப் பாலம் – பிரம்மன்க் திட்டம்

- அருணாச்சலப் பிரதேசத்தில் திபாங் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள சிசேரி நதிப் பாலத்தை மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.
- 200 மீட்டர் நீளமுள்ள இந்தப் பாலமானது திபாங் பள்ளத்தாக்கிற்கும் சியாங்கிற்கும் இடையில் ஒரு இணைப்பை வழங்குகின்றது.
- இந்தப் பாலமானது எல்லைப்புறச் சாலைகள் அமைப்பின் (Border Roads Organisation - BRO) "பிரம்மன்க் திட்டம்" என்ற ஒரு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது.
- வர்தக், அருணங்க், பிரம்மங்க், மற்றும் உதயக் ஆகிய BROன் நான்கு திட்டங்கள் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ளன.
- இந்தப் பாலமானது இராணுவத்தின் பார்வையில் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இது டிரான்ஸ் அருணாச்சல் நெடுஞ்சாலையின் ஒரு பகுதியாக விளங்கும்.

## பயண மற்றும் சுற்றுலாப் போட்டித்திறன் குறியீடு

- உலகப் பொருளாதார மன்றமானது பயண மற்றும் சுற்றுலா போட்டித் திறன் குறியீட்டை (Travel & Tourism Competitiveness Index - TTCI) வெளியிட்டுள்ளது. இது 140 நாடுகளை உலகளாவிய சுற்றுலா மற்றும் பயணங்களில் அந்தந்த நாடுகளின் நிலைகளை ஒப்பிட்டு தரவரிசைப் படுத்தியுள்ளது.
- இந்தக் குறியீட்டில் இடம் பெற்றுள்ள முதல் 5 நாடுகள் - ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் மற்றும் அமெரிக்கா.
- இதில் இந்தியா 34வது இடத்தில் உள்ளது (2017 ஆம் ஆண்டில் 40 ஆக இருந்தது). தெற்காசியாவில் சுற்றுலா செல்வதற்கு சுற்றுலாப் பயணிகளால் மிகவும் விரும்பப் படும் நாடாக இந்தியா விளங்குகின்றது.
- ஆசியாவின் மிகவும் போட்டித்திறன் கொண்ட பயண மற்றும் சுற்றுலாப் பொருளாதாரமாக ஜப்பான் உள்ளது.
- ஆசியா - பசிபிக் பிராந்தியத்தில் மிகப்பெரிய பயண மற்றும் சுற்றுலாப் பொருளாதாரமாக சீனா விளங்குகின்றது.

## உலகளாவிய திறன்களுக்கான தரவரிசை அறிக்கை

- ஐஎம்டியின் உலகளாவிய திறன்களுக்கான தரவரிசையின் சமீபத்திய பதிப்பின் படி, மொத்தமுள்ள 63 நாடுகளைக் கொண்ட பட்டியலில் இந்தியா 59வது இடத்தில் உள்ளது (இதற்கு முன்பு 53வது இடம்).
- இந்தக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசையின் வீழ்ச்சிக்கான காரணங்கள் – குறைவான வாழ்க்கைத் தரம், கல்விக்கான செலவு, அறிவு மிக்கவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதன் மூலம் ஏற்படும் எதிர்மறையான தாக்கம் மற்றும் திறமைகளை ஈர்த்து அதைத் தக்க வைத்துக் கொள்வதில் குறைந்த முன்னுரிமை.
- உலகின் சிறந்த திறன் மிக்கவர்களின் மையமாக சுவிட்சர்லாந்து தனது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. அதைத் தொடர்ந்து இந்தக் குறியீட்டில் டென்மார்க் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் உள்ளன.

- இந்தத் தரவரிசையில் முதலிடங்களில் உள்ள நாடுகள் கல்வி மற்றும் உயர்தர வாழ்க்கை முறை ஆகியவற்றில் அதிகமான முதலீடுகளை மேற்கொள்கின்றன.

## கடலோர மாநிலங்களில் காலநிலையைத் தாங்கக் கூடிய தன்மை – UNFCCC

- காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தத்தின் (United Nations Framework Convention on Climate Change - UNFCCC) கட்டமைப்பிற்குள் நிறுவப்பட்ட பசுமைக் காலநிலை நிதியத்தின் கீழ், இந்தியா 43 மில்லியன் அமெரிக்க டாலர்களைப் பெற்றுள்ளது.
- இந்தத் திட்டமானது ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா ஆகிய மூன்று கடலோர மாநிலங்களில் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- இந்த நிதி பின்வருவனவற்றிற்குப் பயன்படுத்தப்பட இருக்கின்றது.
    - 1.7 மில்லியன் மக்களுக்கு காலநிலையைத் தாங்கக் கூடிய வாழ்க்கை முறையைக் கட்டமைத்தல்,
    - 3.5 மில்லியன் டன்கள் எடை கொண்ட கார்பனை ஈடு செய்தல்,
    - பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய சூழல் மண்டலங்களைப் பாதுகாத்தல்,
    - மேம்படுத்தப்பட்ட கடற்கரைப் பாதுகாப்புடன் 10 மில்லியன் மக்களுக்குப் பயனளித்தல்.
- இந்தத் திட்டமானது காலநிலை மாற்றம் தொடர்பான தேசிய செயல் திட்டம், மாநில செயல் திட்டங்கள் மற்றும் பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் ஆகியவற்றுடன் ஒன்றிப் பொருந்துகின்றது.

## இந்தியாவில் சுகாதார அமைப்புகள் குறித்த நிதி ஆயோக்கின் அறிக்கை

- 'ஒரு புதிய இந்தியாவிற்கான சுகாதார அமைப்புகள்: கட்டமைக்கப்பட்டு வரும் பகுதிகள் - சீர்திருத்தங்களுக்கான சாத்தியமான பாதைகள்' என்ற தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையை நிதி ஆயோக் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- இது பின்வருவனவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது:
    - மக்களின் சுகாதார செலவினங்களை "தங்கள் (மக்கள்) கையிலிருந்து செலவு செய்தல்" என்ற முறையிலிருந்து காப்பீட்டு நிறுவனங்களுக்கு மாற்றுதல்,
    - செய்து முடிக்கப் படாத பொது சுகாதாரத் திட்டங்கள்,
    - டிஜிட்டல் சுகாதாரத்தின் வலிமை.
- இந்த அறிக்கையானது புதிய இந்தியா: கட்டமைக்கப்பட்டு வரும் பகுதிகள் - சாத்தியமான பாதைகள் என்ற பெயரில் வெளியிடப் பட்டுள்ளது.
- பின்வருவனவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்தப் புத்தகம் அமைந்துள்ளது.
    - பொதுத் துறைக்கான சர்வதேச சுகாதார அணுகல்,
    - தனியார் துறைக்கான PWC இந்தியா.

## சிறார் கொடுமைகள் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு

- மத்தியப் புலனாய்வுப் பிரிவானது (Central Bureau of Investigation - CBI) ஆன்லைன் (நிகழ்நேர) சிறார் பாலியல் கொடுமைகள் மற்றும் சுரண்டல் (OCSAE - Online Child Sexual Abuse and Exploitation) தடுப்பு/விசாரணைப் பிரிவை புது தில்லியில் உள்ள அதன் தலைமையகத்தில் அமைத்துள்ளது.
- இந்தப் பிரிவானது CBIயின் சிறப்பு குற்றப் பிரிவின் கீழ் செயல்பட இருக்கின்றது.
- இந்தப் பிரிவானது, நாடு முழுவதும் தனது அதிகார வரம்பைக் கொண்டிருக்கும்.
- இது பின்வருவனவற்றின் கீழ் வரும் குற்றங்களை விசாரிக்க இருக்கின்றது.
    - இந்திய தண்டனைச் சட்டத்தின் (Indian Penal Code - IPC) பல்வேறு விதிகள்,
    - பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (Protection of Children from Sexual Offences - POCSO) சட்டம்,
    - பிற தொடர்புடைய சட்டங்களைத் தவிர, தகவல் தொழில்நுட்பச் சட்டம்.
- இது நிகழ்நேர சிறார் பாலியல் கொடுமைகள் மற்றும் சுரண்டல் ஆகியவை பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் பரப்புகின்றது.

## உடல்நலம் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த லான்செட் கவுண்டவுன் அறிக்கை 2019

- உடல்நலம் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த லான்செட் கவுண்டவுன் அறிக்கை - 2019ன் படி, இந்தியாவில் காலநிலை மாற்றமானது ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் காலரா காரணமாக ஏற்படும் தொற்று நோய்கள் ஆகியவற்றை மேலும் அதிகரிக்கும்.
- 1960களில் இருந்து இந்தியாவில் மக்காச் சோளம் மற்றும் அரிசி ஆகியவற்றின் சராசரி மகசூல் திறனானது கிட்டத்தட்ட 2 சதவீதம் குறைந்துள்ளது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- சோயாபீன் மற்றும் குளிர்கால கோதுமை ஆகிய இரண்டின் சராசரி மகசூல் திறனானது 1 சதவீதத்திற்கும் மேலாகக் குறைந்துள்ளது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

***நோய்கள்***

- கடல் மேற்பரப்பு வெப்பநிலையின் அதிகரிப்பானது இந்தியாவில் காலரா, இரைப்பைக் காய்ச்சல், காயங்கள் மற்றும் பல்வேறு தொற்று நோய்களை ஏற்படுத்துகின்றது.
- மேலும் டெங்கு போன்ற கொசுக்களின் மூலம் பரவும் நோயால் ஏற்படும் இறப்பும் உயர இருக்கின்றது.
- மாசுபாடு மற்றும் வெப்ப அழுத்தம் ஆகியவை இந்திய தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை பாதிக்கலாம்.

***ஈரக் குமிழ் உலக வெப்பநிலை (WBGT - Wet Bulb Globe Temperature) அளவீடு***

- WBGT என்பது சூரிய ஒளியில் உள்ள வெப்ப அழுத்தத்தின் ஒரு அளவீடாகும். மேலும் இந்த அளவீட்டில் வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம், சூரிய கோணம் மற்றும் மேகம் (சூரியக் கதிர்வீச்சு) ஆகியவை உள்ளடங்கும்.
- WBGT அதிகரிப்பானது உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை குறைக்கும்.

- வெப்ப அலைகள் காரணமாக முதியவர்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள்.

*காட்டுத் தீ*

- 21 மில்லியன் இந்தியர்கள் காட்டுத் தீக்கு ஆளானதாக இந்த அறிக்கை கூறுகின்றது.
- இது 152 நாடுகளில் மிக உயர்ந்த அளவாகும்.

## ADMM-Plus கூட்டம், தாய்லாந்து

- மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்ற ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம்-பிளஸ் (ASEAN Defence Ministers' Meeting-Plus - ADMM-Plus) நிகழ்ச்சியில் இந்தியாவின் சார்பில் கலந்துகொண்டார்.
- மியான்மர் நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் லெப்டினன்ட் ஜெனரல் சீன் வின் உடன் இணைந்து "ஆசியான் (தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம்) அமைப்புக்கான இராணுவ மருத்துவம் குறித்த கையேட்டை" அவர் வெளியிட்டார்.
- 10 ஆசியான் நாடுகளுடன், ஜப்பான், அமெரிக்கா, சீனா போன்ற எட்டு நாடுகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டன.

## மைத்ரீ திவாஸ்

- தவாங் என்ற இடத்தில் நடந்த மைத்ரீ திவாஸ் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அருணாச்சலப் பிரதேசத்திற்குப் பயணம் செய்தார்.
- தவாங்கில் உள்ள "க்யால்வா சாங்யாங் க்யாட்சோ அதிஉயர அரங்கத்தில்" மைத்ரீ திவாஸ் (பொது மக்கள்-ராணுவ நட்பு) ஆனது இரண்டு நாட்கள் கொண்டாடப்பட்டது.
- மைத்ரி திவாஸின் 11வது பதிப்பான இது அந்தப் பிராந்தியத்தில் பொது மக்கள் -ராணுவ நட்புறவைக் கொண்டாடும் விதமாக அமைகிறது.
- மேலும் கிழக்கு சியாங் மாவட்டத்தில் சிசேரி நதி பாலம் மற்றும் தேசிய நெடுஞ்சாலை-52 ஐ ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.

## சோவா-ரிக்பாவுக்கான தேசிய நிறுவனம்

- ஒன்றியப் பிரதேசமான லடாக்கின் லே பகுதியில் சோவா-ரிக்பாவுக்கான தேசிய நிறுவனம் நிறுவ மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நிறுவனம் மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் ஒரு தன்னாட்சி தேசிய நிறுவனமாக செயல்படும்.
- சோவா-ரிக்பா என்பது இந்தியாவில் உள்ள இமயமலைப் பகுதியின் ஒரு பாரம்பரிய மருத்துவ முறையாகும்.
- இந்த மருத்துவ முறையானது சிக்கிம், அருணாச்சலப் பிரதேசம், டார்ஜிலிங் (மேற்கு வங்கம்), இமாச்சலப் பிரதேசம் மற்றும் லடாக் ஒன்றியப் பிரதேசங்களில் பிரபலமாக நடைமுறையில் உள்ளது.

## நீர் தர அறிக்கை

- இந்திய தர நிர்ணயப் பணியகம் (Bureau of Indian Standards - BIS) மேற்கொண்ட மாதிரி சோதனைகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள 21 பெரிய நகரங்களில் மும்பை நகர குழாய் நீர் குடிப்பதற்குப் பாதுகாப்பானது என்றும் டெல்லி நகர குழாய் நீர் மிக மோசமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 21 நகரங்களில், 15 நகர குழாய் நீரின் மாதிரிகள் ஆய்வகங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது அவை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாதுகாப்பு அளவுருக்களைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன.
- 2012 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட BIS இன் குடிநீர் தரத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட படி 28 அளவுருக்கள் மீது இந்த நீர் மாதிரிகள் சோதிக்கப்பட்டன.
- சென்னையில் இருந்து பெறப்பட்ட நீர் மாதிரிகள் 10க்கும் மேற்பட்ட அளவுருக்களில் தர சோதனைகளில் தோல்வியடைந்து, நகரத்தை நாட்டின் சுத்தமான நீர் தரவரிசைப் பட்டியலின் கீழ்நிலையில் வைத்துள்ளன.

SOUNDING ALARM — Water samples from Jan 2019 to Oct 31, 2019 in corpn zones I-XV

| | I | II | III | IV | V | VI | VII | VIII | IX | X | XI | XII | XIII | XIV | XV |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Unsatisfactory samples | 49 | 12 | 44 | 244 | 129 | 61 | 103 | 90 | 60 | 45 | 55 | 31 | 33 | 15 | 39 |
| E.coli present | 13 | 4 | 25 | 116 | 85 | 44 | 38 | 47 | 41 | 17 | 24 | 13 | 19 | 6 | 25 |
| Residual Chlorine | 0 | 0 | 11 | 18 | 1 | 4 | 25 | 33 | 18 | 24 | 0 | 0 | 6 | 2 | 0 |
| Dissolved Solids | 237 | 125 | 33 | 233 | 12 | 6 | 34 | 11 | 0 | 0 | 11 | 0 | 14 | 14 | 26 |
| Total samples | 375 | 311 | 384 | 1,479 | 443 | 309 | 460 | 415 | 431 | 369 | 309 | 535 | 552 | 357 | 391 |

## மருத்துவத் தயாரிப்புகளுக்கான அணுகல் குறித்த உலக மாநாடு

- மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் புது தில்லியில் 'மருத்துவ தயாரிப்புகளுக்கான அணுகல்: நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030ஐ அடைதல்' என்பது குறித்த 2019 ஆம் ஆண்டிற்கான உலக மாநாட்டைத் திறந்து வைத்தார்.
- இதை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவை இணைந்து நடத்துகின்றன.
- பின்வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.
    - அனைவருக்குமான சுகாதாரப் பாதுகாப்பு.
    - நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030.
    - மருத்துவ தயாரிப்புகளுக்கான அணுகலை ஊக்குவிக்க அறிவுசார் சொத்துரிமையின் பங்கு.

## இரண்டாவது தெற்காசியப் பாதுகாப்பு உச்சி மாநாடு

- தெற்காசியப் பாதுகாப்பு உச்சி மாநாட்டின் இரண்டாவது பதிப்பானது புது தில்லியில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் முகநூல் (FACEBOOK) நிறுவனம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- தனிநபர்களும் சமூகங்களும் டிஜிட்டல் தளத்தில் இணைக்கப்பட்டுள்ள நிலையில் "பாதுகாப்பு சார்ந்தப் பிரச்சினை" என்பதை முன்னிலைப்படுத்த இந்த உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்வில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானி "வி திங்க் டிஜிட்டல் (We Think Digital)" என்ற வலைதளத்தை தொடங்கி வைத்தார்.
- இந்த வலைதளம் ஆனது தனியுரிமை, பாதுகாப்பு, டிஜிட்டல் சொற்பொழிவு மற்றும் டிஜிட்டல் தடம் தெரிந்துகொள்வது ஆகியவைகளை உள்ளடக்கிய ஒரு நிகழ்நேர கல்வி வலைதளம் ஆகும்.

## தொழில் துறை உறவுகள் தொடர்பான தொழிலாளர் குறியீடு 2019

- 2019 ஆம் ஆண்டின் தொழில் துறை உறவுகள் தொடர்பான தொழிலாளர் குறியீட்டிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- எந்தவொரு கால அளவிற்கும் நிலையாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு கால ஒப்பந்தத்தில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த நிறுவனங்களை இது அனுமதிக்கின்றது.
- நிர்ணயிக்கப்பட்ட கால வேலைவாய்ப்பிற்கான சட்டக் கட்டமைப்பை வழங்க இந்த மசோதா முன்மொழிகின்றது.
- புதிய விதிகளின் கீழ், அதேப் பிரிவில் பணியாற்றும் வழக்கமான தொழிலாளர்கள் பெறும் சட்ட ரீதியான சமூகப் பாதுகாப்புச் சலுகைகளை நிர்ணயிக்கப்பட்ட பதவிக் காலத்தில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களும் பெற இருக்கின்றனர்.
- 100 தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் பணியாளர்களைப் பணி நீக்கம் செய்வதற்கு அல்லது தொழிற்சாலைகளை மூடுவதற்கு அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

## காப்புரிமை நடவடிக்கை நெடுஞ்சாலைத் திட்டம்

- இந்திய காப்புரிமை அலுவலகத்தினால் (Indian Patent Office - IPO) செயல்படுத்தப்பட இருக்கும் காப்புரிமை நடவடிக்கை நெடுஞ்சாலைத் திட்டத்தை (Patent Prosecution Highway - PPH) ஏற்றுக் கொள்வதற்கான ஒரு பரிந்துரைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது ஆரம்பத்தில் ஜப்பான் காப்புரிமை அலுவலகம் மற்றும் IPO ஆகியவற்றிற்கு இடையே சோதனை அடிப்படையில் மூன்று ஆண்டு காலத்திற்கு தொடங்கப்பட இருக்கின்றது.
- PPH திட்டமானது, காப்புரிமை விண்ணப்பங்களுக்கு அனுமதி அளிப்பதற்கான நேரத்தைக் குறைத்தல் மற்றும் நிலுவையில் உள்ள காப்புரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் உள்பட IPOவிற்குப் பல்வேறு பலன்களைத் தர இருக்கின்றது.

- இது ஆய்வு செய்தலின் தரத்தை செம்மையாக மேம்படுத்துவதற்கும் காப்புரிமை விண்ணப்பங்களை சோதனை செய்வதற்கும் வழிவகுக்கும்.

## எம்.கே 45 கடற் படைத் துப்பாக்கிகள்

- இந்தியாவிற்கு 1 பில்லியன் டாலர் மதிப்புள்ள 13 எம்.கே 45 கடற்படைத் துப்பாக்கிகள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.
- இவை கடற்பரப்பில் போர் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் வான்வழிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ள பயன்படுத்தப்பட இருக்கின்றன.




## கடற்படை நிறுவனத்திற்கு குடியரசுத் தலைவரின் வண்ணம் – கௌரவம்

- இந்திய ஆயுதப் படைகளின் தலைமைப் படைத் தளபதியும் இந்தியக் குடியரசுத் தலைவருமான ராம்நாத் கோவிந்த் கேரளாவின் கொச்சியின் எலிமலையில் உள்ள இந்தியக் கடற்படை நிறுவனத்திற்கு (Indian Naval Academy - INA) குடியரசுத் தலைவரின் வண்ணம் என்ற கௌரவப் பட்டத்தை வழங்கினார்.
- குடியரசுத் தலைவரின் வண்ணம் என்பது ஒரு இராணுவப் பிரிவிற்கு வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவப் பட்டமாகும்.
- கோவா, கொச்சி மற்றும் எலிமலை ஆகிய மூன்று வெவ்வேறு இடங்களில் கடந்த 50 ஆண்டுகளாக இந்தியக் கடற்படை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதில் மற்றும் அவர்களைக் கட்டமைப்பதில் அந்நிறுவனம் ஆற்றிய சிறந்த சேவையை அங்கீகரிக்கும் விதமாக இந்தப் பட்டம் INAக்கு வழங்கப் பட்டுள்ளது.

## உடல் ரீதியாக செயல்பாடற்ற நிலையில் உள்ள இளம் பருவத்தினர்: லான்செட் ஆய்வு

- ❖ இளம் பருவத்தினரின் போதிய செயல்பாடற்ற நிலைக்கான உலகளாவியப் போக்கு குறித்த முதலாவது ஆய்வின் படி, 85% சிறுமியர்கள் மற்றும் 78% சிறுவர்கள் ஆகியோர் மிக அதிக அளவில் போதிய உடல் ரீதியான செயல்பாடுகளைக் கொண்டிருக்க வில்லை.
- ❖ இந்த அறிக்கையானது உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்டு, "லான்செட் சைல்ட் & அடல்ட்ஸ் ஹெல்த்" என்ற இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
- ❖ 2001-16க்கு இடைப்பட்ட கால கட்டத்தில் 146 நாடுகளில் உள்ள 11 வயது முதல் 17 வயதுடைய 1.6 மில்லியன் மாணவர்களிடமிருந்துப் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ❖ இந்தியாவில் 76.6% சிறுவர்களும் 76.3% சிறுமிகளும் "உடல் ரீதியாகச் செயல்பாடற்ற நிலையில் உள்ளனர்" என வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.
- ❖ சிறுவர்களும் சிறுமிகளும் உடல் ரீதியாகச் செயல்பாடற்ற நிலையில் இருப்பதற்கு கிரிக்கெட் விளையாட்டு மற்றும் வீட்டு வேலைகள் ஆகியவையே காரணம் என்று இந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.




## பறவை போட்டுலிய நோய், சாம்பார் உப்பு ஏரி @ ராஜஸ்தான்

- ❖ 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ராஜஸ்தானின் சாம்பார் உப்பு ஏரியில் கிட்டத்தட்ட 10,000க்கும் மேற்பட்ட புலம்பெயர்வுப் பறவைகள் மர்மமான முறையில் இறந்து கிடந்தன.
- ❖ நோய் பாதிக்கப்பட்ட பறவைகளில் மந்தமான தன்மை, மனச் சோர்வு, பசியற்றத் தன்மை, கால்கள் & இறக்கைகளில் பக்கவாதம், கழுத்து தரையைத் தொடுவது ஆகிய மருத்துவ அறிகுறிகள் தென்பட்டுள்ளன.

- இந்த நோய் பாதிக்கப்பட்ட பறவைகளால் பெருமளவு நடக்கவோ, நீந்தவோ, பறக்கவோ முடியவில்லை.
- இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில் அவைகளுக்குப் பறவை போட்டுலிய நோய் பாதிக்கப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.
- பறவை போட்டுலிய நோய் என்பது ஒரு பக்கவாத, நச்சுகளை உட்கொள்வதால் அடிக்கடி ஏற்படும் ஒரு அபாயகரமான நோயாகும். இது ஒரு "சாத்தியமான காரணமாக" இருக்கலாம் என்றும் கருதப் படுகின்றது. ஆனால் இது முழுமையாக உறுதிப்படுத்தப்படவில்லை.

## மத்திய தகவல் ஆணையத்தின் ஆண்டு அறிக்கை

- மத்திய தகவல் ஆணையத்தின் (Central Information Commission – CIC) ஆண்டு அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.
- மத்திய அரசு அமைச்சகங்கள் மற்றும் துறைகள் ஆகியவற்றினால் பெறப்படும் தகவல் அறியும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையானது 1.36 லட்சம் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. இது 2017-18 ஆம் ஆண்டில் இருந்ததை விட 11 சதவீதம் அதிகமாகும்.
- மத்தியப் பழங்குடியினர் விவகார அமைச்சகம் (26.54%) மற்றும் உள்துறை அமைச்சகம் (16.41%) ஆகியவற்றால் தகவல் அறியும் விண்ணப்பங்களில் அதிக சதவீத அளவில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.
- CICயானது 2019 ஜனவரி 1 ஆம் தேதி முதல் சுதிர் பார்கவா என்பவரது தலைமையில் செயல்பட்டு வருகின்றது.

## தீர்ப்பாயங்களுக்கான நியமனம் - நிதியியல் சட்டம், 2017

- தீர்ப்பாயங்களுக்கான நியமனங்கள் "தற்பொழுது ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் தான் இருக்க வேண்டும்" என்றும் 2017 ஆம் ஆண்டின் நிதியியல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் இருக்கக் கூடாது என்றும் ஒரு இடைக்கால உத்தரவை உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.
- தேசிய பசுமைத் தீர்ப்பாயம், வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் போன்ற நீதிமன்றத் தீர்ப்பாயங்களின் உறுப்பினர்களின் நியமனங்கள், அவர்களை நீக்குதல் மற்றும் அவர்களின் பணி நிலைமைகளை நிர்வகிக்கும் அதிகாரத்தை 2017 ஆம் ஆண்டின் நிதியியல் சட்டம் மத்திய அரசிற்கு வழங்கியிருந்தது.
- மனுதாரர்கள் ரோஜர் மேத்யூ மற்றும் வருவாய்ப் பிரிவுக் கழகம் ஆகியோர் 2017 ஆம் ஆண்டின் நிதியியல் சட்டத்தை, அதிலும் குறிப்பாக பகுதி XIV என்ற பகுதியைப் பல்வேறு காரணங்களுக்காக உச்ச நீதிமன்றத்தில் அவற்றை எதிர்த்து வழக்கு தொடர்ந்து இருந்தனர்.
- இந்தச் சட்டத்தின் பகுதி XIV ஆனது பல்வேறு மத்தியச் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட 26 தீர்ப்பாயங்களின் நிர்வாகம் தொடர்பான விதிகளை ரத்து செய்து அவற்றை நீக்கி இருக்கின்றது. பிரிவு 184ன் படி விதிகளை வடிவமைக்கும் அதிகாரங்களை அச்சட்டம் மத்திய அரசிற்கு வழங்கியது.

- நீதிமன்றம் இது பொருந்தாது என்று அறிவித்து, புதிய விதிகளை வகுக்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டது.

## கப்பல் உடைப்பு மீதான ஹாங்காங் ஒப்பந்தம்

- பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த கப்பல்களின் உடைப்பிற்கான ஹாங்காங் சர்வதேச ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 2009 ஆம் ஆண்டில் சீனாவின் ஹாங்காங்கில் நடைபெற்ற இராஜதந்திர மாநாட்டில் இந்த ஒப்பந்தம் முதன்முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இது கப்பல்களின் பயன்பாடு (வாழ்நாள்) முடிவடைந்த பின்பு, மனித ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழலுக்குத் தேவையற்ற ஆபத்துக்களை ஏற்படுத்தாமல் அவற்றை உடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், இந்தியா ஆண்டுதோறும் சுமார் ஐந்து மில்லியன் மொத்த டன் எடையுள்ள கப்பல் உடைத்தலை மேற்கொண்டுள்ளது. உலகின் கப்பல் உடைப்புத் துறையில் கிட்டத்தட்ட 25% பங்கை இந்தியா கொண்டுள்ளது.
- உலகளவில் கப்பலை உடைப்பதற்கான முன்னணிச் சந்தையாக இந்தியா விளங்கி வருகின்றது.
- குஜராத்தில் உள்ள அலங் - சோசியா கப்பல் உடைப்பு மையமானது 450 என்ற அளவில் ஒவ்வொரு ஆண்டும் கப்பல் உடைப்புகளைக் கையாளுகின்றது.



## தேசிய வேளாண் வேதியியல் மாநாடு

- தேசிய வேளாண் வேதியியல் மாநாடானது புது தில்லியில் நடத்தப்பட்டது.
- மத்திய வேளாண்மை மற்றும் விவசாய நல அமைச்சகமானது இந்நிகழ்ச்சியை நடத்தியது.
- இது இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது வகை மாநாடாகும்.
- இது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், "வேளாண் வேதிப்பொருட்களின் பல்வேறு நிலைகள் மீதான நாட்டின் நிலை" என்பதாகும்.

## பாரதிய போஷன் கிருஷி கோஷ்

- பாரதிய போஷன் கிருஷி கோஷ் திட்டமானது பில் கேட்ஸ் என்பவருடன் இணைந்து மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சரான ஸ்மிருதி இராணி என்பவரால் புது தில்லியில் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்திற்காக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்புடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- இது 128 வேளாண் காலநிலை மண்டலங்களில் உள்ள பல்வேறு பயிர்களின் களஞ்சியமாகும். இது சிறந்த ஊட்டச்சத்து விளைவுகளை செயல்படுத்த உதவுகின்றது.
- இந்தத் திட்டமானது விவசாயம் உட்பட பல்வேறு துறைகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பின் மூலம் நாடு முழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெரும்பாலான சூழ்நிலைகளில், ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பதற்கு முக்கியமான காரணம் ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகும்.

## புல்புல் சூறாவளி (புயல்)

- வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட புல்புல் சூறாவளி காரணமாக இந்திய வானிலை ஆய்வு மையமானது இந்திய மாநிலங்களான மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆகியவற்றிற்கு ஆரஞ்சு நிற எச்சரிக்கையை விடுத்துள்ளது.
- இந்த சூறாவளியானது சாகர் தீவுகள் (மேற்கு வங்கம்) மற்றும் கெபுபாரா (வங்க தேசம்) ஆகியவற்றிற்கிடையே கரையைக் கடந்தது.
- இந்த சூறாவளியானது பாகிஸ்தானால் பெயரிடப்பட்டது.
- இது 2019 ஆம் ஆண்டில் வழக்கத்திற்கு மாறாக உருவான வட இந்தியப் பெருங்கடல் சூறாவளி பருவத்தின் ஏழாவது புயலாகும்.
- கடந்த 34 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய சூறாவளி இதுவாகும்.
- ஏப்ரல் - மே மாதங்களில் ஏற்பட்ட மிகவும் கடுமையான ஃபானி சூறாவளிக்குப் பின்னர் இந்த ஆண்டில் வங்காள விரிகுடாவில் உருவாகிய இரண்டாவது புயலாக இது இருக்கும்.
- பொதுவாக சூறாவளி அதிகம் ஏற்படாத அரேபியக் கடல் பகுதியானது இந்த ஆண்டில்

மிகக் கடுமையான சூறாவளியான வாயு, மிகக் கடுமையான சூறாவளியான ஹிகா, சூப்பர் சூறாவளி கியார் மற்றும் மிகவும் கடுமையான சூறாவளியான மகா ஆகிய நான்கு பெரிய சூறாவளிகளைக் கொண்டுள்ளது.

- இது கடந்த 117 ஆண்டுகளில் அரேபியக் கடலில் அதிக எண்ணிக்கையிலான கடுமையான சூறாவளிகள் ஏற்பட்ட சாதனையை சமன் செய்துள்ளது.

| Stage of warning | Colour code |
|---|---|
| Cyclone Alert | Yellow. |
| Cyclone Warning | Orange. |
| Post landfall out look | Red. |

## இளம் விஞ்ஞானிகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் SCO மன்றம் 2020

- இந்தியா 2020 ஆம் ஆண்டில், இளம் விஞ்ஞானிகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (Shanghai Cooperation Organisation - SCO) மன்றத்தை நடத்த இருக்கின்றது.
- உறுப்பு நாடுகளின் அமைச்சகங்கள், அறிவியல் & தொழில்நுட்பத் துறைகளின் தலைவர்கள் மற்றும் அறிவியல் & தொழில்நுட்பத் துறை ஒத்துழைப்புத் தொடர்பான நிரந்தர செயற்குழு ஆகியவை இணைந்து நடத்திய SCO உறுப்பு நாடுகளின் ஐந்தாவது கூட்டம் சமீபத்தில் ரஷ்யாவின் மாஸ்கோவில் நிறைவடைந்தது.

## ரயில்வே நிதி மேலாண்மை நிறுவனம், ஹைதராபாத்

- ரயில்வே நிதி நிர்வாகத்தில் தொழில்முறைப் பயிற்சி அளிக்கும் புதிய நிறுவனமானது ஹைதராபாத்தில் திறக்கப்பட்டது.
- இந்திய ரயில்வே நிதி மேலாண்மை நிறுவனமானது (Indian Railways Institute of Financial Management - IRIFM) நிதிநிலைகளை வலுப்படுத்த ரயில்வேயின் நிதி மற்றும் கணக்கு அதிகாரிகளுக்குத் தொழில்முறைப் பயிற்சி அளிக்க இருக்கின்றது.

## இந்தியாவின் நிலத்தடி நீர் மட்டம் 22% குறைவு

- நாட்டில் கிட்டத்தட்ட 22% நிலத்தடி நீர் வறண்டுவிட்டதாக அல்லது 'மோசமான' & 'அதிக அளவில் சுரண்டப்பட்ட' வகைகளில் இருப்பதாக மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- மத்திய நிலத்தடி நீர் வாரியம் (Central Ground Water Board - CGWB) ஆனது 'இந்தியாவின் மாறுபட்ட நிலத்தடி நீர் வளங்கள்' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 6,881 பகுதிகளில் 1,499 (தொகுதிகள் / மண்டலங்கள் / தாலுகாக்கள்) 'அதிக சுரண்டல்' (1,186 பகுதிகள்) மற்றும் 'மிக மோசமானது' (313 பகுதிகள்) என்ற பிரிவுகளின் கீழ் வந்தன என்பதை இது காட்டுகிறது.

- அதிக எண்ணிக்கையிலான நீர் பற்றாக்குறைத் தொகுதிகள் தமிழ்நாட்டில் உள்ளன.
- அதைத் தொடர்ந்து ராஜஸ்தான், உத்தரபிரதேசம், தெலுங்கானா, பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## உடான் திட்டம் 4.0

- மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகமானது விரைவில் "உடான் 4.0" திட்டத்தைத் தொடங்கவுள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் சத்தீஸ்கரில் உள்ள பிலாஸ்பூர் மற்றும் அம்பிகாபூர் நகரங்கள் இணைக்கப்படும்.
- பிலாஸ்பூர் ஆனது தனித்துவமான தரம் வாய்ந்த தூப்ராஜ் அரிசி மற்றும் கோசா பட்டுத் தொழிலுக்குப் பிரபலமானது.
- உதே தேஷ் கா ஆம் நாக்ரிக் (உடான்) ஆனது மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் பிராந்திய இணைப்புத் திட்டமாக 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## மின்சாரத்தின் தனிநபர் நுகர்வு

- பாராளுமன்றத்தின் குளிர்கால அமர்வின் போது, இந்தியாவின் தனிநபர் மின்சாரம் பற்றியத் தரவுகளை மத்திய மின் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் தனிநபர் மின்சார நுகர்வானது 2018-19 ஆம் ஆண்டின் நிலவரப்படி 1,181 கிலோவாட் ஆகும்.
- 2018-19 ஆம் ஆண்டில் மிக உயர்ந்த தனிநபர் மின்சார நுகர்வு தாத்ரா மற்றும் நாகர் ஹவேலியில் (15,179 கிலோவாட்) பதிவாகியுள்ளது.
- குறைந்த தனிநபர் மின்சார நுகர்வு கொண்ட மாநிலம் பீகார் (311 கிலோவாட்) ஆகும்.

**PERCAPITA CONSUMPTION IN KWH (2018-2019)**

| TOP 5 | | BOTTOM 5 | |
|---|---|---|---|
| Dadra and Nagar Haveli | 15179 | Bihar | 311 |
| Gujarat | 2378 | Assam | 341 |
| Goa | 2274 | Nagaland | 356 |
| Haryana | 2082 | Manipur | 371 |
| Punjab | 2046 | Tripura | 514 |

**VILLAGES ELECTRIFIED DURING 2017-2019**

| | |
|---|---|
| Arunachal | 1,134 |
| Odisha | 925 |
| Jharkhand | 729 |
| Bihar | 596 |
| Assam | 572 |

## இந்திய அரசின் விதி 12 (பணி நடைமுறைப் படுத்துதல்) விதிகள், 1961

- அமைச்சரவை ஒப்புதல் இல்லாமல் குடியரசுத் தலைவரின் ஆட்சியை ரத்து செய்ய மத்திய அரசானது பணி நடைமுறைப் படுத்துதல் விதிகளின் ஒரு 'சிறப்புப் பிரிவை' பயன்படுத்தியுள்ளது.
- 1961 ஆம் ஆண்டு இந்திய அரசின் (பணி நடைமுறைப் படுத்துதல்) விதிகள் 12 ஆனது பிரதமரை தனது விருப்பப்படி நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளிலிருந்து தனித்துச் செயல்பட அனுமதிக்கின்றது.
- அவர் தேவை என்று கருதினால் அமைச்சரவை ஒப்புதல் இல்லாமல் கூட முடிவுகளை எடுக்க முடியும்.
- விதி 12 இன் கீழ் எடுக்கப்பட்ட எந்தவொரு முடிவிற்கும் அமைச்சரவை பின்னர் தனது ஒப்புதலை வழங்க முடியும்.

## ஆளுநர்களின் 50வது மாநாடு

- ஆளுநர்களின் 50வது மாநாடு சமீபத்தில் புது தில்லியின் ராஷ்டிரபதி பவனில் நிறைவடைந்தது.
- இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், 2019 ஆம் ஆண்டு நவம்பர் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் ஆளுநர்கள் மற்றும் துணைநிலை ஆளுநர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.

## தேசியப் பழங்குடியின கைவினைக் கண்காட்சி – 2019

- ஒடிசா மாநில முதல்வரான நவீன் பட்நாயக் 2019 ஆம் ஆண்டின் தேசியப் பழங்குடியின கைவினைக் கண்காட்சியினை புவனேஸ்வரில் திறந்து வைத்தார்.
- இந்த கைவினைக் கண்காட்சியானது பாரம்பரியப் பழங்குடியினக் கலைகள் மற்றும் கைவினைகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப் படுத்துதல் என்ற நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இதில் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்கள்: இரும்பு, மூங்கில் பொருட்கள், பொம்மலாட்டங்கள், சியாலி கைவினைப் பொருட்கள், பழங்குடி ஜவுளிகள் மற்றும் பூத்தையல் வேலைப்பாடு கொண்ட பொருள்கள் போன்றவையாகும்.

## PMGSY திட்டத்தின் கீழ் மிக அதிகத் தொலைவு கொண்ட சாலை வசதி – ஜம்மு காஷ்மீர்

- இந்த ஆண்டில் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது பிரதான் மந்திரி கிராமீன் சதக் யோஜனா (Pradhan Mantri Grameen Sadak Yojana - PMGSY) என்ற திட்டத்தின் கீழ் நாட்டில் மிக அதிகத் தொலைவு கொண்ட சாலை வசதிகளை ஏற்படுத்தி சாதனை படைத்து இருக்கின்றது.
- இப்பகுதியானது இதுவரையில் 1,838 வாழ்விடங்களை உள்ளடக்கிய 11,400 கிலோ மீட்டர் சாலை வசதியைக் கொண்டிருக்கின்றது.

- PMGSY என்பது நாட்டில் சாலை வசதியால் இணைக்கப்படாத கிராமங்களுக்கு சிறந்த, அனைத்து வானிலைகளையும் தாங்கக் கூடிய சாலை இணைப்பை வழங்குவதற்காக மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இது 2000 ஆம் ஆண்டில் அப்போதையப் பிரதமரான ஏபி வாஜ்பாயின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது.

## ஆவாஸ் தளம்

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத் துறை அமைச்சரான ஹர்தீப் சிங் பூரி கடனுதவியுடன் இணைக்கப்பட்ட மானியச் சேவைகளை வழங்கும் ஆவாஸ் என்ற இணைய தளத்தைத் (Credit-linked Subsidy Services Awas Portal - CLAP) தொடங்கி வைத்தார்.
- இந்தத் தளமானது கடனுதவியுடன் இணைக்கப்பட்ட மானியச் சேவையைப் (credit-linked Subsidy Service - CLSS) பெறும் பயனாளிகளுக்கு ஒரு வெளிப்படையான மற்றும் வலுவான நிகழ்நேர (ஆன்லைன்) வலை அடிப்படையிலான கண்காணிப்பை வழங்குகின்றது.
- CLSS என்பது பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனாவின் கீழ் உள்ள ஒரு அங்கமாகும். வங்கிகளிடமிருந்து வீட்டுக் கடன் வாங்குபவர்களுக்கு வட்டி மானியத்தை மத்திய அரசு வழங்குகிறது.

## சுமன் பில்லா இந்திய ஆட்சிப் பணி @ UNWTO

- கேரள மாநிலப் பிரிவைச் சேர்ந்த மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான சுமன் பில்லா என்பவர் ஸ்பெயினின் மாட்ரிட்டில் உள்ள ஐக்கிய நாடுகளின் உலகச் சுற்றுலா அமைப்பின் (United Nations World Tourism Organisation - UNWTO) தலைமையகத்தில் பணியாற்ற இருக்கின்றார்.
- இவர் அடுத்த வாரம் UNWTO அமைப்பில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் பட்டு சாலை மேம்பாட்டுப் பிரிவின் இயக்குநராக பொறுப்பேற்க இருக்கின்றார்.
- இது பொறுப்பான, நிலையான மற்றும் உலகளவில் அணுகக் கூடிய சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு பொறுப்பு வகிக்கும் ஒரு சிறப்பு நிறுவனமாகும்.

## இந்திய விலக்கு (தவிர்ப்பு) அறிக்கை 2018-19

- இந்திய விலக்கு (தவிர்ப்பு) அறிக்கையின் படி, வேலைவாய்ப்பு என்று வரும் போது பட்டியல் இனத்தவர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆகியோர் மிகவும் விலக்கப்பட்ட உறுப்பினர்களாக உள்ளனர்.
- தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத் தரவுகளின் பகுப்பாய்வானது சம்பளம் பெறும் வேலைவாய்ப்பு வர்க்கத்தினரிடையே முஸ்லிம்கள் மிகக் குறைவான எண்ணிக்கையைக் கொண்டவர்களாக உள்ளனர் என்பதையும் நாட்டின் சரிந்து வரும் ஒரு மிகப் பெரிய தொழிலாளர் சக்தியாக பெண்கள் உள்ளனர் என்பதையும் காட்டுகின்றது.
- இந்த வருடாந்திர அறிக்கையானது நடுநிலை ஆய்வு மையத்தினால் (Centre For Equity Studies - CES) வெளியிடப் பட்டுள்ளது.

- இது மக்கள் தொகையில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் பொது வேலைவாய்ப்பிலிருந்து விலக்கி வைக்கப் பட்டதையும் அவர்களின் ஓரங்கட்டப்பட்ட நிலையையும் எடுத்துக் காட்டுகின்றது.
- CES என்பது சமூக நீதி தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராய்ச்சி மற்றும் விவாதங்களில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும்.

## MoSPIன் முக்கியமான 5 அறிக்கைகள்

- மத்தியப் புள்ளிவிவர மற்றும் திட்ட செயல்படுத்துதல் துறை அமைச்சகமானது (Ministry of Statistics and Programme Implementation - MoSPI) முக்கியமான சமூக - பொருளாதாரப் போக்குகள் குறித்து ஐந்து தொகுப்புகள் அடங்கிய ஆய்வு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.
- இந்த 5 அறிக்கைகள் பின்வருமாறு:
    - இந்தியாவில் குடும்பத்தின் சமூக நுகர்வு: சுகாதாரம் (2017 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2018 ஆம் ஆண்டு ஜூன் வரை),
    - இந்தியாவில் குடும்பத்தின் சமூக நுகர்வு: கல்வி (2017 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2018 ஆம் ஆண்டு ஜூன் வரை),
    - மாற்றுத் திறனாளிகள் (2018 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் வரை),
    - இந்தியாவில் குடிநீர், சுகாதாரம், உடல் நலம் மற்றும் வீடுகளின் நிலைமைகள் (2018, ஜூலை - 2018, டிசம்பர்),
    - தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வு (2019, ஜனவரி - மார்ச்).
- முதல் இரண்டு அறிக்கைகள் தேசியப் புள்ளிவிவர அலுவலகத்தினால் (National Statistical Office - NSO) நடத்தப்பட்ட 76வது சுற்று தேசிய மாதிரி ஆய்வின் (National Sample Survey - NSS) ஒரு பகுதியாகும்.
- மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகள் 75வது சுற்று தேசிய மாதிரி ஆய்வின் ஒரு பகுதியாகும்.
- NSO ஆனது இதற்கு முன்னர் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSSO - National Sample Survey Office) என்று அழைக்கப்பட்டது.
- மேலே கூறிய அனைத்து அறிக்கைகளும் NSO அமைப்பின் பொது இயக்குநரான விஜய் குமார் என்பவரால் கையெழுத்திடப் பட்டுள்ளன.

### *வெளியிடப்படாத அறிக்கை*

- "தரவுத் தர சிக்கல்களைக்" கருத்தில் கொண்டு அகில இந்திய குடும்பத்தின் நுகர்வோர் செலவின ஆய்வின் (2017-18) முடிவுகளை வெளியிட 'வேண்டாம்' என்று MoSPI முடிவு செய்துள்ளது.

## தேசிய வடிவமைப்பு நிறுவனம் (திருத்த) மசோதா, 2019

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் தேதியன்று மத்திய வர்த்தக மற்றும் தொழிற் துறை அமைச்சரான பியூஷ் கோயல் தேசிய வடிவமைப்பு நிறுவன (திருத்த) மசோதா, 2019ஐ மாநிலங்களவையில் அறிமுகப் படுத்தினார்.

- இது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 அன்று மாநிலங்களவையாலும் 2019 ஆம் நவம்பர் 26 அன்று மக்களவையாலும் நிறைவேற்றப் பட்டது.
- இந்த மசோதாவானது அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக அறிவிக்கும் 2014 ஆம் ஆண்டின் தேசிய வடிவமைப்பு நிறுவனச் சட்டத்தைத் திருத்த முயல்கின்றது.
- இந்த மசோதாவானது ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், அசாம் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் உள்ள 4 தேசிய வடிவமைப்பு நிறுவனங்களை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக அறிவிக்க முற்படுகின்றது.
- தற்போது, இந்த நிறுவனங்கள் சங்கங்கள் பதிவுச் சட்டம், 1860 என்ற சட்டத்தின் கீழ் சங்கங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இவை பட்டங்கள் அல்லது பட்டயச் சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்குவதற்கான அதிகாரத்தையும் கொண்டிருக்க வில்லை.
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக அவை அறிவிக்கப்பட்டால், அந்த நான்கு நிறுவனங்களுக்கும் பட்டங்கள் மற்றும் பட்டயச் சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்படும்.

## திருநங்கைகள் உரிமைகள் பாதுகாப்பு மசோதா, 2019

- 2019 ஆம் ஆண்டின் திருநங்கைகள் உரிமைகள் பாதுகாப்பு மசோதாவானது 2019 ஆம் ஆண்டு ஜூலை 19 அன்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சரான தாவர்சந்த் கெலாட் என்பவரால் மக்களவையில் அறிமுகப்படுத்தப் பட்டது.
- இது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 அன்று மக்களவையாலும் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று மாநிலங்களவையாலும் நிறைவேற்றப் பட்டது.

### *இந்த மசோதாவின் முக்கிய அம்சங்கள்*

- இந்த மசோதாவானது ஒரு நபரின் பிறப்பின் போது குறிப்பிடப்பட்ட பாலினமானது தற்பொழுது உள்ள அவரது பாலினத்துடன் பொருந்தவில்லை எனில் அந்த நபரை ஒரு திருநங்கையாக வரையறுக்கின்றது.
- இது திருநம்பி, திருநங்கை, இடைப்பட்ட பாலின மாறுபாடு உள்ளவர்கள், பாலின - வினோதகர்கள் மற்றும் சமூக - கலாச்சார அடையாளங்களைக் கொண்ட நபர்கள் (எ.கா: ஹிஜ்ரா) ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.
- இவர்கள் தங்களுடைய வீடுகளில் வசிப்பதற்கான உரிமையையும் சேர்த்துக் கொள்ளப் படுவதற்கான உரிமையையும் பெற்றுள்ளனர்.
- பணியாளர் நியமனம் மற்றும் பதவி உயர்வு உள்ளிட்ட வேலைவாய்ப்பு விவகாரங்களில் ஒரு திருநங்கைக்கு எதிராக எந்தவொரு அரசாங்கமோ தனியார் நிறுவனமோ பாகுபாடு காட்ட முடியாது.
- திருநங்கை ஒருவர் தனது பாலினத்தை 'திருநங்கை' என்று குறிப்பிடுவதற்கான அடையாளச் சான்றிதழுக்காக மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பம் செய்யலாம்.

### *தேசிய திருநங்கைகள் ஆணையம்*

- மத்திய சமூக நீதித் துறை அமைச்சரின் தலைமையின் கீழ் தேசிய திருநங்கைகள் ஆணையம் அமைக்கப்பட இருக்கின்றது.

- இதன் துணைத் தலைவர் – மத்திய சமூக நீதித் துறைக்கான இணையமைச்சர்.
- உறுப்பினர்கள்:
  - செயலாளர், மத்திய சமூக நீதித் துறை அமைச்சகம்.
  - மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம், மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவற்றைச் சேர்ந்த தலா ஒரு பிரதிநிதி.
  - நிதி ஆயோக் மற்றும் மனித உரிமைகள் ஆணையம் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள்.
  - திருநங்கை சமூகத்தைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களைச் சேர்ந்த 5 வல்லுநர்கள்.

## மிலன் 2020

- மிலன் பயிற்சிக்கான மத்திய திட்டமிடல் மாநாடானது விசாகப்பட்டினத்தில் (HQENC) நிறைவு பெற்றது.
- மிலன் - 2020 என்ற பயிற்சியானது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விசாகப் பட்டினத்தில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- இந்த மிகப்பெரிய பயிற்சியில் 41 நாடுகளைச் சேர்ந்த கடற்படைகள் பங்கேற்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இது 1995 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படும் ஒரு பன்னாட்டு கடற்படைப் பயிற்சித் தொடராகும்.
- இது நட்புறவுடன் உள்ள வெளிநாட்டுக் கடற்படைகளுக்கு இடையிலான தொழில்முறை தொடர்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கடந்த ஆண்டு வரை அந்தமான் நிக்கோபார் கட்டுப்பாட்டகத்தில் நடத்தப்பட்டது.
- இந்தப் பயிற்சியானது தற்பொழுது முதன்முறையாக கிழக்கு கடற்படைக் கட்டுப்பாட்டகத்தில் நடத்தப்பட இருக்கின்றது.

## மித்ரா சக்தி VII: இந்தியா – இலங்கை

- இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப்படும் கூட்டுப் பயிற்சியின் ஏழாவது பதிப்பான 2019 ஆம் ஆண்டின் “மித்ரா சக்தி” என்ற பயிற்சியானது 2019 ஆம் ஆண்டில் டிசம்பர் 01 முதல் 14 வரை புனேவில் உள்ள வெளிநாட்டு பயிற்சி முனையத்தில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- மித்ரா சக்தி என்ற பயிற்சியானது இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் இராணுவ உறவுகள் மற்றும் இருநாட்டுப் படைகளுக்கு இடையேயான தொடர்புகள் ஆகியவற்றின் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றது.

## லோக்பால் - புதிய குறிக்கோள் மற்றும் இலச்சினை

- 'மா கிரிதா கஸ்யஸ்விதானம்' என்பது லோக்பால் அமைப்பின் புதிய குறிக்கோளாகும். இது ஆங்கிலத்தில் "யாருடைய செல்வத்திற்கும் பேராசை கொள்ளாமல் இருத்தல்" என்று பொருள்படும்.
- இது 'இஷபசோஉபனிஷத்' என்ற சுலோகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.
- லோக்பால் அமைப்பிற்காக ஒரு புதிய இலச்சினையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



- இந்த இலச்சினையானது இந்திய சட்டத்தின் படி நீதியை நிலைநாட்டுவதன் மூலம் லோக்பால் அமைப்பானது இந்திய மக்களை எவ்வாறு பாதுகாக்கின்றது மற்றும் கவனித்துக் கொள்கின்றது என்பதைக் குறிக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் லோக்பால் அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டப் பின்னர் இந்த அமைப்பு செயல்படத் தொடங்கியது.
- லோக்பால் அமைப்பின் தற்போதையத் தலைவர் ஓய்வு பெற்ற இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி பினாகி சந்திர கோஸ் ஆவார்.

## மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கர்தவ்யா தளம்

- மாணவர்களுக்காக மாதாந்திரக் கட்டுரைப் போட்டிகளை நடத்துவதற்காக kartavya.ugc.ac.in என்ற இணைய தளத்தை மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- இந்த இணைய தளமானது உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள மாணவர்களுக்காக மாதாந்திர கட்டுரைப் போட்டிகள், வினாடி வினாக்கள், சுவரொட்டி தயாரித்தல், விவாதங்கள் போன்றவற்றை நடத்த முதன்மையாகப் பயன்படுத்தப்பட இருக்கின்றது.
- தேசியக் கட்டுரைப் போட்டிகளின் 11 சுற்றுகள் ஒரு ஆண்டில் நடத்தப்பட இருக்கின்றது.
- இந்தக் கட்டுரைப் போட்டியின் தலைப்புகள் ஒவ்வொரு மாதமும் ஒரு அடிப்படைக் கடமையின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

## முத்ரா கடன் – வாராக் கடன் அதிகரிப்பு


- பிரதம மந்திரி முத்ரா யோஜனா (Pradhan Mantri MUDRA Yojana - PMMY) என்ற திட்டத்தில் வாராக் கடன்கள் உயர்ந்து வருவதாக இந்திய ரிசர்வ் வங்கி கவலை தெரிவித்துள்ளது.
- இந்தத் திட்டமானது 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இது சிறு வணிகங்களுக்கு ரூ. 50,000 முதல் ரூ. 10 லட்சம் வரை அளவிலான கடனுதவியை வழங்குகின்றது.

## FSSAI அமைப்பின் உணவுப் பாதுகாப்பு அறிக்கை

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (Food Safety and Standards Authority of India - FSSAI) விதிமுறைகளின் அமலாக்கம் குறித்த 2018-19 ஆம் ஆண்டிற்கான தரவை வெளியிட்டுள்ளது.
- பாதுகாப்பற்ற, தரமற்ற மற்றும் பெயரிடல் குறைபாடுகள் ஆகியவற்றிற்காகத் தனித்தனியாகத் தொகுக்கப்பட்ட தரவுகளை வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.
- இதில் உத்தரகாண்ட், கோவா, பீகார், சிக்கிம், குஜராத் மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட பத்து மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் சிறப்பாகச் செயல்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளன.
- இதில் நாகாலாந்து, உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, ஜார்க்கண்ட், ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் ஆகியவை மிகவும் மோசமாகச் செயல்பட்ட பத்து மாநிலங்களின் வரிசையில் உள்ளன.

### *தமிழ்நாடு*

- தமிழ்நாட்டில் உள்ள உணவு மிகவும் பாதுகாப்பற்றது என்று FSSAI அறிக்கை கூறுகின்றது.
- தமிழ்நாட்டில் 45% உணவு மாதிரிகள் தேவையான தரங்களைப் பூர்த்தி செய்யவில்லை.
- தமிழ்நாட்டில் 12.7% உணவு மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டுள்ளன மற்றும் நுகர்வுக்குப் பாதுகாப்பற்றவை என இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.




## IFC-IOR இன் முதலாவது சர்வதேச தொடர்பு அதிகாரி

- ஹரியானாவின் குருகிராமில் உள்ள "தகவல் இணைவு மையம்-இந்தியப் பெருங்கடல் பிராந்தியம்" (Information Fusion Centre-Indian Ocean Region - IFC-IOR) மையத்தில் முதல் சர்வதேச தொடர்பு அதிகாரியாக ஒரு பிரெஞ்சுக் கடற்படை அதிகாரி நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல் பாதைகள் குறித்தத் தரவுகளை இந்த மையம் சேகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

- உலகின் கடல் வர்த்தகத்தில் 75% மற்றும் உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் 50% ஆகியன இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் வழியாக நடைபெறுகின்றது.
- IFC-IOR ஆனது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப் பட்டது.

## நுஜென் மொபிலிட்டி உச்சி மாநாடு - 2019

- மானேசரில் உள்ள சர்வதேச தானியங்கித் தொழில்நுட்ப மையமானது "2019 ஆம் ஆண்டுக்கான நுஜென் மொபிலிட்டி உச்சி மாநாட்டை" நடத்தியது.
- மூன்று நாள் நடைபெற்ற இந்த மாநாடானது இதுவரை இந்தியாவில் நடந்த ஒரு மிகப்பெரிய வாகனத் தொழில்நுட்ப நிகழ்வு ஆகும்.
- இந்தியா உட்பட 15 நாடுகளைச் சேர்ந்த வாகனத் தொழில்நுட்ப வல்லுநர்கள் 120க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஆய்வுக் கட்டுரைகளை இந்த மாநாட்டில் வழங்கினர்.

## உணவுத் தானியங்கள் & சர்க்கரைப் பொருட்கள் - சணலில் பொதி கட்டுதல்

- பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவானது உணவு தானியங்கள் மற்றும் சர்க்கரைப் பொருட்களை சணல் பொருட்களில் பொதி கட்டுதல் (பேக்கேஜிங்) செய்வதைக் கட்டாயமாக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- இது சணல் தொழிற்துறையைப் பல்வகைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இருக்கின்றது.
- இந்த ஒப்புதலானது நாட்டின் கிழக்கு மற்றும் வடகிழக்குப் பிராந்தியங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும்.

## ஆசியா 2020க்கான QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை

- ஆசியா 2020க்கான சமீபத்திய QS உலகப் பல்கலைக்கழக தரவரிசையில், ஆசியக் கண்டத்தில் உள்ள 550 இடங்களில் 96 இந்திய நிறுவனங்கள் இடம் பிடித்துள்ளன.
- சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக ஆசியாவின் சிறந்த பல்கலைக் கழகத்திற்கான முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து சிங்கப்பூரின் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் ஹாங்காங் பல்கலைக்கழகம் ஆகியன இதில் உள்ளன.
- இந்தியாவில் இருந்து சிறப்பாக செயல்படும் நிறுவனமாக பம்பாய் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (34வது இடம்) இடம் பிடித்தது.
- அதைத் தொடர்ந்து டெல்லி இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் 43வது இடத்திலும், மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் 50வது இடத்திலும் உள்ளன.
- இதுபோன்ற முதலாவது QS தரவரிசையானது 2009 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

## INDIA TOP 20 (ASIA RANKS)

| | 2020 | 2019 | INSTITUTION/UNIVERSITY |
|---|---|---|---|
| ▼ | 34 | 33 | IIT Bombay |
| ▼ | 43 | 40 | IIT Delhi |
| ▼ | 50 | 48 | IIT Madras |
| ▼ | 51 | 50 | IISc Bengaluru |
| ▼ | 56 | 53 | IIT Kharagpur |
| ▼ | 65 | 61 | IIT Kanpur |
| ▼ | 67 | 62 | University Of Delhi |
| ▼ | 90 | 86 | IIT Roorkee |
| ▼ | 112 | 107 | IIT Guwahati |

## சேவைகள் குறித்த 5வது உலகளாவியக் கண்காட்சி

- உலகளாவியப் பார்வையாளர்களுக்கு முன்பாக பல்வேறு சேவைத் துறைகளில் இந்தியாவின் திறன்களை வெளிப்படுத்துவதற்காக சேவைகள் குறித்த 5வது உலகளாவியக் கண்காட்சி (Global Exhibition on Services - GES) பெங்களூரில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத் துறையானது 60 சதவீதம் பங்களிக்கின்றது.
- இந்தியாவில் அந்நிய நேரடி முதலீட்டில் 55 சதவீதத்திற்கும் அதிகமானவை சேவைத் துறையைச் சேர்ந்தவையாக உள்ளது.
- முதல் GES கண்காட்சியானது புது தில்லியில் 2015 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

## 2019 ஆம் ஆண்டு ஜாலியன்வாலா பாக் தேசிய நினைவுச் சின்னம் (திருத்தம்) மசோதா

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 08 ஆம் தேதியன்று இந்த மசோதாவை, "1951 ஆம் ஆண்டு ஜாலியன்வாலா பாக் தேசிய நினைவுச் சின்னத்திற்கானச் சட்டத்தில்" திருத்தம் செய்வதற்காக, கலாச்சாரத் துறை இணை அமைச்சர் பிரஹ்லாத் சிங் படேல் மக்களவையில் அறிமுகப் படுத்தினார்.
- இது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02 ஆம் தேதியன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டு, 2019 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதியன்று மாநிலங்களவையில் நிறைவேற்றப் பட்டது.
- அமிர்தசரஸ் ஜாலியன்வாலா பாக் நகரில் 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதியன்று கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களின் நினைவாக ஒரு தேசிய நினைவுச் சின்னத்தை அமைப்பதற்கு இந்தச் சட்டம் வழிவகுக்கின்றது.
- கூடுதலாக, இது ஒரு தேசிய நினைவுச் சின்னத்தை நிர்வகிக்க ஒரு அறக்கட்டளையை உருவாக்குகின்றது.

- பின்வரும் நபர்கள் அந்த அமைப்பின் அறங்காவலர்களாக இருந்தனர் - இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர், பிரதமர், மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர், மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சர், பஞ்சாபின் ஆளுநர் மற்றும் முதல்வர், மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட 3 புகழ்பெற்ற நபர்கள்.
- தற்போதைய மசோதாவானது இந்திய தேசியக் காங்கிரஸின் தலைவரை அதன் அறங்காவலர் பொறுப்பில் இருந்து "நீக்குமாறு" இந்த சட்டத்தைத் திருத்துகின்றது.
- மேலும், மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் இல்லாதபோது, மக்களவையில் ஒரு மிகப்பெரிய எதிர்க்கட்சியின் தலைவர் அதன் அறங்காவலராக இருப்பார் என்றும் இது தெளிவு படுத்துகின்றது.
- அறங்காவலர்களாகப் பரிந்துரைக்கப்பட்ட மூன்று புகழ்பெற்ற நபர்கள் இப்போது 5 ஆண்டு காலம் முடிவடைவதற்கு முன்னர் எந்தவொரு காரணமும் கூறப்படாமல் நீக்கப் படலாம்.

## ஸ்பைக் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள்

- மத்திய பிரதேசத்தின் மோவ் என்ற இடத்தில் இரண்டு ஸ்பைக் நீண்ட தூர பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை இந்திய ராணுவம் வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- ஸ்பைக் என்பது நான்காவது தலைமுறை ஏவுகணை ஆகும். இதன் மூலம் எந்த ஒரு இலக்கையும் 4 கிலோ மீட்டர் வரை துல்லியமாக அதனால் தாக்க முடியும்.
- ஸ்பைக் நீண்ட தூர பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளானவை இராணுவத்தின் தாக்கும் திறனை மேலும் அதிகரிக்கின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா Vs அமெரிக்கா @ உலக வர்த்தக அமைப்பு

- உள்நாட்டு "ஏற்றுமதி ஊக்கத்தொகைகளுக்கு" எதிராக உலக வர்த்தக அமைப்பில் அமெரிக்கா தொடுத்த ஒரு வழக்கில் இந்தியா தோல்வியடைந்துள்ளது.
- இந்தத் திட்டங்கள் சர்வதேச வர்த்தக விதிமுறைகளுக்கு முரணானவை என்று உலக வர்த்தக அமைப்பின் பிரச்சினைத் தீர்வுக் குழு முடிவு செய்துள்ளது.
- இந்தத் தீர்ப்பின் மூலம், உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளுக்கு இணங்க இந்த ஊக்கத்தொகைத் திட்டங்களை இந்தியா மீண்டும் திருத்தியமைக்க வேண்டும்.
- இந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து இந்தியா மேல்முறையீடு செய்ய இருக்கின்றது.

## சவுதி அரம்கோ - மிகப்பெரிய ஆரம்பப் பொது வழங்கல்

- சவுதி அரேபியாவின் ஒரு மிகப்பெரிய அரசுக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனமானது இறுதியாக அதன் ஆரம்பப் பொது வழங்கலைத் (Initial Public Offering - IPO) தொடங்கியுள்ளது.

- இந்நிறுவனத்தின் மதிப்பு சுமார் 1.5 டிரில்லியன் டாலர்கள் ஆகும். இது அதன் மதிப்பை 20 பில்லியன் டாலர்கள் முதல் 40 பில்லியன் டாலர்கள் வரை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எரிசக்தி அல்லாத தொழில் துறைகளை உருவாக்குவதற்கும் வருவாய் முறைகளை பல்வகைப் படுத்துவதற்கும் வேண்டிய பில்லியன்களை திரட்டுவதன் மூலம் சவூதியில் ஒரு வலுவான பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள IPO வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது போன்ற முறையில் திரட்டப்பட்ட மிக அதிக அளவு நிதியானது சீனாவின் மின்னணு - வணிக நிறுவனமான அலிபாபா (2014 ஆம் ஆண்டில் நியூயார்க்கில் 25 பில்லியன் அமெரிக்க டாலர்) நிறுவனத்திடம் உள்ளது.

## சர்வதேச அணுசக்தி அமைப்பின் புதிய பொது இயக்குநர்

- சர்வதேச அணுசக்தி அமைப்பின் (International Atomic Energy Agency - IAEA) வாரியமானது ரஃபேல் கிராஸியை அதன் பொது இயக்குநராக நியமித்துள்ளது.
- அவர் தற்போது ஆஸ்திரியாவிற்கான அர்ஜென்டினாவின் தூதராகவும் IAEA உட்பட வியன்னாவில் உள்ள சர்வதேச அமைப்புகளுக்கான அந்நாட்டின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் உள்ளார்.
- 1957ஆம் ஆண்டில் IAEA நிறுவப் பட்டதிலிருந்து அதன் ஆறாவது தலைவராக புதிய பொது இயக்குநர் இருப்பார்.

## ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மன்றக் கூட்டம்

- உஸ்பெகிஸ்தானில் உள்ள தாஷ்கண்டில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு (Shanghai Cooperation Organisation - SCO) நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மன்றத்தின் 18வது கூட்டத்தில் இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உரையாற்றினார்.
- இந்த மாநாட்டில் பிரதமர் மோடியின் சிறப்புத் தூதராக அவர் பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- இந்தக் கூட்டத்தின் போது, 2020 ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் மன்றத்தின் அடுத்த கூட்டம் இந்தியாவில் நடத்தப் பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டின் போது ரஷ்யாவால் நடத்தப்பட்ட SCO கூட்டு இராணுவப் பயிற்சியான “CENTER 2019” என்ற இராணுவப் பயிற்சியானது கௌரவப்படுத்தப் பட்டது.
- SCO ஆனது எட்டு முழு உறுப்பினர் நாடுகளையும் ஆறு "கலந்துரையாடல் நாடுகளையும்" மற்றும் நான்கு "பார்வையாளர் நாடுகளையும்" கொண்டுள்ளது.




## UNFCCCன் 25வது மாநாடு

- இந்த ஆண்டின் காலநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு ஒப்பந்தம் (United Nations Framework Convention on Climate Change - UNFCCC) அல்லது ஐ.நா. காலநிலை மாநாட்டை நடத்துவதற்கு சிலிக்குப் பதிலாக ஸ்பெயின் நாடு மாட்ரிட் நகரைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்த ஆண்டானது ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றத்தின் 25வது மாநாடாகும்.
- கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் காலநிலை மாநாடானது போலந்தின் கோட்டோவைஸில் நடத்தப் பட்டது.
- அமைதியின்மையை எதிர்கொண்டுள்ள சிலி அரசாங்கமானது நவம்பர் மாதத்தில் ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பின் (Asia-Pacific Economic Cooperation - APEC) பொருளாதார உச்சி மாநாட்டை நடத்துவதையும் கை விட்டுள்ளது.

***மாநாட்டின் முக்கிய நிகழ்வுகள் பின்வருமாறு:***

- UNFCCC உறுப்பு நாடுகளின் 25வது மாநாடு.
- கியோட்டோ நெறிமுறைக்கான உறுப்பு நாடுகளின் 15வது கூட்டம் (Kyoto Protocol - CMP15).
- பாரிஸ் ஒப்பந்தத்திற்கான உறுப்பு நாடுகளின் இரண்டாவது கூட்டம் Paris Agreement (CMA2).

## 16வது இந்தியா ஆசியான் உச்சி மாநாடு

- தாய்லாந்தின் பாங்காக்கில் நடத்தப்பட்ட 16வது ஆசியான் - இந்தியா உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொண்டார்.
- "இந்தியாவின் கிழக்கு நோக்கியக் கொள்கை மற்றும் அண்டை நாடுகள் முதலில்" ஆகிய கொள்கைகளுக்காக மியான்மரின் முக்கியத்துவத்தை இந்தியப் பிரதமர் எடுத்துரைத்தார்.

- CLMV நாடுகளுக்கான (கம்போடியா, லாவோஸ், மியான்மர் மற்றும் வியட்நாம்) வணிக நிகழ்ச்சியை 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் யாங்கோனில் நடத்த இந்தியா திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவும் இந்தோனேசியாவும் தமது இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்ட 70வது ஆண்டு நிறைவை அனுசரித்தன.
- இந்தியப் பிரதமர் பாங்காக்கில் நடைபெற்ற 'சவாஸ்தீ பிரதமர் மோடி' என்ற நிகழ்ச்சியில் இந்தியச் சமூகத்தினரிடையே உரையாற்றினார்.
- தாய் மொழியில், ‘சவாஸ்தீ’ என்ற சொல்லானது வாழ்த்துகளுக்கும் விடை பெறுவதற்கும் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்த உச்சிமாநாட்டைத் தொடர்ந்து தாய்லாந்தில் நடைபெற்ற மற்ற உச்சி மாநாடுகள் பின்வருமாறு:
    - 35வது ஆசியான் உச்சி மாநாடு,
    - 14வது கிழக்கு ஆசிய உச்சி மாநாடு மற்றும்
    - விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் (RCEP - Regional Comprehensive Economic Partnership) 3வது கூட்டம்.




## 35வது ஆசியான் உச்சி மாநாடு

- தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் (Association of Southeast Asian Nations - ASEAN) 35வது உச்சி மாநாடு தாய்லாந்தின் பாங்காக்கில் தொடங்கியது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஒரு கூட்டமாகும்.
- 35வது ஆசியான் உச்சி மாநாட்டின் கருத்துரு, "நிலைத் தன்மைக்காக கூட்டாண்மையை மேம்படுத்துதல்" என்பதாகும்.
- ஆசியான் என்பது ஆசியப் பிராந்தியத்தில் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் 10 நாடுகளைக் கொண்ட ஒரு குழுவாகும்.
- இந்த அமைப்பில் உள்ள 10 உறுப்பு நாடுகளைத் தவிர, எட்டு உரையாடல் கூட்டாளர் நாடுகளும் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்கின்றன.
- ஆசியான் அமைப்பின் தலைமைப் பதவி அதன் பத்து உறுப்பினர் நாடுகளிடையே வருடாந்திரமாக மாறி வருகின்றது.
    - 2018 ஆம் ஆண்டின் தலைமை – சிங்கப்பூர்
    - 2019 ஆம் ஆண்டின் தலைமை – தாய்லாந்து

## ஒருங்கிணைந்த பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு - RCEP

- இந்தியப் பிரதமர் பாங்காக்கில் நடந்த ஒருங்கிணைந்த பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு (Regional Comprehensive Economic Partnership-RCEP) அமைப்பின் மூன்றாவது உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார்.
- இந்தியாவிற்குள் அதிக அளவில் சீனப் பொருட்களின் இறக்குமதி ஏற்படக் கூடும் என்ற அச்சத்தின் பேரில், இந்தக் கூட்டமைப்புடன் இணைய வேண்டாம் என்று இந்திய அரசு முடிவு செய்துள்ளது.
- RCEP இன் கீழ், சீனா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திலிருந்து 74% பொருட்கள் மற்றும் ஜப்பான், தென் கொரியா மற்றும் ஆசியான் ஆகிய நாடுகளில் இருந்து 90% பொருட்கள் ஆகியவற்றுக்கான வரிகளை நீக்க இந்தியா நிர்பந்திக்கப்படும்.
- இந்தியா ஏற்கனவே சீனாவுடன் 57 பில்லியன் டாலர் அளவிற்கு வர்த்தகப் பற்றாக்குறையை கொண்டுள்ளது. இது கொள்கை வகுப்பாளர்களுக்கு மிகவும் பிரச்சனையாக உள்ளது.



***RCEP***

- RCEP என்பது தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பில் உள்ள (ஆசியான்) 10 உறுப்பு நாடுகள் மற்றும் ஆசியான் குழுவில் உள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை (FTA) கொண்ட ஆறு நாடுகள் என்று மொத்தம் 16 நாடுகளிடையேயான ஒரு வர்த்தக ஒப்பந்தமாகும்.
- இதில் ஆஸ்திரேலியா, சீனா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளும் அடங்கும்.
- இது உலகின் ஒரு மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தமாக இருக்கும்.

## பரஸ்பர தளவாடங்கள் ஆதரவு மீதான ஒப்பந்தம்

- இராணுவம் மற்றும் இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இந்தியா - ரஷ்யா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையேயான ஆணையத்தின் 19வது சந்திப்பானது ரஷ்யாவில் நடைபெற்றது.
- இந்தக் கூட்டமானது இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங்கால் தலைமை தாங்கப்பட்டது.
- இந்தியாவும் ரஷ்யாவும் முக்கியப் பாதுகாப்பு தளவாடங்களின் விற்பனைக்குப் பின்பான ஆதரவிற்காக குறிப்பிட்ட பணிக் குழுக்களை அமைக்க ஒப்புக் கொண்டுள்ளன. 2021-2030 ஆம் ஆண்டிற்கான ஒத்துழைப்புத் திட்டத்தை இறுதி செய்வதற்கான முயற்சிகளை இந்த இரு நாடுகளும் தீவிரப் படுத்தியுள்ளன.
- இந்தத் தளவாட ஒப்பந்தமானது இந்தியக் கடற்படைக்குப் பயனளிக்கும். இந்தியப் போர்க் கப்பல்கள் எரிபொருளை நிரப்புவதற்கும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் இரு நாடுகளின் துறைமுகங்கள் மற்றும் பிரத்தியேகப் பொருளாதார மண்டலங்கள் ஆகியவற்றை அணுக முடியும்.
- மறுமுனையில், மும்பை, விசாகபட்டினம் போன்ற துறைமுகங்களை ரஷ்யா பயன்படுத்தலாம். மேலும் துறைமுகங்கள் தவிர, இந்தியாவில் உள்ள விமான தளங்களையும் ரஷ்யா அணுக முடியும்.

## நாடாளுமன்ற சபாநாயகர்களின் 6வது உச்சி மாநாடு

- ஜி20 நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற சபாநாயகர்களின் 6வது உச்சி மாநாடானது ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்றது.
- இந்த உச்சிமாநாடானது ஜி20 நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்றங்களின் சபாநாயகர்களால் கலந்து கொள்ளப் பட்டது.
- நாடாளுமன்ற உச்சி மாநாடானது அதிகாரப்பூர்வமற்ற முறையில் பி20 என்று அழைக்கப் படுகிறது.
- இந்த மாநாடானது பாராளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியம் மற்றும் ஜப்பானின் தேசிய நாடாளுமன்ற (டயட்) உறுப்பினர்கள் மன்றம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
- இந்த உச்சி மாநாடானது வர்த்தகம், தொழில்நுட்பம் மற்றும் நீடித்த வளர்ச்சி தொடர்பான தனித்தனிக் கருப்பொருள்கள் பற்றிய அமர்வுகளைக் கொண்டிருந்தது.

## பிம்ஸ்டெக் மாநாடு

- BIMSTEC (பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு – Bay of Bengal initiative multi-sector technical and economic cooperation) மாநாடானது விசாகபட்டினத்தில் நடைபெற இருக்கின்றது.
- 1997 ஆம் ஆண்டில் பிம்ஸ்டெக் உருவானதிலிருந்து விசாக் போர்ட் அமைப்பானது முதன்முறையாக இந்த மாநாட்டை நடத்துகின்றது.
- இந்த மாநாட்டில் வங்க தேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, நேபாளம், பூட்டான் உள்ளிட்ட ஏழு உறுப்பு நாடுகள் பங்கேற்கின்றன.

## இணையச் சுதந்திரம் 2019 – அறிக்கை

- "சமூக ஊடகத்தின் நெருக்கடி நிலை" என்ற தலைப்பைக் கொண்ட 2019 ஆம் ஆண்டின் இணையச் சுதந்திரம் குறித்த அறிக்கையானது சர்வதேச இணையக் கண்காணிப்புக் குழுவான தி பிரீடம் ஹவுஸ்" என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது.
- தொடர்ந்து நான்காவது ஆண்டாக இணையச் சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தும் உலகின் மிக மோசமான நாடாக சீனா தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக இணைய சுதந்திர நிலையைப் பொறுத்தவரை பாகிஸ்தான் 'சுதந்திரமற்ற நாடாக' அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையில் இந்தியாவிற்கு ஒட்டுமொத்தமாக 55 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் நாட்டில் இணையச் சுதந்திர நிலை 'பகுதியளவு சுதந்திரமுடையதாக உள்ளது' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இணையச் சுதந்திரத்தின் உலகின் சிறந்த பாதுகாவலராக ஐஸ்லாந்து நாடு விளங்குகின்றது.
- 2019 ஆம் ஆண்டில் அதன் இணையச் சுதந்திர மதிப்பெண்ணில் மிகப்பெரிய முன்னேற்றத்தை பதிவு செய்த நாடு எத்தியோப்பியா ஆகும்.
- இது உலகெங்கிலும் உள்ள 65 நாடுகளில் நடத்தப்பட்ட இணையச் சுதந்திரம் குறித்த ஒரு விரிவான ஆய்வு ஆகும்.
- 2019 ஆம் ஆண்டின் அறிக்கையானது அதன் தொடரில் 9வது அறிக்கையாகும்.

## டானகில் பள்ளம்

- எத்தியோப்பியாவின் டானகில் பள்ளத்தில் டல்லோல் புவிவெப்ப நீரூற்றுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் பள்ளத்தில் தண்ணீர் உள்ளது. ஆனால் இங்கு எந்தவொரு உயிரினமும் வாழவில்லை.
- டல்லோல் நிலப் பரப்பானது பல உயர் அமிலத் தன்மை கொண்ட மிகை உப்பு ஏரிகளால் நிரம்பியுள்ளது. இந்த ஏரிகள் பச்சை, மஞ்சள் மற்றும் பிற வண்ணங்களின் நிழல்கள் ஆகியவற்றின் துடிப்பான வண்ணங்களைத் தருகின்றன.
- இந்த நரக, உப்பு நீர் ஏரியானது பூமியில் மக்கள் வசிக்கும் மிக அதிகமான வெப்பமான இடமாக பொதுவாகக் கருதப்படுகின்றது.

***இதுபற்றி***

- டானகில் பள்ளமானது எத்தியோப்பியாவில் உள்ள ஆஃபர் முக்கோணப் பகுதி அல்லது ஆஃபர் பள்ளத்தின் வடக்குப் பகுதியாகும்.
- டானகில் பள்ளமானது மூன்று புவியடுக்குத் தகடுகளின் சந்திப்புப் பகுதியில் (முச்சந்திப்பு) அமைந்துள்ளது. இது ஒரு சிக்கலான புவியியல் அமைப்பைக் கொண்டுள்ளது.
- ஆப்பிரிக்காவும் ஆசியாவும் விலகிச் சென்றதன் விளைவாக இது வளர்ச்சியடைந்துள்ளது. இதனால் பிளவு மற்றும் எரிமலைச் செயல்பாடு அங்கு ஏற்படுகின்றது.
- ஆண்டு முழுவதும் நிலவும் சராசரி வெப்பநிலையைப் பொறுத்தவரை பூமியின் வெப்பமான இடம் டானகில் பள்ளம் ஆகும்.
- இது பூமியில் உள்ள மிகத் தாழ்வான இடங்களில் ஒன்றாகும். மேலும் ஆண்டின் பெரும்பாலான மாதங்களில் இங்கு மழை இல்லாமல் காணப் படுகின்றது.
- இப்பகுதி பெரும்பாலும் "மனித குலத்தின் தொட்டில்" என்றும் குறிப்பிடப்படுகின்றது.



## சர்வதேச மாணவர்கள் மதிப்பீட்டுத் திட்டம் - பிசா 2021

- பிசா தேர்வின் (Programme for International Student Assessment – PISA) தரத்திற்கு ஏற்ப, அத்தேர்வில் பங்கேற்கக் கூடிய பள்ளிகளின் ஆசிரியர்களையும் மாணவர்களையும் இந்தியா தயார்படுத்தி வருகின்றது.
- PISA என்பது கணிதம், அறிவியல் மற்றும் வாசிப்பு ஆகியவற்றில் 15 வயது நிரம்பிய மாணவர்களின் அறிவு மற்றும் திறன்கள் ஆகியவற்றை மதிப்பிடுவதாகும்.
- இது பொது, தனியார் மற்றும் தனியாரால் நிதியுதவி அளிக்கப்படும் பள்ளிகள் உட்பட அனைத்து வகையான பள்ளிகளையும் உள்ளடக்கியுள்ளது.
- OECD (பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு - Organisation for Economic Co-operation and Development) அமைப்பானது 2000 ஆம் ஆண்டில் PISA என்ற தேர்வை

அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இத்தேர்வு நடத்தப்படுகின்றது.

- இந்தியா 2009 ஆம் ஆண்டில் ஒரு முறை மட்டுமே PISA என்ற தேர்வில் பங்கேற்றுள்ளது.
- ஒரு மோசமான செயல்பாட்டிற்குப் பிறகு, 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட இத்தேர்வில் இந்தியா பங்கேற்காமல் விலகி இருந்தது.
- 2021 ஆம் ஆண்டில் PISA தேர்வில் இந்தியாவின் பங்கேற்பிற்காக மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது OECD அமைப்புடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

## ஈரானில் புதிய எண்ணெய் வயல்

- ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரூஹானி குசெஸ்தான் என்ற ஒரு பிராந்தியத்தில் 53 பில்லியன் பீப்பாய்கள் அளவிற்கு கச்சா எண்ணெய் கொண்ட ஒரு பரந்த எண்ணெய் வயல் புதிதாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
- இது ஈரானின் இரண்டாவது பெரிய எண்ணெய் வயலாகும். முதலாவது பெரிய எண்ணெய் வயலானது அஹ்வாஸ் என்ற பிராந்தியத்தில் 65 பில்லியன் பீப்பாய் அளவினைக் கொண்டுள்ளது.
- இந்த ஆராய்ச்சி முடிந்தவுடன், ஈரான் உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் வளம் நிறைந்த நாடாக மாறக்கூடும்.

## CARAT - 2019: அமெரிக்க - வங்க தேசம் ஆகிய நாடுகளுக்கிடையேயான கடற்படைப் பயிற்சி

- “மிதக்கும் கப்பலின் தயார் நிலை மற்றும் பயிற்சிக்கான ஒத்துழைப்பு (CARAT) – 2019” என அழைக்கப்படும் ஒரு மிகப்பெரிய அமெரிக்க - வங்க தேசம் ஆகிய நாடுகளுக்கிடையேயான கடற்படைப் பயிற்சியானது வங்க தேசத்தின் சட்டோகிராமில் (அல்லது சிட்டகாங் நகரம்) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
- CARAT என்பது வங்க தேசம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடற் படைகளுக்கு இடையே ஆண்டுதோறும் வங்காள விரிகுடாவில் நடத்தப்படும் ஒரு மிகப்பெரிய பயிற்சியாகும்.
- இந்தப் பயிற்சியின் முதலாவது பதிப்பானது 2011 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

## IORA அமைச்சர்கள் கூட்டம்

- அபுதாபியில் நடைபெற்ற இந்தியக் கடலோர நாடுகள் கூட்டமைப்பின் (Indian Ocean Rim Association - IORA) 19வது கூட்டத்தில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரான வி.முரளிதரன் கலந்து கொண்டார்.
- இந்தக் கூட்டத்தின் கருத்துரு, "இந்தியப் பெருங்கடலில் செழிப்புக்கான பாதையையும் பகிரப்பட்ட நோக்கத்தினையும் ஊக்குவித்தல்" என்பதாகும்.

- இந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது, ஐக்கிய அரபு அமீரகமானது தென்னாப்பிரிக்காவிடமிருந்து IORAன் தலைவர் பொறுப்பினை ஏற்க இருக்கின்றது. இது இரண்டு ஆண்டு காலத்திற்கு, அதாவது 2021 ஆம் ஆண்டு வரை அந்த அமைப்பின் தலைவராகப் பணியாற்ற இருக்கின்றது.

***IORA பற்றி***

- IORA என்பது இந்தியப் பெருங்கடலின் எல்லையை ஒட்டி அமைந்துள்ள 22 கடலோர நாடுகளை உள்ளடக்கிய ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது முதன்முதலில் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மொரீஷியஸில் இந்தியக் கடலோர நாடுகளின் முன்னெடுப்பாக நிறுவப்பட்டது. பின்னர் இது 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முறையாகத் தொடங்கப்பட்டது.
- தலைமையகம்: மொரீஷியஸ்.

## இஸ்ரேல் தேர்தல் 2019

- இருபத்தி இரண்டாவது நெசெட்டின் (இஸ்ரேல் பாராளுமன்றம்) 120 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக செப்டம்பர் மாதம் இஸ்ரேலில் சட்டமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.
- தேர்தலுக்குப் பிறகு தற்போதைய பிரதமர் இஸ்ரேலில் அரசாங்கத்தை அமைக்க பொறுப்பேற்றார்.
- இருப்பினும், அவர் நெசெட்டில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.
- ஏப்ரல் மாதத்தில் நடந்த முந்தைய தேர்தல்களைத் தொடர்ந்து, தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒரு ஆளும் கூட்டணியை உருவாக்கத் தவறி விட்டார், இது இஸ்ரேலிய வரலாற்றில் இதுபோன்ற முதல் தோல்வியாகக் கருதப்படுகிறது .
- அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னரே முதல் முறையாக நெசெட் அமைப்பு இந்தத் தேர்தலில் கலைக்கப்பட்டது.

## ADIPEC 2019

- அபுதாபி சர்வதேச பெட்ரோலிய கண்காட்சி மற்றும் மாநாட்டில் (Abu Dhabi International Petroleum Exhibition & Conference - ADIPEC) பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் கலந்து கொண்டார்.
- அபுதாபி பெட்ரோலிய அடிபெக் மாநாடானது ஆனது சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு துறையின் சந்திப்பு இடமாகும்.
- எண்ணெய் மற்றும் எரிவாயு 4.0 என்பது இந்த ஆண்டின் அடிபெக் மாநாட்டின் (ADIPEC) கருப்பொருள் ஆகும்.

## சர்வதேச லாவி கண்காட்சி @ இமாச்சல்

- ❖ இமாச்சலப் பிரதேசத்தின் ராம்பூர் புஷாஹறில் நான்கு நாட்கள் நடைபெற்ற சர்வதேச லாவி கண்காட்சி நிறைவடைந்துள்ளது.
- ❖ மூன்று நூற்றாண்டுகள் பழமையானது உள்பட, திபெத், சீனா மற்றும் பிற நாடுகளுடனான வர்த்தகத்திற்காகவும் இந்த கண்காட்சி மிகப்பெரிய அளவில் அறியப் படுகின்றது.
- ❖ இந்தக் கண்காட்சியானது வர்த்தகத்தை எளிதாக்குவதற்காக ராம்பூர் புஷாஹறின் ராஜா கெஹறி சிங் என்பவரால் தொடங்கப்பட்டதாக நம்பப் படுகின்றது.
- ❖ இந்தக் கண்காட்சியின் முக்கிய நோக்கம் திபெத் பிராந்தியத்தில் தோன்றிய, ஆபத்து நிலையில் உள்ள ஒரு குதிரை இனமான "சாமூர்த்தி குதிரைகளை" விற்பனை செய்வதும் வாங்குவதும் ஆகும்.
- ❖ சாமூர்த்தி குதிரைகள் 'குளிர் பாலைவனத்தின் கப்பல்' என்றும் அழைக்கப் படுகின்றன.

## அப்சரா நடனம் - கம்போடியா

- ❖ கம்போடியாவின் இளவரசியும் அந்நாட்டின் முன்னாள் கலாச்சாரத் துறை அமைச்சருமான நோரோரோடோம் போபா தேவி (76) என்பவர் காலமானார்.
- ❖ 1970களில் அப்சரா நடனத்தை மீண்டும் உயிர்ப்பித்ததற்காக இவர் அங்கீகரிக்கப் படுகின்றார்.
- ❖ உலகப் பாரம்பரிய வகையில் பட்டியலிடப்பட்ட அப்சரா நடனமானது கம்போடியாவில் 1,000 ஆண்டுகளுக்கும் மேலாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. நடனக் கலைஞர்களின் தோற்றங்கள் அங்கோரியன் கோயில் சுவர்களில் காணப்படுகின்றன.

## 2019 ஆம் ஆண்டின் ஓட்டுநர் நகரங்களின் குறியீடு

- ❖ 2019 ஆம் ஆண்டின் ஓட்டுநர் நகரங்களின் குறியீட்டின் படி, மும்பை மற்றும் கொல்கத்தா ஆகிய இரண்டு இந்திய நகரங்கள் வாகனங்கள் ஓட்டுவதற்கு உலகின் மிக மோசமான நகரங்களாக உள்ளன.
- ❖ 100 நாடுகளைத் தரவரிசைப் படுத்தியுள்ள இந்தக் குறியீடானது ஐரோப்பிய கார் பாகங்களின் சில்லறை விற்பனையாளரான மிஸ்டர் ஆட்டோ என்ற அமைப்பால் வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ கனடாவில் உள்ள கல்கரி என்ற நகரமானது உலகெங்கிலும் வாகனம் ஓட்டுவதற்கான சிறந்த நகரமாக அறிவிக்கப் பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து துபாய் மற்றும் கனடாவைச் சேர்ந்த மற்றொரு நகரமான ஒட்டாவா ஆகியவை சிறந்த நகரங்களாக தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.
- ❖ அதிக நெரிசல் மற்றும் மோசமான வாகனங்களின் வேகம் ஆகியவற்றின் அடிப்படையில் மும்பை இந்தப் பட்டியலில் கடைசி இடத்தில் (100வது இடத்தில்) உள்ளது. அதே நேரத்தில் இந்தப் பட்டியலில் கொல்கத்தா நகரமானது மும்பையை விட இரண்டு இடங்கள் முன்னிலை பெற்று 98வது இடத்தில் உள்ளது.

## டாக்கா உலகளாவிய உரையாடல்

- டாக்கா உலகளாவிய உரையாடலின் முதலாவது பதிப்பானது வங்க தேசத்தில் நடத்தப் பட்டது. இது அந்நாட்டின் பிரதமரான ஷேக் ஹசீனா என்பவரால் துவங்கி வைக்கப் பட்டது.
- இந்தோ - பசிபிக் பிராந்தியத்திற்கான குறிப்பிடத்தக்கப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக 50 நாடுகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.
- இந்த மாநாடானது புது தில்லியில் உள்ள ”அப்சர்வர் ரிசர்ச் பவுண்டேஷன்” என்ற அமைப்பு (ORF - Observer Research Foundation) மற்றும் சர்வதேச & உத்திசார் ஆய்வுகளுக்கான வங்க தேச நிறுவனம் (BIISS - Bangladesh Institute of International and Strategic Studies) ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
- சுற்றுச்சூழல் ரீதியான நிலையான அமைதி மற்றும் செழிப்பை அடைவதற்காக இந்த பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு இது ஒரு தளமாகச் செயல்பட இருக்கின்றது.
- கடல்சார் களத்தில் அமைதி மற்றும் நிலைத் தன்மை ஆகியவை ஆசியாவின் வளர்ச்சிக்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஒப்புக் கொண்டனர்.

## பசீரா நகரம் - வடமேற்கு பாகிஸ்தான்

- வடமேற்கு பாகிஸ்தானில் நடத்தப்பட்ட ஒரு கூட்டு அகழ்வாராய்ச்சியில், பாகிஸ்தான் மற்றும் இத்தாலியைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 3000 ஆண்டுகள் பழமையான பசீரா என்ற நகரத்தை கண்டுபிடித்தனர். இது அலெக்சாண்டர் விட்டுச் சென்ற நகரம் என்று நம்பப் படுகின்றது.
- பசீரா நகரமானது கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் ஸ்வாட் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது 5,000 ஆண்டுகள் பழமையான நாகரிகத்திற்கும் அதன் கலைப் பொருட்களுக்கும் புகழ்பெற்று விளங்குகின்றது.
- இந்த அகழ்வாராய்ச்சியின் போது, அந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த இந்துக் கோவில்கள், நாணயங்கள், ஸ்தூபங்கள், பானைகள் மற்றும் ஆயுதங்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன.

## டைபாய்டு தடுப்பூசியை அறிமுகப்படுத்திய முதல் நாடு - பாகிஸ்தான்

- உலக சுகாதார அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட டைபாய்டு இணைத் தடுப்பூசியை வழக்கமான நோய்த்தடுப்பு திட்டத்தில் அறிமுகப்படுத்திய உலகின் முதல் நாடாக பாகிஸ்தான் உருவெடுத்துள்ளது.
- இதுவே 6 மாத வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய முதல் டைபாய்டு தடுப்பூசி வகை ஆகும். மேலும் இது டைபாய்டுக்கு எதிராக நீண்ட காலப் பாதுகாப்பை வழங்குகிறது.
- பாகிஸ்தான் இதற்கானப் பிரச்சாரத்தை சிந்து மாகாணத்தில் தொடங்கியது.

## விவசாயப் புள்ளிவிவரங்கள் மீதான 8வது சர்வதேச மாநாடு – தில்லி

- இது ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO - Food and Agriculture Organization), உலக வங்கி (WB - World Bank), அமெரிக்காவின் வேளாண் துறை (United States Department of Agriculture) மற்றும் பிற சர்வதேச மேம்பாட்டு நிறுவனங்களால் நிதியுதவி செய்யப்படும் ஒரு தொடர் மாநாடுகளாகும்.
- இது விவசாயப் புள்ளிவிவர (தகவல் / தரவு) வளர்ச்சியின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், “நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்காக வேளாண் முறையை மாற்றுவதற்கான புள்ளிவிவரங்கள்” என்பதாகும்.
- மத்திய வேளாண் மற்றும் விவசாயி நல அமைச்சகத்தின் கீழ் வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையானது இந்த மாநாட்டை நடத்தும் அமைப்பாகும்.

## கய்லா முல்லர் நடவடிக்கை

- கய்லா முல்லர் நடவடிக்கை என்ற அதிகாரப்பூர்வ குறியீட்டுப் பெயர் கொண்ட பாரிஷா என்ற அதிரடிச் சோதனையானது அமெரிக்காவின் ஒரு இராணுவ நடவடிக்கையாகும்.
- இது இஸ்லாமிய அரசான ஈராக் மற்றும் சிரிய பயங்கரவாத அமைப்பின் அப்போதையத் தலைவரும் "கலீபா" என்று சுயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டவருமான அபுபக்கர் அல் பாக்தாதியைக் கைது செய்வதற்காக அல்லது அவரைக் கொல்லுவதற்காக சிரியாவின் பாரிஷாவில் நடத்தப்பட்டது.

## பெருங்கடல் நடன விழா – வங்க தேசம்

- 2019 ஆம் ஆண்டிற்கான பெருங்கடல் நடன விழாவானது வங்க தேசத்தின் காக்ஸ் பஜாரில் தொடங்கியது.
- வங்க தேசத்தின் மிகப்பெரிய சர்வதேச நடன விழாவான இது கலாச்சார சுற்றுலாவை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டுத் திருவிழாவின் கருப்பொருளானது ‘இடைவெளிகளை இணைத்தல்’ அல்லது துரோட்டர் ஷெட்டுபந்தன் என்பதாகும்.

## சுமத்ரான் காண்டாமிருகம்

- மலேசியாவின் 25 வயதான, கடைசி பெண் காண்டாமிருகம் தபின் வனவிலங்குப் பாதுகாப்பகப் பகுதியில் உள்ள போர்னியோ காண்டாமிருக சரணாலயத்தில் காலமானது.
- சுமத்ரான் காண்டாமிருகம் உலக வனவிலங்கு நிதியத்தால் மிகவும் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- உலகில் 80க்கும் குறைவான காண்டாமிருகங்கள் உயிருடன் இருப்பதாக சர்வதேச காண்டாமிருக அறக்கட்டளை மதிப்பிடுகிறது.
- அவை மிகச்சிறிய உயிருள்ள மற்றும் இரண்டு கொம்புகளைக் கொண்ட ஒரே ஆசிய காண்டாமிருகங்கள் ஆகும்.

## உலகளாவிய உயிரி இந்தியா (பயோ இந்தியா) உச்சி மாநாடு, 2019

- இந்தியாவின் முதல் மிகப்பெரிய உயிரி தொழில்நுட்ப மாநாடான – “உலகளாவிய உயிரி இந்தியா உச்சி மாநாடு, 2019” ஆனது சமீபத்தில் புது தில்லியில் நிறைவடைந்தது.
- இந்நிகழ்ச்சியை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழில்நுட்பவியல் துறை (Department of Biotechnology - DBT) , உயிரி தொழில்நுட்பவியல் தொழில் ஆராய்ச்சி உதவி மன்றத்துடன் (Biotechnology Industry Research Assistance Council - BIRAC) இணைந்து ஏற்பாடு செய்தன.
- BIRAC என்பது, DBT ஆல் அமைக்கப்பட்ட லாப நோக்கற்ற, அட்டவணை Bயில் உள்ள ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.
- இந்த நிகழ்வின் கருப்பொருள் ‘வாழ்க்கையை மாற்றும் சக்தி’ என்பதாகும்.




## உணவு பாதிப்புக் குறியீடு

- நோமுரா குளோபல் மார்க்கெட் ஆய்வு நிறுவனத்தின் புதிய அறிக்கையின்படி, நோமுராவின் உணவு பாதிப்புக் குறியீட்டில் (என்.எஃப்.வி.ஐ) 110 நாடுகளில் இந்தியா 44வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீடானது உணவு விலையில் "பெரிய மாற்றங்களை" வெளிப்படுத்தியதன் அடிப்படையில் நாடுகளை வரிசைப்படுத்துகின்றது.
- உணவு விலைகள் அதிகரித்ததன் காரணமாக, அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் சில்லறைப் பணவீக்கம் 4.6% ஐத் தொட்டது.

## இந்தியாவில் வெளிநாட்டுச் சுற்றுலா வருகைகள், 2018

- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகமானது 2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் வெளிநாட்டுச் சுற்றுலா வருகை குறித்தத் தரவுகளை வெளியிட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு அதிக எண்ணிக்கையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்த முதல் மூன்று நாடுகளில் பங்களாதேஷ், அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு முதலிடத்தில் இருந்தன.
- தனிப்பட்ட மாநிலங்களில், 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் பார்வையிட்ட மாநிலம் தமிழகம் ஆகும் - அந்த ஆண்டில் 60 லட்சத்திற்கும் அதிகமானோர் தமிழகத்தைப் பார்வையிட்டனர்.
- மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசம் முறையே 50 லட்சங்கள் மற்றும் 37 லட்சங்கள் என சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பெற்றன.

## உலகளாவிய விரிவான வளமைக் குறியீடு

- பொருளாதார மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், உலகில் உள்ள 113 நகரங்களில் இந்தியாவில் உள்ள பெங்களூரு நகரமானது நாட்டின் மிகவும் முன்னணியில் உள்ள ஒரு தரவரிசைப் படுத்தப்பட்ட நகரமாக (அந்நகரின் தரவரிசை 83) உருவெடுத்துள்ளது.
- வளமை மற்றும் உள்ளடக்கல் நகர முத்திரை மற்றும் விருதுகள் (Prosperity & Inclusion City Seal and Awards - PICSA) குறியீடானது முதன்முறையாக பாஸ்க் நிறுவனங்கள் மற்றும் டி & எல் பங்காளர்கள் ஆகியவற்றால் ஏற்படுத்தப்பட்டது.
- நகரங்களில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் விரிவான மற்றும் வளமான சூழல்களை உருவாக்குவதற்கான தங்களது முயற்சிகளுக்காக உலகில் உள்ள முக்கியமான நகரங்கள் முதன்முறையாக இதில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இந்தப் பட்டியலில் ஜூரிச் (சுவிட்சர்லாந்து) முதலிடத்திலும் வியன்னா (ஆஸ்திரியா) இரண்டாவது இடத்திலும் கோபன்ஹேகன் (டென்மார்க்) மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- இந்தப் பட்டியலில் தில்லி 101வது இடத்திலும் மும்பை 107 இடத்திலும் உள்ள மற்ற இந்திய நகரங்களாகும்.

## 10வது காமன்வெல்த் இளைஞர் பாராளுமன்றம் @ தில்லி சட்டமன்றம்

- தில்லி சட்டமன்றத்தில் 10வது காமன்வெல்த் இளைஞர் நாடாளுமன்றத்தின் தொடக்க கூட்டத் தொடரில் மக்களவை சபாநாயகரான ஓம் பிர்லா இந்தியா மற்றும் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களிடையே உரையாற்றினார்.
- காமன்வெல்த் இளைஞர் பாராளுமன்றம் என்பது காமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தினால் (Commonwealth Parliamentary Association - CPA) நடத்தப்படும் ஒரு வருடாந்திரக் கூட்டமாகும்.
- காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் (வயது 18-29) இந்தக் கூட்டத்தில் பங்கேற்று, விவாதித்தனர்.
- காமன்வெல்த் இளைஞர் பாராளுமன்றத்தை இந்தியச் சட்டமன்றம் நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

## வங்க தேசத்தில் மிதக்கும் பள்ளித் திட்டம்

- வங்க தேசத்தில் 'தி ஆர்கேடியா கல்வித் திட்டம்' என்ற பெயரைக் கொண்ட மிதக்கும் பள்ளித் திட்டமானது ஆகா கான் கட்டிடக்கலை விருதினை வென்றுள்ளது.
- மழைக் காலத்தில் மூழ்காத பள்ளிகளுக்கு நிதியளிப்பதற்கும் கிராமப்புற மாணவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வங்க தேச அகதியான ரசியா ஆலம் ஒரு முடிவு செய்தார்.
- சர்வதேசப் புகழ்பெற்ற கட்டிடக் கலைஞரான சைஃப் உல் ஹக் உள்ளூர் பொருட்களைப் பயன்படுத்தி இந்த திட்டத்தை உருவாக்கினார்
- இப்பள்ளியானது வறண்ட காலங்களில் நிலத்தில் இருக்கும். மழைக்காலத்தின் போது இப்பகுதி நீரில் மூழ்கி இருந்தால் இந்தப் பள்ளி தண்ணீரில் மிதக்கும்.



## உலகின் மிகப்பெரிய இராஜதந்திரப் பணியமைப்பு - சீனா

- வரலாற்றில் முதல்முறையாக, உலகின் மிகப்பெரிய இராஜதந்திர பணி அமைப்பை சீனா நிறுவியுள்ளது. இது அமெரிக்காவை விட பெரியதாகும்.
- சிட்னியை தலைமையாகக் கொண்ட லோவி நிறுவனத்தின் படி, உலகளவில் சீனாவில் 276 இராஜதந்திரப் பதவிகள் உள்ளன. இது அமெரிக்காவை விட மூன்று அதிகமாகும்.
- இந்த உலகத் தரவரிசைப் பட்டியலில் இந்தியா 12வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவானது 123 தூதரகங்கள் / உயர் ஆணையங்கள், 54 துணைத் தூதரகங்கள், 5 நிரந்தரத் திட்டங்கள் மற்றும் 4 பிற பிரதிநிதித்துவங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## WATEC மாநாடு 2019 – இஸ்ரேல்

- ஜல் சக்தித் துறைக்கான மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத், 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 8வது WATEC (நீர்த் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் கட்டுப்பாடு) மாநாட்டில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

- இந்த மாநாடானது இஸ்ரேலின் டெல் அவிவில் உள்ள டேவிட் இன்டர்கான்டினென்டலில் நடத்தப்பட்டது.
- இது நீர் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் தொடர்பான முக்கியப் போக்குகள் மற்றும் தற்போதைய நிலை பற்றிய தகவல்களைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், "நீர் மேலாண்மை மற்றும் புத்தாக்கம் - பொறுப்பான திட்டமிடல் மேலாண்மை மற்றும் நீர் பாதுகாப்பு ஆகியவை குறித்த உலகளாவிய தலைமையை இயக்குதல்" என்பதாகும்.

## ஒரு சிறந்த வலையமைப்பை உருவாக்குதல் (www) - டிம் பெர்னர்ஸ் லீ

- உலகளாவிய வலையமைப்பின் கண்டுபிடிப்பாளரான டிம் பெர்னர்ஸ் லீ என்பவர் உலகெங்கிலும் உள்ள 80 நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்து இணையத்திற்கான ஒரு புதிய ஒப்பந்தத்தை அறிவித்துள்ளார்.
- அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு "சிறந்த" வலையமைப்பை உருவாக்குவதற்கு ஒரு உலகளாவிய செயல் திட்டத்தை உருவாக்குவதே இந்தக் கருத்தின் நோக்கமாகும்.
- இந்த ஒப்பந்தமானது அரசாங்கங்கள், குடிமக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தலா மூன்று கொள்கைகள் என்று, மொத்தம் 9 கொள்கைகளைக் கொண்டுள்ளது.

## உலக இடம்பெயர்வு அறிக்கை 2020

- ஐ.நா. சபையின் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஆனது 2020 ஆம் ஆண்டுக்கான உலக இடம்பெயர்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது சர்வதேச அளவில் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 270 மில்லியனாக இருப்பதாக மதிப்பிடுகின்றது.
- சுமார் 51 மில்லியன் இடம்பெயர்ந்தோர்களைக் கொண்டு அமெரிக்காவானது இடம்பெயருபவர்கள் தேர்ந்தெடுக்கும் நாடுகளில் முதலிடம் வகிக்கின்றது.
- இந்தியாவிலிருந்து 17.5 மில்லியன் மக்கள் சர்வதேச அளவில் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்வோர் அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா முதலிடம் வகிக்கின்றது.
- வெளிநாடுகளில் வசிக்கும் மக்களிடம் இருந்து பணம் செலுத்துகை அதிகம் பெற்ற நாடுகளின் வரிசையில் அதிகபட்சமாக 78.6 பில்லியன் டாலர் பணம் பெற்று இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதனையடுத்து சீனா (67.4 பில்லியன் டாலர்) மற்றும் மெக்ஸிகோ (35.7 பில்லியன் டாலர்)ஆகிய நாடுகள் உள்ளன.
- பணம் அனுப்பும் நாடுகளில் அமெரிக்கா (68.0 பில்லியன் டாலர்), ஐக்கிய அரபு அமீரகம் (44.4 பில்லியன் டாலர்) மற்றும் சவுதி அரேபியா (36.1 பில்லியன் டாலர்) ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன.
- அகதிகளை உருவாக்கும் நாடுகளில் சிரியா (6 மில்லியன்) முதலிடத்திலும் அதனையடுத்து ஆப்கானிஸ்தானும் உள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## கடுமையான வேலைவாய்ப்பு வீழ்ச்சி

- ❖ அஸிம் பிரேம்ஜி பல்கலைக் கழகத்தின் நிலையான வேலைவாய்ப்பு மையத்தால் ஒரு புதிய கல்வி ஆய்வுக் கட்டுரை வெளியிடப் பட்டது.
- ❖ அந்த ஆராய்ச்சியின் படி, "2011-12 மற்றும் 2017-18 ஆகிய ஆண்டுகளில் மொத்த வேலைவாய்ப்பு 9 மில்லியன் என்ற அளவிற்குக் குறைந்துள்ளது.
- ❖ சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இது போன்ற சரிவு பதிவு செய்யப் படுவது இதுவே முதல் முறையாகும்.

## சவூதி அரேபியாவில் ரூபே அட்டை

- ❖ வளைகுடா நாடுகளின் இராஜ்ஜியத்தில் ரூபே அட்டையை அறிமுகப் படுத்த இந்தியா சவூதி அரேபியாவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ மேற்கு ஆசியாவில் இந்தியாவின் டிஜிட்டல் பண வழங்கீட்டு முறையைத் தொடங்கிய மூன்றாவது நாடு இதுவாகும்.
- ❖ இந்தியா ஏற்கனவே ரூபே அட்டையை ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், சிங்கப்பூர் மற்றும் பூடான் ஆகிய நாடுகளில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ ரூபே அட்டையானது 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இதே வகையைச் சேர்ந்த இந்திய உள்நாட்டு கடன் பற்று அட்டை மற்றும் கடன் வழங்கு அட்டை ஆகும்.

## புதிய தேசிய ஓய்வூதியத் திட்ட விதிகள்

- ❖ தற்பொழுது வெளிநாடு வாழ் இந்தியர்கள் (OCI - Overseas Citizens of India) தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (National Pension System - NPS) முதலீடு செய்ய அனுமதிக்கப்பட இருக்கின்றார்கள்.
- ❖ தேசிய ஓய்வூதிய முறைமை என்பது இந்தியாவில் தன்னார்வப் பங்களிப்பு முறையில் வரையறுக்கப்பட்ட ஒரு பங்களிப்பு ஓய்வூதிய முறையாகும்.
- ❖ 2004 ஆம் ஆண்டு ஜனவரி 1க்குப் பிறகு சேர்ந்த இந்திய அரசின் கீழ் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியப் பயன்களை நிறுத்துவதற்கான இந்திய அரசின் முடிவின் காரணமாக NPS தொடங்கப்பட்டது.
- ❖ இந்தத் திட்டம் ஆரம்பத்தில் அரசு ஊழியர்களுக்காக மட்டுமே வடிவமைக்கப் பட்டிருந்தாலும், 2009 ஆம் ஆண்டிலிருந்து 18 முதல் 60 வயதுக்குட்பட்ட இந்தியாவில் உள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் இதில் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் ஓய்வூதிய ஒழுங்குமுறை ஆணையமான ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (Pension Fund Regulatory and Development Authority - PFRDA) 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 அன்று இந்திய அரசால் நிறுவப்பட்டது.

- PFRDA ஆனது தேசிய ஓய்வூதிய முறைமையை ஒழுங்குபடுத்தி அதனை நிர்வகிக்கின்றது. மேலும் இது இந்திய அரசாங்கத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட, அமைப்புசாரா துறைக்காக வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டப் பலன்களான அடல் ஓய்வூதியத் திட்டத்தையும் நிர்வகிக்கின்றது.

## நிர்விக் திட்டம்

- இந்தியாவின் ஏற்றுமதி கடன் உத்தரவாதக் கூட்டு ஸ்தாபனம் ஆனது கடன் கிடைப்பதை மேம்படுத்துவதற்கும் கடன் வழங்கும் பணியை எளிதாக்குவதற்கும் நிர்விக் எனப்படும் ஒரு ஏற்றுமதி கடன் காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 90% அசல் மற்றும் வட்டியை உள்ளடக்கி இருக்கும் ஒரு காப்பீட்டுப் பாதுகாப்பு உத்தரவாதமாகும்.
- இந்தக் காப்பீட்டு அட்டையில் காப்பீட்டிற்கு முந்தைய மற்றும் பிந்தைய கடன்கள் அடங்கும்.
- ஏற்றுமதி கடன் உத்தரவாதக் கூட்டு ஸ்தாபனம் ஆனது முற்றிலும் மத்திய வணிக மற்றும் தொழில்துறை அமைச்சகத்திற்கு சொந்தமானது.

## தென்கிழக்கு ஆசியாவிற்கான பொருளாதாரக் கண்ணோட்டம்

- தென்கிழக்கு ஆசியா, சீனா மற்றும் இந்தியாவுக்கான பொருளாதாரக் கண்ணோட்டம் ஆனது வளர்ந்து வரும் ஆசியாவில் பிராந்திய பொருளாதார வளர்ச்சி, மேம்பாடு மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு குறித்து இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020-24 ஆம் ஆண்டுகளில் 6.6% வளர்ச்சியடையக் கூடும். இது 2013-17 ஆண்டுகளுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரியான 7.4% ஐ விடக் குறைவாக உள்ளது.

## இந்தியாவில் வேலையின்மை விகிதம்

- இந்திய பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (Centre for Monitoring Indian Economy - CMIE) வெளியிட்டுள்ள தகவல்களின் படி அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் வேலையின்மை விகிதம் 8.5% ஆக உயர்ந்தது. ஆகஸ்ட் 2016 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட வேலையின்மை விகிதத்தின் மிக உயர்ந்த அளவு இதுவாகும்.
- திரிபுரா மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் வேலையின்மையின் அளவு 20%க்கும் அதிகமாக உள்ளது (மிக உயர்ந்தது). வேலையின்மையின் அளவு தமிழ்நாட்டில் 1.1% ஆக உள்ளது (மிகக் குறைவு).

- CMIE இன் புள்ளிவிவரங்கள் சமீபத்திய தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வுத் தகவல்களின் கணக்கீடுகளுடன் ஒத்துப் போகின்றன. இந்த அமைப்பானது ஜூலை 2017 முதல் ஜூன் 2018 வரை வேலையின்மை விகிதம் 6.1% என மதிப்பிட்டுள்ளது. இது கடந்த 45 ஆண்டுகளில் மிக மோசமான அளவாகும்.
- தொடர் தொழிலாளர் சக்தி ஆய்வுத் தகவல் கணக்கெடுப்பு ஆனது 2017 ஆம் ஆண்டு முதல் மத்தியப் புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஒரு வழக்கமான வேலைவாய்ப்பு-வேலையின்மை பற்றிய ஒரு கணக்கெடுப்பு ஆகும்.

***CMIE பற்றி***

- இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையமானது ஒரு முன்னணி வணிகத் தகவல் அமைப்பு நிறுவனமாகும்.
- இது முதன்மையாக ஒரு சுயாதீன கொள்கை அமைப்பாக 1976 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

## தபன் ரே குழு

- முக்கியமான முதலீட்டு நிறுவனங்களுக்கு (core investment companies - CICs) பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை மறுஆய்வு செய்ய இந்திய ரிசர்வ் வங்கி தபன் ரே தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- சமீபத்தில் இந்த குழுவானது தனது பரிந்துரைகளை ரிசர்வ் வங்கியிடம் சமர்ப்பித்துள்ளது.
- தற்போது, பெருநிறுவன நிர்வாக வழிகாட்டுதல்கள் CICsகளுக்கு வெளிப்படையாகப் பொருந்தாது.

***CIC***

- முக்கியமான முதலீட்டு நிறுவனங்கள் என்பது வங்கிசாரா நிதியியல் நிறுவனங்களாகும் (NBFC - non-banking financial companies).
- இது பங்குகள் மற்றும் பத்திரங்களை கையகப்படுத்தும் வணிகத்தை மேற்கொள்கின்றது.

## காதி – HS குறியீடு

- மத்திய வர்த்தக மற்றும் தொழிற் துறை அமைச்சகமானது காதிக்காக ஒரு தனிப்பட்ட HS குறியீட்டை ஒதுக்கியுள்ளது.
- இது காதியின் ஏற்றுமதியை அதிகரிக்க உதவும்.
- HS என்பது ஒத்திசைந்த அமைப்பைக் குறிக்கின்றது. இது ஒரு ஆறு இலக்க அடையாளக் குறியீடாகும்.
- இது உலக சுங்க அமைப்பால் (WCO - World Customs Organization) மேம்படுத்தப்பட்டது.
- எந்தவொரு சர்வதேச எல்லையிலும் நுழையும் அல்லது கடக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் அனுமதியளிப்பதற்கு சுங்க அதிகாரிகள் HS குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர்.

## NBFC ககான நிதி உள்ளடக்க விகித விதிமுறைகள்

- வங்கி சாரா நிதியியல் நிறுவனங்களுக்கான (non-banking financial companies - NBFCs) நிதி உள்ளடக்க விகித (Liquidity coverage ratio - LCR) விதிமுறைகளானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வர இருக்கின்றது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, இதன் முந்தையக் காலக்கெடு தேதியான 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 என்ற தேதியிலிருந்து அதனை நீட்டித்துள்ளது.
- 10,000 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்ட NBFCகள் குறைந்தபட்சமாக 50% நிதி உள்ளடக்க விகிதத்தை உயர்தர நிதிச் சொத்துகளாக (HQLA - high quality liquid assets) பராமரிக்க வேண்டும்.
- 5000-10,000 கோடி சொத்துக்களைக் கொண்ட NBFCகள் 30% நிதி உள்ளடக்க விகிதத்தைப் பராமரிக்க வேண்டும்.
- இந்த இரண்டு நிகழ்வுகளிலும், 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நிதி உள்ளடக்க விகிதமானது படிப்படியாக 100% ஆக உயர்த்தப்படும்.

## அடல் ஓய்வூதியத் திட்டம்

- அடல் ஓய்வூதியத் திட்டமானது (Atal Pension Yojana - APY) 1.9 கோடிக்கும் மேற்பட்ட சந்தாதாரர்களைக் கொண்டுள்ளது.
- இது அமைப்புசாராத் துறையில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் வேறு எந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழும் வராத தொழிலாளர்கள் ஆகியோரை உள்ளடக்குவதற்கான அரசாங்கத்தின் ஒரு முதன்மையான ஓய்வூதியத் திட்டமாகும்.
- பொதுத் துறை வங்கிகளிடையே, பாரத இந்திய வங்கியின் மூலம் கிட்டத்தட்ட 11.5 லட்சம் சந்தாதாரர்கள் இதில் இணைந்துள்ளனர்.
- இத்திட்டத்தில் தனியார் துறை வங்கிப் பிரிவின் கீழ், எச்டிஎஃப்சி வங்கியானது சந்தாதாரர்கள் சேர்க்கைகளின் எண்ணிக்கையில் முதலிடம் வகிக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் APYன் கீழ் சந்தாதாரர்களின் எண்ணிக்கையை 2.25 கோடியாக உயர்த்துவதை இலக்காகக் கொண்டு, அவர்களின் எண்ணிகையை விரிவுபடுத்த ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA - Pension Fund Regulatory and Development Authority) திட்டமிட்டுள்ளது.

## மூடிஸ் நிறுவன மதிப்பீடு - ‘நிலைத் தன்மையிலிருந்து எதிர்மறை

- முதலீட்டாளர்களை மையமாகக் கொண்ட மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவையானது, இந்தியா மீதான அதன் கண்ணோட்டத்தை ‘நிலையானது’ என்பதிலிருந்து ‘எதிர்மறை’ என்ற நிலைக்கு குறைத்து விட்டது.
- இருப்பினும், அந்நிறுவனம் இந்தியாவின் கடன் மதிப்பீட்டை Baa2 என்ற அளவில் தக்க வைத்துள்ளது.
- பெரும்பாலும் மூடிஸ் என்று குறிப்பிடப்படும் மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவையானது, ஒரு பத்திரக் கடன் மதிப்பீட்டு வணிகமாகும்.
- இது ஒரு அமெரிக்க வணிக மற்றும் நிதிச் சேவை நிறுவனம் ஆகும்.

## மகாரத்னா அந்தஸ்து


- மத்திய கனரக தொழில்கள் மற்றும் பொது நிறுவனங்களின் அமைச்சகம் அரசுக்குச் சொந்தமான இந்துஸ்தான் பெட்ரோலியம் மற்றும் மின்தொகுப்புக் கழகத்துக்கு 'மகாரத்னா' அந்தஸ்தை வழங்கியது.
- இந்திய மின்தொகுப்புக் கழகம் ஆனது இந்தியாவின் ஒரு மிகப்பெரிய மின்சார ஆற்றல் பரிமாற்றப் பயன்பாட்டு நிறுவனமாகும்.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் நாளின் நிலவரப்படி, 10 மகாரத்னாக்கள், 14 நவரத்னாக்கள் மற்றும் 73 மினிரத்னாக்கள் இந்தியாவில் உள்ளன.

***நன்மைகள்***

- 2010 ஆம் ஆண்டு முதல் வழங்கப் படும் இந்த விருது மூலமான அந்தஸ்து அந்த நிறுவனங்களுக்கு அதிகச் செயல்பாட்டு மற்றும் நிதிச் சுயாட்சியை வழங்கும்.
- இது நிதி முடிவுகளை எடுக்க அந்த நிறுவனங்களின் வாரியங்களுக்கு சில மேம்பட்ட அதிகாரங்களை வழங்கும்.
- அரசு மகாரத்னா நிறுவனத்தின் முதலீட்டு உச்சவரம்பை ரூ. 1,000 கோடி முதல் ரூ. 5,000 கோடியாக உயர்த்தி இருக்கின்றது.
- இப்போது மகாரத்னா நிறுவனங்கள் தங்கள் நிகர மதிப்பில் 15 சதவீதம் வரை ஒரு திட்டத்தில் முதலீடு செய்வது குறித்து முடிவு எடுக்கலாம்.

***தகுதி***

- மூன்று வருடங்கள் சராசரியாக ஆண்டு நிகர லாபம் ரூ. 2500 கோடி, அல்லது
- சராசரி ஆண்டு நிகர மதிப்பு ரூ. 3 வருடங்களுக்கு 10,000 கோடி, அல்லது
- சராசரி ஆண்டு வருவாய் ரூ. 3 ஆண்டுகளுக்கு 20,000 கோடி ரூபாய் (முன்பு பரிந்துரைக்கப்பட்ட ரூ.25,000 கோடிக்கு மாற்றாக) பெற்றிருக்கும் நிறுவனங்கள் மகாரத்னா அந்தஸ்தைப் பெறலாம்.



## நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையம்

- நிதியியல் நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (Financial Stability and Development Council - FSDC) 21வது கூட்டமானது சமீபத்தில் நடத்தப்பட்டது.
- இது நிதி சார்ந்த கல்வியறிவு மற்றும் நிதியியல் உள்ளடக்கல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.
- FSDC ஆனது 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் தலைவர் மத்திய நிதி அமைச்சர் ஆவார்.
- இந்த அமைப்பில் உள்ள உறுப்பினர்கள் பின்வருமாறு:
    - நிதித் துறை ஒழுங்குமுறை நிறுவனங்களின் தலைவர்கள் (ரிசர்வ் வங்கி, இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம், ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்தியக் காப்பீடு ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை),
    - நிதித் துறைச் செயலாளர், பொருளாதார விவகாரங்கள் துறை,
    - செயலாளர், நிதிச் சேவைகள் துறை,
    - தலைமைப் பொருளாதார ஆலோசகர்,
    - நொடித்தல் மற்றும் திவால் வாரியத்தின் தலைவர்.
- FSDCன் துணைக் குழுவானது ரிசர்வ் வங்கியின் ஆளுநரால் தலைமை தாங்கப்படுகின்றது.

## NCAER ஆய்வறிக்கை

- தேசியப் பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சி மன்றத்தின் (National Council of Applied Economic Research (NCAER) கூற்றுப் படி, இந்தியாவின் வணிக நம்பிக்கையானது கடந்த ஆறு ஆண்டுகளில் மிகக் குறைவாக உள்ளது.
- NCAER என்பது தில்லியில் 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு கொள்கை அமைப்பாகும்.
- இந்த அமைப்பின் நோக்கமானது அரசு மற்றும் தனியார்த் துறைப் பொருளாதார ஆராய்ச்சிகளுக்கு ஆதரவளிப்பதாகும்.

## எஸ்ஸார் ஸ்டீல் தீர்ப்பு - மைல்கல் தீர்ப்பு

- இந்த முக்கியத் தீர்ப்பில், நிதி விநியோகம் மீதான உரிமை கோரல் தொடர்பாக திவாலான நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கிய வங்கிகள் அடங்கிய "கடன் வழங்குநர்கள் குழுவின்" முன்னுரிமையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- உச்ச நீதிமன்றமானது, நிறுவனம் இயங்குவதற்கான மூலப்பொருள்களையும் சேவையையும் அளித்தவர்களைக் காட்டிலும் நிறுவனத்துக்குக் கடனாக நிதி வழங்கியவர்களுக்குத்தான் அதிக முன்னுரிமை தரவேண்டும் என்று தீர்ப்பு அளித்துள்ளது.
- நிறுவனத்தின் நொடிப்பு நிலை நடவடிக்கைகளின் போதும், கடனில் பாதிக்கப்பட்ட நிறுவனத்தை மற்றொரு நிறுவனம் கையகப்படுத்தும் போதும் இந்த கடனை அளிப்பவர்கள் குழு இரண்டையும் 'வித்தியாசமாக' தனிப்பட்ட முறையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

*பின்னணி*

- தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்தின் அகமதாபாத் அமர்வானது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆர்சிலர் மிட்டல் என்ற உலகளாவிய எஃகு நிறுவனமானது எஸ்ஸார் ஸ்டீல் நிறுவனத்தை ஏலத்தில் எடுக்க அனுமதி அளித்தது.
- ஆர்சிலர் மிட்டல் நிறுவனம் எஸ்ஸார் ஸ்டீல் நிறுவனத்துக்கு அளிக்க வேண்டிய நிதிச் சலுகைகளானது அந்த நிறுவனம் இயங்குவதற்கான மூலப்பொருள்களையும் மற்ற பிற சேவைகளையும் அளித்தவர்களை உள்ளடக்க வில்லை.

## ஜூலை - செப்டம்பர் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி

- செப்டம்பர் 30 ஆம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (Gross Domestic Product - GDP) இந்தியாவின் ஆண்டு வளர்ச்சி 4.5% என்ற அளவாக குறைந்துள்ளது.
- இது கடந்த 6 ஆண்டுகளில் பதிவான மதிப்புகளில் மிக மோசமான ஒரு மதிப்பாகும்.
- தேசியப் புள்ளிவிவர அலுவலகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இந்தியாவின் உற்பத்தித் துறையில் மொத்த மதிப்புக் கூட்டு (Gross Value Added - GVA) வளர்ச்சி இதே காலாண்டில் 1% என்ற அளவில் குறைந்துள்ளது.
- கட்டுமானத் துறையின் GVA வளர்ச்சியும் 8.5 சதவீதத்திலிருந்து 3.3 சதவீதமாக குறைந்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## L2ப்ரோ இந்தியா – கைபேசிச் செயலி

- L2ப்ரோ இந்தியா (உங்களது கண்டுபிடிப்புகளைப் பாதுகாக்கவும் அதிகரிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்) என்பது அறிவுசார் சொத்துரிமை மீதான ஒரு கைபேசிச் செயலியாகும்.
- ஜெர்மனி, ஐக்கிய ராஜ்ஜியம், இத்தாலி மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளில் L2ப்ரோ என்ற செயலி வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டுள்ளது.

## இன்டிஜென் (IndiGen) - அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் திட்டம்

- இது ஒரு நபரின் மரபணுக்களைத் தடையில்லாமல் முழுமையாக வரைபடமாக்குவதற்காக அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தினால் (Council of Scientific and Industrial Research – CSIR) நிர்வகிக்கப்படும் ஒரு திட்டமாகும்.
- CSIR – மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் மையம் (Institute of Genomics and Integrative Biology - IGIB) மற்றும் CSIR - செல் & மூலக்கூறு உயிரியல் மையம் (Centre for Cellular and Molecular Biology - CCMB) ஆகியவை இத்திட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றன.
- மனித மரபணு ஆனது சுமார் 3.2 பில்லியன் அடிப்படை இணைகளைக் கொண்டுள்ளது.

## டெக்சாகர்

- டெக்சாகர் என்பது இந்தியாவின் இணைய தொழில்நுட்ப திறன்களின் ஒரு சக்திவாய்ந்த தேசியக் களஞ்சியமாகும்.
- இது இந்திய இணையப் பாதுகாப்பு ஆணையத்துடன் இணைந்து தேசிய இணையப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தால் தொடங்கப் பட்டது.
- இந்திய இணையப் பாதுகாப்பு ஆணையம் என்பது இந்தியாவில் தரவுப் பாதுகாப்பு குறித்து நாஸ்காம் அமைப்பால் அமைக்கப்பட்ட, லாப நோக்கற்ற, ஒரு தொழில்சார் அமைப்பு ஆகும்.

## ஒலிகோமன்னேட் - உலகின் முதல் புதிய அல்சைமர் மருந்து

- ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களில் அல்சைமர் நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கான மற்றும் அந்த நிலையை மாற்றியமைக்கும் ஆற்றலுடன் கூடிய ஒரே சிகிச்சையான உலகின் முதலாவது புதிய மருந்தான ஒலிகோமன்னேட் ஆனது சீன அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- கடற்பாசியைத் தவறாமல் உட்கொள்ளும் வயதானவர்களிடையே அல்சைமர் நோய் குறைவாக இருப்பதால் அதன் மூலம் ஒலிகோமன்னேட் கண்டுபிடிப்பின் வளர்ச்சி ஈர்க்கப் பட்டது.
- தற்போது அல்சைமர் நோய்க்கு என்று எந்த சிகிச்சையும் இல்லை.
- இந்நோயை முதன்முதலில் ஜெர்மன் மருத்துவர் அலோயிஸ் அல்சைமர் 1906 ஆம் ஆண்டில் கண்டறிந்தார்.

## விண்வெளித் தொழில்நுட்பப் பிரிவு

- டெல்லி இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (இஸ்ரோ) உடன் இணைந்து விண்வெளித் தொழில்நுட்பப் பிரிவை அமைக்க உள்ளது.
- இந்த நடவடிக்கையின் மூலம், விண்வெளித் தொழில்நுட்பப் பிரிவுகள் அமைக்கப் பட்டுள்ள ஐ.ஐ.எஸ்.சி பெங்களூர், ஐ.ஐ.டி பம்பாய், ஐ.ஐ.டி கான்பூர், ஐ.ஐ.டி கரக்பூர், ஐ.ஐ.டி மதராஸ், ஐ.ஐ.டி குவஹாத்தி மற்றும் ஐ.ஐ.டி ரூர்க்கி போன்ற பிற தலைமை நிறுவனங்களின் கூட்டிணைவில் ஐ.ஐ.டி டெல்லியும் இணையும்.

## நின்றபடியே செல்லக் கூடிய சக்கர நாற்காலி

- மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் (IIT-M) புனர்வாழ்வு ஆராய்ச்சி மற்றும் சாதன மேம்பாட்டிற்கான டிடிகே மையத்தில் (Rehabilitation Research and Device Development - R2D2) 'Arise' எனப்படும் 'நின்றபடியே செல்லக் கூடிய சக்கர நாற்காலி' ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.
- Arise ஆனது மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சரான தாவர்சந்த் கெஹ்லாட் என்பவரால் முறையாக வெளியிடப்பட்டது.

- இந்தச் சக்கர நாற்காலியானது இங்கிலாந்தைத் தளமாகக் கொண்டு செயல்படும் வெல்கம் அமைப்பின் ஆதரவுடன் ஃபீனிக்ஸ் மெடிக்கல் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து IIT-M ஆல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப் பட்டுள்ளது.
- Arise ஐப் பயன்படுத்தி, ஒரு மாற்றுத் திறனாளி நபர் தனியாகவோ அல்லது மற்றவரின் உதவியுடனோ நிற்கும் நிலையில் இருந்து உட்கார்ந்த நிலைக்கும் உட்கார்ந்த நிலையிலிருந்து நிற்கும் நிலைக்கும் மாறலாம்.





## முதலாவது மின்சார விமானம்

- நாசா தனது முதலாவது முழுவதுமாக மின்சாரத்திலேயே இயங்கக் கூடிய "எக்ஸ் -57 மேக்ஸ்வெல்" என்ற சோதனை விமானத்தின் ஆரம்பப் பதிப்பை காட்சிப் படுத்தியுள்ளது.
- மேக்ஸ்வெல் விமானமானது 14 மின்சார மோட்டார்களின் மூலம் இயங்கக் கூடியது. இந்த மோட்டார்கள் அதற்கென்றே வடிவமைக்கப்பட்ட லித்தியம் அயன் மின்கலன்களால் இயக்கப் படுகின்றது.
- தற்போதைய மின்கலன் வரம்புகள் காரணமாக, குறைந்த எண்ணிக்கையிலான பயணிகளுக்காக மேக்ஸ்வெல் ஒரு விமான - டாக்ஸி அல்லது பயணிகள் விமானமாகப் பயன்படுத்தப்படலாம்.

## நாசாவின் நைசர் தொலைநோக்கி


- சர்வதேச விண்வெளி நிலையத்தில் (International Space Station - ISS) நாசாவின் நியூட்ரான் நட்சத்திரத்தின் உள் அமைப்பை ஆய்வு செய்யும் (Neutron star Interior Composition Explorer - NICER) தொலைநோக்கியானது இதுவரை இல்லாத வகையில் எக்ஸ் கதிர் ஒளிச் சிதறலை (வெடிப்பு) கண்டறிந்துள்ளது.
- பல்சரின் மேற்பரப்பில் ஒரு பெரிய வெப்ப ஆற்றல் மின்வெட்டொளி காரணமாக இந்த எக்ஸ்ரே ஒளிச் சிதறல் ஏற்பட்டது.

- ஒரு மீயொளிர் விண் முகிலாக (supernova) நீண்ட காலத்திற்கு முன்பு வெடித்த ஒரு நட்சத்திரத்தின் நொறுக்கப்பட்ட எச்சங்கள் பல்சர் என்று அழைக்கப்படுகின்றன.
- வகை I - எக்ஸ்ரே வெடிப்பு என வானியலாளர்கள் வகைப்படுத்தும் இந்த வெடிப்பானது 20 வினாடிகளில் அதிக அளவிலான ஆற்றலை வெளியிடுகின்றது. இந்த ஆற்றலானது கிட்டத்தட்ட 10 நாட்களில் சூரியன் வெளிப்படுத்தும் ஆற்றலுக்குச் சமமாகும்.



## விண்மீன்களுக்கிடைப்பட்ட பகுதியில் வாயேஜர் 2 நுழைவு

- நாசாவின் வாயேஜர் 2 ஆனது ஹீலியோஸ்பியரிலிருந்து (சூரியன்சூழ் வான்மண்டலம்) வெளியேறிய மனிதனால் உருவாக்கப்பட்ட இரண்டாவது விண்கலமாக (சூரியக் காற்றினால் உருவாக்கப்பட்ட குமிழி) உருவெடுத்துள்ளது.
- வாயேஜர் 1 விண்கலமானது இந்த எல்லையை 2012 ஆம் ஆண்டில் கடந்தது.



- வாயேஜர் விண்கலமானது நமது சூரிய மண்டலத்தில் உள்ள அனைத்து கிரகங்களுக்கும் அப்பால் பறக்கும் மூன்றாவது மற்றும் நான்காவது விண்கலம் ஆகும்.
- வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய மிகப்பெரிய நான்கு வாயுக் கிரகங்களுக்கும் சென்ற ஒரே விண்கலம் வாயேஜர் 2 விண்கலம் ஆகும்.
- வாயேஜர் 1 மற்றும் வாயேஜர் 2 ஆகிய இரண்டு ஆய்வு விண்கலமானது ஹீலியோஸ்பியரை விட்டு வெளியேறிவிட்டன. ஆனால் அவை சூரியனின் ஈர்ப்பு விசையிலிருந்து இன்னும் வெளியேறாததால் சூரிய மண்டலத்தை விட்டு வெளியேறவில்லை.

***இத்திட்டம் பற்றி***

- வாயேஜர் 2 விண்கலமானது 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 அன்று செலுத்தப்பட்டது. வாயேஜர் 1 விண்கலமானது 1977 செப்டம்பர் 5 அன்று செலுத்தப்பட்டது.
- இந்த விண்கலமானது ஐந்து ஆண்டுகள் வரை ஆய்வு செய்யும் வகையில் கட்டப்பட்டுள்ளது. இது வியாழன் மற்றும் சனி ஆகிய கிரகத்தில் மிக நெருக்கமாக சென்று ஆய்வுகளை மேற்கொள்ளும்.
- வாயேஜர் 2 ஆனது நாசாவின் மிக நீண்ட காலமாக இயங்கும் ஒரு திட்டமாகும்.

## DRDOன் பற்ற வைப்பு வளாகம் @ புனே


- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் பற்ற வைப்பு வளாகமானது புனேவில் உள்ள உயர் ஆற்றல் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வகத்தில் (High Energy Materials Research Laboratory - HEMRL) திறக்கப்பட்டுள்ளது.

***HEMRL மற்றும் பற்றவைப்பு நிகழ்வு பற்றி***

- HEMRL என்பது DRDOன் ஒரு முதன்மையான ஆய்வகமாகும்.
- இது ராக்கெட் & துப்பாக்கி உந்து சக்திகள், வான்வேடிக்கைச் சாதனங்கள், அதிக சப்தத்துடன் வெடிக்கும் அமைப்புகள் மற்றும் உயர் ஆற்றல் மூலக்கூறுகளின் தொகுப்பு ஆகியவற்றை உருவாக்குவதில் முதன்மையாக ஈடுபட்டுள்ளது.
- அக்னி, பிருத்வி, ஆகாஷ், நாக், பினாகா, நீண்ட வரம்பு கொண்ட புவிப்பரப்பிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணை போன்றவற்றுக்கான பற்ற வைப்பு அமைப்பு HEMRLல் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டுள்ளது.

## ஸ்டார்லிங்க் அமைப்பு


- 2027 ஆம் ஆண்டிற்குள், ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது அதிவேக இணையச் சேவைகளை வழங்குவதற்காக உலகம் முழுவதும் 42,000 செயற்கைக் கோள்களின் அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- இந்த நிறுவனம் இந்த அமைப்பிற்கு "ஸ்டார்லிங்க் அமைப்பு" என்று பெயரிட்டுள்ளது. இது சமீபத்தில் 60 இணையச் செயற்கைக்கோள்களை ஏவியுள்ளது.



- ஸ்டார்லிங்க் திட்டத்தின் காரணமாக, விண்வெளிக் குப்பைகள், செயற்கைக் கோள்களின் மோதல் மற்றும் விண்வெளிக்கான இணைப்பு துண்டிக்கப்படுதல் போன்ற கவலைகளும் எழுந்துள்ளன.

## சனிக் கிரகத்தின் துணைக்கோளான டைட்டனின் வரைபடம்

- சனியின் துணைக்கோளான டைட்டனின் முதல் உலகளாவிய புவியியல் வரைபடத்தை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். இந்த வரைபடத்தில் பரந்த சமவெளிகள், உறைந்த கரிமப் பொருட்களின் குன்றுகள் மற்றும் திரவ மீத்தேன் ஏரிகள் ஆகியவை அடங்கியுள்ளன.
- இந்த வரைபடமானது நாசாவின் 'காசினி' விண்கலத்தால் சேகரிக்கப்பட்ட ரேடார், அகச்சிவப்பு மற்றும் பிற தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.
- மேற்பரப்பில் நிலையான திரவங்களைக் கொண்டுள்ள சூரிய மண்டலப் பொருள் (பூமியைத் தவிர) டைட்டன் ஆகும்.
- டைட்டன் துணைக்கோளானது (விட்டம் 5,150 கி.மீ), வியாழனின் கேன்மீடிற்கு அடுத்து சூரிய மண்டலத்தின் இரண்டாவது மிகப்பெரிய துணைக்கோளாக உள்ளது.
- இது புதன் கிரகத்தை விட அளவில் பெரியது.




## SeeTB

- SeeTB என்பது காசநோயைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு புதிய சாதனமாகும்.
- இது புது தில்லியில் உள்ள ஜாமியா ஹம்டார்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி குழுவால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சாதனமானது காச நோயை விரைவாகக் கண்டறிந்து அதற்கான சிகிச்சையைத் தொடங்க வழிவகை செய்கின்றது.
- உலகின் காசநோய் இறப்புகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- உலக சுகாதார நிறுவனமானது 2035 ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்குள் காச நோயை ஒழிக்க இந்திய அரசு உறுதி அளித்துள்ளது.



### நிமோனியா (நுரையீரல் நோய்) மற்றும் SAANS

- ஐ.நா அமைப்பின் அறிக்கையானது நிமோனியாவை "மறக்கப்பட்டத் தொற்றுநோய்" என்று பெயரிட்டுள்ளது.
- பகுதியளவு எண்ணிக்கையிலான நிமோனியா இறப்புகள் காற்று மாசுபாட்டுடன் தொடர்புடையதாகும்.
- நிமோனியாவானது பாக்டீரியா, வைரஸ்கள் அல்லது பூஞ்சைகளால் ஏற்படுகின்றது. மேலும் குழந்தைகளின் நுரையீரலானது சீழ் மற்றும் திரவத்தால் நிரப்பப்படுவதால் அவர்களை இது சுவாசத்திற்காக போராட வைக்கின்றது.
- 2018 ஆம் ஆண்டில் நிமோனியா காரணமாக ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- நிமோனியா காரணமாக பாதிக்கும் மேற்பட்ட குழந்தைகள் இறப்புகளுக்கு காரணமான ஐந்து நாடுகள் பின்வருமாறு: நைஜீரியா (1,62,000), இந்தியா (1,27,000), பாகிஸ்தான் (58,000), காங்கோ ஜனநாயகக் குடியரசு (40,000) மற்றும் எத்தியோப்பியா (32,000).
- இது இப்போது உலகெங்கிலும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 15 சதவீத இறப்புகளுக்கு காரணமாக விளங்குகின்றது.
- "நிமோனியாவை வெற்றிகரமாக கையாளுவதற்காக (ஈடு செய்வதற்காக) சமூக விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை" (SAANS - Social Awareness and Action to Neutralise Pneumonia Successfully - SAANS) என்ற பெயரைக் கொண்ட ஒரு பிரச்சாரத்தை மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது குஜராத்தில் தொடங்கியுள்ளது.

## செக்ரடகோஜின் - உடல் பருமனால் தூண்டப்பட்ட நீரிழிவு நோய்

- ஹைதராபாத்தில் உள்ள செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தைச் (Centre for Cellular and Molecular Biology - CCMB) சேர்ந்த விஞ்ஞானிகள் செக்ரடகோஜின் (secretagogin - SCGN) என்ற ஒரு புதிய புரதத்தை கண்டுபிடித்துள்ளனர்.
- SCGN என்பது நீரிழிவு நோயாளிகளில் இன்சுலினின் செயல்திறனை அதிகரிக்க உதவும் ஒரு சிறப்பு வகைப் புரதமாகும்.
- இது உடலில் இன்சுலின் செயல்பாட்டை அதிகரிக்கின்றது. இது உடலின் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துகின்றது.
- இது மில்லியன் கணக்கான (10 இலட்சத்திற்கும் மேற்பட்ட) மக்களைப் பாதிக்கும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் ஒரு திருப்புமுனையாக மாற இருக்கின்றது.


## வயிற்றுப்போக்கிற்கு எதிரான ETVAX தடுப்பூசி

- வங்கதேசத்தில் நடத்தப்பட்ட ஒரு மருத்துவப் பரிசோதனையில் என்டோரோடாக்சிஜெனிக் ஈ. கோலை வயிற்றுப்போக்கிற்கு (E. coli diarrhoea - ETEC) எதிராக வழங்கப்பட்ட வாய்வழி, செயலிழக்கப்பட்ட தடுப்பூசியானது பச்சிளங் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பாக உள்ளது என்று கண்டறியப் பட்டுள்ளது.
- ETEC பாக்டீரியாவானது வயிற்றுப்போக்கிற்கு ஒரு முக்கியக் காரணமாக விளங்கி வருகின்றது.
- இவை குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கும் அக்குழந்தைகளின் இறப்பிற்கும் காரணமாக திகழ்கின்றது.
- இந்தத் தடுப்பூசியானது ஸ்வீடனின் கோதன்பர்க் பல்கலைக் கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- தற்போது வரை வயிற்றுப்போக்கிற்கு தடுப்பூசி ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## பிஎஸ்எல்வி - சி47 / கார்டோசாட் - 3 திட்டம்


- துருவ செயற்கைக்கோள் ஏவு வாகனமான பிஎஸ்எல்வி - சி 47 என்ற விண்கலமானது அமெரிக்காவிற்கான பிற வணிகப் பயன்பாடு கொண்ட நானோ செயற்கைக் கோள்களுடன் கார்டோசாட்-3 என்ற செயற்கைக் கோளை விண்ணுக்கு எடுத்துச்சென்றது.
- கார்டோசாட் – 3 மற்றும் 13 நானோ செயற்கைக் கோள்கள் ஆகியவற்றை இஸ்ரோ ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக ஏவியுள்ளது.
- கார்டோசாட் - 3 செயற்கைக்கோள் ஆனது மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த அதிதிறன் வாய்ந்த மேம்பட்ட செயற்கைக்கோள் ஆகும். இது உயர் தெளிவுத்திறன் கொண்ட இமேஜிங் (உருவமாக்கல்) திறனைக் கொண்டுள்ளது.
- கார்டோசாட் - 3 செயற்கைக் கோளின் ஆயுட் காலம் 5 ஆண்டுகளாகும்.
- இது இஸ்ரோ அமைப்பால் உருவாக்கப்பட்ட கார்டோசாட் செயற்கைக் கோள் தொடரின் 9வது செயற்கைக்கோளாகும்.

- கார்டோசாட் – 3 செயற்கைக் கோளின் புகைப்படக்கருவிகளில் ஒன்று நிலப் பரப்பில் 25 செ.மீ வரையில், தெளிவுத்திறன் கொண்ட புகைப்படங்களை எடுத்து, அவற்றை கட்டுப்பாட்டகத்திற்கு அளிக்கின்றது.
- அரசாங்கம் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மட்டுமே 1 மீ தெளிவுத் திறனுக்குக் குறைவாக உள்ள இஸ்ரோவின் உயர் தெளிவுத் திறன் கொண்ட புகைப்படங்களை அணுக முடியும்.
- கார்டோசாட்டின் நடைமுறைப் பயன்கள்: பெரிய அளவிலான நகர்ப்புறத் திட்டமிடல், கிராமப்புற வளங்கள் & உள்கட்டமைப்பு மேம்பாடு, கடலோர நிலப் பயன்பாடு மற்றும் நிலப்பரப்பு போன்றவை.
- இதே திட்டத்தில் கார்டோசாட் செயற்கைக் கோளைத் தவிர, அமெரிக்காவின் வணிகப் பயன்பாடு கொண்ட 13 நானோ செயற்கைக் கோள்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டன.




### LB -1 கருந்துளை

- சீனாவின் தேசிய வானியல் ஆய்வகத்தின் விஞ்ஞானிகள் LB -1 என்ற பெரிய அளவிலான கருந்துளையைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இப்போது வரை, விஞ்ஞானிகள் நமது பால்வெளி அண்டத்தில் சூரியனை விட 20 மடங்குக்கும் அதிகமாக உருவளவு கொண்ட ஒரு தனி நட்சத்திர கருந்துளையைக் கண்டறிந்ததில்லை.
- ஆனால் LB -1 ஆனது சூரியனை விட 70 மடங்கு அளவில் பெரியது.



- இது நட்சத்திரங்களின் பரிணாம வளர்ச்சியின் தற்போதைய மாதிரிகள் குறித்த ஆராய்ச்சிகளை செய்ய உதவுகின்றது. இதன் பெரிய உருவம் குறித்து ஆராய்ச்சி மேலும் தொடர இருக்கின்றது.

### நீருக்கடியில் ரோவர் BRUIE



- பனிக்கட்டிகளின் அடியில் உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக அண்டார்டிகாவில் BRUIE (Buyyant Rover for Under-Ice Exploration) எனப்படும் நீருக்கடியிலான ரோவர் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.
- அண்டார்டிக் நீரானது பூமியில் பனிக்கட்டிகளால் ஆன ஒரு கடல் போன்றதாகும்.
- இந்த ரோவரை நாசா அமைப்பின் - ஜெட் உந்துவிசை ஆய்வகத்தில் பொறியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- நீரில் மூழ்கக் கூடிய இந்த வகை ரோபோ மூலமாக யூரோபா (வியாழன்) மற்றும் என்செலடஸ் (சனி) போன்ற துணைக்கோள்களில் உள்ள பனி மூடிய கடல்களை ஒரு நாள் ஆராய முடியும்.

### மர மார்பக நோய் – இறைச்சிக் கோழி

- விஞ்ஞானிகள் இறைச்சிக் கோழிகளில் “மர மார்பக நோயை” ஏற்படுத்தக் கூடிய ‘லிப்போ புரோட்டீன் லிபேஸ்’ எனப்படும் ஒரு நொதியைக் கண்டறிந்துள்ளனர்.
- இறைச்சிக் கோழிகளில் ஏற்படும் மர மார்பக நோய் என்பது ஒரு வளர்சிதை மாற்றக் கோளாறு ஆகும். இது இறைச்சிக் கோழியின் மார்பகத் தசை திசுக்களில் உண்டாகும் அசாதாரண கொழுப்புக் குவிப்பால் ஏற்படுகிறது.
- இந்நோய் இறைச்சிக் கோழிகளைப் பாதிக்கும்போது, அது இறைச்சியை கடினமாகவும் மெல்லத் தக்கதாகவும் மாற்றுகின்றது.
- இந்நோய் பறவைகளை சந்தைப்படுத்த முடியாததாக மாற்றி, அதனை வளர்ப்பவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### டிரிஸ்டன் அல்பாட்ராஸ் எதிர்கொள்ளும் எலிகள் பிரச்சினை

- கௌக் தீவில் உள்ள அரிய வகை கடற் பறவையான டிரிஸ்டன் அல்பாட்ராஸ் குஞ்சுகளை மிகப்பெரிய எலிகள் கொன்று சாப்பிட்டுள்ளன.
- கௌக் தீவானது தெற்கு அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள ஒரு உலகப் பாரம்பரியத் தளமாகும்.
- ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள பறவைகள் பாதுகாப்பிற்கான ராயல் சமூகமானது இந்த எலிகளைக் கொல்ல தானியங்களை அடிப்படையாகக் கொண்ட விஷத் துகள்களுடன் ஹெலிகாப்டர்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
- அழிவு நிலையில் உள்ள இந்தக் குஞ்சுகளானவை, பெரும்பாலும் உணவைத் தேட இதன் பெற்றோர்கள் கூட்டை விட்டு வெளியில் செல்லும்போது. கொறித்துண்ணிகளால் கொல்லப்படுகின்றன.
- “மிகவும் அரிய இனங்கள்” என்ற பிரிவில் உள்ள இந்த டிரிஸ்டன் அல்பாட்ராஸ் பறவைகளின் 2,000 ஜோடிகள் மட்டுமே இப்போது இத்தீவில் உள்ளன.

## கலிபோர்னியாவின் காட்டுத் தீ

- கின்கேட் தீ என்பது தற்போது அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சோனோமா ஊரகப் பகுதி என்னும் இடத்தில் பற்றி எரியும் காட்டுத்தீ ஆகும்.
- கடந்த வாரத்தில், கின்கேட் தீயானது கலிபோர்னியாவில் கிட்டத்தட்ட 78,000 ஏக்கர் நிலங்களை அழித்து, சுமார் 180,000 மக்களை வெளியேற்ற நிர்பந்தித்தது.



The biggest fires in California history

| FIRE NAME | YEAR | DEATHS | ACREAGE |
|---|---|---|---|
| Mendocino Complex | 2018 | 1 | 459K |
| Thomas | 2017 | 2 | 282K |
| Cedar | 2003 | 15 | 273K |
| Rush | 2012 | 0 | 272K |
| Rim | 2013 | 0 | 257K |
| Zaca | 2007 | 0 | 240K |
| Carr | 2018 | 8 | 230K |
| Matilija | 1932 | 0 | 220K |
| Witch | 2007 | 2 | 198K |
| Klamath Theater Complex | 2008 | 2 | 192K |
| Marble Cone | 1977 | 0 | 178K |
| Laguna | 1970 | 5 | 175K |
| Day | 2006 | 0 | 163K |
| Basin Complex | 2008 | 0 | 163K |
| Station | 2009 | 2 | 161K |

## அரேபியக் கடலில் உருவான புயல்கள்

- 1965 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல்முறையாக, அரேபியக் கடலில் இரண்டு புயல்கள் - கியார் புயல் மற்றும் மஹா புயல் - ஒரே நேரத்தில் உருவாகியுள்ளன.
- கியார் புயலானது 2007 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோனு புயலுக்குப் பிறகு உருவான இரண்டாவது வலிமை வாய்ந்த புயல் ஆகும்.
- அரேபியக் கடலுடன் ஒப்பிடும் போது வங்காள விரிகுடாவில் புயல்கள் உருவாவது அடிக்கடி நிகழ்கிறது.
- 2019 ஆம் ஆண்டில், அரேபியக் கடலில் நான்கு புயல்கள் உருவாகியுள்ளன.
- ஒடிசாவில் பெரிய அழிவை ஏற்படுத்திய ஃபானி புயலானது 2019 ஆம் ஆண்டில் வங்காள விரிகுடாவில் கடைசியாக உருவான புயல் ஆகும்.

### *புயலுக்குப் பெயரிடுதல்*

- ஃபானி புயல் வங்க தேசத்தால் பெயரிடப் பட்டது.
- கியார் புயல் மியான்மரால் பெயரிடப் பட்டது.
- மஹா புயல் ஓமன் நாட்டினால் பெயரிடப் பட்டது.

NORTHERN INDIAN OCEAN CYCLONE NAMES

| Contributors | List 1 | List 2 | List 3 | List 4 | List 5 | List 6 | List 7 | List 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Bangladesh | Onil | Ogni | Nisha | Giri | Helen | Chapala | Ockhi | Fani |
| India | Agni | Akash | Bijli | Jal | Lehar | Megh | Sagar | Vayu |
| Maldives | Hibaru | Gonu | Aila | Keila | Madi | Roanu | Mekunu | Hikaa |
| Myanmar | Pyarr | Yemyin | Phyan | Thane | Nanauk | Kyant | Daye | Kyarr |
| Oman | Baaz | Sidr | Ward | Murjan | Hudhud | Nada | Luban | Maha |
| Pakistan | Fanoos | Nargis | Laila | Nilam | Nilofar | Vardah | Titli | Bulbul |
| Sri Lanka | Mala | Rashmi | Bandu | Viyaru | Ashobaa | Maarutha | Gaja | Pawan |
| Thailand | Mukda | Khai Muk | Phet | Phailin | Komen | Mora | Phethai | Amphan |

## காலநிலை மாற்றம் தொடர்பான 29வது BASIC அமைச்சரவைக் கூட்டம்

- காலநிலை மாற்றம் குறித்த BASIC (பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தியா, சீனா) நாடுகளின் 29வது அமைச்சரவைக் கூட்டமானது சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்றது.
- 2020 ஆம் ஆண்டுக்குள் ஆண்டுதோறும் 100 பில்லியன் அமெரிக்க டாலர்களை வெளிப்படையான மற்றும் மானிய அடிப்படையிலான முறையில் வழங்குவதற்காக காலநிலை நிதிக்கான பொறுப்புகளை நிறைவேற்றுமாறு வளர்ந்த நாடுகளை அமைச்சரவைக் கூட்டமானது கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்தியா 30வது BASIC அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த உள்ளது.

***BASIC பற்றி***

- BASIC நாடுகள் என்பவை புதிதாக தொழில்மயமாக்கப்பட்ட நான்கு பெரிய நாடுகளான பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் ஒரு குழுமமாகும்.
- அவர்களின் பொதுவான குறைந்தபட்ச தேவை வளர்ந்த நாடுகளால் பூர்த்தி செய்யப்படா விட்டால் ஒன்றுபட்டு வெளிநடப்பு செய்வது உட்பட, கூட்டாகச் சேர்ந்து செயல்பட 2009 ஆம் ஆண்டின் கோபன்ஹேகன் காலநிலை உச்சி மாநாட்டில் இந்த நான்கு நாடுகளும் உறுதி பூண்டுள்ளன.

## தில்லியின் ஒற்றைப்படை இரட்டைப்படை வாகன எண் திட்டம் – 2019

- ஒற்றைப்படை இரட்டைப்படை வாகன எண் திட்டத்தின் மூன்றாவது பதிப்பு தற்பொழுது தில்லியில் தொடங்கியுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட ஒற்றைப்படை இரட்டைப்படை வாகன எண் திட்டமானது ஒரு மகிழுந்துப் பங்கீட்டு முறையாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், வாகனப் பதிவு எண்ணின் கடைசி இலக்கத்தில் ஒற்றைப்படை எண் கொண்ட வாகனங்கள் ஒற்றைப்படை தேதிகளிலும் கடைசி இலக்கத்தில் இரட்டைப்படை எண் கொண்ட வாகனங்கள் இரட்டைப்படை தேதிகளிலும் சாலைகளில் அனுமதிக்கப் படும்.

- தில்லியில் உள்ள சாலைகளில் இயங்கும் போக்குவரத்து அல்லாத அனைத்து நான்கு சக்கர வாகனங்களுக்கும் பிற மாநிலங்களிலிருந்து தில்லிக்கு வரும் அனைத்து வாகனங்களுக்கும் இது பொருந்தும்.
- ஒற்றைப்படை இரட்டைப்படை வாகன எண் திட்டத்தைச் செயல்படுத்தும் போது தில்லி மெட்ரோ ரயில் கழகமானது 61 கூடுதல் பயணச் சேவைகளை வழங்க இருக்கின்றது.
- இந்தியக் குடியரசுத் தலைவர், பிரதமர், அவசர ஊர்தி வாகனங்கள் & அமலாக்கத் துறை வாகனங்கள், சீருடையில் பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் மகிழுந்துகள் உள்ளிட்ட 29 வகை வாகனங்கள் இந்த ஒற்றைப்படை இரட்டைப்படை வாகன எண் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளன.
- இந்தத் திட்டத்தின் கீழ், பெண்கள் மட்டுமே தனியாக ஓட்டிச் செல்லும் வாகனங்கள், பெண்களை மட்டுமே கொண்டுள்ள மகிழுந்துகள் மற்றும் 12 வயதுக்கு குறைவான குழந்தைகளுடன் வாகனத்தை இயக்கும் பெண்கள் ஆகியோருக்கு விலக்கு அளிக்கப்பட இருக்கின்றது.
- மேலும் மாற்றுத் திறனாளிகளைக் கொண்டுள்ள மகிழுந்துகள் மற்றும் மின்சார வாகனங்கள் ஆகியவற்றிற்கும் இந்தத் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப் படுகின்றது.
- ஒற்றைப்படை இரட்டைப்படை வாகன எண் திட்டத்திலிருந்து இரு சக்கர வாகனங்களுக்கு விலக்கு அளிக்கப் படுகின்றன.
- தில்லி அரசைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் முதல்வரின் வாகனங்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் விதிவிலக்கு கிடையாது.
- இந்தத் திட்டத்தின் கீழ் தனியாருக்குச் சொந்தமான அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவில் இயங்கும் வாகனங்கள் மற்றும் இருவகை ஆற்றலால் இயங்கும் கலப்பு எஞ்சின் கொண்ட வாகனங்களுக்கும் இந்த முறை விலக்கு அளிக்கப்பட மாட்டாது.

## கான்பூர் - உலகின் மிகவும் மாசுபட்டுள்ள நகரம்

- கின்னஸ் உலக சாதனைகளின் சமீபத்திய பதிப்பில் உத்தரப் பிரதேசத்தின் கான்பூர் நகரமானது உலகின் மிகவும் மாசுபட்டுள்ள நகரத்திற்கான பிரிவில் இடம் பெற்றுள்ளது.
- உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்ட (WHO - World Health Organization) ஒரு அறிக்கையின் படி, உலகில் மிகவும் மாசுபட்டுள்ள நகரம் வட இந்தியாவில் உள்ள கான்பூர் நகரம் ஆகும். இது 2016 ஆம் ஆண்டில் சராசரியாக 173 மைக்ரோகிராம் / மீ 3 என்ற நிலையில் PM2.5 அளவினைக் கொண்டிருந்தது.
- இந்த PM2.5 (Particulate Matter – நுண்மத் துகள்) நிலையானது WHO பரிந்துரைத்த 10 மைக்ரோகிராம் / மீ 3 என்ற அதிகபட்ச அளவை விட 17 மடங்கு அதிகமாகும்.
- ‘கின்னஸ் உலக சாதனைகள் 2020’ என்ற புத்தகமானது ஆயிரக்கணக்கான புதிய சாதனைகளின் தலைப்புகளையும் அச்சாதனைகளை வைத்திருப்பவர்களையும் பட்டியலிடுகின்றது.
- இது ஆண்டுதோறும் புத்தக வெளியீட்டாளரான பென்குயின் ரேண்டம் ஹவுஸ் என்ற பதிப்பகத்தால் வெளியிடப் படுகின்றது.

## டெல்லி மற்றும் உத்தரப் பிரதேசத்தில் காற்று மாசுபாடு

- டெல்லி மற்றும் தேசியத் தலைநகர்ப் பகுதியில் காற்று மாசு அளவு அபாயகரமான அளவிற்கு அதிகரித்துள்ளது.
- தடிமனான புகை மூட்டத்தினால் காணும் நிலை (Visibility) கணிசமாகக் குறைந்து காணப் பட்டது.
- காற்றின் தரக் குறியீடு (Air Quality Index - AQI) பல இடங்களில் 'மிகக் கடுமையான' வகையைச் சேர்ந்ததாக இருந்தது.
- சில இடங்களில் இது 625 ஆக உயர்ந்தது.

***காற்றின் தரக் குறியீடு பின்வருமாறு கருதப் படுகிறது***


- 0-50 'நல்லது',
- 51-100 'திருப்திகரமாக',
- 101-200 'மிதமானதாக',
- 201-300 'மோசமான',
- 301-400 'மிகவும் மோசமான', மற்றும்
- 401-500 'கடுமையானது'.
- 500க்கு மேல் உள்ள எதுவும் 'மிகக் கடுமையான அவசரநிலை' என்ற பிரிவின் கீழ் வரும்.

| Index Value | Name | Color | Advisory |
|---|---|---|---|
| 0 to 50 | Good | Green | None |
| 51 to 100 | Moderate | Yellow | Unusually sensitive individuals should consider limiting prolonged outdoor exertion |
| 101 to 150 | Unhealthy for Sensitive Groups | Orange | Children, active adults, and people with respiratory disease, such as asthma, should limit prolonged outdoor exertion |
| 151 to 200 | Unhealthy | Red | Children, active adults, and people with respiratory disease, such as asthma, should avoid prolonged outdoor exertion; everyone else should limit prolonged outdoor exertion |
| 201 to 300 | Very Unhealthy | Purple | Children, active adults, and people with respiratory disease, such as asthma, should avoid outdoor exertion; everyone else should limit outdoor exertion |
| 301-500 | Hazardous | Maroon | Everyone should avoid all physical activity outdoors. |

***அதிக மாசுபாடு***

- காற்றின் தரக் குறியீட்டின் 'கடுமையான பிரிவில்' (400) உள்ள நாட்டின் மிக மாசுபட்ட முதல் 10 இடங்களில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஆறு நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையின்படி இது மிகவும் ஆபத்தான சூழ்நிலையாகும்.

- 24 மணி நேரங்களுக்கு (நவம்பர் 3 ஆம் தேதி மாலை 4 மணி முதல் நவம்பர் 4 ஆம் தேதி மாலை 4 மணி வரை) கணக்கிடப்பட்ட சராசரி AQIயானது ஆய்வு செய்யப்பட்ட 97 நகரங்களில் ஹரியானாவில் உள்ள ஜிந்த் என்னுமிடத்தில் அதிக நச்சுக் காற்று இருப்பதாகக் காட்டியது.
- மொத்தம் 15 நகரங்களில் சராசரியாக 400க்கும் மேல் AQI இருந்தது.
- இந்நகரங்களில் டெல்லியைத் தவிர ஒன்பது நகரங்கள் உத்தரப் பிரதேசத்திலும் ஐந்து நகரங்கள் ஹரியானாவிலும் உள்ளன.
- ஜிந்த் என்ற இடத்தைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசத்தில் உள்ள எட்டு நகரங்கள் மிகவும் நச்சுத் தன்மையுள்ள காற்றின் தரம் கொண்டதாகக் காணப் பட்டன.
- 'நல்ல' காற்றின் தரம் கொண்ட நகரங்கள் இந்தியாவில் நான்கு மட்டுமே உள்ளன. அவற்றில் இரண்டு நகரங்கள் கேரளாவில் உள்ளன.
- கேரளாவின் கொச்சியில் உள்ள புறநகர்ப் பகுதியான எலூரில் AQI அளவானது 25 என்ற அளவில் சிறந்த காற்றின் தரத்தைப் பதிவு செய்துள்ளது.
- எலூரைத் தொடர்ந்து மும்பை அருகே தானே (AQI 45), கேரளாவில் திருவனந்தபுரம் (AQI 49), ராஜஸ்தானில் கோட்டா (AQI 50) ஆகியவை சிறந்த காற்றின் தரத்தைக் கொண்டுள்ளன.



***மாசுபாடு குறித்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பு***

- விவசாய நிலங்களில் தாளடிகளை எரிக்கும் முறையை ஒழிக்க வேண்டும் என்று பஞ்சாப் மற்றும் ஹரியானா அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- நீண்ட காலமாக மாசுபடுவதைத் தடுக்க மத்திய அரசு, தில்லி, பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில அரசாங்கங்கள் ஆகியவற்றிடமிருந்து தீர்விற்கான ஒரு வழிகாட்டுதலையும் நீதிமன்றம் கோரியுள்ளது.

***வகைப்படுத்தப்பட்ட பதிலெதிர்ப்பு செயல் திட்டம் (GRAP)***

- இது 2016 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டு, அதே ஆண்டில் உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப் பட்டது.
- இத்திட்டம் இயல்பாகவே படிப்படியான நடவடிக்கைகளைக் கொண்டுள்ளதால் காற்றின் தரம் மோசமான நிலையிலிருந்து மிக மோசமான நிலைக்கு மாறும் போது, பட்டியலிடப்பட்ட நடவடிக்கைகள் சில அப்போது பின்பற்றப்பட வேண்டும்.
- காற்றின் தரம் கடுமையான நிலையை அடைந்தால், பள்ளிகளை மூடுவது மற்றும் ஒற்றைப்படை- இரட்டைப் படை வாகன எண் பங்கீட்டு முறையைச் செயல்படுத்துவது பற்றி GRAP குறிப்பிட்டுள்ளது.
- தில்லி, உத்தரப் பிரதேசம், ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள 13 வெவ்வேறு அரசு அமைப்புகளிடையேயான நடவடிக்கை மற்றும் ஒருங்கிணைப்பு இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படுகின்றது.



## நெகிழிக்காக அரிசி

- பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவிற்கு அருகே உள்ள பேயானன் என்ற பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தங்கள் நெகிழிக் குப்பைகளை ஒப்படைத்து அதற்குப் பதிலாக அரிசியைப் பெற்றுக் கொள்ளலாம்.
- கடலில் நெகிழி மாசுவை ஏற்படுத்தும் முன்னணி நாடுகளில் பிலிப்பைன்ஸ் நாடும் ஒன்றாகும்.
- நெகிழிக் கழிவுகளில் பாதிக்கும் மேலானது சீனா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வரும் ஐந்து நாடுகளிலிருந்துப் பெறப் படுகின்றது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் கூற்றுப்படி, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 300 மில்லியன் டன் நெகிழிக் கழிவுகள் உருவாக்கப் படுன்றன.
- இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளில் 9% மட்டுமே மறுசுழற்சி செய்யப் பட்டுள்ளன. இன்று, மறுசுழற்சிக்காக வெறும் 14% பிளாஸ்டிக் கழிவுகள் மட்டுமே சேகரிக்கப் படுகின்றன.

## தரிசு நில வரைபடத்தின் 5வது பதிப்பு - 2019

- மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் 2019 ஆம் ஆண்டிற்கான தரிசு நில வரைபடத்தின் 5வது பதிப்பை வெளியிட்டார்.
- இந்த வரைபடமானது நில வளங்கள் துறை மற்றும் தேசியத் தொலைநிலை உணர்வு மையம் ஆகியவற்றால் இணைந்து வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரைபடமானது தரிசு நிலம் குறித்த வலுவான புவியியல் தகவல்களை வழங்குகின்றது.
- இது பல்வேறு நில மேம்பாட்டு திட்டங்களின் மூலம் தரிசு நிலங்களை உற்பத்தி நிலைக்கு (நல்ல நிலை) மாற்றுவதற்கு உதவியாக இருக்கும்.
- தரிசு நில வரைபடம் – 2019 ஆனது நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களில் இருக்கும் பல்வேறு வகையான தரிசு நிலப் பகுதிகள் பற்றிய தகவலை வழங்குவதோடு, நிலச் சீரழிவை நிவர்த்தி செய்வதற்கும் அவை உதவியாக இருக்கும்.

## காலநிலை அவசரநிலை

- உயிரி அறிவியல் இதழில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வறிக்கையில், 11,258 பங்காளர்கள் (இந்தியாவிலிருந்து 69) உலகளாவிய காலநிலை அவசர நிலையை அறிவித்துள்ளனர்.
- அவர்கள் காலநிலை மாற்றம் குறித்தப் போக்குகள் மற்றும் இந்த அச்சுறுத்தலைத் தணிப்பதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை முன்வைத்தனர்.
- இந்த அறிக்கையின் தலைப்பு “உலக விஞ்ஞானிகள்” என்பதாகும்.
- விஞ்ஞானிகள் காலநிலை மாற்றத்தை சிறந்த முறையில் பிரதிநிதித்துவப்படுத்தும் "முக்கிய அறிகுறிகள்" என்று அழைக்கப்படும் நடவடிக்கைகளின் பட்டியலை முன்வைக்கின்றனர்.

## புதிய மரத் தவளை கண்டுபிடிப்பு

- ஊர்வன அறிவியல் துறையைச் சேர்ந்த ஆராய்சியாளர்கள் மேற்கு வங்கத்தில் ஒரு புதிய வகை மரத் தவளையைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இதற்கு பிரவுன் பிளாட்ச்டு பெங்கால் மரத் தவளை (பாலிபிடேட்ஸ் பெங்காலென்சிஸ்) என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் காணப்படும் மரத் தவளையின் ஒரு வகையான பாலிபிடேட்ஸ் இனத்தைச் சேர்ந்தது.
- இந்த வகைத் தவளையின் உடல் நிறமானது மஞ்சள்-பழுப்பு முதல் பச்சை-பழுப்பு வரை இருக்கும்.

## தெற்காசியச் சுற்றுச்சூழல் ஒத்துழைப்புத் திட்டம் - SACEP

- வங்க தேசத்தின் டாக்காவில் நடைபெற்ற தெற்காசியச் சுற்றுச்சூழல் ஒத்துழைப்புத் திட்டத்தின் (SACEP - South Asia Co-operative Environment Programme) 15வது கூட்டத்தில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் கலந்து கொண்டார்.
- இது இலங்கையின் கொழும்பு நகரைத் தலைமையிடமாகக் கொண்ட, அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அரசு அமைப்பாகும்.
- இது ஆசியப் பகுதியில் சுற்றுச்சூழலின் பாதுகாப்பு, மேலாண்மை மற்றும் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கும் ஆதரிப்பதற்கும் 1982 ஆம் ஆண்டில் தெற்காசியா அரசாங்கங்களால் நிறுவப்பட்டது.
- SACEP அமைப்பில் ஆப்கானிஸ்தான், வங்க தேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.
- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் பிராந்தியக் கடல் திட்டத்தின் கீழ் வரும் தெற்காசியக் கடல் திட்டத்திற்கான செயலகமாகவும் SACEP செயல்படுகின்றது.

## அமெரிக்கா - பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து விலகல்

- அமெரிக்கர்கள் மீதான "நியாயமற்ற பொருளாதாரச் சுமையை" மேற்கோள் காட்டி காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்கா ஐக்கிய நாடுகளுக்கு முறையாக அறிவித்தது.
- அமெரிக்காவின் அதிபரான டொனால்ட் டிரம்ப் 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்திலிருந்து வெளியேறும் திட்டத்தினை அறிவித்திருந்தார்.
- முதலாவது சர்வதேச காலநிலை ஒப்பந்தமான கியோட்டோ உடன்படிக்கையிலிருந்து அமெரிக்கா விலகுவதாக 2001 ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க அதிபரான ஜார்ஜ் டபிள்யூ புஷ் அறிவித்தார்.
- பாரிஸ் ஒப்பந்தம் என்பது பசுமை இல்ல வாயு உமிழ்வின் குறைப்பு, தழுவல் மற்றும் நிதி ஆகியவற்றைக் கையாளும் காலநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பின் கீழ் உள்ள ஒரு ஒப்பந்தமாகும்.


- இது 2015 ஆம் ஆண்டில் பாரிஸில் நடைபெற்ற உறுப்பு நாடுகளின் மாநாடு - 21 அல்லது 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- பாரிஸ் ஒப்பந்தமானது நியூயார்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 அன்று (புவி தினம்) கையொப்பமிடத் திறந்துவிடப் பட்டது.

## தாளடி எரிப்பு பற்றிய அறிக்கை

- ICAR (Indian Council of Agricultural Research - இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம்) கிரீம்ஸ் ஆய்வக அறிக்கையானது, 2018 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடப் படும்போது தற்பொழுது தாளடி எரிப்பு நிகழ்வுகளில் 12% குறைந்துள்ளது என்று கூறியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாத நிலவரப்படி, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் மற்றும் ஹரியானா ஆகிய மூன்று மாநிலங்களில் தாளடி எரிப்பு நிகழ்வுகள் மேற்கொள்ளப் பட்டன.
- "பஞ்சாப், உத்தரப் பிரதேசம், ஹரியானா மற்றும் தில்லியின் தேசியத் தலைநகர்ப் பகுதி ஆகிய இடங்களில் பயிர்க் கழிவுகளை நிர்வகிப்பதற்கான வேளாண் நடைமுறைகளை ஊக்குவித்தல்" என்ற மத்திய அரசின் திட்டமே இந்தத் குறைந்த அளவிலான தாளடி எரிப்பு நிகழ்விற்கு ஒரு முக்கியக் காரணம் என்று அந்த அறிக்கை கூறுகின்றது.
- இந்த மூன்று மாநிலங்களில் எரிக்கப் படும் தாளடி எரிப்பு காரணமாக புது தில்லி மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது.
- தில்லியை அடையும் தாளடி எரிப்புப் புகையானது மேற்கத்திய இடையூறுகளால் பெரிதும் தாக்கம் பெறுகின்றது.
- சமீபத்தில், சென்னையைச் சேர்ந்த எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அமைப்பானது மியான்மரின் நய்பைதவ் என்ற இடத்தில் ஒரு அரிசி உயிரிப் பூங்காவை நிறுவியுள்ளது. இதற்கு மத்திய வெளியுறவு அமைச்சகத்தால் நிதியளிக்கப் பட்டுள்ளது. இந்தப் பூங்கா இந்தியக் குடியரசுத் தலைவரால் திறந்து வைக்கப் பட்டது.
- காகிதம், அட்டை மற்றும் விலங்குத் தீவனம் உள்ளிட்ட பொருள்களைத் தயாரிப்பதற்குத் தாளடிகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இந்த அரிசி உயிரிப் பூங்கா எடுத்துரைக்கின்றது.

***எம்.எஸ். சுவாமிநாதனின் தீர்வு***

- விவசாயிகளைக் குறை கூறுவது எந்த தீர்வையும் அளிக்காது.
- அதற்கு பதிலாக, அரிசி உயிரிப் பூங்காக்களை அமைப்பதன் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் கால்நடைத் தீவனம் ஆகியவற்றை உருவாக்க முடியும்.
- அரிசி வைக்கோலில் பல்வேறு பொருளாதாரப் பயன்பாடுகள் உள்ளன.
- தென்னிந்தியாவில், விலங்குகளின் தீவனமாக பொருளாதார மதிப்பு மிக்கதாக இந்தத் தாளடிகள் கருதப் படுவதால் அவை அங்கு எரிக்கப் படுவதில்லை.




## நெல்லோப்டோட்ஸ் கிரெட்டா

- 16 வயதான ஸ்வீடிஷ் சுற்றுச்சூழல் பிரச்சாரகரான ஸ்வீடன் காலநிலை ஆர்வலர் கிரெட்டா துன்பெர்க்கின் பெயரில் ஒரு வண்டு இனத்திற்கு நெல்லோப்டோட்ஸ் கிரெட்டா என்று பெயரிடப் பட்டுள்ளது.
- லண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் விஞ்ஞானிகள் இதற்கு அவரது பெயரிட்டனர்.
- நெல்லோப்டோட்ஸ் கிரெட்டா வண்டினம் முதன்முதலில் கென்யாவில் 1960 ஆம் ஆண்டுகளில் கண்டுபிடிக்கப் பட்டது.
- பின்னர் இது 1978 ஆம் ஆண்டில் லண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப் பட்டது.



## உயிரி செங்கற்கள்

- ஹைதராபாத் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் புவனேஸ்வர் - கே.ஐ.ஐ.டி கட்டிடக்கலைப் பள்ளி ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் இணைந்து விவசாயக் கழிவுகளிலிருந்து உயிரிச் செங்கற்களை உருவாக்கியுள்ளனர்.
- உயிரிச் செங்கற்களானவை பெரும்பாலும் எரிக்கப்படுவதோடு முடிவடையும் விவசாயக் கழிவுகளை நிர்வகிக்க உதவுவதோடு மட்டுமல்லாமல், மலிவு விலையில் கட்டுமான பொருட்களையும் வழங்குகின்றன.
- இந்தியாவின் மொத்த வருடாந்திரக் கரியமில வாயு வெளியேற்றத்தில் 22 சதவீதத்திற்கும் அதிகமானவற்றிற்குக் கட்டுமானத் துறை காரணமாக உள்ளது.





## "பழுப்பு நிறத்திலிருந்து பச்சை நிறம்" என்ற ஒரு அறிக்கை – இந்தியா

- ஒரு உலகளாவிய அரசு சாரா நிறுவனமான "க்ளைமேட் டிரான்ஸ்பரன்சி" என்ற அமைப்பானது "பழுப்பு நிறத்திலிருந்துப் பச்சை நிறம் - 2019" என்ற தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகின் சராசரி வெப்பநிலையானது 1.5° செல்சியஸுக்கு மேல் உயராது என்பதை உறுதி செய்யும் ஒரே ஜி20 நாடு (ஜி20 அமைப்பில் உள்ள) இந்தியா என்று அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.
- புவி வெப்பமயமாதலுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட பாரிஸ் ஒப்பந்தத்தால் இந்த இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- ஜி20 அமைப்பில் உள்ள நாடுகள் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்தில் நான்கு பங்கைக் கொண்டுள்ளன. இந்த அமைப்பில் உள்ள நாடுகள் பெரிய அளவிலான கார்பன் உமிழ்வுகளைக் கொண்டுள்ளன.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இந்தியா முதலீடு செய்ததற்காக இந்த அறிக்கையானது இந்தியாவைப் பாராட்டியுள்ளது.

## IndAIR

❖ தேசியச் சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனமானது (National Environmental Engineering Research Institute - NEERI) அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி மன்றத்துடன் (Council of Scientific and Industrial Research - CSIR) இணைந்து கடந்த 60 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட காற்றின் தர ஆய்வுகளை ஆவணப்படுத்தக் கூடிய இந்தியாவின் முதலாவது வலைக் களஞ்சியத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ இது IndAIR (இந்திய காற்றுத் தர ஆய்வுகள் ஊடாடும் களஞ்சியம்) என்று பெயரிடப்பட்டுள்ளது.




❖ அனைவருக்கும் காற்றுத் தர ஆராய்ச்சியை கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

❖ 1905 ஆம் ஆண்டிலிருந்து இயற்றப்பட்ட நாட்டின் அனைத்து முக்கியமான சட்டங்களும் இதில் அடங்கும்.

❖ CSIR-NEERI என்பது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய அரசால் உருவாக்கப்பட்ட மற்றும் நிதியளிக்கப்படும் ஒரு ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.

❖ இது 1958 ஆம் ஆண்டில் நாக்பூரில் நிறுவப்பட்டது.

## சிக்னல் மீன் கேரளாவில் கண்டுபிடிப்பு

❖ கேரளப் பல்கலைக் கழகம் மற்றும் அமெரிக்காவின் பெருங்கடல் அறிவியல் அமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஒரு புதிய வகை சிக்னல் மீன் இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

❖ இது கேரள கடற்கரைக்கு அருகே, லட்சத் தீவுக் கடலின் ஆழமானப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

❖ இது டெரோப்சரோன் இன்டிகம் என்று அழைக்கப்படுகின்றது. இது இந்திய நீரில் காணப்படக் கூடிய இனத்தின் முதலாவது வகையாகும்.

❖ இந்த சிக்னல் மீன் ஆனது வழக்கத்திற்கு மாறான வண்ண அமைப்பைக் கொண்டுள்ளது.

அதன் மிகவும் சிறப்பு வாய்ந்த முதுகுத் துடுப்புகளைப் புரட்டுவதன் மூலம் அதே இனத்தின் மற்ற மீன்களுடன் தொடர்பு கொள்கின்றது.



## எத்தனால் உற்பத்தி

- சி-ஹெவி வகை கரும்புச் சக்கைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக பி-ஹெவி வகை கரும்புச் சக்கைகளில் இருந்து கூடுதல் எத்தனால் தயாரிப்பதற்கு சிறப்பு சுற்றுச்சூழல் அனுமதி தேவையில்லை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இதுபோன்ற அனைத்து திட்டங்களும் பி-ஹெவி வகை கரும்புச் சக்கை, கரும்பு சாறு, சர்க்கரைப் பாகு அல்லது சர்க்கரை ஆகியவற்றிலிருந்து கூடுதல் எத்தனால் உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்கம் கொண்டவை.
- சுற்றுச்சூழல் அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வடிசாராயத் தொழிற்சாலைகள் அல்லது சர்க்கரை ஆலைகளில் ஏற்படும் மாசுக்களுக்கு இது பொறுப்பேற்காது .
- இது விவசாயிகளுக்கும் சர்க்கரைத் தொழிலுக்கும் நன்மைகளைத் தருவதாக உள்ளது.

## நெகிழிப் பூங்காக்கள்

- நாட்டின் பல்வேறு பகுதிகளில் 6 நெகிழிப் பூங்காக்கள் நிறுவப்படும் என்று மத்திய இரசாயன மற்றும் உரத் துறை அமைச்சரான டி.வி.சதானந்த கவுடா அறிவித்துள்ளார்.
- இந்தப் பூங்காக்கள் அசாம், மத்தியப் பிரதேசம், ஒடிசா, ஜார்க்கண்ட் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் அமைய இருக்கின்றது.
- மத்திய பிரதேசத்தின் தமோட்டில் உள்ள ஒரு நெகிழிப் பூங்காவானது ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளது.
- இந்தத் திட்டமானது அபாயகரமான கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் மறுசுழற்சி, கருவிகளை உருவாக்குதல், வடிவமைத்தல் போன்றவற்றிற்கான பிளாஸ்டிக் உற்பத்தி அலகுகளை ஆதரிக்க ஒரு “பொதுவான உள்கட்டமைப்பை” வழங்குகின்றது.

## எந்தவொரு உயிரினமும் வசிக்காத பகுதி - டல்லோல், எத்தியோப்பியா

- எத்தியோப்பியாவில் உள்ள டல்லோல் புவிவெப்பப் பகுதியில் எந்தவொரு உயிரினமும் வசிக்காத ஒரு நீர்வாழ் சூழல் அமைப்பை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- டல்லோல் புவிவெப்பப் பகுதியில் சூடான, உப்புத் தன்மையுடைய, அதிக அமிலம் கொண்ட குளங்களில் எந்த வகையான நுண்ணுயிரிகளும் காணப் படவில்லை.

- டல்லோல் பகுதியானது பூமியின் வறண்ட மற்றும் வெப்பமான இடங்களில் ஒன்றாகக் கருதப் படுகின்றது.
- மேலும் இது கடல் மட்டத்திலிருந்து 125 மீ (410 அடி) கீழே அமைந்துள்ள மிகத் தாழ்வான நிலப்பரப்புகளில் ஒன்றாகும்.
- ஒரு கிரகத்தில் நீர் இருப்பது மட்டுமே உயிர் வாழ்வதற்குத் தகுதியானதாக இருக்காது என்று இந்த ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.



## உமிழ்வு இடைவெளி அறிக்கை – 2019


- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டமானது 2019 ஆம் ஆண்டிற்கான தனது 10வது உமிழ்வு இடைவெளி அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அமைப்பு இந்த அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுகின்றது.
- இந்த அறிக்கையானது 2030 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் உமிழ்வுகளுக்கும் பாரிஸ் ஒப்பந்தத்தின் 1.5° C மற்றும் 2° C என்ற இலக்குகளுடன் பொருந்தக்கூடிய உமிழ்வுகளுக்கும் இடையிலான இடைவெளியை மதிப்பிடுகின்றது.

### *இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டவைகள்*

- பசுமை இல்ல வாயு வெளியேற்றமானது கடந்த பத்து ஆண்டு காலத்தில் ஒரு ஆண்டிற்கு 1.5 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் உமிழ்வுகள் = $CO_2$க்கு சமமான 55.3 ஜிகா டன்கள்.
- பாரிஸ் ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்டாலும், தொழில்துறை வளர்ச்சிக்கு முந்தைய அளவை விட வெப்பநிலையானது 3.2° C ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### *இலக்கு*

- பாரிஸ் ஒப்பந்தத்தின் 1.5° C என்ற வெப்பநிலை இலக்கிற்குள் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த, 2020 மற்றும் 2030க்கு இடைப்பட்ட கால கட்டத்தில் உலகளாவிய பசுமை இல்ல வாயு உமிழ்வானது ஒவ்வொரு ஆண்டும் 7.6 சதவீதம் குறைய வேண்டும்.




***மாசுபடுத்துவதில் முன்னணியில் உள்ள நாடுகள்***

- அதிக மாசுபடுத்தும் நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்து முறையே மூன்றாவது பெரிய பசுமை இல்ல வாயு உமிழ்வு நாடாக இந்தியா விளங்குகின்றது.
- இந்தியாவின் தனிநபர் உமிழ்வானது அமெரிக்கா, சீனா மற்றும் ஜி20 அமைப்பில் உள்ள நாடுகளின் உமிழ்வுகளை விடக் குறைவாக உள்ளது.
- ஜி20 (19 நாடுகளைக் கொண்ட குழு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம்) அமைப்பானது 78% என்ற அளவில் அனைத்து உமிழ்வுகளுக்கும் காரணமாக உள்ளது.

## காலநிலை அவசரநிலை - ஐரோப்பிய நாடாளுமன்றம்

- அனைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் 2050 ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய பசுமை இல்ல வாயு உமிழ்வில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டுள்ளதன் காரணமாக ஐரோப்பிய நாடாளுமன்றம் உலகளாவிய "காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அவசர நிலையை" அறிவித்துள்ளது.
- இது ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரான பிரெஞ்சு தாராளவாதியான பாஸ்கல் கான்பின் என்பவர் வடிவமைத்த ஒரு தீர்மானம் ஆகும்.
- இதன் மூலம் ஐரோப்பாவானது காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அவசரநிலையை பிரகடனப் படுத்திய ஒரு முதல் கண்டமாக மாறுகின்றது.
- ஐரோப்பியப் பசுமை ஒப்பந்தத்தில் "2030 ஆம் ஆண்டளவில் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தின் 55% குறைப்பு" என்ற இலக்கையும் சேர்க்குமாறு புதிய ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயனையும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டியுள்ளனர்.

## ஆறாவது ஆசிய டென்ட்ரோக்ரோனாலஜி (மரத்தின் வளையங்கள் ஆராய்ச்சி) மாநாடு

- ஆறாவது ஆசிய டென்ட்ரோக்ரோனாலஜி மாநாடானது லக்னோவில் நடைபெற்றது.
- இந்தியாவில் இந்த மாநாடு நடத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- மர வளையங்களை ஆய்வு செய்வது டென்ட்ரோக்ரோனாலஜி எனப்படும்.
- மரத்தின் வளையங்களானவை அந்த மரத்தின் கடந்த காலத்தைப் பற்றி மட்டும் அல்லாமல், அது வாழும் சுற்றுச்சூழல் அமைப்பைப் பற்றியும் மற்ற பிற ஏராளமான தகவல்களையும் கொண்டுள்ளது.
- இந்த மாநாட்டில் கலந்து கொண்ட விஞ்ஞானிகள் "வெவ்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளிலிருந்துப் பெறப்படும் தாவரங்களின் மீதான கடந்தகாலப் புனரமைப்பின் மூலம் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் கணிக்க முடியும்" என்று கூறியுள்ளனர்.

# மாநிலச் செய்திகள்

## பொதுச் சுகாதார அவசர நிலை - டெல்லியில் காற்றின் தரம்

- கடுமையான மாசு அளவானது ஐந்தாவது நாளாக தேசியத் தலைநகரப் பகுதியை (National Capital Region - NCR) தொடர்ந்து மூச்சுத் திணறச் செய்துள்ளதால் தில்லி அதிகாரிகள் பொதுச் சுகாதார அவசர நிலையை அறிவித்துள்ளனர்.
- சுற்றுச்சூழல் மாசு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணையத்தின் (Environment Pollution (Prevention and Control) Authority - EPCA) தலைவரான பூரே லால் என்பவரின் கூற்றுப் படி, காற்றின் தரமானது இப்போது கடுமையான பாதிப்பு + என்ற நிலையில் இருக்கின்றது.
- தீபாவளியிலிருந்துத் தேசியத் தலைநகரப் பகுதியில் நுண்மத் துகள்கள் 2.5ன் செறிவானது (particulate matter - PM) மிகவும் அபாயகரமான நிலையை எட்டியுள்ளது.
- மத்தியப் புவி அறிவியல் அமைச்சகத்தின் காற்றின் தரம் & வானிலை முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி (SAFAR - System of Air Quality and Weather Forecasting and Research) அமைப்பின் படி, PM2.5ன் செறிவானது அதன் மிக உயர்ந்த அளவான 411 என்ற அளவைத் தொட்டுள்ளது.
- காற்றுத் தரக் குறியீடானது (AQI - Air Quality Index) பின்னர் 484 (கடுமையான) மற்றும் 550 (கடுமையான+) என்ற நிலைகளை எட்டியுள்ளது.
- காசியாபாத், நொய்டா மற்றும் கிரேட்டர் நொய்டாவில் AQI ஆனது 688 என்ற “ஆபத்தான” நிலைக்கு உயர்ந்துள்ளது.
- தில்லியின் மாசுபாட்டில் உயிரி எரிபொருளின் பங்கானது மதிப்பிடப்பட்ட 25% அளவிற்கு மாறாக 46% என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.
- பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் பயிர் எரிப்பானது அதிகரித்துள்ளது.

## ஒடிசா - சமூகப் பதிவு

- அனைத்து நலத் திட்டங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட குடும்ப விவரங்களின் 'ஒற்றை மூலத்தை' உருவாக்க, ஒடிசா மாநில அரசு ஒரு சமூகப் பதிவேட்டைக் கொண்டு வர முடிவு செய்துள்ளது.
- அம்மாநில அரசானது புதிய திட்டத்தை வகுக்கவும் பயனாளியை இலக்காகக் கொள்ளவும் குடிமகனின் சமூக - பொருளாதாரத் தரவை அணுகுவதன் மூலம் சிறந்த பயனாளிகளை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பதிவகமானது இலக்காக உள்ள பயனாளிகளை அடையாளம் கண்டு, போலியான மற்றும் தகுதியற்றப் பயனாளிகளை களையெடுக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- விவசாயிகளுக்கான அம்மாநிலத்தின் முதன்மைத் திட்டமான 'கலியா' என்ற திட்டத்தின் கீழ் சமீபத்தில் 3.41 லட்சம் தகுதியற்ற பயனாளிகளுக்கு ₹170 கோடி மானியம் வழங்கப் பட்டதால் இந்த நடவடிக்கை தற்போது முக்கியத்துவம் பெறுகிறது.

## புத்த மதக் கட்டிடம் இடிபாடு - தொட்டலகொண்டா, ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் அருகேயுள்ள தொட்டலகொண்டாவின் 2000 ஆண்டு பழமையான புத்த மதப் பாரம்பரியத் தளத்தின் மஹாஸ்தூபம் ஒன்று சமீபத்தில் பெய்த மழையின் போது இடிந்து விழுந்தது.
- இது சாதவாகனர்கள் காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.



## ஹரியானாவின் புதிய முதல்வர்

- ஹரியானாவின் புதிய முதல்வராக மனோகர் லால் பதவியேற்றார்.
- ஆளுநர் சத்யதேவ் நாராயண் ஆர்யா சண்டிகரில் ராஜ் பவனில் நடந்த விழாவில் அவருக்கு பதவிப் பிரமாணம் மற்றும் ரகசியக் காப்புப் பிரமாணம் ஆகியவற்றை வழங்கினார்.
- தொடர்ந்து இரண்டாவது முறையாக மனோகர் லால் முதல்வராகப் பொறுப்பேற்கிறார்.



## பார்வையாளர்களுக்கான நுழைவுச் சட்டம்

- மேகாலயா குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டம் 2016 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கு மேகாலயா மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திருத்தமானது மாநிலத்திற்குள் சட்டவிரோதமாக குடியேறுவதைத் தடுக்க மாநில உள் அனுமதி (Inner Line Permit - ILP) முறைக்கான கோரிக்கைகளை உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டம் முன்பு குடியிருப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாக இருந்தது.
- இந்தத் திருத்தமானது மாநிலத்தில் 24 மணி நேரத்திற்கும் மேலாக செலவிட விரும்பும் பார்வையாளர்களுக்கு அவர்களது நுழைவு குறித்தப் பதிவைக் கட்டாயமாக்குகிறது.
- மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கு இந்தப் புதிய நுழைவு விதியிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

### *மாநில உள் அனுமதி முறை*

- மாநில உள் அனுமதி முறையானது 1873 ஆம் ஆண்டின் வங்காள கிழக்கு எல்லை ஒழுங்குமுறைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.
- தற்போது இந்த முறை நடைமுறையில் உள்ள மூன்று மாநிலங்களுக்குள் நுழைய நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்த “வெளியாட்களுக்கு” சிறப்பு அனுமதி தேவைப்படும்.
- இந்த முறையானது தற்போது அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் நடைமுறையில் உள்ளது.

## அசாமின் பாவோனா நடனம்

- அசாமின் பாவோனா நடனமானது இப்போது ஆங்கில வடிவில் அபுதாபியில் அரங்கேற்றப் பட்டுள்ளது.
- கிட்டத்தட்ட 500 ஆண்டுகளுக்கு முன்னரே புனித சீர்திருத்தவாதியான ஸ்ரீமந்த சங்கர்தேவரால் பிரஜாவலியின் இலக்கிய மொழியுடன் இந்த நடனம் பரிசோதிக்கப் பட்டது.
- அசாமில் பாவோனா ஒரு பாரம்பரியப் பொழுதுபோக்கு நடனம் ஆகும்.
- புதிய வைணவ இயக்கத்தைத் தொடங்கிய ஒரு புனிதச் சீர்திருத்தவாதியான ஸ்ரீமந்த சங்கர்தேவாவின் உருவாக்கம் தான் இந்த நடனமாகும்.

## திப்பு சுல்தான் – பாடத் திட்டத்திலிருந்து நீக்கம்

- கர்நாடக மாநில அரசானது திப்பு சுல்தான் பற்றிய அத்தியாயங்களை தனது மாநிலப் பள்ளி பாடத் திட்டத்திலிருந்து நீக்கியுள்ளது.
- இந்த ஆண்டு திப்பு ஜெயந்தி விழாவினை ரத்து செய்ய அம்மாநில அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளது. இந்த விழாவானது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- மைசூர்ப் புலி என்றும் அழைக்கப்படும் திப்பு சுல்தான் 1782 ஆம் ஆண்டு முதல் 1799 ஆம் ஆண்டு வரை முந்தைய மைசூர்ப் பகுதியின் ஆட்சியாளராக இருந்தார்.

## மூங்கில் தொழில்நுட்பப் பூங்காக்கள்

- மத்திய வட கிழக்குப் பகுதி அமைச்சகமானது (North Eastern Council - NEC) ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களில் புதிய மூங்கில் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்க இருக்கின்றது.
- NEC அமைச்சகத்தின் கீழ் உள்ள CBTC (பிரம்பு மற்றும் மூங்கில் தொழில்நுட்ப மையம் - Cane and Bamboo Technology Centre) ஆனது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் தலைமை அமைப்பாகும்.
- ஜம்மு, ஸ்ரீநகர் மற்றும் லே ஆகிய இடங்களில் மூன்று புதிய மூங்கில் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைய இருக்கின்றன.

## 6 லட்சம் தீபங்கள்

- ஆறு லட்சத்துக்கும் மேற்பட்ட தீபங்களை சரயு ஆற்றங்கரையில் ஒளிரச் செய்து அயோத்தி நகரில் புதிய வரலாறு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த அரிய செயலின் மூலமாக உத்தரப் பிரதேச அரசு ஏற்கனவே எண்ணெய் விளக்குகளை மிகப் பெரிய அளவில் காட்சிப்படுத்திய தனது சொந்த கின்னஸ் உலக சாதனையை முறியடித்துள்ளது.
- இந்த ஆண்டில் சரயு ஆற்றங்கரையில் ஏற்றப் பட்ட மண் விளக்குகளின் எண்ணிக்கையானது கடந்த ஆண்டில் ஏற்றப் பட்ட தீபங்களின் எண்ணிக்கையான மூன்று லட்சம் என்பதற்கும் அதிகமாக இருந்தது.

## ஆந்திராவில் கோட்டிப்ரோலு

- இன்றைய ஆந்திர மாநிலத்தில் சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்வர்ணமுகி ஆற்றின் கரையில் ஒரு கடல்சார் தொழில் மையம் இருந்ததை இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனம் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளது.
- இங்கு கிடைக்கப்பட்ட செங்கற்களின் அளவுகள் கிருஷ்ணா பள்ளத்தாக்கில் ஆட்சி செய்த சாதவாஹனர்கள்/இச்சவாகு மன்னர்கள் ஆகியோர் காலத்திற்கு இணையானவை.
- மேலும், விஷ்ணுவின் ஆயுதமேந்திய நான்குச் சிற்பங்களையும் இந்தக் குழு இங்கு கண்டுபிடித்துள்ளது. அதன் தலைக் கவசம் மற்றும் ஆடைகளின் பகுப்பாய்வின் படி இந்தச் சிற்பங்கள் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை என அறியப் படுகின்றன.

## தில்லியில் குறைந்தபட்ச ஊதிய உயர்வு

- தில்லி மாநில அரசால் தீர்மானிக்கப்பட்ட ஊதிய உயர்வினால் தேசிய தலைநகர்ப் பகுதியில் சுமார் 55 லட்சம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பயனடைய இருக்கின்றனர்.
- சமீபத்திய அறிவிப்பின் படி, திறன் பெறாத தொழிலாளர்கள் மாதத்திற்கு ரூ 14,842 ஊதியத்தையும் பகுதித் திறன் பெற்ற தொழிலாளர்கள் மாதத்திற்கு ரூ 16,341 ஊதியத்தையும் திறன் பெற்ற தொழிலாளர்கள் ரூ 17,991 ஊதியத்தையும் தற்போது பெற இருக்கின்றனர்.
- மேலும் சமீபத்தில் உச்ச நீதிமன்றத்தினாலும் இதற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- தில்லியின் குறைந்தபட்ச ஊதியமானது தேசிய அளவிலான குறைந்தபட்ச ஊதியத்தை விட மூன்று மடங்கு அதிகம் ஆகும்.
- தேசிய அளவில் குறைந்தபட்ச ஊதியம் மாதத்திற்கு ரூ 4,628 ஆக இருக்கின்றது. தில்லியில் இது மாதத்திற்கு ரூ 14,842 ஆக உள்ளது.

## பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம் – தில்லி

- தில்லி மாநில அமைச்சரவையானது தேசிய தலைநகர்ப் பகுதியில் இயங்கும் பேருந்துகளில் பெண்கள் இலவசப் பயணம் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.
- இது ஒரு தன்னார்வத் திட்டமாகும். மேலும் பெண் பயணிகள் இந்த இலவசப் பயணம் வேண்டாம் என்பதையும் தேர்வு செய்து கொள்ளலாம்.
- கடந்த ஜூன் மாதத்தில், தில்லியில் இயங்கும் மெட்ரோ மற்றும் பேருந்துகளில் பெண்களுக்கான இலவசப் பயணத்தைத் தில்லி அரசு அறிவித்தது.
- மெட்ரோ ரயில் சேவைகளைப் பொறுத்தவரை மத்திய அரசு அதில் ஒரு பங்குதாரராக உள்ளது. ஆனால் நகரப் பேருந்துகள் தில்லி அரசாங்கத்தின் அதிகார எல்லைக்குள் வருகின்றன.

## குஜராத் தீவிரவாத எதிர்ப்புச் சட்டம்

- குஜராத் தீவிரவாதக் கட்டுப்பாடு மற்றும் முறைசார் குற்றங்கள் (Gujarat Control of Terrorism and Organised Crime - GCTOC) என்ற மசோதாவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தனது ஒப்புதலை வழங்கியுள்ளார்.

- புதிய சட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று இடைமறித்து கேட்கப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் ஆகும். இது தற்பொழுது ஒரு சட்டப்படியான சான்றாகக் கருதப்படும்.
- இந்த மசோதாவானது ஒரு சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்குவதற்கும் சிறப்பு அரசு வழக்குரைஞர்களை நியமிப்பதற்கும் வழிவகை செய்கின்றது.
- முன்னதாக குஜராத் முறைசார் குற்றக் கட்டுப்பாடு மசோதா (Gujarat Control of Organised Crime - GUJCOC) என்று பெயரிடப்பட்ட இந்த மசோதாவானது 2004 ஆம் ஆண்டு முதல் மூன்று முறை குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெறத் தவறிவிட்டது.

## ஒடிசா பேரிடர் தயார்நிலை நாள் கண்காட்சி

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 29 ஆம் தேதியன்று ஒடிசா பேரிடர் தயார்நிலை நாள் மற்றும் பேரிடர் குறைப்புக்கான தேசிய தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இது தொடர்பாக ஒரு கண்காட்சி தொடங்கப் பட்டுள்ளது.
- 1999 ஆம் ஆண்டு "சூப்பர் சூறாவளி" என்ற சூறாவளி ஏற்படுத்திய அழிவை நினைவு கூறுவதற்கும் எதிர்காலப் பேரழிவுகளுக்கு நம்மை தயார்படுத்துவதற்கும் இந்நாள் அனுசரிக்கப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டிற்கான ஒடிசா பேரிடர் தயார்நிலை தினத்தின் கருப்பொருள் 'பேரிடர் எதிர்திறனுக்காகச் சமூகத்தை மேம்படுத்துதல்' என்பதாகும்.

## 'ஒடிசா மோ பரிவார்' முன்னெடுப்பு

- ஒடிசா மாநில முதல்வர் மற்றும் பிஜு ஜனதா தளம் கட்சியின் தலைவர் நவீன் பட்நாயக் 'ஒடிசா-மோ பரிவார்' (ஒடிசா என் குடும்பம்) என்ற தனது கட்சியின் ஒரு சமூக சேவை முன்னெடுப்பைத் தொடங்கினார்.
- இது சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இரத்த தானம் மற்றும் ஆபத்துக் காலத்தில் ஒடிசா மக்களின் நலனை ஊக்குவிப்பது போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் ஒடிசா மக்களை மீட்பதற்கும் உதவும்.
- இந்த முயற்சி மறைந்த ஒடிசா மாநில முன்னாள் முதல்வர் பிஜு பட்நாயக்கிற்கு மரியாதை செலுத்தும் விதமாக ஏற்படுத்தப் பட்டுள்ளது.

## சுரங்க பவாடி - பண்டைய நீர் வழங்கல் அமைப்பு

- கர்நாடகாவில் நிலத்தடிச் சுரங்கங்கள் வழியாக நீர் வழங்குவதற்கான பண்டைய "கரேஸ் அமைப்பின்" ஒருங்கிணைந்த பகுதியான சுரங்க பவாடியானது 2020 ஆம் ஆண்டிற்கான உலக நினைவுச் சின்ன கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.
- உலக நினைவுச் சின்னங்கள் நிதியம் (World Monuments Fund - WMF) என்ற ஒரு அரசு சாரா நிறுவனத்தால் "தக்காணப் பீடபூமியின் பண்டைய நீர் அமைப்பு" என்ற பிரிவின் கீழ் இந்த நினைவுச் சின்னம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.




- உலகெங்கிலும் உள்ள பண்டைய நினைவுச் சின்னங்களை மறுசீரமைப்பதை WMF அமைப்பு கண்காணிக்கின்றது.
- கரேஸ் நிலத்தடி அமைப்பானது 16 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பீஜப்பூர் சுல்தானகத்தின் மன்னரான முதலாம் அலி அடில் ஷா என்பவரால் கட்டப்பட்டது.
- இவரது வாரிசான இரண்டாவது இப்ராஹிம் அடில் ஷா என்பவர் இதை வலுப்படுத்த அதில் சில கூடுதல் கட்டமைப்புகளைச் சேர்த்தார்.
- ‘கரேஸ்’ ஆனது உலகின் மிகச் சிறந்த நீர் வழங்கல் அமைப்புகளில் ஒன்றாக நம்பப் படுகிறது. ஆனால் பராமரிப்பு இல்லாததால் இது மோசமான நிலையில் உள்ளது.

## மிகப்பெரிய சிவலிங்கம் - கேரளா

- கேரளாவின் செங்கல் கிராமத்தில் உள்ள மகேஸ்வரம் ஸ்ரீ சிவ பார்வதி கோயிலில் 111.2 அடி கொண்ட சிவலிங்கமானது இந்தியாவில் இருக்கும் இது போன்ற ஒரு உயரமான அமைப்பிற்காக இந்திய சாதனைப் புத்தகப் பதிவில் இடம் பிடித்துள்ளது.
- இதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டால், உயரம் மற்றும் அகலத்தின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய சிவலிங்கமாக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறும்.
- தற்போது, இச்சாதனையானது கர்நாடகாவின் கோலாரில் உள்ள கோட்டிலிங்கேஸ்வரர் கோயிலிடம் உள்ளது. இதன் உயரம் 108 அடி (33 மீ) ஆகும்.

## இணைய அணுகல் – கேரளா

- கேரள மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள சுமார் 2 மில்லியன் குடும்பங்களுக்கு "இலவச" அதிவேக இணைய இணைப்பை வழங்க கண்ணாடி இழைசார் வலையமைப்புத் திட்டத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இணைய அணுகலை 'குடிமக்களின் அடிப்படை உரிமையாக' ஆக்குவதாக கேரள அரசு ஏற்கனவே உறுதியளித்துள்ளது.
- பின்லாந்து, எஸ்தோனியா, பிரான்சு, ஸ்பெயின், கிரீஸ், கோஸ்டா ரிகா போன்ற ஒரு சில நாடுகள் மட்டுமே இணையத்தை "அடிப்படை மனித உரிமை" என்று அறிவித்துள்ளன.

## குடியரசுத் தலைவர் ஆட்சி – மகாராஷ்டிரா

- மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், எந்தவொரு பெரிய கட்சியும் அல்லது தேர்தலுக்கு முந்தைய கூட்டணிகளும் அரசாங்கத்தை அமைப்பதற்கான பெரும்பான்மையைப் பெறவில்லை.

**MAHARASHTRA**

**2019 Assembly election**

TOTAL SEATS **288**

| | Seats won | 2014 Seats won | Trends |
|---|---|---|---|
| BJP | 105 | 122 | -17 |
| Shiv Sena | 56 | 63 | -7 |
| INC | 44 | 42 | +2 |
| NCP | 54 | 41 | +13 |
| Others | 29 | 20 | +9 |

- எனவே, மகாராஷ்டிரா மாநில ஆளுநர் பகத் சிங் கோஷ்யாரி அம்மாநில சட்டமன்றத்தில் இருக்கும் மிகப்பெரிய கட்சியை ஒரு பெரும்பான்மை கொண்ட அரசை உருவாக்க அழைப்பு விடுத்தார்.
- இந்த விருப்பத் தேர்வு தோல்வியுற்றதால், அரசாங்கத்தை அமைப்பதற்காக அம்மாநிலத்தில் உள்ள இரண்டாவது பெரிய மற்றும் மூன்றாவது பெரிய கட்சிகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.
- அதன் பின்னர் அரசியலமைப்பின் 356 (1)வது சரத்தின் கீழ் அம்மாநிலத்தில் குடியரசுத்

தலைவர் ஆட்சியை அமல்படுத்துமாறு அம்மாநில ஆளுநர் அறிக்கை ஒன்றை குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார்.

- ❖ பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவையானது அம்மாநில ஆளுநரால் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது. மகாராஷ்டிரா தற்போது குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் உள்ளது.
- ❖ அம்மாநில சட்டமன்றமானது தற்காலிக இடைநீக்க நிலையில் வைக்கப்பட இருக்கின்றது.

## கர்நாடக மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கம்

- ❖ கர்நாடகாவில் 17 சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை இந்திய உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. ஆனால் அம்மாநிலத்தில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல்களில் அவர்கள் போட்டியிட உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
- ❖ மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வானது, 2023 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற உறுப்பினர்களின் முழுப் பதவிக் காலத்திற்கும் அவர்களைத் தகுதி நீக்கம் செய்ய சபாநாயகருக்கு அதிகாரம் இல்லை என்று கூறியுள்ளது.
- ❖ சபாநாயகர், இந்த சட்டமன்ற உறுப்பினர்களை 16வது கர்நாடக சட்டப் பேரவையில் இருந்து இந்த ஆண்டு ஜூலை 25 மற்றும் 28 ஆகிய தேதிகளில் அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணை அல்லது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்தார்.
- ❖ மேலும், தற்போதைய சட்டமன்றத்தின் ஆட்சிக் காலத்தின் போது அவர்கள் தேர்தலில் போட்டியிடவும் சபாநாயகரால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

## மின்னல் தாக்குதல் நிகழ்வுகள் – இந்தியா

- ❖ இந்திய வானிலை ஆய்வு மையத்தின் (India Meteorological Department - IMD) படி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் ஜூலை 31 ஆம் தேதி வரை 9 லட்சம் மின்னல் தாக்குதல் நிகழ்வுகள் இந்தியாவில் நிகழ்ந்துள்ளன.
- ❖ நாடு முழுவதும் மொத்த மின்னல் தாக்குதல் நிகழ்வுகள் குறித்தத் தரவுகளை வானிலைக் கண்காணிப்பு அமைப்பு வெளியிடுவது இதுவே முதல்முறையாகும்.
- ❖ ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான தரவுகளானது IMDயின் காலநிலை நெகிழ்திறன் கண்காணிப்பு அமைப்புகள் ஊக்குவிப்பு மன்றத்தால் (Climate Resilient Observing Systems Promotion Council - CROSPC) தொகுக்கப்பட்டது.
- ❖ மின்னல் நெகிழ்திறன் இந்தியா என்ற பிரச்சாரத்தின் கீழ் மூன்று ஆண்டு ஆய்வுக் காலத்தின் ஒரு பகுதியாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

***அந்த அறிக்கையில் உள்ள முக்கிய அம்சங்கள்***

- ❖ நாட்டிலேயே ஒடிசாவில் அதிக மின்னல் தாக்குதல் நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. ஜம்மு காஷ்மீரில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மின்னல் தாக்குதல் நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.
- ❖ மின்னல் தாக்குதல் நிகழ்வுகளால் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் உத்தரப் பிரதேச மாநிலத்தில் பதிவாகியுள்ளன.

- ஜார்கண்டின் கிழக்கு சிங்பூம் மாவட்டத்தில் உள்ள சோட்டாநாக்பூர் பீடபூமியில் அதிக செறிவு கொண்ட மின்னல் தாக்குதல் நிகழ்வுகள் நிகழ்ந்தன.
- ஒரு மாவட்டத்திற்கான அதிக பட்ச மின்னல் தாக்குதல் நிகழ்வுகளை இப்பகுதி பெற்றுள்ளது.

## பயிர் இழப்பீட்டுத் திட்டம் "BBY" – ஹரியானா

- ஹரியானா மாநிலமானது 'பவந்தர் பார்பாய் யோஜ்னா' (Bhavantar Bharpayee Yojna - BBY) என்ற திட்டத்தின் கீழ் கூடுதல் பயிர்களை இணைத்துள்ளது.
- கேரட், பட்டாணி, கின்னோ, கொய்யா, குடை மிளகாய் மற்றும் கத்திரிக் காய் ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள சில பயிர்களாகும்.
- BBYன் கீழ், விவசாயிகள் தங்கள் பயிர்களை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட குறைந்த விலைக்கு விற்றதற்காக இழப்பீடு பெறுகிறார்கள்.
- இத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## சிசு சுரக்சா செயலி – அசாம்

- அசாம் மாநில முதல்வரான சர்பானந்தா சோனோவால் " சிசு சுரக்சா" என்ற ஒரு கைபேசிச் செயலியை தொடங்கியுள்ளார்.
- இது அசாம் மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் ஒரு முன்முயற்சியாகும்.
- இது குழந்தை உரிமை மீறலுக்கு எதிரான புகார்களை உடனடியாகப் பதிவு செய்ய பயனர்களுக்கு உதவுகின்றது.

## நிஷ்தா செயலி தொடக்கம் – காஷ்மீர்

- ஜம்மு-காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் பள்ளித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கான தேசிய முயற்சி (National Initiative for School Heads' and Teachers' Holistic Advancement - NISHTHA) என்ற செயலி தொடங்கப்பட்டுள்ளது.
- முன்னதாக, இதற்கான திட்டம் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நாடு முழுவதும் தொடங்கப்பட்டது.
- இது ஒருங்கிணைந்த ஆசிரியர் பயிற்சிகள் மூலம் தொடக்க மட்டத்தில் கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பணியாகும்.
- நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் தொடக்க மட்டத்தில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளின் தலைவர்களை உள்ளடக்கிய 42 லட்சம் பங்கேற்பாளர்களின் திறன்களை மேம்படுத்துதல் இதன் நோக்கமாகும் .

## RT-PCR நோய் கண்டறிதல் இயந்திரங்கள் @ கொல்கத்தா

- இந்தியாவில் முதன்முதலாக கொல்கத்தா மாநகராட்சி உயர்நிலைத் தலைகீழ் படியெடுத்தல்-பாலிமரேஸ் சங்கிலி எதிர்வினை (Reverse Transcription-Polymerase Chain Reaction - RT-PCR) இயந்திரங்களை நிறுவியுள்ளது.
- டெங்கு, காசநோய் மற்றும் பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களை விரைவாகக் கண்டறிய இவை பயன்படுத்தப்படும்.
- மருத்துவ அறிக்கைகள் மற்றும் இரத்தப் பரிசோதனைகள் முரண்பாடான முடிவுகளை வெளிப்படுத்தும் சூழ்நிலைகளில் இந்த இயந்திரங்கள் ஒரு ‘மூன்றாம் நடுவராகப்’ பணியாற்றும்.
- நோய்க்கான சரியான காரணத்தைக் கண்டறிய இரத்தப் பரிசோதனைகள் குறித்த துல்லியமான மரபணு ஆய்வு அறிக்கையை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

## மிசோரத்தில் வன உரிமைச் சட்டம் - ரத்து

- மிசோரம் அரசானது பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம், 2006 (வன உரிமைகள் சட்டம்) என்ற சட்டத்தை ரத்து செய்துள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் 371 (ஜி) பிரிவின் கீழ் அம்மாநில அரசு அனுபவித்து வரும் சிறப்பு அங்கீகாரத்தை இச்சட்டம் மீறியுள்ளது என்ற அடிப்படையில் இச்சட்டம் ரத்து செய்யப் பட்டுள்ளது.
- பிரிவு 371 (ஜி)ன் கீழ், நில உடைமை மற்றும் இடமாற்றம் தொடர்பான நாடாளுமன்றத்தின் அனைத்துச் சட்டங்களும் மாநிலத்தில் செயல்படுத்தப் படுவதற்கு முன்னர் முதலில் ஒரு தீர்மானத்தின் மூலம் மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டும்.
- வன உரிமைகள் சட்டம், 2006 என்பதை ரத்து செய்வதன் மூலம், மிசோரமில் உள்ள வன நிலங்களை அதற்குச் சொந்தமான பாரம்பரிய சமூகங்கள் மற்றும் மாநில வனத் துறை ஆகியவை தமது கட்டுக்குள் வைத்திருக்கும்.

## மத்திய பிரதேசத்தில் கஞ்சா – சட்டப்பூர்வம்

- மருத்துவ மற்றும் தொழில் துறை நோக்கங்களுக்காக மாநிலத்தில் கஞ்சா சாகுபடியைச் சட்டப் பூர்வமாக்க மத்தியப் பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.
- இது ஒரு கஞ்சா வகையைச் சேர்ந்த சணல் விவசாயத்தையும் அனுமதிக்கத் திட்டமிட்டுள்ளது.
- புற்று நோய்க்குச் சிகிச்சையளிப்பது போன்ற மருத்துவ நோக்கங்களுக்காக சணல் பயன்படுத்தப்பட இருக்கின்றது. பயிரிடப்பட்ட சணலானது நுகர்வு அல்லது வர்த்தகம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட மாட்டாது.

## இந்திய அரசியல் வரைபடத்தில் அமராவதி நகரம்

- மத்திய அரசு தனது புதிய அரசியல் வரைபடத்தில் ஆந்திர மாநிலத் தலைநகரான “அமராவதி” நகரத்தை இணைத்துள்ளது. இந்தியாவின் புதிய அரசியல் வரைபடமானது இந்திய நில அளவைத் துறையினால் வெளியிடப் பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் தேதியன்று இந்திய நில அளவைத் துறையினால் வெளியிடப்பட்ட புதிய அரசியல் வரைபடத்தில் அமராவதி நகரம் விடுபட்டிருந்தது.
- இந்தப் புதிய அரசியல் வரைபடமானது ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய புதிய ஒன்றியப் பிரதேசங்களை மறுசீரமைத்த பின்னர் அரசினால் வெளியிடப்பட்டது. இந்த மறுசீரமைப்பு அக்டோபர் 31 ஆம் தேதியன்று அதிகாரப் பூர்வமாக நடைமுறைக்கு வந்தது.
- தெலுங்கானா மாநிலமானது ஹைதராபாத்தைத் தனது மாநிலத் தலைநகராகக் கொண்டுள்ளது. மேலும் இந்த நகரம் ஆந்திராவிற்கும் தலைநகராக உள்ளது. 2014 ஆம் ஆண்டில் ஆந்திரா மாநிலத்திலிருந்து தெலுங்கானா பிரிக்கப்பட்ட நாளிலிருந்து, அடுத்த 10 ஆண்டு காலத்திற்கு இந்த நகரம் இரு மாநிலங்களுக்கும் தலைநகராக விளங்கும்.



## அருந்ததி ஸ்வர்ண யோஜனா - அசாம்

- குறைந்தது 10 ஆம் வகுப்பு முடித்து, தனது திருமணத்தைப் பதிவு செய்த ஒவ்வொரு மணமகளுக்கும் திருமணப் பரிசாக "10 கிராம் தங்கம் வழங்கப்படும்" என்று அசாம் அரசு அறிவித்துள்ளது.
- குடும்பங்கள் தங்களது திருமணத்தை சிறப்புத் திருமண (அசாம்) விதிகள், 1954ன் கீழ் பதிவு செய்ய வேண்டும்.
- அசாமில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் மூன்று லட்சம் என்ற அளவில் திருமணங்கள் நடத்தப் படுகின்றன. ஆனால் அவற்றில் 50,000-60,000 திருமணங்கள் மட்டுமே பதிவு செய்யப் படுகின்றன.
- இத்திட்டம் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து செயல்படுத்தப் பட்டு கொண்டு இருக்கின்றது.

## உலகின் மிகப்பெரிய இஸ்லாமியக் கூட்டம் - போபால்

- உலகின் மிகப்பெரிய இஸ்லாமியக் கூட்டமான நான்கு நாட்கள் நடைபெறும் ஆல்மி தப்லிகி இஜ்திமா என்ற சமயம் சார்ந்த கூட்டமானது மத்தியப் பிரதேசத்தில் உள்ள போபாலில் தொடங்கியுள்ளது.
- 54 நாடுகளைச் சேர்ந்த ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இது உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களுக்கு முக்கியமான மதம் சார்ந்த மற்றும் ஆன்மீகம் சார்ந்த செய்திகளை வழங்குவதற்கான ஒரு மன்றமாகும்.
- போபாலில் நவாப்களின் சகாப்தத்தில் இஜ்திமா தொடங்கியது. இப்போது உலகளவில் அது போபாலின் அடையாளமாக மாறியுள்ளது.
- முதலாவது "ஆல்மி தப்லிகி இஜ்திமா" ஆனது 1944 ஆம் ஆண்டு போபாலில் நடந்தது. அப்போது 14 நபர்கள் மட்டுமே அதில் கலந்து கொண்டனர்.

## நாடு - நேடு திட்டம்

- ஆந்திரப் பிரதேச அரசானது 'நாடு - நேடு' என்ற ஒரு திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இது ஆங்கில ஆய்வகங்களை அமைப்பது உள்பட தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன் அனைத்து அரசுப் பள்ளிகளை மாற்றிடவும் குழந்தைகளின் திறன்களை மேம்படுத்திடவும் முற்படுகின்றது.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஆங்கில வழிக் கல்வியானது 1 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது.
- இது தூய்மையான குடிநீர், மரச் சாமான்கள், சுற்றுச் சுவர், கழிப்பறைகள் போன்ற அடிப்படை வசதிகளையும் வழங்க முற்படுகின்றது.

## வேர்ப் பாலம்

- மேகாலயாவின் காசி மற்றும் ஜெயிந்தியா ஆகிய மலைகளில் உள்ள 'வேர்ப் பாலங்கள்' குறித்து ஜெர்மனியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.
- நவீன கட்டிடக் கலைகளில் இவற்றை ஒருங்கிணைப்பதற்காக இந்த ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைத்துள்ளனர். இது நகரங்களை அதிக சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் வைத்திருக்க உதவும்.
- ஃபைக்கஸ் எலாஸ்டிகா (இந்தியா ரப்பர்) லிருந்து வளரும் இளம் நெகிழ்வான, காற்றில் உலவும் வேர்களானது பனை மரத்தின் ஒரு இனமான அரேகா கேடெச்சு மரத்தின் தண்டு அல்லது பூர்வீக மூங்கிலின் அடிப் பகுதியில் வைக்கப்படுகின்றன.
- காலப் போக்கில், காற்றில் உலவும் வேர்களின் வலிமை மற்றும் தடிமன் அதிகரிக்கும். பின்னர் அர்கா அல்லது மூங்கில் அவற்றிற்கு தேவையில்லை.
- ஜிங் கீங் ஜ்ரி அல்லது வேர்ப் பாலங்களானது நீரோடைகள் மற்றும் ஆறுகளை கடப்பதற்காக மேகாலயாவில் பல தலைமுறைகளாக பயன்படுத்தப்படுகின்றன.
- மேலும் இவை உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களாக மாறியுள்ளன.




## கர்நாடகாவின் கலாபர்கி விமான நிலையம்

- கர்நாடக முதல்வரால் கலாபர்கி விமான நிலையம் திறந்து வைக்கப்பட்ட பின்னர், கலாபர்கி விமான நிலையத்திலிருந்து பெங்களூரு கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்திற்கு முதல் விமானம் புறப்பட்டது.
- இந்த விமான நிலையம் மத்திய அரசின் உடான்-ஆர்.சி.எஸ் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது.
- இது பிரபலமான குல்பர்கா கோட்டை உள்ளிட்ட பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்கு நுழைவாயிலாகச் செயல்படும்.

## காந்தி கிராமங்கள், ராஜஸ்தான்

- ஒவ்வொரு மாவட்டத்திலும் "காந்தி கிராமங்கள்" உடன் ஒரு புதிய அமைதி மற்றும் அகிம்சைத் துறையை அமைக்க ராஜஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.
- இத்தகையக் கிராமங்கள் பள்ளிகளில் கண்காட்சிகள் மூலம் காந்தியக் கருத்துக்களை ஊக்குவிக்கும், டிஜிட்டல் உள்ளடக்கங்களைப் பரப்பும் மற்றும் சுதந்திரப் போராட்டத்தில் அவரது பங்கு குறித்து விளம்பரப்படுத்தும்.

## குரு காசிதாஸ் தேசியப் பூங்கா புலிகள் காப்பகம் – சத்தீஸ்கர்

- சத்தீஸ்கர் மாநிலத்தின் கொரியா மாவட்டத்தில் உள்ள குரு காசிதாஸ் தேசியப் பூங்காவைப் புலிகள் காப்பகமாக அறிவிக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- தற்போது அம்மாநிலத்தில், பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள இந்திராவதி, காரியாபந்தில் உள்ள உதந்தி - சீதனாடி மற்றும் பிலாஸ்பூரில் உள்ள அச்சனக்மர் ஆகிய மூன்று புலி காப்பகங்கள் உள்ளது.

## மாற்றுத் திறனாளிகளுக்கு இடங்கள் ஒதுக்கீடு - சத்தீஸ்கர் பஞ்சாயத்துத் தேர்தல்கள்

- 1993 ஆம் ஆண்டு மாநில பஞ்சாயத்து ராஜ் சட்டத்தில் திருத்தம் செய்ய சத்தீஸ்கர் மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துப் பஞ்சாயத்துகளிலும் மாற்றுத் திறன் கொண்ட ஒருவர் இருப்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- இந்த நடவடிக்கை அனைத்துப் பஞ்சாயத்துகளிலும் மாற்றுத் திறன் உறுப்பினர்களைக் கொண்ட ஒரே மாநிலமாக அம்மாநிலத்தை மாற்ற இருக்கின்றது.
- ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இனிமேல் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட மாற்றுத் திறன் கொண்ட உறுப்பினர்கள் இருப்பார்கள்.
- தேர்தல் செயற்பாட்டின் மூலம் மாற்றுத் திறனாளி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால், ஒரு உறுப்பினர் (ஆண் அல்லது பெண்) பஞ்சாயத்து உறுப்பினராக அங்கு நியமிக்கப் படுவர்.

## போடோஸ் இயக்கம் மீதான தடை நீட்டிப்பு

- சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், 1967ன் கீழ் அசாமைத் தலைமை இடமாகக் கொண்டுச் செயல்படும் கிளர்ச்சிக் குழுவான NDFB (National Democratic Front of Bodoland - போடோலாந்தின் தேசிய ஜனநாயக முன்னணி) மீதான தடையை மத்திய அரசு மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.
- போடோலாந்தின் தேசிய ஜனநாயக முன்னணியானது வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகவும் இந்திய எதிர்ப்பு சக்திகளுடன் கைகோர்த்ததற்காகவும் தடை செய்யப் பட்டுள்ளது.

- போடோஸ் என்பது அசாமில் உள்ள ஒரு மிகப்பெரிய பழங்குடியினச் சமூகமாகும் (அம்மாநில மக்கள் தொகையில் 5-6%).
- ஆயுதப் போராட்டத்தை கையில் எடுத்த, பிரிவினைவாத கோரிக்கைகளின் நீண்ட வரலாற்றை இவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

## எட்டாவா சிங்கங்களைப் பார்வையிடும் வன உலா – உத்தரப் பிரதேசம்

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள எட்டாவா சிங்கங்களைப் பார்வையிடும் வன உலாவானது பொது மக்கள் பார்வையிடுவதற்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. இது எட்டாவா சிங்கங்களைப் பார்வையிடும் வன உலா என்றும் அழைக்கப் படுகின்றது.
- பொது மக்கள், இந்த சிங்கங்களைப் பார்வையிடுவதற்கு மத்திய விலங்குகள் ஆணையமானது ஒப்புதல் அளிக்க இருக்கின்றது.
- ஆகவே விலங்குகளைப் பார்வையிடும் இந்த பூங்காவானது ஆசியாவின் மிகப்பெரிய விலங்குகளைப் பார்வையிடும் பூங்காக்களில் ஒன்றாக (860 ஏக்கர்) விளங்குகின்றது.
- இது குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்காக கல்விச் சுற்றுலாவிற்கான ஒரு பயண இலக்காக (தளம்) உருவாக்கப் பட்டுள்ளது.

## குறுகிய கால முதல்வர்- மகாராஷ்டிரா



- தனது முதல்வர் பதவியை இராஜினாமா செய்ததன் மூலம், தேவேந்திர பட்னாவிஸ் (80 மணி நேரம்) மகாராஷ்டிரா மாநில வரலாற்றில் மிகக் குறுகிய காலம் அம்மாநில முதல்வராகப் பதவி வகித்துள்ளார்.
- இவரது பதவிக் காலமானது 1947க்குப் பிறகு முதலமைச்சராக ஒருவர் குறுகிய காலம் பதவி வகித்த மூன்றாவது முறையைக் குறிக்கின்றது.
- ஜகதாம்பிகா பால் என்பவர் மிகக் குறுகிய காலம் முதலமைச்சராக (44 மணிநேரம்) பணியாற்றியவர் என்ற தனித்துவத்தைக் கொண்டிருக்கின்றார்.

## மாற்றத்திற்கான நீர் – கோழிக்கோடு

- ஆறு முக்கிய நிறுவனங்களின் ஆதரவுடன் நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை மையமானது "நீர் 4 மாற்றம்" என்ற ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது முதலில் கோழிக்கோட்டில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு பின்னர் பூஜ், போபால் மற்றும் சிம்லா ஆகிய நகரங்களில் விரிவுபடுத்தப்பட இருக்கின்றது.
- இது ஒரு விரிவான நகர்ப்புற நீர் மேலாண்மைத் திட்டமாகும்.

## லோக்டக் உள்நாட்டு நீர்வழித் திட்டம் - மணிப்பூர்

- மணிப்பூரில் உள்ள லோக்டக் உள்நாட்டு நீர்வழித் திட்டத்திற்கு மத்தியக் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- மிதக்கும் ஃபும்டிஸுக்குப் பிரபலமான லோக்டக் ஏரியானது வடகிழக்கு இந்தியாவில் உள்ள ஒரு மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும்.
- லோக்டக் ஏரியில் மட்டுமே பிரத்தியேகமாக உள்ள ஃபும்டிஸ் என்பது ஒரு மிதக்கும் தீவு வரிசையின் தொடராகும்.
- ஃபும்டிஸின் ஒரு மிகப்பெரிய ஒற்றைத் திட்டானது 40 சதுர கிமீ பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டுக்களைக் கொண்ட கெய்புல் லம்ஜாவோ தேசியப் பூங்காவானது உலகின் மிகப்பெரிய மிதக்கும் பூங்காவாக உள்ளது.
- இந்த ஏரி மணிப்பூரில் மொய்ராங் என்னுமிடத்தில் அமைந்துள்ளது. மேலும் இது அருகி வரும் உயிரினமான சாங்காய் மான்களின் வாழ்விடமாக உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சாகரோவ் பரிசு - பேராசிரியர் இல்ஹாம் டோடி

- ஐரோப்பிய நாடாளுமன்றமானது "மனித உரிமைகளுக்கான சாகரோவ் பரிசை" உய்குர் அறிவாளரான இல்ஹாம் டோடிக்கு வழங்கியுள்ளது.
- "பிரிவினைவாதத்திற்காக" நியாயமற்ற முறையில் சீனாவில் இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- பெய்ஜிங் பல்கலைக் கழகத்தில் வெளிப்படையாகப் பேசிய முன்னாள் பொருளாதார பேராசிரியருக்கு 2014 இல் தண்டனை வழங்கப்பட்டது.
- ஐரோப்பிய நாடாளுமன்றத் தலைவரான டேவிட் சசோலி என்பவர் உடனடியாக இல்ஹாம் டோடியை விடுவிக்குமாறு சீனாவை வலியுறுத்தியதுடன், சீனாவில் சிறுபான்மையினர் உரிமைகளை (முஸ்லிம்கள்) மதிக்க வேண்டும் என்றும் சீனாவிற்கு அழைப்பு விடுத்தார்.

*உய்குர்கள்*

- உய்குர்கள் பெரும்பாலும் சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் வாழும் ஒரு முஸ்லீம் இன சிறுபான்மையினர் ஆவர்.
- அவர்கள் அங்குள்ள மக்கள்தொகையில் 45% என்ற அளவில் உள்ளனர்.
- சீனாவின் தெற்கே உள்ள திபெத்தைப் போன்று சின்ஜியாங் அதிகாரப்பூர்வமாக சீனாவிற்குள் இருக்கும் ஒரு தன்னாட்சி பெற்ற பிராந்தியமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- அம்னஸ்டி இன்டர்நேஷனல் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆனது 'அதிகமான உய்குர்களை சிறையில் அடைத்தல்' என்பது குறித்த ஒரு ஆவணம் சார்ந்த அறிக்கையை ஐ.நா குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.
- 'கைதிகள்' எந்தக் குற்றச்சாட்டும் இன்றி காலவரையின்றி அங்கு சிறை வைக்கப்பட்டுள்ளதாக உலக உய்குர் காங்கிரஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இந்திரா காந்தி விருது

- உத்தரகாண்ட் மாநிலத்தின் சிப்கோ இயக்கத்துடன் தொடர்புடைய காந்தியவாதியும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான சாந்தி பிரசாத் பட் என்பவர், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய ஒருங்கிணைப்புக்கான இந்திரா காந்தி விருது வழங்கப் பட்டுள்ளார்.
- இது 1985 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக, இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பால் ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு மதிப்புமிக்க விருது ஆகும்.

## 2019 SEED விருதுகள்

- 2019 ஆம் ஆண்டின் சமபங்கு அதிகாரம் மற்றும் மேம்பாட்டிற்காக அறிவியல் (SEED - Science For Equity Empowerment and Development) என்ற விருதிற்குப் பதினான்கு ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- 2002 ஆம் ஆண்டில் ஜோஹன்னஸ்பர்க்கில் நடத்தப்பட்ட நீடித்த வளர்ச்சி மீதான உலக

உச்சி மாநாட்டின் போது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UN Environment), ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Programme - UNDP) மற்றும் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (International Union for Conservation of Nature - IUCN) ஆகியவற்றால் SEED விருது நிறுவப் பட்டது.

- ❖ இந்த ஆண்டின் பிரிவுகள் SEED குறைந்த கார்பன், SEED ஆப்பிரிக்க விருதுகள், SEED தென்னாப்பிரிக்க காலநிலைத் தழுவல் விருதுகள் மற்றும் SEED பாலின சமத்துவ விருது ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.
- ❖ SEED குறைந்த கார்பன் பிரிவின் கீழ், உத்தரப் பிரதேசத்தின் கான்பூரில் அமைந்துள்ள ஐக்யா ஆர்கானிக்ஸ் என்ற அமைப்பானது இந்தியாவில் இருந்து இந்த விருதை வென்றுள்ளது.
- ❖ ஐக்கியா என்ற அமைப்பைத் தவிர, ஸ்டோன்சூப், ஆரோஹனா சுற்றுச்சூழல் சமூக மேம்பாடு, சுற்றுச்சூழல் தீர்வுகள் மற்றும் விவசாயிகள் புதிய மண்டலம் போன்றவை உள்ளிட்ட நான்கு அமைப்புகள் இந்தியாவில் இருந்து இந்த விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளன.




## 2019 ஆம் ஆண்டுக்கான சிறப்பு நடவடிக்கைப் பதக்கம்

- ❖ டெல்லி காவல்துறை சிறப்புப் பிரிவு மற்றும் இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்துறை படை ஆகிய படைகளுக்கு 2019 ஆம் ஆண்டுக்கான மத்திய உள்துறை அமைச்சரின் சிறப்பு நடவடிக்கைப் பதக்கம் வழங்கப் பட்டது.
- ❖ மதிப்பு மிக்க உள்துறை அமைச்சரின் சிறப்புச் செயல்பாட்டு பதக்கம் 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிறுவப் பட்டது.
- ❖ இந்தியாவில் மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச காவல்துறை மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்புகளில் குற்றங்களை விசாரிப்பதற்கான உயர் தொழில்முறை தரங்களை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வியாஸ் சம்மன்

- பிரபல இந்தி மொழிக் கவிஞர் லீலாதர் ஜகூரி, "ஜிட்னே லாக் உட்னே பிரேம்" என்ற அவரின் கவிதைத் தொகுப்பிற்காக 2018 ஆம் ஆண்டின் 28வது வியாஸ் சம்மன் விருதைப் பெற்றார்.
- வியாஸ் சம்மன் என்பது இந்தியாவில் 1991 ஆம் ஆண்டு முதலாக வழங்கப்படும் ஒரு இலக்கிய விருது ஆகும்.
- கே.கே. பிர்லா அமைப்பானது கடந்த 10 ஆண்டுகளில் இந்தியரால், இந்தி மொழியில் எழுதி வெளியிடப்பட்ட ஒரு சிறந்த இலக்கியப் படைப்பிற்காக ஆண்டுதோறும் இந்த விருதினை வழங்கி வருகின்றது.

## இலக்கியத்திற்கான JCB பரிசு 2019

- மாதுரி விஜய் என்பவர் "தி ஃபார் ஃபீல்டு" என்ற தனது முதலாவது நாவலுக்காக 2019 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான JCB பரிசை வென்றுள்ளார்.
- இலக்கியத்திற்கான JCB பரிசானது 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு இந்திய இலக்கிய விருதாகும்.
- இந்த விருதை நிர்வகிக்க JCB இலக்கிய அமைப்பு நிறுவப் பட்டுள்ளது.
- இதற்கு இங்கிலாந்தின் கட்டுமான உற்பத்தி குழுவான JCB என்ற அமைப்பால் நிதியளிக்கப் படுகின்றது.
- ஆங்கிலத் துறையில் பணியாற்றும் ஒரு இந்திய எழுத்தாளரால் எழுதப்பட்ட ஒரு தலைசிறந்த புனைக் கதைக்கு அல்லது ஒரு இந்திய எழுத்தாளரால் மொழி பெயர்க்கப்பட்ட புனைக் கதைக்கு இந்தப் பரிசு வழங்கப் படுகின்றது.

## சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவு விருதுகள்

- இந்த ஆண்டில் இந்த விருதைப் பெற்றவர்கள் பின்வருமாறு
  - யாசிதிக்களின் மீட்பிற்கான அலுவலகத்தின் இயக்குனர் ஹுசைன் அல்-கைதி
  - அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும் பச்பன் பச்சாவ் அந்தோலன் என்ற அமைப்பின் நிறுவனருமான கைலாஷ் சத்தியார்த்தி,
  - பிருதி பட்கர் – பிரேரணா என்ற அமைப்பின் நிறுவனர்
  - ஹசினா கர்பிஹ் - இம்பல்ஸ் என்ற இலாப நோக்கற்ற அமைப்பின் நிறுவனர்
  - இங்கிலாந்தைத் தளமாகக் கொண்டுச் செயல்படும் வார் சைல்ட் என்ற அறக்கட்டளை நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ராப் வில்லியம்ஸ்,
  - திரைப்பட இயக்குனர் ராபர்ட் பில்ஹைமர்,
  - டாக்டர் கிரண் கமல் பிரசாத் - ஜீவிகா என்ற அரசு சாரா அமைப்பின் நிறுவனர்,
  - கட்டாய உறுப்புத் திருட்டிற்கு எதிரான மருத்துவர்கள் என்ற அமைப்பின் நிறுவனர் டாக்டர் டார்ஸ்டன் ட்ரே,
  - அர்பன் லைட் என்ற இலாப நோக்கற்ற அமைப்பின் நிறுவனரான அலெக்ஸாண்ட்ரா ரஸ்ஸல்
  - சிறுவர்கள் பாலியல் வர்த்தகத்திற்கு எதிராக செயல்படும் சமூக ஆர்வலர் அஜீத் சிங்,


- காங்கோவின் முன்னாள் சிறுவர் படைவீரரான ஜிதா சுவாமி
- ஈவ்லியன் ஹோல்ஸ்கென் – "பிரி எ கேர்ள்" என்ற அமைப்பின் நிறுவனர்.

***இந்த விருது பற்றி***

- அன்னை தெரசா விருதுகளானது 2004 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறுமோ அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையோ வழங்கப் படுகின்றன.
- இது மும்பையில் ஆபிரகாம் மாத்தாய் என்பவரால் உருவாக்கப்பட்ட ஹார்மனி அமைப்பின் ஒரு முன்முயற்சியாகும்.
- சமயப் பரப்புக் குழுவினரின் அறக்கட்டளையால் அங்கீகரிக்கப்பட்ட அன்னை தெரசா பெயரில் உள்ள ஒரே விருது இதுவேயாகும்.


## விஞ்ஞானிகா - சர்வதேச அறிவியல் இலக்கிய விழா

- கொல்கத்தாவில் நடத்தப்பட்ட 5வது இந்திய சர்வதேச அறிவியல் விழா 2019 இன் (India International Science Festival - IISF) ஒரு பகுதியாக, விஞ்ஞானிகா என்ற சர்வதேச அறிவியல் இலக்கிய விழா ஏற்பாடு செய்யப்பட்டது.
- IISF 2019 ஆனது மத்திய அறிவியல் & தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் மத்திய புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் விஞ்ஞான பாரதி ஆகியவற்றால் இணைந்து நடத்தப்படும் ஒரு வருடாந்திர நிகழ்ச்சியாகும்.
- இது அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் - தேசிய அறிவியல் தகவல் தொடர்பு மற்றும் தகவல் வள நிறுவனம் (CSIR-NISCAIR), விஞ்ஞானப் பிரசார் மற்றும் விஞ்ஞானப் பாரதி ஆகிய அமைப்புகளினால் ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டுத் திருவிழாவின் கருப்பொருள் "RISEN (Research, Innovation, and Science Empowering the Nation) இந்தியா - ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் அறிவியல் அதிகாரமளிக்கும் தேசம்" என்பதாகும்.



## பி.எஸ்.கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ் – மறைவு

- பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் சமூக & கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரை மேம்படுத்துவதில் முக்கியப் பணியாற்றியுள்ள இந்திய அரசின் முன்னாள் செயலாளர் பி.எஸ்.கிருஷ்ணன் காலமானார்.
- 1956 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான இவர், 1989 ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் சிற்பியாக இருந்தார்.
- 1979 ஆம் ஆண்டில், பி.பி மண்டல் ஆணையத்தின் நியமனத்துடன் அவர் தொடர்புடையவர் ஆவார். இந்த மண்டல் குழுவானது இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு அரசு நிறுவனங்களில் வேலைக்கான 27 சதவீத இட ஒதுக்கீட்டைப் பரிந்துரைத்தது.
- 1990 ஆம் ஆண்டில் வி.பி.சிங் அரசு மண்டல் ஆணைய அறிக்கையை அமல்படுத்திய போது அவர் மத்திய மக்கள் நலத்துறை அமைச்சகத்தின் செயலாளராக இருந்தார்.
- பின்தங்கிய வகுப்பினருக்கான தேசிய ஆணையத்தின் முதல் உறுப்பினராகவும் அவர் இருந்தார்.
- முஸ்லிம்களுக்கான பின்தங்கிய வர்க்க நிலை குறித்த கிருஷ்ணனின் அறிக்கையானது ஆந்திராவில் வேலை மற்றும் கல்வியில் 4% இட ஒதுக்கீட்டை அவர்களுக்கு அனுமதிப்பதற்கான அடிப்படையை உருவாக்கியது.






## டி.என்.சேஷன் – மறைவு

- 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிரிவைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரியும் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையருமான திருநெல்லாய் நாராயண ஐயர் சேஷன் காலமானார்.
- இவர் முன்னதாக 1989 ஆம் ஆண்டில் இந்தியாவின் 18வது அமைச்சரவைச் செயலாளராகவும் பணியாற்றி இருந்தார்.
- 1990 ஆம் ஆண்டில் சந்திரசேகர் பிரதமராக இருந்த போது இவர் இந்தியத் தேர்தல் ஆணையராகப் பணியாற்றினார்.

- திரு. சேஷனின் காலகட்டத்தில் தான் தேர்தல் ஆணையம் அக்டோபர் 1993 ஆம் ஆண்டில் பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக மாறியது.
- ஒரு கடமை தவறாத தலைமைத் தேர்தல் ஆணையராக அறியப்பட்ட இவர் அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் போட்டியாளர்கள் மீது தேர்தல் ஒழுக்கத்தை அமல்படுத்தியவர் ஆவார். குறிப்பாக தேர்தல் மாதிரி நடத்தை விதிகளில் அவர் மிகுந்த கண்டிப்பு காட்டினார்.
- அவர் நடைமுறைப் படுத்திய சில சீர்திருத்தங்களில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை அமல்படுத்துதல், தகுதியான அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் அடையாள அட்டைகளை வழங்குதல், தேர்தல் வேட்பாளர்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல், தேர்தல்களை எதிர்கொள்ளும் மாநிலங்களைத் தவிர வேறு மாநிலங்களில் இருந்து தேர்தல் அதிகாரிகளை நியமித்தல் ஆகியவை அடங்கும்.
- வாக்காளர்களுக்கு கையூட்டு கொடுப்பது அல்லது மிரட்டுவது, தேர்தல்களின் போது மதுபானம் விநியோகித்தல், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகத்தை தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்துதல், வாக்காளர்களிடம் சாதி அல்லது வகுப்புவாத ரீதியிலான உணர்வுகளில் பிரச்சாரம் செய்தல், பிரச்சாரங்களுக்கு வழிபாட்டுத் தளங்களைப் பயன்படுத்துதல், எழுதப்பட்ட முன் அனுமதி பெறாமல் ஒலிபெருக்கிகள் பயன்படுத்துதல் & அதிக அளவு இசை வைத்து இடையூறு ஏற்படுத்துதல் போன்ற பல முறைகேடுகளை அவர் கட்டுப்படுத்தினார்.
- இவருக்கு 1996 ஆம் ஆண்டில் ரமோன் மகசேசே விருது வழங்கப்பட்டது.
- கடந்த 50 ஆண்டுகளில் 1990 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஆறு ஆண்டுகள் தலைமைத் தேர்தல் ஆணையர் பதவியை வகித்தவர் திரு. சேஷன் மட்டுமே ஆவார்.

## ஆசியச் சமூகத்தின் “மாற்றியமைப்பதில் பெரும்பங்களிப்பை ஆற்றியோருக்கான” விருதுகள் - இமயமலையின் குங்பூ பெண் துறவிகள்

- புது தில்லியில் குங்பூ பெண் துறவிகளை மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை இணையமைச்சர் (தனிப் பொறுப்பு) பிரஹலாத் சிங் படேல் பாராட்டினார்.
- ட்ருக்பா சமூகத்தின் பெண் துறவிகள், சமீபத்தில் நியூயார்க்கில் ஆசியச் சமூகத்தின் மதிப்புமிக்க “மாற்றியமைப்பதில் பெரும் பங்களிப்பை ஆற்றியோருக்கான” (game – changer) விருதைப் பெற்றனர்.
- இமயமலையில் உள்ள பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் பாலின நிலைப்பாடுகளை அகற்றுவதற்காகவும் அவர்கள் ஆற்றிய பெரும் பணிக்காக அவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- 700 நபர்களைக் கொண்ட ஒரு வலிமையான குங்பூ பெண் துறவிகள் சமுதாயமானது ட்ருக்பா வம்சாவளியைச் சேர்ந்ததாகும். இந்த வம்சமானது இமயமலையில் உருவாகிய, ஆயிரம் ஆண்டுகள் பழமையான ஒரு புத்த மரபாகும்.

### *இந்த விருது பற்றி*


- ஆசியச் சமூகமானது உலகளாவிய சூழலில் ஆசியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள், தலைவர்கள் மற்றும் நிறுவனங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிப்பதற்காகவும் பங்களிப்புகளை வலுப்படுத்துவதற்காகவும் அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.

- இது 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




## கங்கை உத்சவ்

- தேசிய தூய்மை கங்கைத் திட்டமானது மத்திய ஜல்சக்தி அமைச்சகத்துடன் ஒருங்கிணைந்து தேசியத் தலைநகரில் உள்ள மேஜர் தயான்சந்த் மைதானத்தில் 'கங்கா உத்சவ்' என்ற ஒன்றை ஏற்பாடு செய்தது.
- இந்தத் தினத்தில் கங்கை நதியானது நாட்டின் தேசிய நதியாக அறிவிக்கப்பட்டதால் நவம்பர் 4 ஆம் தேதியன்று கங்கை உத்சவ் கொண்டாடப்படுகின்றது.
- 2008 ஆம் ஆண்டில் கங்கையானது தேசிய நதியாக அறிவிக்கப்பட்ட 11வது நினைவு தினத்தைக் குறிக்கும் வகையில் இந்த உத்சவ் கொண்டாடப்படுகின்றது.
- கங்கை நதியையும் அதன் துணை நதிகளையும் சுத்தம் செய்வதற்கான முயற்சிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் பொது மக்களின் பங்களிப்பை ஏற்படுத்துவதற்காகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## பிரிக்ஸ் - இளம் கண்டுபிடிப்பாளர் பரிசு

- பெங்களூரைச் சேர்ந்த முனைவர் பட்டம் பெற்ற அறிஞரான ரவி பிரகாஷ் என்பவர் சிறிய மற்றும் குறு கிராமப்புற பால் விவசாயிகளுக்காக மலிவு விலையில் உள்நாட்டு பால் குளிர்வித்தல் அலகைக் கண்டுபிடித்ததற்காக பிரிக்ஸ் அமைப்பின் இளம் கண்டுபிடிப்பாளர் பரிசை வென்றுள்ளார்.
- நானோ - திரவ அடிப்படையிலான நிலை மாற்றப் பொருட்களைப் பயன்படுத்தி 30 நிமிடங்களுக்குள் மூலப் பாலின் வெப்பநிலையை 37° செல்சியசிலிருந்து 7° செல்சியஸிற்குக் கொண்டு வர முடியும்.
- 2019 ஆம் ஆண்டில் பிரேசிலில் நடைபெற்ற 4வது பிரிக்ஸ் அமைப்பின் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தில் (ஒய்.எஸ்.எஃப்) இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

## வசிஷ்த நாராயண் சிங்

- அமெரிக்காவின் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் 1969 ஆம் ஆண்டில் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட முனைவர் பட்ட ஆய்வறிக்கைக்காக புகழ்பெற்று விளங்கும் கணித மேதையான வசிஷ்த நாராயண் சிங் காலமானார்.
- ஐன்ஸ்டீனின் கோட்பாட்டை எதிர்த்த இவர் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றார்.
- வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் இணைப் பேராசிரியராக இருந்த இவர் கான்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கொல்கத்தாவில் உள்ள இந்தியப் புள்ளியியல் நிறுவனம் ஆகியவற்றிலும் பணியாற்றியுள்ளார்.
- அவர் 40 ஆண்டுகள் மனச் சிதைவு நோயினால் அவதிப்பட்டார்.




## RBS இந்தியா – புவித் தலைவர்களுக்கான விருதுகள்

- ராயல் பாங்க் ஆப் ஸ்காட்லாந்தின் (RBS) புத்தாக்கம் மற்றும் செயல்பாட்டு மையமான RBS இந்தியா என்ற அமைப்பானது காலநிலை மாற்றத்தை எதிர்ப்பதில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்புகளைச் செலுத்தியோருக்கான RBS புவித் தலைவர்களுக்கான (RBS Earth Heroes Awards - REHA) விருதுகளின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டானது REHAவின் 9வது பதிப்பாகும்.

- 2019 ஆம் ஆண்டு விருதுகளுக்கான கருத்துரு, 'காலநிலை மாற்றம்' என்பதாகும்.

***2019 ஆம் ஆண்டின் RBS புவித் தலைவர்களுக்கான விருதுகளின் வெற்றியாளர்கள் பின்வருமாறு:***

  - பாரத்பூரின் (ராஜஸ்தான்) போலு அப்ரார் கான்: பசுமை வீரர்,
  - அசாமின் திம்பேஸ்வர் தாஸ்: கிரீன் வீரர்,
  - எலா அறக்கட்டளை (புனே): புவிப் பாதுகாவலர்,
  - ஐஸ்வர்யா மகேஸ்வரி (உத்தரப் பிரதேசம்): இனங்களைப் பாதுகாத்தல்,
  - சதீஷ் (தமிழ்நாடு): இனங்களைப் பாதுகாத்தல்,
  - ஜலால் உத் தின் பாபா (ஜம்மு காஷ்மீர்): ஊக்குவித்தல்,
  - பிரமிளா பிசோய் (ஒடிசா): வாழ்நாள் சாதனை.

## குரு நானக்கின் போதனைகளைப் பற்றிய 3 புத்தகங்கள்

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சரான ஹர்சிம்ரத் கவுர் ஆகியோர் குரு நானக் தேவ் பற்றிய தேசியப் புத்தக அமைப்பின் 3 புகழ்பெற்ற புத்தகங்களை வெளியிட்டனர்.
- குரு நானக் தேவின் 550வது ஆண்டை நினைவுகூறும் வகையில் பின்வரும் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
  - குரு நானக் பானி,
  - நானக் பானி &
  - சாகியன் குரு நானக் தேவ்.
- குரு நானக் தேவின் போதனைகளை இந்திய துணைக் கண்டத்தில் உள்ள வாசகர்களிடையே பரப்புவதற்காக இந்த 3 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## இன்போசிஸ் விருதுகள் 2019

- மனிதநேயம், வாழ்க்கை அறிவியல், கணித அறிவியல், இயற்பியல், சமூக அறிவியல், பொறியியல் மற்றும் கணினி அறிவியல் உள்ளிட்ட ஆறு பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டுக்கான இன்போசிஸ் விருது வென்றவர்களை இன்போசிஸ் அறிவியல் அறக்கட்டளை அறிவித்தது.

***இன்போசிஸ் பரிசு***

- இது ஆண்டுதோறும் இன்ஃபோசிஸ் அறிவியல் அறக்கட்டளை வழங்கும் விருது ஆகும்.
- இது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், பொறியாளர்கள் மற்றும் சமூக விஞ்ஞானிகளுக்கு வழங்கப்படுகிறது (இவர்கள் இந்தியாவில் பிறந்திருக்க வேண்டிய அவசியமில்லை).
- முதன்முறையாக 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இந்த விருதானது ஆராய்ச்சியை அங்கீகரிக்கும் இந்தியாவின் மிக உயர்ந்த நிதிசார்ந்த விருதுகளில் ஒன்றாகும்.

## ஆடி மஹோத்ஸவ்

- பழங்குடியின விவகாரத் துறை அமைச்சகத்தின் ஒரு அமைப்பான இந்தியப் பழங்குடியின சந்தையிடல் வளர்ச்சிக் கூட்டமைப்பு (Tribal Cooperative Marketing Development Federation of India – TRIFED) "ஆடி மஹோத்ஸவ் – தேசியப் பழங்குடியினர் விழா" என்பதை ஏற்பாடு செய்வதற்கான ஒரு புதிய கருத்தை ஆரம்பித்துள்ளது.
- பழங்குடி வாழ்க்கையின் அடிப்படை நெறிமுறைகளை குறிக்கின்ற இவ்விழாவின் கருப்பொருள், "பழங்குடியினர் கைவினை, கலாச்சாரம் மற்றும் வர்த்தகத்தின் கொண்டாட்டம்" ஆகும்.

## ராஜாராம் மோகன் ராய் தேசிய விருது

- இந்தியப் பத்திரிகை மன்றம் வழங்குகின்ற மதிப்புமிக்க ராஜாராம் மோகன் ராய் விருதுக்கு ராஜஸ்தான் பத்ரிகா குழுமத் தலைவர் குலாப் கோத்தாரி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்த விருது நவம்பர் 16 ஆம் தேதி தேசியப் பத்திரிகை தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியப் பத்திரிகை மன்றமானது 2019 ஆம் ஆண்டிற்கான இதழியல் துறை சிறப்புத்துவ தேசிய விருதுகள் பெற இருக்கும் மற்ற வெற்றியாளர்களையும் அறிவித்தது.

## வனவிலங்குப் பாதுகாப்பு அறிவியலில் ஜார்ஜ் ஷாலர் வாழ்நாள் விருது

- வனவிலங்கு உயிரியலாளர் கே. உல்லாஸ் கரந்த் என்பவருக்கு வனவிலங்குப் பாதுகாப்புச் சங்கத்தின் (Wildlife Conservation Society's - WCS) ஜார்ஜ் ஷாலர் வாழ்நாள் விருது வழங்கப்பட்டது
- தற்போது இவர் கர்நாடகாவின் பெங்களூரு வனவிலங்கு ஆய்வு மையத்தின் இயக்குநராக உள்ளார்.
- WCS இன் விருதைப் பெற்ற முதல் நபர் இவரே ஆவார்.
- உலகளவில் மிகப் பெரிய வனவிலங்கு விஞ்ஞானிகள் மற்றும் பாதுகாவலர்களில் ஒருவராகக் கருதப்படும் WCS இன் டாக்டர் ஜார்ஜ் ஷாலரின் நினைவாக இதற்கு இப்பெயரிடப்பட்டது.

## நீதிபதி ஆர்.பானுமதி - கொலீஜியம் உறுப்பினர்

- கடந்த 13 ஆண்டுகளுக்கும் மேலாக, உச்ச நீதிமன்றக் கொலீஜியத்தில் சேர்க்கப்பட்ட முதலாவது பெண் நீதிபதியாக நீதிபதி ஆர்.பானுமதி உருவெடுத்துள்ளார்.
- இவர் ஓய்வு பெற்ற இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியான ரஞ்சன் கோகோய்க்குப் பதிலாக உச்ச நீதிமன்றக் கொலீஜியத்தில் இடம் பெற இருக்கின்றார்.
- ரூமா பால் என்பவர் உச்ச நீதிமன்றக் கொலீஜியத்தில் இடம் பெற்ற கடைசிப் பெண் உறுப்பினர் ஆவார்.
- பெண்கள் அமர்வு நீதிமன்ற நீதிபதியாக இருந்து நாட்டின் உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற இரண்டாவது பெண் நீதிபதி இவர் மட்டுமே ஆவார்.

## ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் 2019 விருது

- மத்திய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் சேகாவத் "ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் 2019" விருதுகளை தர வரிசையில் முன்னிலை வகிக்கும் மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு வழங்கினார்.
- உலகக் கழிவறை தினத்தை முன்னிட்டு (நவம்பர் 19) பல்வேறு பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்திய மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தைத் தொடர்ந்து ஹரியானா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் இத்தரவரிசைப் பட்டியலில் உள்ளன.
- இந்திய மாவட்டங்களில் தெலுங்கானாவில் உள்ள பெடப்பள்ளி மாவட்டம் முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து ஃபரிதாபாத் (ஹரியானா) மற்றும் ரேவாரி (ஹரியானா) மாவட்டங்களும் விருதுகளைப் பெற்றன.
- உத்தரப் பிரதேசம் அதிகபட்ச பங்களிப்பைக் கொண்ட மாநிலமாக இருந்தது.

## பார்ச்சூன் அமைப்பின் ஆண்டிற்கான வணிக நபர்

- பார்ச்சூன் அமைப்பின் 2019 ஆம் ஆண்டின் வணிக நபர்கள் என்ற பட்டியலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 3 நபர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்தப் பட்டியலில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான சத்யா நாதெல்லா, மாஸ்டர் கார்டு தலைமை நிர்வாக அதிகாரியான அஜய் பங்கா மற்றும் அரிஸ்டா நிறுவனத்தின் தலைவரான ஜெயஸ்ரீ உல்லால் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- இந்த பட்டியலில் சத்யா நாதெல்லா முதலிடத்திலும் அஜய் பங்கா 8வது இடத்திலும் ஜெயஸ்ரீ உல்லால் 18வது இடத்திலும் உள்ளனர்.

## ஆண்டின் உலகத் தடகள விருது

- இரண்டு மணி நேரத்திற்குள் மராத்தான் ஓடிய முதல் மனிதர் எலியுட் கிப்கோஜ் மற்றும் 400 மீட்டர் தடை தாண்டுதல் உலக சாம்பியனான தலிலா முஹம்மது ஆகியோர் இந்த ஆண்டிற்கான உலகத் தடகள விருதை வென்றனர்.



- கிப்கோஜ் சமீபத்தில் 1 மணி 59 நிமிடங்கள் 40.2 வினாடிகளில் 42.195 கிலோமீட்டர் (26.219 மைல்) மராத்தான் தூரத்தை ஓடினார்.
- அமெரிக்காவின் தலிலா முஹம்மது 400 மீட்டர் தடைகளை 52.20 வினாடிகளில் தாண்டி உலக சாதனைப் படைத்து 2003 ஆம் ஆண்டின் சாதனையை முறியடித்தார்.

## மணிப்பூர் சங்காய் விழா

- ஒவ்வொரு ஆண்டும் மணிப்பூர் மாநிலமானது நவம்பர் 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை "மணிப்பூர் சங்காய் விழாவைக்" கொண்டாடுகின்றது.
- மணிப்பூரில் மட்டுமே காணப்படக் கூடிய, அம்மாநில விலங்கு "சங்காய் மான்" பெயரில் இவ்விழாவிற்கு இவ்வாறு பெயரிடப்பட்டது.
- இதுபோன்ற முதல் திருவிழா 2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.




## DRDO தலைவர் – RAeSன் தோழமை விருது

- லண்டனில் உள்ள ராயல் ஏரோநாட்டிகல் சங்கமானது (RAeS - Royal Aeronautical Society) 2019 ஆம் ஆண்டிற்கான அச்சங்கத்தின் கௌரவ தோழமை விருதை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவரான ஜி. சதீஷ் ரெட்டிக்கு வழங்கியுள்ளது.
- கடந்த 100 ஆண்டுகளில் இந்த மதிப்புமிக்க விருதைப் பெற்ற முதலாவது இந்தியர் இவராவார்.
- இந்தியாவின் முன்னணி இராணுவ அமைப்புகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த ஏவுகணைத் தொழில்நுட்பங்களுக்கான பங்களிப்புகளுக்காக இவர் அங்கீகரிக்கப்பட்டார்.

### *இந்த விருது பற்றி*

- இந்தத் தோழமை விருதானது விண்வெளித் துறையில் நோபல் பரிசாகக் கருதப்படுகின்றது.
- இது உலகின் மிகவும் உயர்ந்த தனித்துவ விருதாகும். விண்வெளித் துறைக்கு மிகவும் சிறப்பானப் பங்களிப்புகளை ஆற்றியோருக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்படுகின்றது.
- முதலாவது கௌரவத் தோழமை விருதானது 1917 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

## ஐக்கிய நாடுகளின் உலகளாவிய காலநிலை நடவடிக்கை விருதுகள் 2019

- இந்த விருதை மஹிலா ஹவுசிங் சேவா டிரஸ்ட் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் தலைமையிலான ஒரு திட்டம் வென்றுள்ளது.
- காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் மீதான பின்னடைவை அதிகரிப்பதற்காக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் உள்ள பெண்களை ஒழுங்கமைத்து, அதிகாரம் அளித்ததற்காக இந்தத் தொண்டு நிறுவனம் பாராட்டப் பட்டது.
- இது இதுவரை இந்தியா, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் உள்ள ஏழு நகரங்களில் ரூ 25,000க்கும் குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உதவியுள்ளது.
- டிசம்பர் 10 ஆம் தேதி ஸ்பெயினில் மாட்ரிட்டில் சிலி அரசு நடத்தவிருக்கும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் (COP 25) இந்த விருது வழங்கப்பட இருக்கின்றது.
- COP25 மாநாடானது டிசம்பர் மாதம் 2 முதல் 12 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

## 50வது இந்திய சர்வதேச திரைப்பட விழா, கோவா

- இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் (International Film Festival of India - IFFI) பொன்விழா பதிப்பானது கோவாவில் நடந்தது.
- 50 ஆண்டுகளை நிறைவு செய்ததற்காக, யுனெஸ்கோ அமைப்பு வழங்கிய ஐ.சி.எஃப்.டி-யுனெஸ்கோ ஃபெலினி பதக்கம் ஆனது IFFI அமைப்புக்கு வழங்கப்பட்டது.
- இந்த விருதை முதன்முதலில் யுனெஸ்கோ அமைப்பு 1994 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் 125வது ஆண்டு விழாவில் வழங்கியது.
- விருதுகள்
    - சிறந்த படம்: பிளேஸ் ஹாரிசன் இயக்கிய 'துகள்கள்' என்னும் படம்
    - சிறந்த இயக்குனர்: "ஜல்லிக்கட்டு" படத்திற்காக லிஜோ ஜோஸ் பெல்லிசெரி
    - சிறந்த நடிகர்: மரிகெல்லா படத்திற்காக சியு ஜார்ஜ்
    - சிறந்த நடிகை: 'மை காட்' என்ற மராத்தி படத்திற்காக உஷா ஜாதவ்
- அடுத்த IFFI தனது அடுத்த ஆண்டு விழாவிற்கான கருப்பொருளாக சத்யஜித் ரேவின் நூற்றாண்டைக் கொண்டாடும் பொருட்டு அவரது திரைப்படங்களைக் கொண்டாட இருக்கின்றது.

## அக்கிதம் அச்சுதன் நம்பூதிரி – ஞானபீட விருது

- பிரபல மலையாள மொழிக் கவிஞர் அக்கிதம் அச்சுதன் நம்பூதிரி, நாட்டின் மிக உயர்ந்த ஒரு இலக்கிய கௌரவமான 55வது ஞானபீட விருதைப் பெறுபவர் என்று அறிவிக்கப் பட்டார்.
- அவர் "இருபதாம் நூற்டண்டின்தே இதிஹாசம்" என்ற தனது படைப்பின் மூலம் மலையாளக் கவிதைகளில் நவீனத்துவத்தை ஆதரிப்பவர் என்று அறியப்படுகின்றார்.
- நம்பூதிரி (பிராமண) சமூகத்தில் நிலவுவதாகக் கூறப்படும் சமூகத் தீமைகளுக்கு எதிராக அவர் வாதிட்டதற்காகவும் அறியப் படுகின்றார்.

- அவருக்கு 2017 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- ஜி சங்கரா குருப், தக்கழி, எஸ்.கே.போட்டேகாட், எம்.டி.வாசுதேவன் நாயர் மற்றும் ஓ.என்.வி.குருப் ஆகியோருக்குப் பிறகு இந்த விருதைப் பெறுகின்ற ஆறாவது மலையாள எழுத்தாளர் இவராவார்.

**Akkitham's well-known works**

□Akkithathinte Thiranjedutha Kavithakal (selected poems): 1985
□Sparsamanikal (collection of poems): 1991
□Balidarsanam (narrative poem): 1970
□Irupatham Noottandinte Ithihasam (narrative poem): 1952
□Anaswarante Ganam
□Idinjupolinja Lokam
(collection of poems): 1961
□Vennakkalinte Kadha (collection of poems): 1961
□Dharmasooryan (narrative poem): 1998
□Desa Sevika (story): 1947
□Akkitham Kavithakal
(complete poems): 2002
□Anthimahakalam (collection of poems): 2007

# விளையாட்டுச் செய்திகள்

## 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்

- 2019 ஆம் ஆண்டின் 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் ஹங்கேரியின் புடாபெஸ்டில் நடத்தப் பட்டது.
- பூஜா கெஹ்லோட் (53 கிலோ) ஜப்பானின் 2017 ஆம் ஆண்டின் உலக சாம்பியனான ஹருணா ஒகுனோவிடம் போட்டியிட்டு வெற்றி பெற்று இப்போட்டியில் இந்தியாவின் இரண்டாவது வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.
- மூன்று முறை உலக இளையோர் மல்யுத்த சாம்பியன்ஷிப் பதக்கம் வென்ற சஜன் பன்வால் (77 கிலோ) இப்போட்டியில் வெண்கலம் வென்றுள்ளார்.



## 17 வயதிற்கு உட்பட்டோருக்கான FIFA கோப்பையின் – சின்னம்

- 17 வயதிற்கு உட்பட்டோருக்கான FIFA மகளிர் உலகக் கோப்பையின் அதிகாரப் பூர்வ சின்னம் வெளியிடப்பட்டது.




- இது 17 வயதிற்குட்பட்டோருக்கான FIFA மகளிர் உலகக் கோப்பையின் 7வது பதிப்பாகும். இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சர்வதேசப் பெண்கள் இளையோர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியாகும்.
- இந்தப் போட்டியானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியாவில் நடைபெற இருக்கின்றது.
- இது FIFA மகளிர் கால்பந்துப் போட்டியை இந்தியா முதல்முறையாக நடத்துவதைக் குறிக்கும்.

## சூதாட்ட எதிர்ப்பு மசோதா – இலங்கை

- சூதாட்டம் தொடர்பான பல பிரச்சினைகளைக் குற்றங்களாக்கிய முதலாவது தெற்காசிய நாடாக இலங்கை உருவெடுத்துள்ளது.
- இது விளையாட்டில் ஊழல் தொடர்பானக் குற்றங்களைக் கையாளக் கூடிய "விளையாட்டுத் தொடர்பானக் குற்றங்களைத் தடுத்தல்" என்ற ஒரு மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது ஊழல் அணுகுமுறைகளைப் புகாரளிக்கத் தவறியதை உள்ளடக்கும் "ஊழல் குறித்து தெரியப்படுத்தாமல் இருப்பதையும்" குற்றங்கள் பட்டியலில் இணைத்துள்ளது.'

## 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை

- 15வது ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பையை இந்தியா 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்த இருக்கின்றது.
- 2023 ஆம் ஆண்டு ஆண்கள் உலகக் கோப்பை யானது ஒடிசாவின் புவனேஸ்வரில் விளையாடிய 2018 பதிப்பின் அதே முறையைப் பின்பற்றும்.
- சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பானது 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற இருக்கும் மகளிர் உலகக் கோப்பை போட்டியை நடத்தும் இணை நாடுகளாக ஸ்பெயின் மற்றும் நெதர்லாந்தை அறிவித்தது.
- 1971 ஆம் ஆண்டு உலகக் கோப்பை துவங்கியதில் இருந்து இந்தியா இதனை நடத்துவது இது நான்காவது முறையாகும்.
- இந்தியாவில் நடைபெற்ற முந்தையப் பதிப்புகளான 1982 (மும்பை), 2010 (புது தில்லி) மற்றும் 2018 (புவனேஸ்வர்) ஆகியவைகளில் பெல்ஜியம் அணி வெற்றி பெற்றது.
- இருப்பினும், இந்தியா 1975 ஆம் ஆண்டு முதல் நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டிகளில் வெல்லவில்லை.

## தீபக் சஹர்

- உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த தீபக் சஹர் என்பவர் இருபது ஓவர் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில் ஹாட்ரிக் எடுத்த முதல் இந்திய ஆண் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.
- இந்திய பெண் கிரிக்கெட் வீரரான ஏக்தா பிஷ்டுக்கு அடுத்து இவர் இரண்டாவது முறையாக இந்த சாதனையை நிகழ்த்திய இந்திய பந்து வீச்சாளராக உருவெடுத்துள்ளார்.
- வங்க தேசத்துக்கு எதிரான போட்டியில் அவர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

## மனு பாகர் – துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை

- இந்தியாவின் மனு பாகர் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் பெண்கள் பிரிவில் 10 மீ ஏர் பிஸ்டல் நிகழ்வில் வரலாறு படைத்துள்ளார்.
- இந்த ஆண்டுக்கானப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் முதல் தங்கப் பதக்கத்தை இவர் பெற்றார்.
- சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பு சீனாவில் உள்ள புட்டியனில் நடத்தியப் போட்டியில் இவர் முதல் பரிசைப் வென்றுள்ளார்.
- செர்பியாவின் சோரனா அருனோவிக் வெள்ளியும் சீனாவின் கியான் வாங் வெண்கலமும் பெற்றனர்.

## ISSF உலகக் கோப்பை இறுதிப் போட்டிகள்

- சீனாவின் புட்டியனில் நடத்தப்பட்ட பெண்களுக்கான 10 மீ துப்பாக்கி சுடுதல் போட்டியில் இளவேனில் வாலறிவன் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

- இதே போட்டியில், 10 மீட்டர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் 17 வயது நிரம்பிய திவ்யான்ஷ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- மானு பாக்கரின் தங்கப் பதக்கத்துடன் சேர்த்து, இந்தப் போட்டியை இந்தியா மூன்று தங்கப் பதக்கங்களுடன் நிறைவு செய்துள்ளது.

## முதலாவது பகல் - இரவு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி – இளஞ்சிவப்பு நிறப் பந்து

- கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் கிரிக்கெட் மைதானத்தில் வங்க தேசப் பிரதமரரான ஷேக் ஹசீனா மற்றும் மம்தா பானர்ஜி ஆகியோர் வழக்கமான ஈடன் மணியை அடித்து முதலாவது பகல் - இரவு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியைத் தொடங்கி வைத்தனர்.
- இந்தியாவில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் தொடங்கும் வழக்கமான நேரமான காலை 9:30 மணிக்குத் தொடங்காமல், இந்தப் போட்டியானது இந்திய நேரப் படி மதியம் 1 மணிக்குத் தொடங்கி இரவு 8 மணிக்கு முடிவடைய இருக்கின்றது.
- வங்க தேச அணித் தலைவர் மோமினுல் ஹக் இரு நாடுகளுக்கான “முதலாவது இளஞ்சிவப்பு பந்து டெஸ்ட் கிரிக்கெட்” போட்டியில் முதலில் பேட்டிங்கைத் தேர்வு செய்தார்.
- முதலாவது பகல்/இரவு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியானது ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே அடிலெய்டு ஓவல் மைதானத்தில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் தேதி முதல் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதி வரை நடத்தப் பட்டது.

### *இளஞ்சிவப்பு நிறப் பந்து*

- டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் வழக்கமாக சிவப்பு நிறப் பந்தைக் கொண்டு விளையாடப் படுகின்றன. ஆனால் பகல்/இரவு கிரிக்கெட் போட்டியில், இயற்கை ஒளி மங்கி, செயற்கை விளக்குகளைக் கொண்டு விளையாடப் படுவதால் இளஞ்சிவப்பு நிறப் பந்து பயன்படுத்தப் படுகின்றது.
- இந்தியாவில், இளஞ்சிவப்பு நிறப் பந்துகள் உள்ளிட்ட கிரிக்கெட் பந்துகள் மீரட்டில் உள்ள விளையாட்டு உபகரணங்கள் விநியோக நிறுவனமான சான்ஸ்பரேல்ஸ் கிரீன்லாந்து என்ற நிறுவனத்தினால் வழங்கப் படுகின்றது.



## சையத் முஸ்தாக் அலி போட்டி - அபிமன்யு மிதுன்

- கர்நாடகா - ஹரியானா அணிகள் பங்கேற்ற சையத் முஷ்டாக் அலி டி20 அரையிறுதிப் போட்டியில், அபிமன்யு மிதுன் ஒரு வரலாற்றை உருவாக்கியுள்ளார்.
- டி20 போட்டியின் வரலாற்றில் ஆறு பந்துகளில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய இரண்டாவது பந்து வீச்சாளராக அவர் திகழ்கின்றார் (39க்கு 5). இதில் அவர் தொடர்ச்சியாக எடுத்த மூன்று விக்கெட்டுகளும் அடங்கும்.
- 1936 ஆம் ஆண்டில் ஒல்ட் டிராஃபோர்டு என்னுமிடத்தில் இங்கிலாந்துக்கு எதிராக நடந்த போட்டியில் 112 ரன்கள் எடுத்த இந்திய வீரரான சையத் முஸ்தாக் அலியின் நினைவாக (வெளிநாட்டு டெஸ்ட் போட்டியில் சதத்தை அடித்த முதல் வீரர் என்னும் பெருமையைப் பெற்றவர்) இந்தப் போட்டிக்கு இப்பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தப் போட்டியை 2009-10 ஆம் ஆண்டு முதலாக பி.சி.சி.ஐ. அமைப்பு நடத்தி வருகின்றது.

**CREATING HISTORY IN INDIAN CRICKET**

**By claiming five wickets in the final over, including four off the first four balls against Haryana at Surat, Abhimanyu Mithun has not only created cricket history but also became the first bowler to accomplish a hat-trick in all three formats**

| Format | For | Opponent | Inns | Venue | Season |
|---|---|---|---|---|---|
| FC (Ranji Trophy) | Karnataka | Uttar Pradesh | Second | Meerut | 2009-10 |
| | (6/86 + 5/95) Wickets: Piyush Chawla, Amir Khan & RP Singh | | | | |
| List A (Vijay Hazare) | Karnataka | Tamil Nadu | | Bangalore | Oct.25, 2019 |
| | (5/34) Wickets: Shahrukh Khan, M Mohammed & M Ashwin | | | | |
| T20 (Syed Mushtaq Ali) | Karnataka | Haryana | | Surat | Nov.29, 2019 |
| | Wickets: HJ Rana, R.Tewatia, Sumit Kumar & A.Mishra – four wickets off successive balls | | | | |

—Rajesh Kumar

## ஸ்டீவ் ஸ்மித் - 7,000 டெஸ்ட் ரன்கள்

- ஸ்டீவ் ஸ்மித், 1946 ஆம் ஆண்டு முதல் இருந்த ஒரு சாதனையை முறியடித்து 126 இன்னிங்ஸில் 7,000 டெஸ்ட் ரன்களை அடித்த அதிவேக கிரிக்கெட் வீரர் என்ற ஒரு பெருமையை அடைந்துள்ளார்.
- அடிலெய்டில் பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த இரண்டாவது டெஸ்டின் போது அவர் இந்த சாதனை மைல்கல்லை எட்டினார்.
- கடந்த 73 ஆண்டுகளாக 131 இன்னிங்ஸில் 7000 ரன்களை எடுத்த ஆங்கில கிரிக்கெட் வீரர் வாலி ஹம்மண்ட் என்பவர் இந்தச் சாதனைக்கு உரியவராக இருந்தார்.

# முக்கிய தினங்கள்

## தமிழ்நாடு தினம் - நவம்பர் 1

- 1956 ஆம் ஆண்டில் மொழிவாரி மாநிலச் மறுசீரமைப்பிற்குப் பின்னர் ஆறு தசாப்தங்கள் கழித்து முதல்முறையாக, தமிழ்நாடு மாநில நிறுவன தினமானது நவம்பர் 1 அன்று கொண்டாடப் பட்டது.
- 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆனது 1956 ஆம் ஆண்டின் மாநில மறுசீரமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், தமிழகம் என அழைக்கப்படும் தற்போதைய நிலப்பரப்பு முந்தைய மதராஸ் மாகாணத்திலிருந்துப் பிரிக்கப்பட்ட நாளைக் குறிக்கின்றது.
- இந்த நிலப்பரப்பிற்கு மதராஸ் மாநிலம் என்று பெயரிடப் பட்டது.
- ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக மறைந்த தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா, இந்த கோரிக்கைக்காக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினார். இந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் பல தமிழ் அறிஞர்களும் அதற்காக குரல் கொடுத்தனர்.
- 1967 ஆம் ஆண்டில், அறிஞர் அண்ணா மாநில முதலமைச்சராக பதவியில் அமர்ந்தார்.
- அதன் பின்னர் 1969 ஜனவரி 14 ஆம் தேதி முதல் மாநிலத்தின் பெயர் அதிகாரப் பூர்வமாக தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது.

| வகை | பெயர் |
|---|---|
| **சின்னம்** | திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் |
| **மொழி** | தமிழ் |
| **விலங்கு** | வரையாடு |
| **பறவை** | மரகதப் புறா |
| **மலர்** | செங்காந்தள் மலர் |
| **மரம்** | பனை மரம் |
| **பழம்** | பலா |
| **பாடல்** | தமிழ்த் தாய் வாழ்த்து |
| **விளையாட்டு** | கபடி |
| **நடனம்** | பரத நாட்டியம் |
| **பட்டாம்பூச்சி** | தமிழ் மறவன் |

## உலக சைவ உணவுப்பழக்க தினம் - நவம்பர் 1


- உலக சைவ உணவுப் பழக்க தினம் என்பது நவம்பர் 1 ஆம் தேதியன்று உலகெங்கிலும் உள்ள சைவ உணவு உண்பவர்களால் கொண்டாடப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- உலக சைவ உணவுப் பழக்க தினமானது விலங்கு உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இது சைவ உணவுப் பழக்க வாழ்க்கை முறையைப் பரவலாக ஏற்றுக் கொள்வதை ஆதரிக்கின்றது.
- ஐக்கிய ராஜ்ஜியத்தின் சைவ உணவுப் பழக்கச் சமூகம் நிறுவப்பட்ட 50வது ஆண்டு

நிறைவை நினைவு கூறும் ஒரு முயற்சியாக, 1994 ஆம் ஆண்டில் பிரிட்டிஷைச் சேர்ந்த ஒரு விலங்கு நல உரிமை ஆர்வலரான லூயிஸ் வாலிஸ் என்பவரால் இந்த தினம் உருவாக்கப்பட்டது.




- சைவ உணவைப் பின்பற்றுபவர்கள் இறைச்சி, முட்டை, பால் மற்றும் தேன் போன்ற விலங்குகளிடமிருந்துப் பெறப்படும் எதையும் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறார்கள்.

## மாநில உருவாக்க தினம்




- மத்தியப் பிரதேசம், கர்நாடகா, சத்தீஸ்கர், ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான், கேரளா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் நவம்பர் 1 ஆம் தேதி தங்களது மாநில உருவாக்க தினத்தை அனுசரிக்கின்றன.
- டெல்லி, சண்டிகர், புதுச்சேரி, லட்சத்தீவு மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் ஆகியவற்றிற்கு இந்த நாளில் யூனியன் பிரதேசங்கள் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.
- 1966 ஆம் ஆண்டில் ஹரியானா உருவாக்கப் பட்டது.
- 2000 ஆம் ஆண்டில் சத்தீஸ்கர் உருவாக்கப் பட்டது

## இந்திய நிலக்கரி அமைப்பின் நிறுவன தினம் - நவம்பர் 1

- இந்திய நிலக்கரி அமைப்பானது (Coal India Limited - CIL) நவம்பர் 1 ஆம் தேதியன்று தனது 45வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இந்தக் கொண்டாட்டத்தின் போது, மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சரான பிரஹலாத் ஜோஷி இந்திய நிலக்கரி அமைப்பானது 2020-21 நிதியாண்டில் 750 மில்லியன் டன் நிலக்கரியை உற்பத்தி செய்யும் என்றும் 2023 - 24 ஆம் நிதியாண்டில் அதற்கும் அதிகமாக ஒரு பில்லியன் டன் அளவிற்கு நிலக்கரியை உற்பத்தி செய்யும் என்றும் கூறினார்.
- நாட்டின் நிலக்கரி உற்பத்தியில் 82% அளவிற்கு, அதாவது 660 மில்லியன் டன் நிலக்கரியை உற்பத்தி செய்யக் கூடிய இலக்கானது தற்போது CIL நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.
- சமீபத்தில் மத்திய அரசானது நிலக்கரித் துறையில் நேரடி முறையின் கீழ் 100% அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்துள்ளது.

## உலக சுனாமி விழிப்புணர்வு நாள் - நவம்பர் 5

- உலக சுனாமி விழிப்புணர்வு தினமானது உலகம் முழுவதும் சுனாமி விழிப்புணர்வின் உலகளாவிய கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 5 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.



- 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐ. நா பொதுச் சபையானது நவம்பர் 5 ஆம் தேதியை உலக சுனாமி விழிப்புணர்வு தினமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்ட 58 சுனாமி சம்பவங்களானவை 2.6 லட்சத்திற்கும் அதிகமாக அல்லது ஒரு பேரழிவிற்குச் சராசரியாக 4,600 என்ற அளவில் உயிர்களைக் கொன்றுள்ளது.
- 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி இந்தியப் பெருங்கடலில் மிக மோசமான சுனாமியின் நிகழ்வு பதிவு செய்யப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான சுனாமி விழிப்புணர்வு தினமானது "சென்டாய் ஏழு பிரச்சாரத்தின்" இலக்குகளை ஊக்குவிக்கின்றது.

## போர் மற்றும் ஆயுதப் போரட்டத்தின் போது சுற்றுச்சூழலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 6

- 2001 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் தேதி அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 6 ஆம் தேதியை போர் மற்றும் ஆயுதப் போரட்டத்தின் போது சுற்றுச்சூழலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினமாக அறிவித்துள்ளது.
- ஆயுதப் போரட்டங்களின் போது சுற்றுச்சூழல் அழிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.

## பச்சிளங் குழந்தைகள் பாதுகாப்பு தினம் - நவம்பர் 7

- இத்தினம் நவம்பர் 7 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகின்றது.
- இத்தினமானது பச்சிளங் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் பச்சிளங் குழந்தைகளை சரியான முறையில் கவனித்துக் கொள்வதன் மூலம் அவர்களின் உயிரைப் பாதுகாப்பதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- இந்தியா தனது குழந்தை இறப்பு விகிதத்தை (infant mortality rate - IMR) கடந்த 11 ஆண்டுகளில் 42 சதவிகிதமாகக் குறைத்துள்ளது. அதாவது 2006 ஆம் ஆண்டில் உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு 57 ஆக இருந்த குழந்தை இறப்பானது 2017 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 33 ஆகக் குறைந்துள்ளது.
- இந்தியாவின் கிராமப்புறங்களில் IMR விகிதம் 37 ஆகவும் நகர்ப்புறங்களில் IMR விகிதம் 23 ஆகவும் இருக்கின்றது.
- IMR விகிதக் குறைப்பு இருந்தபோதிலும், 2017 ஆம் ஆண்டில் இந்தியாவின் IMR விகிதமானது உலகளாவிய விகிதமான 29.4ஐ விட அதிகமாக இருக்கின்றது. இந்தியாவின் IMR விகிதமானது மேற்கு ஆபிரிக்க நாடான செனகல் நாட்டின் IMR விகிதத்திற்கு சமமானதாகவும் பாகிஸ்தான் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளைத் தவிர பெரும்பாலான தெற்காசிய அண்டை நாடுகளை விட அதிகமாகவும் உள்ளது.


## தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - நவம்பர் 7

- தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினமானது முதன்முதலில் மத்திய சுகாதார அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் என்பவரால் 2014 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்டது.
- இத்தினமானது புற்றுநோய், அதன் சிகிச்சை முறைகள் மற்றும் அதன் அறிகுறிகள் குறித்து மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக நவம்பர் 7 ஆம் தேதியன்று இந்தியாவில் கொண்டாடப்படுகின்றது.
- கேரளாவில் உள்ள மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் அம்மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றில் இலவசப் புற்றுநோய் சிகிச்சையை வழங்குவதற்கான "சுஹூர்த்தம்" என்ற ஒரு திட்டத்தை அம்மாநில அரசு முன்மொழிந்துள்ளது.
- புற்றுநோயைப் பற்றிய லான்செட் அறிக்கையின்படி, இதய நோய்க்குப் பிறகு இரண்டாவது கொடிய நோயாக (மரணம் ஏற்படுத்தும்) புற்றுநோயை இந்தியா கொண்டுள்ளது.
- உலகளவில் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் பிப்ரவரி 4 ஆம் தேதியன்று உலகப் புற்றுநோய் தினம் கொண்டாடப்படுகின்றது.



## சர்வதேசக் கதிரியக்கவியல் தினம் - நவம்பர் 8

- நவீன சுகாதாரத் துறையில் மருத்துவத் தோற்றமாக்கத்தின் மாறிவரும் நிலையைக் கொண்டாடுவதற்காக இந்நாள் 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்நாள் கதிர்ப்படப் பதிவாளர்கள் மற்றும் கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்களின் சர்வதேசச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப் படுகின்றது.
- சர்வதேசக் கதிரியக்கவியல் தின அனுசரிப்பு என்பது 2019 ஆம் ஆண்டு நவம்பர் 3 முதல் நவம்பர் 9 வரை தேசிய கதிரியக்கத் தொழில்நுட்ப வாரமாக ஒரு வாரம் கொண்டாடப் படுகின்றது.
- நவம்பர் 8 ஆம் தேதியானது 1895 ஆம் ஆண்டில் வில்ஹெல்ம் கான்ராட் ராண்ட்ஜென் எக்ஸ்-கதிர்களைக் கண்டுபிடித்த ஆண்டின் நினைவு நாள் ஆகும்.
- 2019 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்: விளையாட்டுத் தோற்றமாக்கம் என்பதாகும்.




## உலக கதிரியக்க வரைவியல் தினம் - நவம்பர் 8

- 2007 ஆம் ஆண்டு முதலாக நவம்பர் 8 ஆம் தேதியில் உலக கதிரியக்க வரைவியல் தினம் அனுசரிக்கப் படுகின்றது. இந்நாள் ராண்ட்ஜென் எக்ஸ்-கதிர்வீச்சைக் கண்டுபிடித்த தேதியைக் குறிக்கிறது.
- உண்மையில், சர்வதேசக் கதிரியக்கவியல் தினமானது உலக கதிரியக்க வரைவியல் தினத்தைத் தொடர்ந்து அனுசரிக்கப் படுகிறது.
- 1895 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் தேதி ராண்ட்ஜென் செய்த எக்ஸ்-கதிர்வீச்சின் கண்டுபிடிப்பைக் குறிக்கும் வகையில் கதிரியக்க வரைவியல் தொடர்பான ஒரு தினம் ஆண்டுதோறும் இருக்க வேண்டும் என்று ஐரோப்பிய கதிரியக்கவியல் சங்கம் 2011 ஆம் ஆண்டில் தீர்மானித்தது.
- ஐரோப்பிய கதிரியக்கவியல் சங்கம் மற்றும் வட அமெரிக்க கதிரியக்கவியல் சங்கம் & கதிரியக்கவியல் அமெரிக்கக் கல்லூரி ஆகியவை நவம்பர் 8 ஆம் தேதியில் சர்வதேச கதிரியக்க வரைவியல் தினத்தை அனுசரிக்க முடிவு செய்தன. இது முதல் முறையாக 2012 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.

## தமிழ் அகராதியியல் தினம் - நவம்பர் 8


- நவம்பர் 8 ஆம் தேதியில் தமிழ்நாடு தனது முதலாவது "தமிழ் அகராதி தினத்தை" அனுசரித்தது.
- இந்நாள் வீரமாமுனிவர் என்றும் அழைக்கப்படும் இத்தாலிய மதகுருமாரான கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கியின் பிறந்த நாளைக் குறிக்கின்றது.
- முதல் தமிழ் அகராதியான சதுரகராதியை வெளியிடுவதற்கு அவர் காரணமாயிருந்தார்.
- முன்னதாக, மொழி அறிஞர்கள் பயன்பாட்டில் இருந்த சொற்களை ஆவணப்படுத்தும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.
- அந்த சொற்கள் சேகரிப்பானது 'நிகண்டு' என்று அழைக்கப் பட்டது.

***வீரமாமுனிவர் பற்றி***

- வீரமாமுனிவர் 1710 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு வந்தார்.
- அவர் லத்தீன் மொழியில் "திருக்குறளை" மொழிபெயர்த்து விளக்கினார்.
- தேவாரம், நன்னூல், ஆத்திச்சூடி போன்ற பல முக்கியமான தமிழ் இலக்கியப் படைப்புகளையும் அவர் ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்த்துள்ளார்.
- இவரது மிகப்பெரிய கவிதைப் படைப்பு நூல் தேம்பாவணி ஆகும்.
- காவலூர் கலம்பகம் (ஒரு சிறிய இலக்கியம்), தொன்னூல் என்ற இலக்கணக் கட்டுரை, சமயப் பரப்பாளர்களுக்கான வழிகாட்டி நூலான வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குருவின் கதை போன்றவற்றையும் அவர் இயற்றியுள்ளார்.

## தேசிய சட்ட சேவைகள் தினம் - நவம்பர் 9


- இந்த தினமானது இந்திய சட்ட உதவிகள் ஆணையச் சட்டம் 1987 ஆம் ஆண்டு இயற்றப் பட்டதை நினைவு கூர்கிறது.
- இந்தச் சட்டமானது 1995 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- இந்தியாவின் தேசிய சட்ட உதவிகள் ஆணையம் (National Legal Services Authority - NALSA) இந்தச் சட்ட விதிகளின் படி 1995 ஆம் ஆண்டு டிசம்பர் 5 அன்று அமைக்கப்பட்டது.



- சட்ட உதவிகள் ஆணையச் சட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு விதிகள் மற்றும் வழக்குத் தொடுப்பவர்களின் உரிமை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இந்தத் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- தேவைப்படுவோருக்கு இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை வழங்குவது, மத்தியஸ்தம் மூலம் வழக்குகளைத் தீர்ப்பது மற்றும் இணக்கமான தீர்வுகள் அளிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளை NALSA மேற்கொள்கின்றது.

## சர்வதேச அறிவியல் மற்றும் அமைதி வாரம் - நவம்பர் 9 முதல் 14 வரை

- ‘அமைதி மற்றும் வளர்ச்சியின் சர்வதேச வாரம்’ கடைபிடிக்கப் படுவது என்று ஐக்கிய நாடுகள் அமைப்பால் 1988 ஆம் ஆண்டில் அறிவிக்கப் பட்டது.
- சர்வதேச அமைதி ஆண்டைக் கடைபிடிப்பதன் ஒரு பகுதியாக 1986 ஆம் ஆண்டில் இது போன்ற வாரம் முதல்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- அமைதியான மற்றும் நிலையான சமூகங்களுக்கு அறிவியலின் பங்கு குறித்தப் பொது விழிப்புணர்வை வலுப்படுத்த இந்த வாரம் அனுசரிக்கப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டிற்கான அனுசரிப்பின் கருப்பொருள் "அனைவருக்குமான அறிவியல், யாரையும் புறக்கணிக்காமல் இருத்தல்" என்பதாகும்.
- அமைதி மற்றும் மேம்பாட்டுக்கான உலக அறிவியல் தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 10 அன்று இந்த வாரத்துடன் ஒத்திசைந்து அனுசரிக்கப்படுகின்றது.





## தேசியக் கல்வி தினம் - நவம்பர் 11

- மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த தினத்தை நினைவு கூறும் வகையில் இந்தியாவில் ஆண்டுதோறும் தேசியக் கல்வி தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- இத்தினம் 2008 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப் படுகின்றது.
- சுதந்திர இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சராகப் பணியாற்றியவர் ஆசாத் ஆவார்.
- இவர் 1953 ஆம் ஆண்டு டிசம்பர் 28 அன்று பல்கலைக்கழக மானியக் குழுவை (University

Grants Commission - UGC) நிறுவினார். இவர் இந்திய அறிவியல் நிறுவனம், கட்டமைப்பு & திட்டமிடல் பள்ளி ஆகியவற்றை நிறுவினார். இவர் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறுவப் படுவதற்கு மூளையாகச் செயல்பட்டார்.

- ❖ நாட்டில் கல்வி மற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக சங்கீத நாடக அகாடமி (1953), சாகித்ய அகாடமி (1954) மற்றும் லலித் கலா அகாடமி (1954) ஆகியவற்றை அவர் நிறுவினார்.
- ❖ சுதந்திர இந்தியாவில் கல்வி முறையின் கட்டமைப்புகளை அமைப்பதிலும் கல்வி முறையின் தற்போதைய செயல்திறனை மதிப்பிடுவதிலும் ஆசாத்தின் பங்களிப்பை நினைவில் கொள்வதற்கான தினம் இதுவாகும்.




## உலக நிமோனியா தினம் - நவம்பர் 12

- ❖ ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 12 ஆம் தேதியன்று உலக நிமோனியா (நுரையீரல் நோய்) தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ 2009 ஆம் ஆண்டு நவம்பர் 02 அன்று குழந்தைகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 100க்கும் மேற்பட்ட அமைப்புகள் முதலாவது உலக நிமோனியா தினத்தை அனுசரிப்பதற்காக 'குழந்தைகள் மீதான நிமோனியாவுக்கு எதிரான உலகளாவிய கூட்டணி' என்ற ஒரு அமைப்பாக அவை ஒன்றிணைந்தன.
- ❖ இந்த ஆண்டின் உலக நிமோனியா தினத்தின் கருத்துரு, "அனைவருக்கும் ஆரோக்கியமான நுரையீரல்" என்பதாகும்.
- ❖ நிமோனியா என்பது உலகெங்கிலும் உள்ள ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மரணத்தை ஏற்படுத்தும் ஒரு கொடிய சுவாச நோயாகும்.
- ❖ 2016 ஆம் ஆண்டில் உலகளாவிய நிமோனியா பாதிப்பில் 70% பாதிப்பை இந்தியா மட்டுமே கொண்டுள்ளது.




## பொதுச் சேவை ஒளிபரப்பு தினம் - நவம்பர் 12

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 12 ஆம் தேதியன்று பொதுச் சேவை ஒளிபரப்பு தினம் இந்தியாவில் கொண்டாடப் படுகின்றது.
- இத்தினமானது 1947 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் தேதியன்று அகில இந்திய வானொலி நிலையத்திற்கு வருகை புரிந்த காந்தியின் முதலாவது மற்றும் ஒரே வருகையை நினைவு கூறுகின்றது.
- இத்தினத்தன்று இந்தியப் பிரிவினைக்குப் பின்னர் ஹரியானாவின் குருசேத்திரத்தில் தற்காலிகமாக குடியேறிய மக்களிடையே காந்தி உரையாற்றினார்.

## குரு நானக் ஜெயந்தி - நவம்பர் 12

- குரு நானக் ஜெயந்தி என்பது சீக்கிய சமூகத்தின் ஒரு புனிதப் பண்டிகையாகும். குரு நானக் தேவின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் பரவலாக இத்தினம் கொண்டாடப் படுகின்றது.
- இந்த ஆண்டு இத்தினமானது நவம்பர் 12 ஆம் தேதி நிகழ்ந்தது. இந்த ஆண்டானது குரு நானக் தேவின் 550வது நினைவு ஆண்டாகவும் கொண்டாடப் படுகின்றது.
- குரு நானக் ஜெயந்தி விழாவானது குரு பர்வ், குருபுராப் அல்லது குரு பிரகாஷ் பர்வ் என்றும் அழைக்கப் படுகின்றது.
- குருநானக் (1469 ஆம் ஆண்டில் பிறந்தார்) பிறந்த இடமானது பாகிஸ்தானின் நான்கானா சாஹிப்பில் அமைந்துள்ளது.

## உலக நீரிழிவு தினம் - நவம்பர் 14

- உலக நீரிழிவு தினம் என்பது நீரிழிவு நோயின் மீது கவனத்தைச் செலுத்தும் ஒரு முதன்மையான உலகளாவிய விழிப்புணர்வுப் பிரச்சாரமாகும். இத்தினமானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இது சார்லஸ் பெஸ்டுடன் இணைந்து இன்சுலினைக் கண்டுபிடித்த சர் பெட்ரிக் பாண்டிங்கின் பிறந்த நாளுடன் ஒத்துப் போகின்றது.
- உலக சுகாதார அமைப்பு மற்றும் IDF (சர்வதேச நீரிழிவுக் கூட்டமைப்பு - International Diabetes Federation) ஆகியவற்றினால் 1991 ஆம் ஆண்டில் விழிப்புணர்வு தினமாக இந்தத் தினம் தொடங்கப் பட்டது.
- இது 2006 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வ ஐக்கிய நாடுகள் தினமாக உருவெடுத்தது.
- 2019 ஆம் ஆண்டில் இத்தினத்தின் கருப்பொருள், “குடும்பம் மற்றும் நீரிழிவு நோய்” என்பதாகும்.




## உலகத் தரத்திற்கான தினம் - நவம்பர் 14

- உலகத் தரத்திற்கான தினமானது பொதுவாக நவம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் அனுசரிக்கப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டில் உலகத் தரத்திற்கான தினமானது நவம்பர் 14 அன்று அனுசரிக்கப் பட்டது.
- மேலும் இது பட்டயத் தரங்கள் நிறுவனத்தின் (CQI - Chartered Quality Institute) நூற்றாண்டு நிறைவு தினத்தையும் குறிக்கின்றது.
- இந்த ஆண்டுக் கொண்டாட்டத்தின் கருப்பொருள், "தரங்களின் 100 ஆண்டுகள்" என்பதாகும்.
- உலகம் முழுவதும் உள்ள தரமான நிபுணர்களின் பங்களிப்புகளை இந்தத் தினம்

அங்கீகரிக்கின்றது.

## தேசியக் கூட்டுறவு வாரம் - நவம்பர் 14 – 20

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 முதல் நவம்பர் 20 வரை இந்தியா முழுவதும் தேசியக் கூட்டுறவு வாரம் கொண்டாடப் படுகின்றது.
- இந்த ஆண்டில் 66வது தேசியக் கூட்டுறவு வாரம் கொண்டாடப் படுகின்றது.
- நாட்டின் பொருளாதாரத்தில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்களிப்பை எடுத்துக் காட்டுவதே இந்த வார அனுசரிப்பின் நோக்கமாகும்.
- இந்தக் கொண்டாட்டங்கள் ஆனது இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் தலைமை அமைப்பான இந்திய தேசியக் கூட்டுறவு ஒன்றியத்தினால் (National Cooperative Union of India - NCUI) ஏற்பாடு செய்யப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டுக் கொண்டாட்டங்களுக்கான முக்கியக் கருப்பொருள், “இந்தியாவில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு” என்பதாகும். இது கிராமப்புறப் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும் இந்தியாவில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் எவ்வாறு உதவ முடியும் என்பதின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.

## சகிப்புத் தன்மைக்கான சர்வதேச தினம் - நவம்பர் 16

- சகிப்புத் தன்மைக்கான சர்வதேச தினம் என்பது சகிப்புத் தன்மையின்மையின் ஆபத்துக்கள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 1995 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் அறிவிக்கப்பட்ட ஒரு வருடாந்திர அனுசரிப்பு தினமாகும்.
- இத்தினமானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 16 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.
- 1995 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அமைப்பானது இரண்டாண்டிற்கொரு முறை வழங்கப்படும் “சகிப்புத் தன்மை மற்றும் அமைதி ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக யுனெஸ்கோ - மதன்ஜீத் சிங் பரிசு” என்ற ஒரு பரிசை நிறுவியுள்ளது.
- இத்தினமானது வகுப்புவாத நல்லிணக்கம் மற்றும் அமைதி ஆகியவற்றிற்கு முக்கியப் பங்காற்றிய இந்திய அயல் பணி அதிகாரியான மதன்ஜீத் சிங் என்பவரை அங்கீகரிக்கின்றது.

## தேசியப் பத்திரிக்கை தினம் - நவம்பர் 16

- 2019 ஆம் ஆண்டின் தேசியப் பத்திரிக்கை தினமானது இந்தியா முழுவதும் நவம்பர் 16 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது. இது இந்தியாவில் இருக்கும் சுதந்திரமான மற்றும் பொறுப்பான பத்திரிக்கையின் அடையாளத்தைக் குறிக்கின்றது.
- இத்தினமானது ‘இந்தியப் பத்திரிக்கை மன்றம்’ நிறுவப்பட்டதை அனுசரிக்கின்றது.
- 1966 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இந்த அமைப்பு 1966 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியிலிருந்து தான் செயல்படத் தொடங்கியது.
- இந்தியப் பத்திரிக்கை மன்றத்தின் தற்போதையத் தலைவர் நீதிபதி சந்திரமௌலி குமார்

பிரசாத் ஆவார்.

## சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச நினைவு தினம் - நவம்பர் 17

- ❖ ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையன்று சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச நினைவு தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ இத்தினமானது சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டோரையும் அவர்களது குடும்பத்தினரையும் அங்கீகரிக்கின்றது.
- ❖ இது 1993 ஆம் ஆண்டில், பிரிட்டனைச் சேர்ந்த சாலை விபத்தில் பாதிக்கப் பட்டோருக்கான "ரோட் பீஸ்" என்ற அமைப்பின் தலைவரான பிரிஜிட் சௌத்ரி என்பவரால் நிறுவப் பட்டது.
- ❖ பின்னர் இது 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## சர்வதேச மாணவர்கள் தினம் - நவம்பர் 17

- ❖ சர்வதேச மாணவர் தினம் என்பது மாணவர் சமூகத்திற்கான ஒரு சர்வதேச அனுசரிப்பாகும். இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 17 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ செக்கோஸ்லோவேக்கியாவின் ப்ராக் பல்கலைக் கழகத்தில் 1939 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நாஜிப் படையினரின் தாக்குதல் மற்றும் அத்தாக்குதலின் மூலம் 9 மாணவர்கள் கொல்லப் பட்டது ஆகியவற்றை இந்தத் தினம் நினைவு கூறுகின்றது.
- ❖ இத்தகைய முதலாவது தினமானது 1941 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- ❖ இது உலகம் முழுவதும் உள்ள மாணவர்களின் செயல்பாடுகளைக் கொண்டாடுகின்றது.




## முதலாவது இயற்கை மருத்துவ தினம் - நவம்பர் 18

- ❖ மத்திய ஆயுர்வேதம், யோகா & இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி (ஆயுஷ்) அமைச்சகமானது நவம்பர் 18 ஆம் தேதியன்று முதலாவது

இயற்கை மருத்துவ தினத்தைக் கொண்டாடியது.

- உணவு மற்றும் வாழ்க்கை முறையை மாற்றுவதன் மூலம் நோய்களைத் தடுப்பதற்கான மருந்துகள் இல்லாத மருத்துவ முறையை ஊக்குவிப்பதற்காக இந்தத் தினம் கொண்டாடப் படுகின்றது.




## உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினம் - நவம்பர் 20

- உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினம் (Chronic Obstructive Pulmonary Disease Day - COPD) ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் மூன்றாவது புதன்கிழமை அனுசரிக்கப்படுகிறது.
- COPD என்பது நுரையீரலின் காற்றோட்டத்தில் அடைப்புகளை ஏற்படுத்தும் நாள்பட்ட நுரையீரல் நோய்களை விவரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகும்.
- இது ஒரு முக்கியமான விழிப்புணர்வு நாளாகும். ஏனெனில் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை மூன்று மில்லியன் உயிர்களைக் கொன்றுள்ள COPD ஆனது மரணத்திற்கு வழிவகுக்கும் நோய்களில் மூன்றாவது முக்கிய நோயாகும்.

## சர்வதேசக் குழந்தைகள் தினம் - நவம்பர் 20

- உலகக் குழந்தைகள் தினமானது முதன்முதலில் 1954 ஆம் ஆண்டில் சர்வதேசக் குழந்தைகள் தினமாக ஏற்படுத்தப் பட்டது.
- சர்வதேச அளவில் ஒற்றுமையை ஏற்படுத்துதல், உலகம் முழுவதும் உள்ள குழந்தைகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் குழந்தைகள் நலனை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 20 ஆம் தேதியன்று இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- மேலும் 1990 ஆம் ஆண்டு முதல், உலகக் குழந்தைகள் தினமானது ஐ.நா பொதுச் சபை

ஏற்றுக் கொண்ட இத்தேதியின் ஆண்டு நிறைவையும் குறிக்கின்றது.

- 20.11.1959 - குழந்தைகள் உரிமைகள் பிரகடனம்,
- 20.11.1989 - குழந்தைகள் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தம்.




## உலக தத்துவ தினம் - நவம்பர் 21

- உலக தத்துவ தினமானது 2002 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- 2005 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ பொது மாநாடானது நவம்பர் மாதத்தின் ஒவ்வொரு மூன்றாவது வியாழக் கிழமையன்றும் உலக தத்துவ தினம் கொண்டாடப்படும் என்று அறிவித்தது.
- மனித சிந்தனையின் வளர்ச்சிக்கும் ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தத்துவத்தின் நீடித்த மதிப்பை இத்தின அனுசரிப்பானது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.
- 2019 ஆம் ஆண்டுப் பதிப்பானது வெவ்வேறு பிராந்திய சூழல்களில் தத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச ஆண்கள் தினம் - நவம்பர் 19

- ஆண்கள் மற்றும் சிறுவர்களின் உடல் நலம், பாலின உறவுகளை மேம்படுத்துதல், பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆண் முன் மாதிரிகளை முன்னிலைப்படுத்துதல் ஆகியவற்றில் முக்கியமாக கவனம் செலுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- 2007 ஆம் ஆண்டில் இந்தியா முதன்முறையாக சர்வதேச ஆண்கள் தினத்தைக் கொண்டாடியது.
- இத்தினத்தின் கருப்பொருள், "ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்காக ஒரு வித்தியாசத்தை உருவாக்குதல்" என்பதாகும்.




## உலகக் கழிவறை தினம் - நவம்பர் 19

- இது உலகக் கழிவறை அமைப்பால் 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஐ.நா பொதுச் சபையானது 2013 ஆம் ஆண்டில் உலக கழிவறை தினத்தை அதிகாரப்பூர்வ ஐ.நா தினமாக அறிவித்தது.
- ஐ.நா - நீர் அமைப்பானது இத்தினத்தைக் கடைபிடிக்கும் தலைமை அமைப்பாகும்.
- 2019 ஆம் ஆண்டில் இத்தினத்தின் கருத்துரு, “எந்தவொரு நபரும் விடுபட்டு விடாமல்” என்பதாகும்.



## தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் - நவம்பர் 19

- இத்தினமானது இந்தியாவின் முதலாவது பெண் பிரதமரான இந்திரா காந்தியின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் நவம்பர் 19 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகின்றது.
- தேசிய ஒருமைப்பாட்டுத் தினத்தை கொண்டாடுவதன் நோக்கம் நாடு முழுவதும் ஒற்றுமையைப் பரப்புவதாகும்.
- நவம்பர் 19 ஆம் தேதி முதல் நவம்பர் 25 ஆம் தேதி வரையிலான காலப்பகுதியில் "குவாமி ஏக்தா" வாரம் அல்லது "தேசிய ஒருமைப்பாட்டு" வாரம் நாடு முழுவதும் அனுசரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.




## உலகப் பாரம்பரிய வாரம் 2019

- இது யுனெஸ்கோ அமைப்பினால் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதி முதல் நவம்பர் 25 ஆம் தேதி வரை அனுசரிக்கப் படுகின்றது.
- இத்தினக் கொண்டாட்டத்தின் நோக்கமானது மக்களை மேலும் விழிப்புணர்வு மிக்கவர்களாக ஏற்படுத்துவதோடு கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது ஆகும்.
- இந்தியாவில் 38 யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்கள் உள்ளன.
- இதில் 30 கலாச்சார தளங்கள், 7 இயற்கைத் தளங்கள் மற்றும் 1 கலப்புத் தளம் ஆகியவை உள்ளன.


## தேசிய மாணவர் படை தினம் - நவம்பர் 24

- உலகின் மிகப்பெரிய சீருடை அணிந்த இளைஞர் அமைப்பான தேசிய மாணவர் படை (National Cadet Corps - NCC) தனது 71வது நிறுவன தினத்தைக் கொண்டாடுகிறது.
- இது ஏப்ரல் 16, 1948 இல் தொடங்கப்பட்டது.
- NCC இன் குறிக்கோள் "ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்" என்பதாகும்.
- சமீபத்தில் NCC அதன் பாடத்திட்டத்தை மதிப்பாய்வு செய்து நுழைவு நிலை வயதை 16 என்பதிலிருந்து 15 வயதாகக் குறைத்தது.




## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 25

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25 ஆம் தேதியன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- உலகெங்கிலும் உள்ள பெண்கள் கற்பழிப்பு, குடும்ப வன்முறை மற்றும் பிற வன்முறைகளுக்கு உட்பட்டுள்ளனர் என்பதையும் இது போன்ற பிரச்சினைகள் மறைக்கப் படுவதைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "ஆரஞ்சு நிற உலகம்: தலைமுறை சமத்துவம் கற்பழிப்பிற்கு எதிராக நிற்கின்றது" என்பதாகும்.
- இது போன்ற ஒரு தினமானது 1981 ஆம் ஆண்டு நவம்பர் 25 அன்று லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்ணியவாதிகளால் முதல் முறையாக கடைபிடிக்கப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1999 ஆம் ஆண்டில் முதன்முறையாக இத்தினத்தை அங்கீகரித்தது.



## தேசிய அரசியலமைப்பு தினம் அல்லது சட்ட தினம் - நவம்பர் 26

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 ஆம் தேதியன்று இந்திய அரசியலமைப்பு தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- மேலும் இது சம்விதான் திவாஸ் அல்லது தேசிய சட்ட தினம் அல்லது தேசிய அரசியலமைப்பு தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று இந்திய அரசியலமைப்பானது முறையாக ஏற்றுக் கொள்ளப் பட்டதைக் குறிக்கின்றது.
- அரசியலமைப்பின் வரைவானது டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் தலைமையில் தயாரிக்கப் பட்டது.
- டாக்டர் அம்பேத்கருக்கு மரியாதை செலுத்துவதோடு, அரசியலமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அரசியலமைப்பின் விழுமியங்கள் ஆகியவை குறித்து குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- அம்பேத்கரின் 125வது பிறந்த தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு 2015 ஆம் ஆண்டு முதல் இத்தினம் இது போன்று அனுசரிக்கப் பட்டு வருகின்றது.




## தேசிய பால் தினம் - நவம்பர் 26

- இந்தியாவின் வெண்மைப் புரட்சியின் தந்தையான வர்கீஸ் குரியனின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் நவம்பர் 26 ஆம் தேதியன்று தேசிய பால் தினம் கொண்டாடப் பட்டது.
- 2014 ஆம் ஆண்டில், நாட்டில் உள்ள அனைத்து பால் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் இந்திய பால் சங்கம் ஆகியவை டாக்டர் வர்கீஸ் குரியனின் பிறந்த தினத்தை (நவம்பர் 26) தேசிய பால் தினமாக கடைபிடிக்க முடிவு செய்தன.

- ❖ உலகின் மிகப்பெரிய வேளாண் பால் மேம்பாட்டுத் திட்டமான "பால் பெருக்குத் திட்டத்தை" (Operation Flood) தலைமையேற்று நடத்திய ஒரு சமூக தொழில்முனைவோர் இவராவார்.
- ❖ இவர் 1973 முதல் 2006 வரை குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பில் (Gujarat Cooperative Milk Marketing Federation - GCMMF) பணியாற்றினார்.
- ❖ அதன் உற்பத்திப் பொருளே அமுல் ஆகும் (ஆனந்த் பால் ஒன்றிய நிறுவனம்/Anand Milk union Limited).
- ❖ உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளர் நாடாக இந்தியா (உலகின் மொத்த பால் உற்பத்தியில் 22% அல்லது ஒரு ஆண்டிற்கு 187.7 மில்லியன் டன்) விளங்குகின்றது.
- ❖ இந்தியாவின் பால் உற்பத்தியானது ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள அனைத்து நாடுகளின் பால் உற்பத்தியை விடவும் அதிகமாக உள்ளது. இந்தியாவைத் தொடர்ந்து அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் பால் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன.




## பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை நாள் - நவம்பர் 29

- ❖ 1947 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையானது பாலஸ்தீனத்தை அரபு அரசு மற்றும் யூத அரசாகப் பிரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றிய நாளைக் குறிக்கும் விதமாக 1977 ஆம் ஆண்டில் இந்த தினம் நிறுவப் பட்டது.
- ❖ இந்த நாள் 1978 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ பாலஸ்தீனிய மக்கள் தங்களது சுயநிர்ணய உரிமை, சுதந்திரம் மற்றும் இறையாண்மையை அடைவதற்கான அவர்களின் தற்போதையப் போராட்டத்தில் ஐ.நா. அமைப்பு மேற்கொள்ளும் உறுதியான அர்ப்பணிப்புகளின் வெளிப்பாடாக இந்த நாள் கருதப் படுகின்றது.




**இரசாயனப் (வேதியியல்) பொருட்களால் ஏற்பட்ட போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நினைவு தினம் - நவம்பர் 30**

- இந்த தினமானது இரசாயன யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, இரசாயன ஆயுதங்களின் அச்சுறுத்தலை அகற்றுவதற்கான இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பின் (Organisation for the Prohibition of Chemical Weapons - OPCW) உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப் படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- ஐ.நா அமைப்பினால் அனுசரிக்கப் படும் இந்த தினமானது 2005 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகின்றது.



# இதரச் செய்திகள்


## குரு நானக்கின் 550வது பிறந்த தினத்தை முன்னிட்டு பாகிஸ்தான் வெளியிட்டுள்ள நாணயம்

- குருநானக்கின் 550வது பிறந்த தினத்தின் நினைவாக பாகிஸ்தான் அரசு ஒரு வெள்ளி நாணயத்தை வெளியிட்டுள்ளது.
- இந்த நாணயத்தின் மதிப்பு 50 ரூபாய் ஆகும்.




## கர்தார்பூர் சாஹிப் பெருவழிப் பாதை ஒப்பந்தம்

- சர்வதேச எல்லையான தேரா பாபா நானக் அருகே ஜீரோ பாயிண்டில் தொடங்கும் கர்தார்பூர் சாஹிப் பெருவழிப் பாதையைச் செயல்படுத்துவதற்காக இந்தியா சமீபத்தில் பாகிஸ்தானுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.



- இது இப்போது இந்தியாவில் இருந்து கர்தார்பூர் செல்லும் சீக்கியர்களுக்கு விசா இல்லாத ஒரு பெருவழிப் பாதையாகக் கருதப் படுகிறது.
- இந்தப் பெருவழிப் பாதையானது பஞ்சாப் – குர்தாஸ்பூரில் (இந்தியா) உள்ள தேரா பாபா நானக் கிராமத்திலிருந்து குருத்வாரா தர்பார் சாஹிப், கர்தார்பூர் (பாகிஸ்தான்) வரை மேம்படுத்தப்பட உள்ளது.
- 1539 ஆம் ஆண்டில் குருநானக் இறக்கும் வரை அவர் தங்கி இருந்த இறுதி இடமாக கர்தார்பூர் சாஹிப் கருதப் படுகிறது.

## மிகப்பெரிய வான் இயற்பியல் தொகுப்பிற்கான உலக சாதனை

- கொல்கத்தாவின் அறிவியல் நகரத்தில் கொல்கத்தா மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட மிகப்பெரிய வானியல் இயற்பியல் பாடம் (45 நிமிடங்கள்) மற்றும் அலைமாலைநோக்கிகளின் தொகுப்பு ஆகியவற்றுக்கான கின்னஸ் உலக சாதனைகள் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டன.
- 2019 ஆம் ஆண்டின் 5வது இந்திய சர்வதேச அறிவியல் விழாவின் முதலாவது நாளில் இந்த சாதனை நிகழ்த்தப் பட்டது. இதில் 1,598க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.
- இந்த அமர்வானது மேக்நாத் சாஹா மற்றும் சந்திரசேகர வெங்கடராமன் ஆகியோருக்கு அர்ப்பணிக்கப் பட்டது.
- இந்த அமர்வானது வானியல் மற்றும் வானியற்பியல் தொடர்பான பல்கலைக் கழகங்களுக்கிடையேயான மையத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டது.

## ICGS அன்னிபெசன்ட்

- கார்டன் ரீச் கப்பல் கட்டும் தளமானது மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் உள்ள இந்தியக் கடலோர காவல்படைக்கு (Indian Coast Guard - ICGS) அதிவேக ரோந்து கப்பலான ICGS அன்னி பெசண்டை வழங்கியது.
- இந்தியக் கடலோர காவல்படைக்காக கார்டன் ரீச் கப்பல் கட்டும் தளத்தால் வழங்கப்படவுள்ள ஐந்து அதிவேக ரோந்து கப்பல்களின் வரிசையில் இது இரண்டாவது இடத்தில் உள்ளது. மேலும் இத்தளத்தால் வழங்கப்பட்டுள்ள 101வது போர்க்கப்பல் இதுவாகும்.
- இது ஒரு நடுத்தர வரம்பு கொண்ட கப்பலாகும். இது அதிகபட்சமாக 34 நாட் வேகமுடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★